
# வளம் கொழிக்க உளம் செழிக்கும்

# உசன் வரலாறு



க. பேரம்பலம்



41
ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் கொழிக்க உளம் செழிக்கும்

# உசன் வரலாறு


கந்தையா பேரம்பலம்

முன்னைநாள்

உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபரும்,

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும்.

உசன், மிருசுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

எனது அருமைப் பெற்றோராகிய

திரு.செல்லப்பா கந்தையா, திருவாட்டி சின்னத்தங்கம் கந்தையா

ஆகியோருக்கு இந்நூலைக் காணிக்கை ஆக்குகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குரு வணக்கம்



இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



தத்துவஞானி பொ.கயிலாயபதி



தலைமை ஆசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம்



பண்டிதர் எஸ்.கே.தம்பு

என்னை உருவாக்கிய
இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை,
தத்துவஞானி பொ.கயிலாயபதி, தலைமை ஆசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம்,
பண்டிதர் எஸ்.கே.தம்பு ஆகியோரை வணங்கி
என் பணியைத் தொடர்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு |
| ஆசிரியர் | : | திரு.க.பேரம்பலம் |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கே உரியது. |
| பக்கங்கள் | : | XLII + 137 |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டுத் தினம் | : | புரட்டாதி 2007. |
| அச்சுப்பதிப்பு | : | ஐங்கர் கிரபிக்ஸ், நவாலியூர் |

| | | |
|---|---|---|
| Title | : | Valam Kolikka Ulam Chelikkum Ushan Varalaru |
| Author | : | K. Perampalam |
| Copy Right | : | Author |
| Pages | : | XLII + 137 |
| Edition | : | First Edition |
| Date of Publish | : | September 2007. |
| Print | : | Aingkar Graphics, Navalyur |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண் உறவுகளுடன்...

எழுதுமட்டுவாழ் என்னும் திருவூரின் கிழக்கெல்லையில் உள்ள முகமாலை எனது பிறந்த மண். எழுதுமட்டுவாழ் என்னும் வளம் மிக்க கிராமத்துடன், முகமாலை, விழுபளை, ஒட்டுவெளி என்னும் கிராமங்களும் சேர்ந்திருந்தன. இங்கு காணப்படும் வளமான வயல், தோட்ட நிலங்கள், தென்னை, பனை தோப்புக்கள் இக்கிராமத்தை மெருவூட்டுவனவாக அமைகின்றன. இவற்றுடன் மா, பலா மரங்களும் ஆங்காங்கே நிற்கின்றன. இம் மண்ணின் வாசனையால் இங்குள்ள மக்கள் தங்கள் பொருள் வளங்களைப் பெற்றனர். இங்குள்ள தோட்ட நிலங்களில் புகையிலை, மிளகாய், கத்தரி போன்ற பயிர்ச்செய்கை நடைபெற்று வந்தன. இங்கு செய்கை பண்ணப்படும் புகையிலைக்கு யாழ்ப்பாணத்தில் பெருஞ் சந்தை மானம் இருந்தது. எழுதுமட்டுவாழ் புகையிலைச் சந்தைபற்றி வரலாற்று நூல்களில் காணப்பட்டமை நாம் எல்லோரும் அறிந்தவையே. இக்கிராமத்தின் முகமாலையில் காவல் தெய்வங்களாகிய மாணிக்கப் பிள்ளையார், பெரிய தம்பிரான் ஆகிய ஆலயங்கள் எமது குலதெய்வங்கள். எழுதுமட்டுவாழ் வடக்கெல்லையில் மிகப் பழைமையும், புதுமையும், வாய்ந்த தம்பமும் உள்ள விழுபளைக் கண்ணகை அம்மன் ஆலயமும், மத்தியில் பெரிய கேணிப் பிள்ளையார், சிவன் கோவிலும், ஒட்டுவெளியில் சிலாவில் பிள்ளையார், வயற்கரை முருகன் ஆகிய கோவில்களும் இங்குள்ளவர்களின் வணக்கத் தலங்களாக உள்ளன. மாணவர்களில் அனேகர் எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம், சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை, ஒட்டுவெளி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று வந்தனர். எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாசாலையில் உயர்தர வகுப்புக்கள் இருந்தன. இங்குள்ள மக்கள் விடாமுயற்சியால் இக்கிராமத்தை வளர்ச்சியடைந்த கிராமமாக மாற்றி வந்தனர். இக் கிராமத்தவரில் பலர் அரசாங்கத்தில் ஆசிரியர்களாக, அதிபர்களாக, எழுதுநர்களாக, கிராம சேவை அலுவலர்களாக, பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக, கடமையாற்றி வருகின்றனர். சமயப்பற்று, தமிழ்ப்பற்று நிறைந்தவர்களாக இங்குள்ள மக்கள் காணப்பட்டனர். வளர்ந்து வந்த இக்கிராமம் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தால் சீரழிக்கப்பட்டு இக் கிராம மக்கள் இடம்பெயர்ந்து, ஊர் கடந்து, உறவு கடந்து பல இன்னல்கள் மத்தியில் வேறு பல கிராமங்களில் வாழ்கின்றனர். சிலர் கடல் கடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர். தமது இருப்பிடங்களை, தாம் கற்ற பாடசாலைகளை, தாம் வழிபட்ட ஆலயங்களை, ஏழு ஆண்டுகளுக்கு மேல் பார்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மீண்டும் இம்மக்கள் தமது இல்லங்களில் குடியமர்ந்து நிம்மதியாக வாழ எழுதுமட்டுவாழ் விழுபளைக் கண்ணகை அம்பாள் அருள்பாலிப்பாளாக.

– நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அணிந்துரை I
என்னுரை V
ஆசியுரை IX
வாழ்த்துரைகள் XI - XLII
உசன் கிராம கீதம் 1
உசன் கிராமத்தின் நிலையமும் சிறப்பியல்புகளும் 3
உசன் குடிசனப் பரம்பல் 4
மக்களின் வாழ்க்கை முறையும், தொழில் வளங்களும் 7
உசன் நாமம் வந்த வரலாறு 9
மக்களின் வணக்கத் தலங்கள் 12
உசன் சமாதிமடம் 37
உசன் கிராம வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர்களும், சங்கங்களும், மன்றங்களும் 39
முன்பள்ளிகள் 47
உசன் கிராமத்தில் வசிக்கும் கத்தோலிக்கர் 48
உசன் வாழ் கிறிஸ்தவ மக்களும், ஆசீர்வாதம் குடும்பமும் 50
வெளிநாடுகளில் வசிக்கும் உசன் வாழ் மக்கள் இவ்வூரின் அபிவிருத்திப் பணிகளுக்குச் செய்யும் சேவைகள் 53
எம் வெளியூர் உறவுகளுக்கு டாக்டர் கணேசரின் நற்செய்தி 54
கிராம வளர்ச்சியில் நினைவு கூரப்பட வேண்டியவர்கள் 57
பழம்பெரும் குடியினர் 69
இக்கிராமத்தில் இருந்த கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், திணைக்களத் தலைவர்கள் 71
உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் உதயமான வரலாறு 79
பாடசாலைக் கீதம் 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை இலச்சினை 87

பாடசாலை பௌதீக வளங்கள் 88

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், உப அதிபர்கள்,

ஆசிரியர்கள் விபரம் 93

உசன் கொத்தணி 115

பாடசாலையின் பரீட்சைகளின் அடைவு மட்டமும் அதன் மூலம் இங்கு

கல்வி கற்றவர்கள் பெற்ற தொழில் வாய்ப்புக்களும் 117

பாடசாலை அபிவிருத்திச் சபை 124

பழைய மாணவர் சங்கம் 127

புலமைப்பரிசில் அன்பளிப்புக்கள் 128

அன்றும் இன்றும் 129

**பின் இணைப்பு**

பாடசாலை உருவாக்கியவர்களில் உயர் பதவி வகித்தவர்கள் அட்டவணை

இந்துப்போட் இராசரத்தினம் அவர்கள் உருவாக்கிய பாடசாலை அட்டவணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



அரசர்களை, அவர்களின் வம்ச விபரங்களை, அவர்கள் மேற்கொண்ட போர்களை, பெற்ற வெற்றிகளை, தழுவிய தோல்விகளை அவற்றின் விளைவுகளை ஆண்டு ரீதியாகக் கூறும் தொகுப்பே வரலாறு என்ற கருத்து நீண்ட காலமாக நிலவிவந்தது. அரசர்கள் சம்பந்தமான தகவல்களை மட்டும் அடுக்கிக் கொண்டிருக்காமல், குடி மக்களின் வாழ்க்கை முறை, மக்களிடையேயான உறவின் தன்மைகள், அவர்களின் செயற்பாடுகள், அவற்றின் சமூக, பொருளாதார, கலாசார விளைவுகள் போன்றவற்றை முதன்மைப்படுத்தும் தொகுப்பே வரலாறு என்பது இப்போதைய கல்விமான்கள், ஆய்வறிவாளர்கள் முதலியோரின் உறுதியான கருத்தாகும். இந்தக் கருத்துக்கு வலுவூட்டும் வகையில் "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசனின் வரலாறு" என்ற இந்த நூல் அமைந்துள்ளது.

நூலாசிரியர் திரு.க.பேரம்பலம், பள்ளியாசிரியராகத் தன் கல்விப் பணியை ஆரம்பித்தவர். மாணவர் மையக் கல்வியின் மாண்பினையும் நுட்பங்களையும் நன்குணர்ந்து அவர்களின் நிலைக்கு இறங்கி, பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாண்டு நூற்றுக்கணக்கான மாணவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்தவர். பகுதித் தலைவர்,பிரதி அதிபர், அதிபர், கொத்தணி அதிபர், உதவிக் கல்விப்பணிப்பாளர் எனப் படிப்படியாக முன்னேறி வாழ்க்கையில் வெற்றியடைந்த நிலையில் இன்று உத்தியோக ரீதியாக ஓய்வு பெற்றிருப்பவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், விடத்தற்பளை கமலாசினி வித்தியாசாலை, வயாவிளான் கணேசா வித்தியாசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் கொத்தணி, சாவகச்சேரிக் கல்வி வலயம் என்பன அவருடைய அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு, அனுபவம், நிர்வாகத்திறமை, விடாமுயற்சி முதலியவற்றைத் தம் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் நன்கு பயன்படுத்திக்கொண்டன.

திரு. பேரம்பலம், முகமாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு, உசனைத் தன் வாழ்விடமாக வரித்துக் கொண்டவர். அவருடைய பாரியார் திருவாட்டி தெய்வானைப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரம்பலம், பயிற்றப்பட்ட தமிழாசிரியராக நீண்ட காலம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் பணியாற்றி இன்று ஓய்வு பெற்றிருப்பவர் என்பதைக் குறிப்பது பொருத்தமானது.

கல்விப் பணிகளில் திரு.பேரம்பலம் கொண்டிருக்கும் ஆர்வம், அக்கறை, அர்ப்பணிப்பு, பொறுப்புணர்ச்சி போன்றவற்றை அதே அளவில் சமய, சமூகப் பணிகளிலும் கொண்டிருந்தார். உசன் வாழ் மக்களின் சமய, கலாசார, பொருளாதார அபிவிருத்திகளை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட பொதுப்பணி மன்றங்கள் பலவற்றின் செயற்குழுவிற்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு, அவற்றின் நோக்கங்கள் நிறைவேற அயராதுழைத்தார். உசனிலுள்ள சைவாலயங்களின் வளர்ச்சியில், அவருடைய பங்கு கணிசமானது. பலதரப்பட்ட இத்தனை பணிகளுக்குமிடையே தானாகக் கிடைக்கின்ற குறுகிய ஓய்வைக்கூட அவமே போக்காமல் உசனிலுள்ள சொந்தத் தோட்டக் காணிக்குச் சென்று, காய்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் மண்வாசனையை அனுபவிக்கும் மண்ணின் மைந்தனுமாகின்றார். ஆகவே உசன் கிராமத்தின் வரலாற்றை எழுதும் உரிமையும் தகைமையும் அவரிடம் நிறையவுண்டு என்பது மறுக்கப்பட முடியாதது.

இந்நூலுக்கென அவர் திரட்டிய தகவல்கள், அவற்றுக்குரிய ஆதாரங்கள், அதிகாரப் பகுப்பு, வைப்பு முறை என்பன நூலின் தரத்தையும் நம்பகத் தன்மையையும் உயர்த்துகின்றன. கூட்டல், குறைத்தல் இன்றி சொல்ல வேண்டியவற்றை, சொல்ல வேண்டிய அளவிற் சொல்லியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பே.

வரலாற்றின் பெரும் பகுதி, உசன் கந்தசாமி கோவில், கஜகேணிப் பிள்ளையார் கோவில், வீரபத்திரர் கோவில், புதுக்குளத்துக் கண்ணகை அம்மன் கோவில், வயற்கரைக் கந்தசாமி கோவில், ஈழத்துச் சித்தர்களுள் இருவரான மங்கையற்கரசி, வாலாம்பிகை அம்மா ஆகிய சுவாமிகளின் பூத உடல் புதைக்கப்பட்டுள்ள சமாதிமடம், இராமநாதன் மகாவித்தியாலயம் ஆகியவை அமைந்திருப்பதற்குரிய காரணத்தை அறிவது கடினமானது.

மிகப் பழைய காலத்திலேயே தமிழ் மக்கள் கல்வியைப் பற்றி நன்கு சிந்தித்திருக்கின்றார்கள். கல்வியின் சிறப்பை, கல்வியின் பெருமையை, கல்வியின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தே செயற்பட்டு வந்துள்ளார்கள்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

மூத்தோன் வருக என்னாது

அறிவுடையோ னாறு

அரசுஞ் செல்லும் – என்பது சங்கப் பாடல்களுள் ஒன்று.

மனிதர் ஒவ்வொருவருக்கும் மிகமிக இன்றியமையாததாகவுள்ள கண்ணுக்கு ஒப்பாகக் கல்வியைக் கூறுகின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்.

என்பது அவர் வாக்கு. அதேவேளை, கடவுளின் திருவடிகளைத் தொழாவிட்டால், (கண்ணைப் போன்று இன்றியமையாததாக இருக்கின்ற) கல்வியாலும்கூட எதுவிதமான பலனும் ஏற்படாது என்பதை,

கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅரெனின்

என்ற குறள் வாயிலாகக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

ஆக, கல்வியும் கடவுள் வழிபாடும், அதாவது அறிவும் ஆன்மீகமும் ஒன்றுடனொன்று முட்டி மோதி முரண்பட்டுக் கொள்ளாமல் ஒன்றுக்கு மற்றொன்று ஆதாரமாகி இணைந்திருப்பதே சிறந்ததென்பது பண்டைத் தமிழர்கள் தேர்ந்து தெளிந்த உண்மையாகும். வழிவழி வந்த தமிழ் மக்கள் நிறைந்துள்ள உசனில், அறிவும் ஆத்மீகமும் மிக நெருக்கமாக இருப்பதனால் அந்த நெருக்கத்தின் – இணைப்பின் அங்கங்களாக இருக்கும் கோவில்களையும் பாடசாலைகளையும் பற்றி விரிவாகவே கூறியிருக்கின்றார் நூலாசிரியர்.

கலியுக வரதனும் தமிழ்த் தெய்வமுமான முருகப் பெருமானுக்கு உசனிலே திருக்கோவிலை உருவாக்கிய பெருமக்களே அவ்வூரிலே பாடசாலையொன்றை ஏற்படுத்தும் முன் முயற்சிகளை மேற்கொண்டதும், அவர்களே பாடசாலையின் உள்ளூர் முகாமையாளர்களாகப் பணி புரிந்ததும், அப்பாடசாலை இராமநாதன் மகா வித்தியாலயமாகப் பரிணாமம் பெற்ற போது அதன் கோட்பாடு வாக்கியமாக “கல்விப் பயனே கடவுட் பணி” என்பது அமைந்திருப்பதும் அறிவும் ஆன்மீகமும் மிக நெருக்கமாகப் பிணைந்திருப்பதன் பிரதிபலிப்பென்றே நான் கருதுகின்றேன்.

1969ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இராமநாதன் மகாவித்தியாலயத்திலே ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாக நான் இணைந்து கொண்டேன். 1974 ஆம் ஆண்டில் அப்பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றேன். அந்த ஆண்டு தொடக்கம் 1981ஆம் ஆண்டுவரை உசனில் வாழும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அங்குள்ள மக்களின் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை முறை, இனிய சுபாவம், பிறர்க்குதவி செய்வதிற் பேரார்வம், பாடசாலை வளர்ச்சியிற் காட்டிய ஆர்வம், அளித்த ஒத்துழைப்பு ஆகியவை இன்றும் என் நெஞ்சிற் பசுமையாக இருக்கின்றன. வரலாறு பற்றிய என் மனப்பதிவைக் கோவைப்படுத்துவதற்காக எழுத்துப்பிரதியை வாசித்துக் கொண்டிருந்த போது அந்தக் காலத்து இனிய அனுபவங்கள் பல அணிவகுத்து வந்து ஆனந்தப்படுத்தின. கற்பனை முலாம் பூசாமல், உண்மையான தகவல்களையே நூலாசிரியர் திரட்டித் தந்துள்ளார் என்பதற்கு உறுதியும் கூறின.

போர்ச் சூழல், அது நிர்ப்பந்திக்கும் இடப் பெயர்வு, அதனுடன் நெருங்கிய உள நெருக்கீடு போன்றவற்றுக்கு நிரந்தரமான முடிவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் திருப்தியான தீர்வும் ஏற்படவும், வளம் கொழிக்க உளம் செழிக்கும் ஊராக உசன் மென்மேலும் உயரவும் எல்லாம் வல்ல உசன் கந்தப்பெருமானை உளமார வேண்டி அமைகின்றேன்

கந்தரோடை, சி.சிவசரவணபவன், ("சிற்பி") M.A


சுன்னாகம். Dip.Ed, S.L.E.A.S.II

14.07.2007.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



எல்லாம்வல்ல கலியுக வரதனாகிய உசன் கந்தப்பெருமாள் திருப்பாதங்களை முதற்கண் வணங்கி,

ஒரு மனிதன் தன் தாயைப் பற்றி அறிந்திருப்பது போல் தன் நாட்டைப் பற்றியும் ஓரளவாவது அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இன்றைய காலத்தின் தேவையும் இதுவாகும். வளமாக வாழ்ந்த பல கிராமங்கள், சீரற்ற நாட்டு நிலைமை காரணமாக ஊர் கடந்து, உறவு கடந்து, வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இவர்கள் பிள்ளைகளும் அவ்விடங்களிலேதான் எதிர்காலத்தில் வாழப்போகின்றார்கள். பாரம்பரியமாகத் தமது கிராமங்களில் வாழ்ந்த மக்களும் யுத்த பீதியால் இடம்பெயர்ந்து, பல வருடங்களாக வேறு இடங்களில் பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் பிள்ளைகளும் நமது கிராமங்களை அறியாதவர்களாக வாழ்ந்து வருகின்றனர். தற்போதுள்ள நவீன கல்விச் சிந்தனைகள், சமூக மாற்றங்கள், விஞ்ஞான முன்னேற்றங்கள் ஆகியவற்றின்படி தரம் ஒன்றில் படிக்கும் பிள்ளை தனது பாடசாலை வரலாறு, கிராம வரலாறு என்பவற்றைப் படித்திருக்கின்றது. இத்தேவையை அறிந்த பல கிராமங்கள் தங்களது கிராம வரலாற்றையும், பாடசாலை வரலாற்றையும் நூல் வடிவில் வெளியிடுகின்றன.

இந்வகையில் என்னை உருவாக்கிய பாடசாலைகளில் பெரும்பங்காற்றிய உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வரலாற்றையும், இதன் அமைவிட வரலாற்றையும் சேர்த்து "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் தலைப்பில் இந்நூலை ஆவணப்படுத்தியுள்ளேன். "உள்ளம் பெரும் கோவில்" என்ற பொன்மொழி சிந்திக்க வைக்கும் மந்திரம். "பிரணவ சக்தியைத் தா" என்று சமய குரவர்கள் இறைவனை வழிபட்டனர். பாடசாலையால் பெறும் அறிவொளியும், ஆலய வழிபாட்டால் பெறும் ஆத்மீக ஒளியுமே ஒருவனது உள்ளத்தைச் செழிக்கச் செய்கின்றன. ஒருவனது உளம் செழிக்க அவனது உளம் ஒளி பெறுகின்றது. இதனால் அவன் உய்வடைகின்றான். கிராமங்கள் செழிக்கின்றன. கிராமங்கள் செழிக்க, எம் பிரதேசம் செழுமை அடைகின்றது. இந்தத் தத்துவக் கருத்தை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
[illegible] சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டதே இந்நூலாகும்.

கிராம வரலாற்றில் இக்கிராமத்தின் தொன்மை பற்றியும், இங்குள்ள மக்களின் பாரம்பரியங்கள், வளங்கள், இவர்களின் பண்பாடுகள், இங்குள்ள ஆலயங்களின் வரலாறுகள், இக்கிராமத்தின் வளர்ச்சியில் அரும்பணியாற்றிய சங்கங்களின் வரலாறுகள், வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்கள் பற்றியும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. பாடசாலை வரலாற்றில் பாடசாலை ஆரம்பமான வரலாறு, குரு சிஷ்ய பரம்பரை, இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் சேவைகள், இங்கு கற்ற மாணவர்கள் இப்பாடசாலையால் பெற்ற பயன்கள் பற்றியும், இவ்வூரின் வளர்ச்சிக்காக இங்கு வாழ்ந்தவர்களும், இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்களும் ஆற்றிய பணிகள் பற்றியும் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாடசாலையில் வரலாறுகள் பல்வேறு பதிவேடுகள், செவி வழியாக கேட்டவை, மற்றும் யான் அறிந்தவை மூலமும் எழுதக்கூடியதாக இருந்தது. ஊர் வரலாறுகள் முழுவதும் இங்கு வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் வயது முதிர்ந்தவர்கள் மூலம் அறிந்தவை. இவ்வூரில் 45 வருடங்கள் வாழ்ந்தவன் என்ற முறையில் சிலவற்றை அறிந்திருந்த வகையிலும் எழுத உதவின. இந்நூலின் சிலவிபரங்கள் தவறவிடப்பட்டிருக்கலாம். அன்றேல் சில தவறுகள் விடப்பட்டும் இருக்கலாம். ஊர்ப்பற்றுள்ள பெரியோர் அவற்றை எனக்குச் சுட்டிக்காட்டினால் இவற்றை அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ள உதவியாக இருக்குமென நம்புகின்றேன். “உசன்பதி முத்துமாலை” என்னும் நூலை இவ்வூரைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வசிப்பவருமான திருமதி.சி.சரவணமுத்து அவர்கள் 2006 ஆம் ஆண்டு வைகாசியில் வெளியிட்டிருந்தார். இவருக்கு எனது பாராட்டுக்கள்.

வரலாறுகளை ஆவணப்படுத்துதல் மிகக் கடினமான பணி என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். உதாரணமாக உசன் பெயர் வந்தமைக்கு ஆதாரம் கிடையாது. இந்நூலை எழுத முதலில் தூண்டியவர் உசன் இராமநாதன் மகாவித்தியாலய முன்னைய நாள் அதிபரும், இவ்வூர் மக்களின் நல்மதிப்பை பெற்றவரும், எனது பெருமதிப்புக்குரியவருமான திரு.சி.சிவசரவணபவன் (“சிற்பி”) ஐயா அவர்களாவர். இவர் இதற்குரிய நல்ல பல ஆலோசனைகளையும், சில குறிப்புக்களையும் கொழும்பில் இருந்து தொலைபேசிமூலம் வழங்கியவர். அத்தோடு இந்நூலை நன்கு வாசித்து, சில திருத்தங்களையும், அணிந்துரையும் எழுதியவர். இப்பேருதவிக்கு தனிப்பட்ட முறையிலும் உசன் வாழ் மக்கள் சார்பிலும் நன்றிகள் பலவற்றைச் செலுத்துகின்றேன். இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய உசன் கந்தசுவாமி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம சிவாச்சாரியாரும், அருள் வளர் ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலருமாகிய சிவஸ்ரீ சுந்தரேஸ்வரர், வாழ்த்துரை வழங்கிய ஓய்வு பெற்றும் பெறாதவர் போல் செயற்பட்டு வரும் முன்னைய நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரும், ஒப்புரவாளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தென்மராட்சிப் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தர மதிப்பீட்டுச் சுட்டி எண்ணை உயர்த்துவதற்காக அரும்பாடுபடும் பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன், போர்க்காலச் சூழ்நிலையிலும் தென்மராட்சி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு தமது உயிரையும் மதியாது அரும்பணியாற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பகல் இரவுபாராது கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணியாற்றி வருபவரும் எனது பெருமதிப்புக்குரியவருமான செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகன், எனது குருவும் உசன் இராமநாதன் மகாவித்தியாலய வளர்ச்சியின் சிற்பியும், இப் பாடசாலையின் உப அதிபரும், இந்நூலுக்கு வேண்டிய தரவுகளைத் தந்தவரும் ஓய்வு பெற்ற அதிபருமான பண்டிதர்.எஸ்.கே.தம்பு, பாடசாலைப் பணியே தம்பணியாகக் கொண்டு செயற்படும் உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் திரு.ந.நவரத்தினம், எமது ஊரின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றும் ஓய்வு பெற்ற சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.மாணிக்கம், ஆலயப் பணியே தெய்வீகப் பணி என்ற கருத்தோடு செயற்பட்டவரும் உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் திரு.கு.விமலதாஸ், நூலாசிரியர் அறிமுக உரை எழுதிய கல்விச் சேவையில் பெரும்பணி ஆற்றி கல்வி அமைச்சின் நன்மதிப்பைப் பெற்ற ஓய்வு பெற்ற தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.புஸ்பா திலகவதி கணேசலிங்கம், உசன் கிராம வளர்ச்சியில் அரும்பணி ஆற்றிவரும் கிராம முன்னேற்றச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம், இந்து இளைஞர் சங்கம் ஆகியவற்றின் சார்பால் வாழ்த்துச் செய்தி வழங்கிய திருவாளர்கள் ந.மதுராகரன், தி.வல்லிபுரம், கு.கமலதாஸ் ஆகியோருக்கும், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் பத்தாண்டுகள் வரை நற்சேவையாற்றி மாணவர் அடைவுமட்டத்திலும், ஒழுக்கத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்திய ஓய்வு பெற்ற அதிபர் திரு.ஐ.வரதராசா, உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் ஆசிரியரும், உபஅதிபரும் இன்னாள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபருமான திரு.அ.அகிலதாஸ், வெளிநாட்டில் வசிக்கும் உறவுகளுக்கென்று இந்நூலில் ஓர் அன்பு மடல் வரைந்த ஊர்ப் பணியே தம் பணியாகக் கொண்டு செயல்ப்படும் டாக்டர்.ஐ.ஜெபநாமகணேசன், குறுகிய கால அவகாசத்தில் கனடாவில் இருந்து வாழ்த்துச் செய்தி வழங்கி இந்நூலுக்கு அனுசரணை வழங்கிய ஓய்வுபெற்ற அதிபர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. ஸ்ரீகந்தன், இந்நூலின் மேலும் இப்பணி மீதும் கொண்ட அளவுகடந்த அன்பால் தங்கள் உள்ளங்களில் இருந்து சொரிந்த தேன் துளிகளுக்காக திருவாளர்கள் மு.க.சிவானந்தம், க.சிவானந்தன், திரு.கி.நந்தன். திருமதிகள்.தயா.சுந்தரலிங்கம், ச.பத்மமீரா, செல்வி.ஜெகசோதி டுபீனி ஆகியோர்களுக்கும் எனது காத்திரமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலுக்குரிய சில தரவுகளைத் தந்து நல்ல ஆலோசனைகளையும் வழங்கிய பண்டிதமணியின் உத்தம மாணவரும் அன்னாரின் பணியைத் தொடர்ந்து செய்துவருபவருமான பண்டிதர் பஞ்சாச்சரம், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவரும், வடஇலங்கைச் சங்கீத சபையில் செயலாளருமான திரு.அ.தற்பரானந்தம் அவர்களுக்கும் எனது நன்றிகளைச் செலுத்துகின்றேன். இந்நூலுக்கு வேண்டிய சில தகவல்களைத் தந்துதவிய உசன் கார்த்திகேசு முருகேசு, உசன் கிராம சேவை அலுவலர் திருமதி சு.செல்வவிநாயகம், என்னருமை உசன் வாழ் மக்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய ஐங்கர் கிரபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் இந்நூலுக்குரிய எனது ஆக்கங்களை கணனியில் அச்சிட்டு உதவிய திருமதி. அஜந்தா தனபாலசிங்கம் அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

"வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் இந்நூல் இலவச வெளியீடாகும். இந்நூல் வெளியீட்டு விழாவின் பின் உசன் வீடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நூல் இருக்க வேண்டும் என்பதே இந் நூலாக்கத்தின் குறிக்கோளாகும். புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் கைக்குத் தனித்தனியாகக் கிடைக்கச் செய்வது மிகக் கடினமான பணி. வெவ்வேறு நாடுகளில் வாழும் எமது உறவுகளுக்கு ஒவ்வொரு நூல் கிடைக்கக் கூடியதாக செய்ய உள்ளேன். இந்நூலைப் பேணி எதிர்கால சந்ததியினர் பயன்பட வைப்போமாக.

"சிவபுரி"
உசன்
மிருசுவில் (21. 07.2007)

க. பேரம்பலம்.
நூலாசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் கந்தசுவாமி கோவிலின் பிரதம சிவாச்சாரியாரும்
அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில்
அறங்காவலருமான சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
அவர்களின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் பொலிந்து விளங்கும் தட்சண கைலாசம் என்று சொல்லப்படுகின்ற லங்கா தீபத்தில் சிவபூமியின் மாணிக்கம் என்று வர்ணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பகுதியில் வயலும், நயமும் மேல் ஓங்குகின்ற மருதநிலம் தென்னை, கனிகள் நிறைந்த நல் ஊராம் உசன் என்ற அழகிய கிராமம் இருக்கின்றது.

மனித வாழ்வின் இரு கண்களாகத் திகழ்கின்ற கல்வி, சமயம் இரண்டையும் மேம்படுத்துவதற்கு உசன் கந்தசுவாமி கோவிலும், உசன் யா/இராமநாதன் மகாவித்தியாலயமும் நடுநாயகமாகத் திகழ்கின்றன. மக்களின் மனங்களை பண்படுத்துவதற்கு கஜகேசரி விநாயகர், முருகன், புதுக்குளம் அம்பாள், வீரபத்திரர், ஞானவைரவர் ஆகிய தெய்வங்கள் ஆலயமாகக் கொண்டு எழுந்து அருள் பாலிக்கின்றார்கள்.

ஞானம் என்னும் கல்விச் சுடரை ஏற்றி அறிவாக திகழ்வதற்கு இராமநாதன் மகாவித்தியாலயம் திகழ்கின்றது. இவ் உசன் பதியை அனைத்து உலக மக்களும் அறிந்து பெருமைப்பட வைத்திருக்கின்றது. இதன் வரலாற்றை தேடி திரட்டி சான்றுபட எடுத்து புத்தக உருவிலே வெளிக்கொண்டு வர பெரும் முயற்சி எடுக்கின்ற திரு.க.பேரம்பலம் அவர்கள் இக்காலங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமய, சமூக, சரித்திரக் காலங்களை அவதானித்த பெரியார் இறை அன்பு, குரு விசுவாசம், கிராமப்பற்று கொண்டு இந்த நூலை உருவாக்க முயன்றார்.

உசன் முருகனின் வரலாற்றுத் தொன்மைகளையும் வயது முதிர்ந்த பெரியவர்கள் கற்றறிந்த அறிஞர்களையும் தேடி மக்களுக்கு அறியத் தந்திருக்கின்றார். பாடசாலையின் பெருமைகளையும் வரலாறுகளையும் படித்தறிந்து வெளிப்படுத்தியுள்ளார்.

திருவாளர் அவர்கள் இந்த பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றி அதிபர் தரத்திற்கு உயர்ந்து பாடசாலை வளர்ச்சியிலும் கல்வி மேம்பாட்டிலும் ஒழுக்கத்திலும் மாணவர்களைத் திறம்படச் செய்தவர். இவருடைய சேவையை கண்ணால் காண்கின்ற வாய்ப்பு நான் மாணவனாக கல்வி பயில்கின்ற காலத்தில் எனக்கு கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஊராம் உசன் பதியை பெருமைப்படுத்துகின்ற இந்த நூல் உலகெங்கும் பரந்திருக்கின்ற உசன் வாழ் மக்கள் முதல் ஆராய்ச்சியாளர் வரை பயன்பெறுவர். தமிழ் மக்கள் அனைவரும் எமது ஊரைப்பற்றி அறியக் கூடியதாக அமைந்துள்ளது. இவருடைய முயற்சி திருவினையாக்கும். நல்லபடி எண்ணம் நிறைவேற எல்லாம் வல்ல கலியுக தெய்வம் உசன் முருகனின் திருவருளை வேண்டி நல்லாசிகள் கூறி அமர்கின்றேன்.

"லோகா நுகினோ பவந்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் துணைவேந்தர்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின்
வாழ்த்துச் செய்தி.



ஆசிரியர்.க.பேரம்பலம் அவர்கள் உசன் கிராமம் பற்றியும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் பற்றியும், இவற்றுடன் தன் வாழ்வு எவ்வாறு இணைந்திருந்தது என்பது பற்றியும் இவரது மனதில் ஆழமாகப் பதிந்திருந்த மகிழ்வூட்டும் பசுமையான நினைவுகளை நன்றி உணர்வுடன் ஆவணப்படுத்த எண்ணினார். இவரது நல்லெண்ணமே 'வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு' என்னும் நூலாக உருப்பெற்றது. பாராட்டுக்குரியது. கடந்த மூன்று தசாப்தங்களாக எமது பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் முடிவுறாத யுத்தத்தால், பல பூர்வீகக் கிராமங்கள் மக்கள் அற்றவையாகவும், அழிந்து காடாகியும், பாதுகாப்புவலயமாகவும் மாறிவிட்டன. மேலும் சில கிராமங்கள் மக்கள் குறைந்தும், பொருளாதாரம் சுருங்கியும், பண்பாடு கலாசாரம் பொலிவிழந்தும் உள்ளன. இதனால் மக்கள் குறிப்பாக இடம் பெயர்ந்து நாம் வாழ்ந்த தமக்கு வாழ்வு தந்த கிராமங்களின் நுணி பௌதீகப் பண்புகள், வரலாறு, சமூகப் பொருளாதாரம் பற்றியும், கிராம வளர்ச்சிக்குப் பங்களித்தவர்கள் பற்றிய விபரங்கள், காலவோட்டத்தில் அழியாது பாதுகாக்கப்பட்டு கிராமத்தின் வருங்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கப்பட வேண்டுமென்ற தார்மீகக் கடமையினால் உந்தப்பட்டதன் விளைவாகவே ஆசிரியர் பேரம்பலம் அவர்களின் இந்நூலாகும்.

தென்மராட்சியில் உசன் கிராமம் நீர்வளம், நிலவளம், கடல் வளமும் கொண்டது. பெரிய நெல்வயல்களும், பயிர்த்தோட்டங்களும், தென்னந்தோட்டங்களும், மேய்ச்சல் நிலங்களும் கொண்ட இக் கிராமம், கல்வி கேள்விகளினாலும் சிறப்புற்று விளங்குகின்றது. இக்கிராமத்திலேயே சைவப் பெருவள்ளல் பொன்னம்பலம் இராமநாதனால் அமைக்கப்பட்ட உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் இருக்கின்றது. இக்கல்வி நிலையத்தால் இக்கிராமத்துப் பிள்ளைகள் பெரும்பேறு பெற்றிருக்கின்றார்கள். மேலும் சைவமும், தமிழும் மணம் பரப்பி நிற்கும் இக்கிராமத்தில் உள்ள கந்தசுவாமி கோவில் புகழ் பெற்ற திருத்தலமாகும். இத்தகைய சிறப்புப் பெற்ற கிராமத்தையும், நான் படித்தும், ஆசிரியராகவும், அதிபராகவும் பணிபுரிந்ததுமான உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தையும், அன்போடு நினைவுகூர்ந்து ஆசிரியர் அவைபற்றி நூல் எழுதியது மிகவும் பாராட்டக்கூடிய விடயம். இவரது எழுத்துப்பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

ஒப்பமுவாளர்,
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.
முன்னாள் துணைவேந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேச செயலரின்

## வாழ்த்துச் செய்தி ...



தமது நீண்ட காலக் கல்விப் பாரம்பரியப் பணியின் ஊடாகத் தனது கிராமமாகிய தென்மராட்சிப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள கிராமங்களில் ஒன்றாகிய உசன் கிராமத்தின் தனித்துவத்தை உணர்ந்ததன் காரணமாக அதன் வரலாறு பற்றிய "வளம் கொழிக்க உளம் செழிக்கும்" உசன் வரலாறு" என்ற நூலை திரு.கந்தையா பேரம்பலம் அவர்கள் இலவசமாக வெளியிட முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இன்றைய காலகட்டத்தில் நிகழ்வுகள், சம்பவங்கள் என்பன ஆவணப்படுத்தப்படுவது மிகவும் முக்கியமான விடயமாகும். இந்நூலிலே உசன் கிராமத்தின் குடிசனப்புள்ளி விபரங்கள், உசனின் பெயர் வந்த வரலாறு, மக்களின் வாழ்க்கை முறை, வணக்கத் தலங்கள், கிராம வளர்ச்சியில் பங்கு பெறும் சங்கங்கள், கிராமத்திற்குப் பணிபுரிந்தவர்கள், பாடசாலைகள் பற்றிய வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட்டு வெளிவருவது பாராட்டப்படக்கூடிய ஓர் விடயமாகும்.

இக்கிராமத்தில் நீண்டகாலம் வாழ்ந்து இக்கிராமத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கடந்தகால, நிகழ்கால நிகழ்வுகளின் ஊடாக ஆசிரியர் இக்கிராமத்தை எதிர்காலத்திற்கு வழிநடத்திச் செல்ல எண்ணியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இவர் எந்நோக்கத்தைக் கொண்டு இந்நூலை வெளியிட எண்ணினாரோ அந்நோக்கம் நிறைவுறவும், கல்விப் புலத்திலுள்ளவர்களின் தேவைகள் நிறைவுறவும் வாழ்த்துவதோடு வருங்கால வரலாறு எழுதப்படும் போது இந்நூல் ஒரு வழிகாட்டியாக விளங்கிட வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

செ.ஸ்ரீநிவாசன்,
பிரதேச செயலர்,
தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின்

வாழ்த்துச் செய்தி ...

தென்மராட்சியின் கிழக்கே அமைந்துள்ள கிராமங்களில் உசன் கிராமம் பல்வேறு வளங்களையும், கற்றோரையும், வள்ளல்களையும் கொண்ட பண்பட்ட செறிப்பான கிராமமாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கு இணங்க உசன் கந்தசுவாமி கோவில் உசன் கிராமத்தில் நடுநாயகமாக விளங்குகின்றது. ஆலயத்தின் அயலில் சைவப் பாரம்பரியத்தில் உதித்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் திகழ்கின்றது. "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலை எழுதும் திரு.க.பேரம்பலம் அவர்கள் உசன் கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். இது மட்டுமல்லாது, ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக உதவிக் கல்விப் பணிப்பாளராக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணிபுரிந்தவர்.

ஒரு கிராமத்தின் வரலாற்றையும் அங்குள்ள பாடசாலையின் வரலாற்றையும் நூலாக ஆவணப்படுத்துகின்ற பொழுது எதிர்காலச் சந்ததிக்கு கிராமம் பற்றியும் பாடசாலையின் வரலாறு பற்றியும் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுத்துகின்றது.

கிராமத்தைப் பற்றிய வரலாற்றை எழுதுவதென்பது இலகுவான விடயமல்ல. கிராமத்தின் தோற்றம், பெயருக்கான காரணம், அதன் சிறப்பு, வளர்ச்சியில் பங்கெடுத்தவர்கள், அதன் வளங்கள் பற்றியெல்லாம் எழுதும் பொழுது ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்கி உண்மை கண்டறியப்பட்டு நடுநிலை நின்று எழுதுதல் வேண்டும். மேலும் இத்தகைய ஒரு நூலை எழுத வேண்டுமென்ற உணர்வு நூலாசிரியரிடமிருந்து ஏற்பட்டதே மிகப் பெரிய ஒரு விடயமென்றே கருதுகின்றேன்.

நூலை எழுதுவதற்கு நேரம் ஒதுக்கிப் பல்வேறு தகவல்களையும் திரட்டி ஒழுங்குபடுத்தி நூலை ஆக்கிய திரு.க.பேரம்பலத்தின் பெருமுயற்சியைப் பாராட்டுவதோடு நூல் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி,
2007.07.05.

திருமதி.அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை



நீரும் நிழலும் நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் – ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும் சிவந்த தாமரையாள் தாள் – நல்வழி

செந்தாமரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருமகள் வஞ்சம் இல்லார்க்கு நீர்வளத்தையும், நல்ல மனையையும், நிறைந்த நெல்லையும், நல்ல பெயரையும், புகழ்நிறைந்த கீர்த்தியையும், நல்வாழ்க்கையையும், நல்ல ஊரையும், வளர்கின்ற நிறை செல்வத்தையும், நீடித்த ஆயுளையும் என்றும் தந்தருள்வாள் என்பது ஔவையார் கருத்து. மேற்குறித்த பாடலின் கருத்துக்குரியவராக ஈரநெஞ்சோடு வாழ்ந்து கொண்டிருப்பவர் மதிப்பார்ந்த ஆசிரியர்பிரான் திரு.க.பேரம்பலம் ஐயா அவர்கள். இப்பெருந்தகை புகழ்பூத்த உசன் கிராமத்தின் உன்னத சிறப்பை ஆவணமாக்க முனைந்தமை பாராட்டுக்குரிய விடயமாகும். தன்வாழ்வில் பெற்ற நற்பேறுகளுக்கு இப்புண்ணிய கிராமம் தந்த வளங்கள் பேருதவியாக அமைந்த சிறப்பினை நன்றியோடு எடுத்துரைப்பதற்கு இந்நூலினை ஸ்ரீமான் பேரம்பலம் அவர்கள் படைத்திருப்பது போற்றுதலுக்குரியது. போரின் அனர்த்தங்களால் அழகான இயற்கைச் சிறப்புமிக்க கிராமங்களைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்து, ஊர்கடந்து, உறவுகடந்து பல ஊர்களிலும் பல தேசங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் தங்கள் கிராமத்தின் வாழ்வை வளத்தை நீள நினைப்பதற்கு இந்நூல் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. தென்மராட்சிப் பிரதேசத்தில் கந்தபுராண கலாசாரத்தின் மகிமையைக் காப்பாற்றுகின்ற திருவருள் நிறைந்த தெய்வீக ஊர் உசன். இவ்வூரின் சிறப்பினை நல்லை நகர் நாவலர் பெருமான், சேர்,பொன்னம்பலம் இராமநாதன் போன்ற பெருமக்கள் உணர்ந்து இவ்வூரை தங்கள் வாழ்வோடு தொடர்புபடுத்தியுள்ளமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் வளமான வாழ்வுக்கு வித்திட்ட
உப அதிபர் பண்டிதர் தம்பு அவர்களின்
வாழ்த்துச் செய்தி



யாழ் திருநாட்டின் கிராமங்கள், ஊர்கள் எங்கும் ஆன்மீக நெறியும், தெய்வ வழிபாடும் தழைத்து ஓங்கவும், அறிவுக் கலையும் அதன் பயன்பாடும் பரந்து விரியவும் ஈடுஇணையற்ற பெரும்பணி ஆற்றுபவை தெய்வ ஆலயங்களும், வித்தியாலயங்களும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். மக்கள் குலத்துக்கு இயற்கை அளித்த வரப்பிரசாதங்கள் இவை.

புனிதமான இருசெல்வங்கள் இரண்டும் மக்கள் வாழ்வின் இரண்டறக் கலக்கும் போதுதான் நன்மக்கள் உருவாகின்றனர். நாடும் மக்கள் குலமும் நலம்பல பெருகி உயர்வடைகின்றனர். வாழும் கிராமங்களும், ஊர்களும் வளர்ச்சியடைந்து வரலாறு படைக்கின்றன. இலட்சியங்கள் உருவாகின்றன.


தான் பிறந்த நாட்டின் இவ்வித வளர்ச்சியையும் வரலாற்றையும் இன்றைய இளந்தலைமுறையினர் சரிவர அறிந்திருப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். இந்த யதார்த்த நிலையில் நின்று "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற இந்த வெளியீடு உசன் கிராமத்தின் பூர்வீகம், மக்களின் வாழ்வு நெறி யாவற்றையும் தொகுத்து தெளிவாகவும் விபரமாகவும் எடுத்துக்காட்டுகின்றது.

இத்தகைய பெரும்பணியைச் சிறப்பாகவும், நிறைவாகவும் ஆற்றிமுடித்த பெருமை வெளியீட்டு ஆசிரியரான உயர்திரு.க.பேரம்பலம் அவர்களுக்கே உரியது. மக்கள் மத்தியில் இது போன்ற சிறப்பான பணிகளை அவர் முன்னெடுத்து நிறைவு செய்ய உசன் பதி முருகப்பெருமானின் திருவருள் என்றும் கிடைப்பதாக.

நலமே பெருக. நலமே சிறக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்திய கலாநிதி க.மாணிக்கம் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

'வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு' என்ற தலைப்பில் எமது பாடசாலை, உசன் கிராமம் ஆகியவற்றின் வரலாறுபற்றி உசன் இராமநாதன் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திரு.க.பேரம்பலம் அவர்கள் ஓர் வரலாற்று நூலை எழுதியுள்ளார். இதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைந்து வாழ்த்துகின்றேன்.

ஓர் கிராமத்தின் வளர்ச்சிக்கு அவ்வூர் ஆலயமும், பாடசாலையும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. அதைப் போல் உசன் கிராமத்தின் வளர்ச்சிக்கு உசன் கந்தசுவாமி கோவிலும், உசன் பாடசாலையும் முக்கிய காரணமாகத் திகழ்கின்றன. பழைய காலத்தில் இவ்வாலயத்தில் பூசைகள், உற்சவங்கள், திருமுறை ஓதல், புராண படலங்கள் என்பன ஒழுங்காக நடைபெற்று வந்தன. இதனால் இக்கிராமத்தின் ஆன்மீக வளர்ச்சி, கல்வி, பொருளாதாரம், சமூக ஒற்றுமை என்பன வளர்ந்து காணப்பட்டன. இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்களும், ஊக்கத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் ஆசாரசீலராக இருந்து, இவ்வாலயத்தை வளர்த்து வந்தனர். இவ்வாலயத்திற்கருகாமையில் இருந்த மடத்தில் பிள்ளைகளுக்குக் கல்விப் போதனையுடன், புராணங்களுக்குப் பயன்சொல்லும் சமயப் பணிகளும் நடைபெற்று வந்தன. இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தனர். திருவாளர்கள் வைத்திலிங்கம், இராசரத்தினம், நடராசா, விமலநாதன் ஆகியோர்கள் தர்மகர்த்தாக்களாக இருந்த காலத்தில் ஆலயம் வளர்ச்சியடைந்தது. தற்போது இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாகத் திரு.கு.விமலநாதன் அவர்கள் கடமையாற்றுகின்றார். இவர் காலத்தில் இவ்வாலயத்தில் பெரும் திருப்பணி வேலைகள் நடைபெற்று மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவ்வாலயத்திற்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமுருக கிருபானந்தவாரியார் அடிகளார் வந்து தரிசித்து "முருகன் பெருமை" பற்றி சொற்பொழிவும் ஆற்றியுள்ளார். தற்போதைய தர்மகர்த்தா காலத்தில் அறிஞர் சிவராமலிங்கம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தின் சைவப் பாடசாலை 1926 ம் ஆண்டு திரு.வி..வைத்திலிங்கம் அவர்கள் உதவியுடன் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் நிறுவினார். இவ்வித்தியாலய வளர்ச்சிக்குப் பலர் பாடுபட்டனர். குறிப்பாகக் காலம் சென்ற திரு.மு.சிற்றம்பலம் அவர்கள், பண்டிதர்கள் வேலுப்பிள்ளை, எஸ்.கே.தம்பு, சி.சரவணமுத்து ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பிற்காலத்தில் இந்நூல் ஆசிரியர் அவர்கள் அதிபராக இருந்தபோது பெரும்பணியாற்றினார்.

இப்பாடசாலையில் கல்வி கற்றவர்களும், இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு வேறு கல்லூரிகளில் உயர்கல்வி பெற்றவர்களும், உயர்பதவி பெற்று இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பணியாற்றி வருகின்றனர். இது எமது பாடசாலைக்கும் எமது கிராமத்துக்கும் பெருமை தருகின்றது.

இந்நூலுக்கு முன் "முத்துமாலை" என்ற நூலும் வெளிவந்தது. இன்று வெளிவரும் "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற நூலை எழுதியவர் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி அனுபவம் பெற்றவரால் வெளியிடுவது போற்றத்தக்கது. விரிவான நூலாக இருக்கும். யாவரும் வாசித்துப் பயன்பெறுவீர்களாக.

வைத்திய கலாநிதி க.மாணிக்கம்
ஓய்வுபெற்ற சுகாதாரப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி



இனிது இனிது யாரினும் இனிது என்று யாழ் பாடிப் பரிசு பெற்ற யாழ் நகரிலுள்ள தென்மராட்சியின் தென் கோடியிலே உசன் என்னும் கிராமம் உண்டு. முக்கனிகளும் ஒருங்கே நிறையப் பெற்ற மூன்றெழுத்துக் கொண்ட வளம் கொழிக்கும் உசனின் வரலாற்றை அறிவதற்கான ஆதாரம் இன்று வரை எழுத்து வடிவில் எம்மிடம் இல்லை.

ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக பல பதவிகளில் அமர்ந்து நாட்டிற்கும், தென்மராட்சிப் பகுதிக்கும் சேவையாற்றிய உயர்திரு க.பேரம்பலம் ஐயா அவர்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் உசனின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பல. உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக, அதிபராக பல வருடங்கள் சேவையாற்றி பல நற்பிரஜைகளை உருவாக்கியவர். ஐயா அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் பொறியியலாளர்களாக, மருத்துவர்களாக, ஆசிரியர்களாக இன்று எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடமையாற்றுகிறார்கள்.

ஏற்கனவே சிறப்பு வாய்ந்த திரு.க.பேரம்பலம் அவர்கள் வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசனின் வரலாற்று நூலுக்கு வாழ்த்துரை வழங்க எத்தனையோ பெரியவர்கள் முன்வந்தும் எனக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்கியதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறும் திரு.க.பேரம்பலம் அவர்களின் வாழ்வும் அவர் பணியும் தொடர வாழ்த்துகின்றேன்.

திரு.ந.நவரத்தினராசா,
அதிபர்,
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவின் வாழ்த்துச் செய்தி



வளர்ச்சி, வரலாறு என்று எதை நாம் ஆய்வுக்கெடுத்தாலும் அது பௌதிக பொருட்களின் நோக்கங்களுக்காக அல்லாமல் மனிதனின் நன்மையையே நோக்கமாகக் கொண்டது என்பது எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். அந்த வகையில் தான் வளர்ந்த உசன் கிராமத்தைப் பற்றி சிந்தித்த பேராசான் க.பேரம்பலம் அவர்களின் நல்லுள்ளம் மனித சமூகத்துக்கான முன்னுதாரணங்களில் குறித்தெண்ணப்பட வேண்டியதொன்றாகும். உசன் கிராம நகரம் என்பதை ஆசிரியர் இந்நூலில் எடுத்தியம்பியிருக்கும் தன்மையும், அக்கிராமத்தின் பச்சிலைத்தன்மை, அறிவியலின் முதுகெலும்பான மகாவித்தியாலயம், ஆத்மீகத்தின் கோபுரமாம் முருகன் ஆலயம் போன்றவை பற்றி இவ் ஆக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் முத்திரைப் பதிவுகள் ஆய்வுக்கு அழகூட்டும். அக்கிராமத்தின் செழுமையை ஆசானின் ஆக்கச் செழுமை மேன்மேலும் மெருகூட்டியிருப்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியவை. மேலும் இவ்வாக்கத்துக்கு அடிப்படையான ஆசானின் மண்பற்று, நாட்டுப்பற்று, உலக சோபனத்தின் அடிப்படை என்றால் அது மிகை ஒன்றுமில்லை எனலாம்.

அவ்வழியில் திரு.க.பேரம்பலம் அவர்களின் இவ்வகைப்பணி தொடரவும் ஏனைய நல் உள்ளங்களுக்கு முன்னுதாரணமாக அமையவும் எல்லாம்வல்ல உசன் பதியில் எழுந்தருளி அருள் வளம் பொழியும் முருகப் பெருமான் நல்லாசி வேண்டி, இக்கிராம ஆத்மீக சமூக ஆசிவேண்டி எனது நல்லாசிகளையும் உரித்தாக்குகின்றேன்.

கு. விமலதாஸ்

தர்மகர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசன் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியிலே இனிய நல்வளங்கள் சேர் பதியாகிய உசன் கிராமத்தின் வரலாறு, அவற்றுள் சிறப்பாக உசன் இராமநாதன் மகாவித்தியாலய வரலாறு என்பவை கால வெள்ளத்தால் கரைந்து போகாவண்ணம் அவற்றை ஓர் அரிய வரலாற்றுப் பொக்கிசமாகத் தாங்கள் நூல் வடிவில் ஆக்க இருப்பதை அறிந்த அக்கணமே எங்களது உள்ளம் என்றுமில்லா வகையில் பூரிப்படைகின்றது. அவ்வகையில் முதலில் உசன் கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கிராமத்தின் பல்வேறு அமைப்புக்களும் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகின்றன. அவ்வகையில் உசன் கிராம அபிவிருத்திச் சங்கமும் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது கிராமத்தின் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது. இதனிலும் மேலாக இந்நூலை யாத்த திருவாளர்.க.பேரம்பலம் அவர்கள் "எமது கிராமத்தின் விருத்தியே தமது வாழ்நாளின் வளர்ச்சி" என்பதற்கிணங்க கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குத் தக்க தருணங்களில் மிக்க ஆலோசனைகளை வழங்கி கிராமத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர் இச்சிறப்புக்களைத்தமது நூலில் பதிக்க உள்ளார் என்பதை நினைத்து மகிழ்வடைகின்றோம்.

அதுமட்டுமன்றி தமது இளைப்பாறு நிலையிலும் தாம் பிறந்த மண்ணையும், மக்களையும், பௌதிக வளங்களையும் நேசிக்கும் பொருட்டு "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் வரலாற்று ஆவணம் ஒன்றைத் தாங்கள் ஆக்குவதன் ஊடாக இனிவரும் இளைய சந்ததியினர் தமது கிராமத்தின் மகோன்னத நிலையை அறிந்து மனஎழுச்சி அடைவார்கள் என்பதற்கையமில்லை.

நூலாசிரியர் நீண்டு, பரந்து, விரிந்த பரப்பளவைக் கொண்டு கிராமத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, தனியாள் பெருமை கிராமத்தின் நிறுவனங்களின், அமைப்புக்களின் அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் என்பவற்றை தேடித் தொகுத்து ஆவணமாக்கும் பாரிய பணியை முன்னெடுப்பதை நினைத்து எமது மக்களும், உசன் கிராம அபிவிருத்திச் சங்கமும் தங்களது நூல் சிறப்புறத் திகழ வேண்டும் என்று மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தங்கள் பணி மென்மேலும் சிறக்க வேண்டும் என்றும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

கு. ஈசா
தலைவர்

ந. மதுராகரன்
செயலாளர்
"உசன் கிராம அபிவிருத்திச்சங்கம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் ஐக்கிய நாணயச் சங்கத்தின் வாழ்த்து

ஈழத்தின் வடபால் தென்மராட்சியின் கிழக்கே எமது உசன் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் மத்தியில் எம்கிராம வளர்ச்சிக்கு முருகன் ஆலயமும், அதனை அண்டி பாடசாலையும் அமைந்திருக்கின்றன. இவை இரண்டும் கிராம மக்களுக்கு மிகமிக முக்கியமானவையே.

எனவே எமது இப்பாடசாலையில் எம் கிராம மக்களின் பிள்ளைகளும், அயல் கிராம மக்களின் பிள்ளைகளும் தமது கல்வியைப் பெற்றுக் கொண்டே வந்துள்ளார்கள். வருகின்றார்கள். இப்பாடசாலை 1926 ஆம் ஆண்டு எம்கிராமத்தில் இருந்த பெரியார்களின் விடா முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு பின் 1937ம் ஆண்டு நாகர் கோயில் என்ற கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்று அவர்களின் உதவி ஆசிரியர் குழாத்துடன் பாடசாலையின் கல்வித் தரத்தை வளர்த்து மேம்படச் செய்தார். அவர்களின் காலத்தில் கணக்கிலடங்கா மாணவர்கள் பட்டங்கள் பெற்று, பதவிகள் பல பெற்று வெளிமாவட்டங்களிலும் கடமையாற்றியுள்ளார்கள். கடமைகள் ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் குழாம்களும் தம்பணிகளை மிகவும் அர்ப்பணிப்புடன் ஆற்றியமையினால் அன்று ஒரு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது இன்று ஒரு வரலாறு படைத்த மகாவித்தியாலயமாக உயர்ந்துள்ளது என்பது எம்கிராம மக்களின் கொடையாகும். எம்கிராமத்தின் பெருமையும் ஆகும்.

எனவே இவ்வரையறைக்குள் அடங்கும் இப்பாடசாலையில் கல்வி பயின்று பின் ஆசிரிய பதிவி பெற்று, பின் அதிபர் பதவியடைந்து எம் பாடசாலையிலும் அதிபர்பணி ஏற்று பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வாழ்ந்த அதிபர்களின் வரிசையில் இவரும் ஒருவர். தமது நற்சேவையால் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றவர் திரு.க.பேரம்பலம் ஆசிரியர் அவர்கள். தனது பணியில் ஓய்வு பெற்றபோதும், தன்னை வளர்த்த பாடசாலையின் கௌரவத்தை மனதில் நிறுத்தி பாடசாலையின் அபிவிருத்திப் பணியில் இன்றும் ஆர்வம் கொண்டிருக்கின்றார்.

அவர்கள் எம்பாடசாலையின் வரலாற்றையும், உசன் கிராம வரலாற்றையும் சேர்த்து "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற தலைப்பில் ஒரு நூல் வடிவமாக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற வளர்கின்ற சமுதாயங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைய இப்பணியை மேற்கொண்டுள்ளார்.

எமது பாடசாலையின் வளர்ச்சியின் ஆரம்ப அத்திவாரமாக இருந்த அதிபர் திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள் பாடசாலையில் மட்டும் தனது பணியில் நின்று விடாமல், தமது ஊர் விவசாயிகளின் தொழில் முயற்சியில் காணப்பட்ட கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட கஷ்டங்களையும் உணர்ந்து "உசன் ஐக்கிய நாணயச் சங்கம்" என்ற ஒரு சங்கத்தையும் ஏற்படுத்தி, சமாசம் மூலம் பணவசதிகளைப் பெற்றுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தானே நிதிப் பொறுப்பாளராகவும் இருந்து வழிநடத்தி வந்த இச்சங்கம், இன்று வரை வளர்ந்து தானாகவே சமாசங்களை எதிர்பார்க்காது இயங்கக் கூடிய ஒரு இலாபகரமான சங்கமாக விளங்கி தனது பொன்விழாவையும் கொண்டாடி சிறப்பான பணியை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. இன்று இந்நூல் ஆசிரியர் அவர்களும் இச்சங்கத்தில் பல வருடங்கள் நிதிப் பொறுப்பினராகவும் சேவையாற்றியும் தற்போது சங்கத்தின் தலைவராகவும் பலவருடங்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். எமது இச்சங்கம் எமது பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளிலும், பங்கேற்று அதனையும் அபிவிருத்தி செய்து வருகின்றது.

எனவே இப்பாடசாலையை வளர்த்த பல அதிபர்களையும், அதிபர்களால் ஆசிரியர் குழாம்களால் வளர்த்து வெளியேற்றப்பட்ட அறிஞர்கள், வைத்திய நிபுணர்கள், தொழில்சார் உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், தொழில் வாய்ப்புப் பெற்று புலம்பெயர்ந்து வாழும் உசன் கிராம மக்கள், அயலூர் மக்கள் யாம் அனைவரும் இப்பாடசாலைக்கு கடமைப்பட்டவர்களாயும் கௌரவம் மிக்கவர்களாயும் இருக்கின்றோம்.

ஆகவே இப்படிப்பட்ட "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற தலைப்பில் நூல் வடிவமாகி எம் மக்கள் மத்தியில் கிடைக்க இருப்பதையிட்டு எம் ஐக்கிய நாணய சங்கத்தின் சார்பில் ஆசிவேண்டி பெருமகிழ்ச்சியடைகின்றோம். நன்றிகூறுகின்றோம்.

வளர்க நம் உசன் பதி. வளர்க நம் இளம் சமுதாயம்.

க.திருநாவுக்கரசு
உப தலைவர்

தி. வல்லிபுரம்
செயலாளர்,
ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் இந்து இளைஞர் மன்றத்தின் வாழ்த்துச் செய்தி

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்பும் உடைத்து" – குறள்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" – ஔவையார்

இவ்வாக்கியங்கள் ஒரு ஊரின் கல்வி, கோயில் ஆகியவற்றின் சிறப்பை எமக்கு எடுத்து உரைக்கின்றன. தென்மராட்சியின் A9 கண்டி வீதியை மருவி அமைந்துள்ளது. எழில்மிகு முகமாலை என்னும் கிராமம் அவ்வூரில் பிறந்து வளர்ந்தவரே இவ்வராலற்று நூலை ஆக்கிய திரு.க.பேரம்பலம் ஆசிரியர் அவர்கள்.

ஒரு மனிதனை மனிதனாக வாழவைப்பது கல்வி ஆகும். எனவே திரு.க.பேரம்பலம் அவர்கள் சிறுவனாக இருக்கும் பொழுது, கோலமயில் வாகனன் முருகப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் அயற்கிராமம் உசன். இவ்வூரில் உள்ள இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றார். இவ்வித்தியாலயம் மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதென்பதற்கமைய இவ் ஊர் அயல் ஊர் மாணவர்களுக்கெல்லாம் அறிவொளி பரப்பி வருகின்றது. இக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பலர், ஒழுக்க சீலர்களாகவும், மனித நேயம்படைத்தவர்களாகவும் இருந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நூல் ஆசிரியர் திரு.க.பேரம்பலம் அவர்கள் ஓர் சாதாரண குடும்பத்தில் பிறந்து, தனது முயற்சியால் பல பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக இருந்து, பதவி உயர்ச்சி பெற்று தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். தமது பண்பால் மக்கள் மனதிலும், மாணவர்கள் மனதிலும் நீங்கா இடம்பிடித்தவர்.

அன்னார் ஆசிரியராக இருக்கும் காலம் இவ்வூரைச் சேர்ந்த ஆசிரியை தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா ரீச்சர்) அவர்களை வாழ்க்கைத் துணைவியாக்கினார். "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பதற்கமைய ஆசிரியர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் வாழ்க்கையில் முன்னணியில் திகழ பின்னணியில் விளங்கிய மனையாளே காரணம் எனலாம். இதனால் இவர் உசன் பகுதியிலே இல்லத்தை அமைத்து, ஆலயத்தொண்டுகள் சமூகத் தொண்டுகள் பல செய்து வருகிறார். இதன் பலனாக ஊரில் உள்ள பொதுப்பணி மன்றங்களில் எல்லாம் தலைமைத்துவம் பெற்றார். இவர் அங்கம் வகிக்காத மன்றங்கள் "நக்கீரன் இல்லாத் தமிழ்ச் சங்கம்" போன்றது. இவ்வூரின் வளர்ச்சிக்காக உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்தவர்கள் பலர். பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் ஊர்ப் பெரியார்கள் பலர் பூவின் வாசனை, காற்றுள்ள பக்கம் மணக்கும். ஆனால் கல்வி அறிவு படைத்த மேதைகளின் பூக்களோ எல்லாத்திக்கிலும் பரந்திருக்கும். அதேபோல கல்வி அறிவோடு, ஆத்மீக அறிவை வளர்க்கும் ஆலயத்தின் சிறப்பிற்கு வித்திட்டு வருவோர் பலர். இந்த புகழ்பூத்த உசன் கிராமத்தின் அறிந்தும், அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் வாழ்ந்த புண்ணிய சீலர்களை தன்னால் இயன்றவரையில் இவ்வரலாற்று நூல் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார் திரு.க.பேரம்பலம் அவர்கள்.

இவர்களைப் பின்பற்றி எமது தலைமுறை நல்ல பல செயல்களைச் செய்ய வேண்டும் என்பது இந்நூல் ஆகியோனின் வேண் அவா. 1990 ம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட, சமூக அரசியல் மாற்றங்கள், போரினால் எம்மைச் சீர்குலைத்தாலும், நாம் எமது கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றைப் பேணவேண்டும். மனித நேயம் படைத்த இந்நூலாசிரியரின் பிள்ளைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டைத் தொழில்நுட்பக் கல்லூரியில் போதனாசிரியராகவும், யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்தாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

எவர் ஒருவர் சமூகத்திற்கு நல்ல தொண்டு செய்ய முற்படுகின்றாரோ அவரை வரவேற்பது சமூகத்தின் கடமை. அந்த வகையில் மதிப்பிற்குரிய நூலாசிரியர் திரு.க.பேரம்பலம் அவர்களின் "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற வரலாற்று நூலை நெஞ்சார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

"வளர்க மனித நேயம்"

நன்றி. வணக்கம்.

இ.முருகதாஸ்,
செயலாளர்.

கு. கமலதாஸ்,
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தன்னை உருவாக்கிய பாடசாலையையும் கிராமத்தையும் உள்ளன்போடு நேசித்து தொண்டுகள் பல செய்த சிவானந்தம் அவர்கள் தமது பார்வையில் இருந்து சொட்டும் தேன்துளிகள்.**

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றவை
தள்ளிலும் தள்ளாமை நீர்த்து"

என்ற வளளுவன் வாக்கைத் தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவரும் என்றும் எம் மதிப்பிற்குரியவருமான உயர்திரு.க.பேரம்பலம் ஐயா அவர்கள் எமது கிராமத்தையும், கிராமத்தின் இரு கண்களாகத் திகழும் கந்தசுவாமி கோவில், இராமநாதன் மகாவித்தியாலயம் என்பவை பற்றியும் எழுதிய "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு"" என்னும் தலைப்பிலான வரலாற்று நூல் ஒன்றை வெளியிடத் துணிந்தமையை நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியதே.

கிராமம், கோயில், பாடசாலை மூன்றையும் வளர்ப்பதில் அரும்பாடுபட்டு உழைத்த வரலாற்று நாயகர்கள் பதித்துவிட்டுச் சென்ற வாழ்வியல் தடங்களையும், அதனால் பயனடைந்து வளர்ச்சி பெற்ற சாதனையாளர்களைப் பற்றியும் பதிவு செய்தல் காலத்தின் கட்டாயத் தேவையே ஆகும்.

அன்றில் இருந்து இன்று வரை நடந்தவற்றையும், இனிவரும் தலைமுறையினரும் அறிந்து அவர்கள் மேலும் அபிவிருத்தி நோக்கி உழைப்பதற்கு இந்த வரலாற்றுப் பெட்டகம், வழிகோலும் என்பதில் சந்தேகமில்லை. எனது கிராம வரலாற்றைப் பதிவு செய்ய முன்வந்த பெருமகனுடன் இணைந்து சிலகாலம் பாடசாலை அபிவிருத்திக்காகப் பணிபுரியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

அக்காலகட்டத்தில் அவரிடம் நான்கண்ட பெருந்தன்மை, நிர்வாக அணுகுமுறை, செயலூக்கம், என்பவை பற்றி எனது பார்வையில் பட்டவற்றை உங்கள் முன்வைப்பதில் மகிழ்ச்சியே.

எமது பாடசாலையில் கல்வி கற்று உயர்வடைந்த காரணத்தால் அதன் வளர்ச்சிக்காக இன்றும் முனைப்போடு செயற்பட்டுக் கொண்டிருப்பவர். அதற்கும் மேலாக கோவில், கிராமம் என்பவற்றின் வளர்ச்சிக்காகவும் உழைத்துக் கொண்டிருப்பவர். யாழ் குடாநாட்டிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் முன்னிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்து அதனை வளர்த்தெடுப்பதில் அயராது உழைத்து அதன் வளர்ச்சிக்கும் அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அவர் ஆற்றிய மேலான பங்களிப்பு நீங்கள் அறிந்ததே.

ஒரு தடவை எமது பாடசாலை முன்னேற்றம் தொடர்பாக நாம் அளவளாவிய வேளையில் எமது பாடசாலையின் அதிபராக இருந்தவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளரும், என்றும் எம் மதிப்பிற்குரியவருமான சிவஸ்ரீ சிவசரவணபவன் ஐயா அவர்கள் சொன்ன வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. "உங்கள் பாடசாலை முன்னேற வேண்டுமென்றால் திரு.க.பேரம்பலம் அவர்களை அதிபராகக் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். அவர்தான் தான் இருக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்காகத் திணைக்களத்தின் வளங்களைப் போராடிப் பெற்றுக்கொள்ளும் திறன் உடையவர்" என்பதுவே அவர் சொன்ன வார்த்தைகள். அக்கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை அயற்கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியைக் கண்டபோது புரிகின்றது.

எப்படியோ அவர் எமது பாடசாலைக்கு அதிபராக வருவது தாமதமாகவே நடைபெற்றது. தாமதமாக வந்தும் உயர்கல்விப் பணிப்பாளர் பதவி உயர்வு கிடைத்த காரணத்தால் சொற்ப காலமே எமது பாடசாலையில் அதிபராக இருந்தார். ஆனால் அதற்குள் அவர் சாதித்தவை பல.

அது எப்படி அவரால் முடிந்தது...?

"எண்ணிய முடிதல் வேண்டும்.
நல்லனவே எண்ண வேண்டும்.
திண்ணிய நெஞ்சம் வேண்டும் "

என்பதுவே அவரது இதய கீதம், இலட்சிய வேட்கை. அதனாலேயே சிறந்த செயல்வீரனாகத் திகழ்ந்தார். அன்பெனும் பண்பினைக் கொண்ட அணுகு முறையால் அவர் தொட்டது துலங்கியது, நினைத்தது நிறைவேறியது. பாடசாலைக்காக உழைத்த ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நிகழ்விற்கு விருந்தினராக அழைத்துக் கௌரவித்தார். ஒதுங்கி இருந்தவர்களும் ஓடிவந்து உழைக்கும் நிலையை உருவாக்கினார்.

"பண்பெனப்படுவது
பாடறிந்து ஒழுகல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடைய இயல்பறிந்து அதற்கேற்ப நடந்தமையால் சிறந்த பெறுபேறுகளை அவர் பெற்றார். ஒவ்வொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்து அவர்களைத் தன்னிச்சையாகச் செயற்பட வைத்தார். ஆனால் ஒவ்வொன்றையும் நுணுக்கமாகக் கண்காணித்தார். பொது நிதியைத் தொட்டதில்லை. ஆனால் நிதி சென்ற பாதையெல்லாம் நிழலாகத் தொடர்ந்தார். சிறந்த நிர்வாகம், அன்பான அணுகுமுறை, அயராத உழைப்பு இதைவிட வேறென்ன வேண்டும் வெற்றியைப் பெறுவதற்கு.

இவர் மட்டுமல்ல இவரின் துணைவியாரும் நீண்ட நெடுங்காலம் 33 வருடங்களாக எமது பாடசாலையின் ஆசிரியயையாயகப் பணியாற்றி நல் மாணவர்களை உருவாக்கியவர். அவர்களில் பலர் இன்று உயர் பதவிகளில் இருக்கின்றார்கள்.

இருவருமாக இணைந்து "கல்விப் பணியே கடவுள் பணி" எனச் செயற்பட்டவர்கள். அவர்களின் பணியை இலகுவில் நாம் மறந்துவிட முடியுமா? உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற எமது அதிபர் எட்டு மாதங்களில் அறுபது வயது நிறைவடைந்து ஓய்வுபெற இருந்தார். அவரின் சேவையைக் கௌரவித்து ஓய்வு பெறும்போது விழா எடுக்க வேண்டுமெனவும் தங்கப் பதக்கம் சூட்டி பராட்டவேண்டும் எனவும் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் சிலரும் நானும் நினைத்திருந்தோம். துரதிஷ்டவசமாக அது நடைபெறவில்லை. அந்தக்குறை நெஞ்சில் ஒரு முள்ளாக இன்றும் என்னை வதைத்துக் கொண்டிருக்கின்றது.

என்குறை பற்றி நான் ஒரு சந்தர்ப்பத்தில் எமது நிர்வாகசபை உறுப்பினராக இருந்த அமரர் நா.சிவசுப்பிரமணியம் அவர்கள் அந்தக் குறையை நிறைவுசெய்து விடுவோம். என்றும் அதற்கான செலவைத் தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். ஆனாலும் சூழ்நிலை அதற்கு உகந்ததாக அமையவில்லை. அதனால் தானோ என்னவோ இறைவன் அவரைக் கௌரவித்துள்ளார், கருணைபுரிந்துள்ளார். ஆம் இன்றும் இந்த வயதிலும் இளமைத் துடிப்போடும் உத்வேகத்தோடும் இந்த வரலாற்றுப் பெட்டகத்தை உங்கள் முன் சமர்ப்பிக்க இறையருள் கைகூடியுள்ளதே. அதைவிடவா பெரிதாக நாம் அவரைக் கௌரவித்திருப்போம்.


"வெள்ளத் தனைய மலர்நீட்டம் – மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என்றும் அன்புடன்
மு.க.சிவானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர் திரு.ஜ.வரதராசா அவர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றும் காலத்தில் பெற்ற அனுபவங்களை சுவைபடக் கூறுகின்றார்.



அந்தநாள்...

அது ஒரு நிலாக்காலம். வசந்தத்தில் ஓர் நாள். கனவுகளும் கற்பனைகளும் கருவுற... என்னை மறந்த நாள்...

"அந்தநாள் நெஞ்சிலே ஞாபகம் வந்ததே" வானொலியில் பாட்டொலி கேட்டது.

அந்தநாள் 1970 ஐப்பசி 25ம் நாள். மறந்தவை மறந்தன. நிறைந்தவை நெஞ்சிலே நின்றன. சிறிய கிராமம். அன்பான மக்கள். ஆரவாரமற்ற வாழ்க்கை. அமைதி கொஞ்சிய அற்புத மண். அழகோவியமாக அமைந்த கிராமம். அதுதான் உசன்.

புதிய இடம். முகமறியாத மக்கள். வீதி இருமருங்கும் வயல்கள். கதிர்முற்றி தலைசாய்த்து நாணிச் சிரிக்கும் நெற்பயிர். மருதநிலத்தில் குறிஞ்சித் தெய்வம் உசன் கந்தசுவாமி கோயில். ஆலயத்தோடு அந்தணர் குடும்பம் பசித்தார் முகம் பார்த்து உணவூட்டும் பக்குவம். ஆலய நிர்வாகத்தின் அற்புதம்.

வந்த இடம் நல்ல இடம். கூட்டிவந்த தம்பி தம்வீட்டிலேயே தங்க வைத்தார். உணவு உபசரிப்பு உச்சம். வீட்டு ஐயா சொன்னவை "நாங்கள் பெரிய முதலாளிகள் அல்ல. எங்கட பள்ளிக்கூடம் வந்தவருக்கு வசதிகள் செய்வது எங்கட பொறுப்பெல்லோ"

உசன் கோயில் மணி இசையாக ஒலித்தது. கந்தையாண்ணையின் கற்கண்டு வாசகங்கள். தந்தை இராமநாத வள்ளல். உசன்இராமநாதன் மகாவித்தியாலயம் அவர் இலட்சியத்தின் சின்னம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்". பாடசாலை இல்லா ஊர்ப்பக்கமும் போக வேண்டாம்.

ஆலயம் போலவே வித்தியாலயமும் அவர்களுக்கு இரண்டையும் இரண்டு கண்களென்பர். வளர்ச்சியை உயர்ச்சியை இக்கண்களாலேயே காண்கிறார்கள்.

நாளும் காலையெழுந்தேன். பாடசாலை சென்றேன். அற்புதமோ! முருகன் அருளோ! ஊன் உருகி உயிர் உருகி விம்மினோம். கல்லை மரமேற்ற இருவர் என் ஆசான்கள். அன்புக்குரியவர்கள். மதிப்புக்குரியவர்கள். கிராமிய பாடசாலையைக் கல்லூரி மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசவைத்த அதிபர் திரு.வி.கே.நடராசா எழுத்திலே சிற்பி திரு.சிவசரவணபவன்.

பாடசாலையை வளர்த்தவர்கள் என்னையும் வளர்த்தார்கள். வளரவிட்டார்கள். காலை ஆராதனையில் இந்த ஆண்டு லீவெடுக்காத ஆசிரியர் இவர். பரீட்சைப் பெறுபேற்றின் உயர்ச்சிக்கு பக்கபலமானவரில் ஒருவர் இவர். பாராட்டுப் பத்திரங்கள் வாசித்தார்கள். உற்சாகம் உயர்வு தந்தது.

இல்ல விளையாட்டுப் போட்டியில் இல்லமொன்றைத் தோணியாக அமைத்தபோது புகழின் ஏணியில் ஏற்றினார்கள். சரஸ்வதி பூசையில் தெய்வங்கள் மூன்றிடையே அழகுப் போட்டி வைத்தபோது பாடசாலையை அழகாபுரியாக அமைத்தவர்கள் பெற்றோர். நாடகம், கவிதை, விவாதம் என கலை நிகழ்ச்சிகள் அத்தனையிலும் என் பக்கபலமானவர் பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள், மாணவர்களை மறந்து விடவில்லை.

அதிபரானேன்...

கடமைகளும் பொறுப்புக்களும் கனத்தன. என்னோடு மனம் விட்டுக் கதைத்தன. கெக்கட்டம் விட்டுச் சிரித்தன. என் பேரன்புக்குரியவர் திரு.க.பேரம்பலம் அதிபராய் இருந்து ஓய்வுபெற்ற வேளை நான் எங்கே பாடசாலையை நடத்தினேன்? அந்த முருகப் பெருமானும் என் ஆசிரியப் பெருமக்களும் நடத்தினார்கள். நான் பெயர் வாங்கினேன் என்றார். அந்த கைசுத்தமான அதிபர்.

பளிச்சிட்டது பாடசாலை நிர்வாகத்தின் பாங்கு, பணி பக்குவம். முருகனிடம் சென்று பாடசாலை செல்வேன். குறைநிறைகளும் அப்படியே. குறை குமரனுக்கு. நிறை மனிதருக்கு. பாடசாலைப் பணிகள் ஆசிரியர், மாணவரிடம் அவரவர் தகுதிக்கேற்ப பகிரப்பட்டது.

கிணற்றுக்கு வாளியா? பிணக்குற்ற மாணவர் பிரச்சினையா? பரீட்சையா? பணப்பரிமாற்றமா? ஆசிரியர் செயற்பாடு அர்ப்பணிப்போடு அமையும். ஆசிரியர் வாதங்கள் எனக்கு மறக்க முடியா வேதங்கள். அதிபர் பணியின் சுகம் தெரிந்தது. சுகந்தம் வீசியது. சுவை ஊறியது.

பள்ளியில் முதல்முதலாய் சபை அமைந்த கட்டடம் திருத்தவேண்டிய நிலை. நாம் போய் உதவி தந்த பெற்றார் குறைவு. தாம் வந்து உதவி தந்த பெற்றார் அதிகம். திரு.செல்லத்துரை ஐயாவின் உதவி பெரிது. ஆயினும் பணச் சேகரிப்பில் ஈடுபட்ட அத்தனை பேரும் அசல் உழைப்பாளிகள். மறக்க முடியாத நண்பர்கள்.

தன்பணியாட்கள் உதவியோடு கட்டடத்தின் கூரை, நிலம், சுவர் வேலைகளைச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த தம்பி விமல் வளர்ச்சிப் படியின் ஒரு மைல் கல்.

பணம் தரமுடியாத அன்புப் பெற்றோர் – தம் உடல் உழைப்பால் பள்ளியின் பௌதிக வளங்களை உயர்த்தினர். அத்திவாரம், ஆழக்குழிகள், கல் அறுத்தல், அடுக்கல் எனப் பல பணிகள் செய்த பண்பாளர். மறக்க முடியாத மாணிக்கங்கள்.

பாடசாலை உசனில் அமைந்திருந்தது. ஆயின் மாணவர்வரும் பகுதிகள் பாரியது. அயற் கிராமங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கியது. வறிய மாணவர்கள் பலர் திறமையை வறுமை வருத்தியது. திறமையோடு வறுமையுற்றோரையும் வளர்க்கப் பாடசாலை பரிசளிப்பு விழாவின் மரபுகள் மாற்றியமைக்கப்பட்டன. வள்ளல்கள் பலர் வந்தார்கள். அள்ளி அள்ளித் தந்தார்கள். திரு.குகபாலன் தம் மனைவி திருமதி.லீலா.குகபாலன் ஞாபகார்த்தமாக ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தார். திரு.இளையதம்பி, திருமதி.இராசநாயகி, சிவாச்சாரியார் சுந்தரேசுவர் எனப் பலர். முதலின் வட்டி பரிசளிப்பின் மூலதனமானது. வறிய மாணவர்களுக்கான சிறிய உதவி வளம் காண ஆரம்பித்தது. உசன் பாடசாலை இடம்பெயர்ந்து இயங்கிய வேளை அங்கு படித்த அத்தனை மாணவருக்கும் இப்பரிசுத் தொகை உதவியது. மாணவர் வளர்ச்சிக்கு வசதி தந்து வளர்ச்சி தந்த வள்ளல்கள் வாழ்க.

"ஒரு ரூபாவுக்கும் கணக்கிருக்கு" அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு.க.திருநாவுக்கரசுவின் அடக்கமான வாசிப்பு. காசு கேட்கலாம். வாய்க்கலாம். பள்ளிக்கென்றால் பெற்றோர் அள்ளித் தருவார்கள். கிள்ளித் தருவார்கள். அதுவேறு. கணக்கு வேண்டும். கணக்கு காட்ட வேண்டும். பெற்றோர் ஏற்க வேண்டும். அதுதான் அவர் வாதம். என் வேதம்.

மாணவருக்கு மருத்துவ உதவியா? வைத்தியர்கள் திரு.ஜெபநாமகணேசன், திரு.தம்பித்துரை மருத்துவ தெய்வங்கள்.

என்ன வசதி இல்லை எங்கள் பாடசாலைத் தாயிடம். எதை அவள் தரவில்லை இந்தச் சேயிடம். குழப்படி அல்லாத மாணவன் ஜடம். அதை மனதிலாவது ரசிக்காதவர் மரம். மாணவரை மனிதராக்குவது ஆசிரியர், அதிபர். இவர்கள் அமைவது மாணவர் தவம். பல சிறந்த மாணவர் தவழ்ந்த இடம் உசன். மாதிரிக் கொருவன் மணிவண்ணன். பாடசாலைச் செயற்பாடுகள் அத்தனையிலும் அவனைக் கண்டேன்.

என் பாடசாலை வாழ்வின் இறுதி நாளுக்கு முதல்நாள். A/L மாணவர் வகுப்பில் குழப்படி. கலவரம். ஒரு மாணவனை அடித்தும் விட்டேன். பின் அவன் குழப்படியை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசித்தேன். என் அவசரத்தை ரசித்தேன்.

இறுதிநாள்... பிரியாவிடை மாணவர்கள் அசத்தினார்கள். அடிபட்ட மாணவன் அமைதியாக மேடையேறினான். உரை நிகழ்த்தினான். அவனது பேச்சின் இறுதிப்பகுதி "கடைசியாக அதிபரிடம் அடிவாங்கிய மாணவன் நான்" அதற்காகப் பெருமைப்படுகின்றேன். தமக்காகவே அடிவிழுகிறது என அதை ஏற்றுக்கொள்ளும் மாணவர்க்கு அடிக்கும் எங்கள் அதிபரிடம் மீண்டும் நான் அடி வாங்குவேன். அதற்காகவும் பெருமைப்படுகின்றேன்" . மலர்மாலையை என் கழுத்தில் அணிவித்து வாழ்க அதிபர் என வாழ்த்திச் சென்றான். எதற்கும் நான் அழுததில்லை. இதற்கு என் கண்கள் நனைந்தன.

இதுதான் அதிபர் சுகம் காணும் அற்புதமான இடம். இத்தனை சுகங்களை வசதிகளை வாய்ப்புக்களைத் தந்தோர் இதை மறுக்க முடியாது. அத்தனையும் அனுபவித்தவன் நான். அடித்துச் சொல்கின்றேன். வசதிகளால் வளர்ச்சி தந்து வரலாறு படைத்தது உசன் கிராமம். என்னைத் தந்தேன். அவர் தம்மைத் தந்தார்.

அந்த நான்,

ஐ.வரதராசா,

முன்னை நாள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின்
பழைய மாணவரும், ஆசிரியரும், உபஅதிபரும்
இந்நாள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபருமான
திரு.அ.அகிலதாஸ் அவர்களின் நற்சிந்தனைகள்.



ஊர் மண்மீது பற்றும், தனது பிரதேசத்தின் சமூக சமய பண்பாட்டு விழுமியங்கள் மீதான பற்றும் அவற்றைப் பேணிப்பாதுகாத்து ஓம்பும் பண்பாடும் எல்லோருக்கும் மிக இலகுவில் வந்து விடுவதில்லை. அப்பணிப்பும், உணர்வும் கொண்டவர்களுக்கே இது உரித்தானது.

உசன் பிரதேசத்தின் கல்வி, கலாசார, சமய, பண்பாட்டு விழுமியங்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள எனது ஆசான் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.க.பேரம்பலம் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. தனது மண்ணைவிட்டு விலகி இருக்கும் போதே அதன்மீது பற்றும், பாசமும் மேலோங்குவது மனித இயல்பு. பல்வேறு வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் மத்தியில் வாழ்ந்தாலும் சிலவேளைகளில் அதீதமான ஆற்றலை இறைவன் கொடுப்பதுண்டு. இந்தவகையில் உசன் பிரதேசத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் இரவு பகலாகவும், கனவிலும் நனவிலும் உச்சரித்து அதனை நிறைவேற்றியுள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டின் பலகிராமங்களிலும் இத்தகைய முயற்சிகள் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல பிரதேசங்கள் பற்றி தகவல்கள் பலராலும் மறக்கப்பட்டு வருவதும், ஆவணங்களும் ஆதாரங்களும் சிதைக்கப்படுவதும், திரிபுபடுத்தப்படுவதும் மனவருத்தத்திற்கு உரியது. வாழும் சமூகம் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளது. இடம்பெயர்ந்த சமூகத்தின் இளைய தலைமுறையினர் தாம் பிறந்து வளர்ந்த, விளையாடிய இடங்களை மறந்து போய்விட்டனர். பலர் ஊர் திரும்பாமலே இடம்பெயர் வாழ்க்கையோடு வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்களும் உண்டு.

இடப்பெயர்வுகள் பல கிராமங்களின் சுயத்தை இழக்கச் செய்துள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க பல பிரதேசங்கள் மக்களால் மறக்கப்பட்டுவிட்டது. இத்தகைய ஒரு அவல நிலையில் இந்த நூலின் தோற்றம் தெம்புதருவதாக உள்ளது. உசன் பிரதேசத்தின் பல்வேறு



138824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை உள்வாங்கி இந் நூல் வெளிவந்தமை மகிழ்ச்சிக்குரியது. பாராட்டத்தக்கது. இந்நூலில் பலஆவணங்கள் பல ஆய்வாளர்களை வியப்புக்குரியதாக்கும். பல ஆய்வுகளுக்கு அடித்தளமாகவும் எடுத்துக் காட்டாகவும் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

நான் கல்வி கற்று விளையாடித் திரிந்த இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வரலாறு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. என் வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர்கள், ஆசான்கள் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்து சிந்திக்க வைத்த இந்நூலைக் கண்டு வியந்து நிற்கின்றேன். இந்நூலில் பதிவு செய்யப்படும் இந்த மலர் வெளியீடு ஒரு வரலாற்றுத் தேவையாகும். இம்முயற்சிக்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தன் நம்பிக்கையும் தன்னலம் கருதாபண்பும் முக்கியமானது. இவ்வேளையில் இம்முயற்சிக்கு உழைத்த அத்தனை பேரையும் வாழ்த்துவதோடு இம்முயற்சிக்கு ஆதரவு வழங்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும்.

அ. அகிலதாஸ்,

21.07.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் முன்னைநாள் ஆசிரியரும், ஓய்வுபெற்ற அதிபரும், இந்நாளில் கனடாவில் வசிப்பவருமான திரு.சோ.ஸ்ரீகந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி.



உசன் கிராமத்தில் வாழ்ந்த பலர் ஊர் கடந்து, எமது உறவுகளைப் பிரிந்து பலநூறு மைல்களுக்கு அப்பால் வெளிநாடுகளில் வாழ்கின்றோம். இங்கு நாம் வாழ்ந்தாலும், எமது ஊரில் வாழ்ந்த காலப் பசுமையான, மகிழ்வான நினைவுகள் எம்மைவிட்டு என்றும் அகலாது எம்மனதில் நிற்கின்றன. இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி எழுத எனக்கோர் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கிராமத்தின் வளங்கள், வரலாறுகள் பற்றி எதிர்காலத் தலைமுறையினர் அறிய வைப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். ஒரு கிராமத்தின் வரலாற்றை நூல் வடிவில் ஆவணப்படுத்துவது கடினமான பணி என்பதை நான் நன்கறிவேன். கிராமத்தின் வரலாற்றில் இங்குள்ள ஆலயங்கள், பாடசாலை, இங்குவாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை முறை இவர்களின் கலாசார மரபுகள், இங்கு காணப்படும் வளங்கள் என்பவற்றைத் தேடிக் கண்டறிந்து, நூல் வடிவில் வெளியிட முன்வந்த நூலாசிரியர் திரு.க.பேரம்பலம் அவர்களின் பணிக்கு எனது நல்வாழ்த்துக்கள். "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் இந்நூலை உளமார வாழ்த்தி, இந்நூல் எம்மூரைச் சேர்ந்த வாழ்கின்ற, வாழப்போகின்றவர்களின் உள்ளங்களைச் செழிக்கச் செய்யுமெனக் கருதி இவ்வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன். எமது ஊர் என்றென்றும் வளமுடன் வாழ்க.

வணக்கம்.

சோ. ஸ்ரீகந்தன்.

கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவரும்,**

**இப்பாடசாலையின் நல்லாசிரியருமான திரு.சி.கணபதிப்பிள்ளை**

**அவர்களின் மகன் திரு.சிவநேசன் அவர்கள்**

**அமெரிக்காவில் இருந்து...**



திரு.க.பேரம்பலம் ஆசிரியர் அவர்கள் எமது தாயகமாகிய உசன் கிராமத்தின் வரலாற்றை, நூல் வடிவில் ஆவணப்படுத்த முனைவதை அறிந்தபோது மிக்கமகிழ்ச்சியடைந்து இவ்வாழ்த்தினை வரைகின்றேன். நாம் எல்லோரும் இவரது அருஞ்சேவைக்கு உற்சாகத்தையும், ஆதரவையும் நல்க வேண்டுமென நான் எண்ணுகின்றேன்.

இவர் ஓர் கடினமான உழைப்பாளி. இப்பாடசாலையிலேயே கற்று, பின் ஆசிரியராக, அதிபராக இருந்தார். இவர் அதிபராக 1991 1993 வரை இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளார். பின்பு பதவியில் உயர்ச்சிபெற்று சாவகச்சேரிக் கல்வி வலயத்திலும் உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். ஒன்பது பாடசாலைகளில் 21 வருடங்களுக்குமேல் அதிபராகச் சேவையாற்றி உள்ளார். உசன் கிராமத்தில் இவரது சாதனையை இட்டு நாம் எல்லோரும் பெருமை கொள்கின்றோம். இவரது பாரியார் திருமதி தெ.பேரம்பலம் அவர்கள் (துங்கம்மா ரீச்சர்) 33 வருடங்கள் வரை இதே பாடசாலையில் ஆசிரியையாக இருந்துள்ளார். இவரிடம் நான் 1968 ம் ஆண்டு 8ம் வகுப்பில் கல்வி கற்றுள்ளேன். இதையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். 1965 ஆம் ஆண்டில் இருந்து எனக்கு கல்வி கற்பித்த நல்லாசிரியர்களில் இவரும் ஒருவர். இவர்களது பிள்ளைகள் நால்வரும் இதே பாடசாலையில் கல்வி கற்று இன்று நல்லதோர் நிலையில் உள்ளனர்.

திரு.பேரம்பலம் அவர்களையும், இவரது குடும்பத்தினரையும், இவர்கள் பரம்பரையையும் நினைவுகூர்ந்து அவர்களது பணி மேலும் சிறக்கவும் இவர்கள் நலமுடன் வாழவும், இறைவனை வேண்டுகின்றேன். மேலும் என்னுடைய பழைய நினைவுகளை மீட்பதற்கு ஓர் சந்தர்ப்பத்தைத் தந்த நூலாசிரியருக்கு நன்றிகூறுகின்றேன். உங்கள் பணி வாழ்க. வளர்க. நாம் அனைவரும் உசனை நேசிக்கின்றோம்.

உங்கள் பேரன்புக்குரிய,

சிவா, யசோ, அஸ்வின், சிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய



உசன் இராமநாதன் மகாவித்தியாலய

பழைய மாணவியும், ஆசிரியருமா், தற்போது

கனடா நாட்டில் வசிப்பவருமான திருமதி.

தயா.சுந்தரலிங்கம் அவர்களின்பொன் மொழிகள்...

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்ற சேக்கிழார் பெருமான் கூற்றுக்கு இணங்க சமய கலாசாரமும் தமிழ் மொழியும் ஒருங்கே வளர்ந்து, சமயம் மொழி கலாசாரம் என்பன உயர்ந்து விளங்கும் வகையில் மிளிர்ந்து கொண்டிருக்கும் இயற்கையழகு மிக்க உசன் கிராமத்தின் வரலாறு பற்றி எழுதும் பணியில் இளைப்பாறிய அதிபர் திரு.க.பேரம்பலம் அவர்கள் முன்னின்று எழுதி நூல் வடிவில் கொண்டு வருவது போற்றுதற்குரியதும், மகிழ்ச்சிக்குரிய விடயமுமாகும். கல்வி நிலையம், நூல்நிலையம், ஆலயம் என்பன யாவும் ஆதிசிவனின் முக்கண்கள் போலக் கிராமத்தின் மத்தியிலே அமைந்துள்ள சிறப்புடைய உசன் கிராமம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து வரலாறு படைக்க எல்லாம் வல்ல முருகன் அருட்கடாட்சத்தை வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி தயா.சுந்தரலிங்கம்.

B.Sc(P.E.T)

மாணவி / ஆசிரியை

உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரைச் சேர்ந்தவரும், உசன் இராமநாதன் மகாவித்தியாலய

பழைய மாணவியுமான திருமதி.ச.பத்மமீரா

சுவிஸ் நாட்டில் இருந்து தம் கருத்தை கூறுகின்றார் ...



"அரிது அரிது மானிடராகப் பிறப்பதரிது" என்பது மூதறிஞர் வாக்கு. மானிடராகப் பிறக்கும் அரிய வாய்ப்பைப் பெற்ற நாம், எமக்காகவும், எம் சமூகத்திற்காகவும் என்ன செய்தோம் என்ற வினாவுக்கு "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்ற நூலைப் படைத்த மதிப்பிற்குரிய பேரம்பலம் ஆசான் மானிடராகப் பிறந்து வழிகாட்டியுள்ளார்.

பெரியோர்கள் முதல் இளையோர் வரை எமது மண்ணின் பெருமைகளை நம் கிராம மக்களுக்கல்ல புலம்பெயர்ந்து வாழும் உசன் கிராமத்தவர்களுக்கும், இங்கு பிறந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் இந்நூல் பெரிதும் பயன் உள்ளதாக அமையும், அமைய வேண்டுமென நம்புகின்றேன். இவ்வரலாற்று நூலைப் படைத்து உதவிய நூலாசிரியருக்கு முதலில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் புலம்பெயர்ந்து இங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் நான் பிறந்து, வளர்ந்த உசன்பதியையும், இங்குள்ள ஆலயங்களாகிய உசன் கந்தசுவாமி கோவில், கஜகேணிப் பிள்ளையார் கோவில், வீரபத்திரர் கோவில், புதுக்குளத்துக் கண்ணகை அம்பாள் கோவில், வயலூர்க் கந்தன், காட்டுவைரவர் கோவில் ஆகியவற்றை என்றுமே மறந்ததில்லை. இவற்றைப்பற்றி நூலாசிரியர் விரிவாக எழுதுவாரென நான் எண்ணுகின்றேன்.

நான் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் படித்த காலத்தில் நூலாசிரியர் ஓர் பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு பாடசாலை வகுப்புக்களை மேற்பார்வை செய்யும்போது வகுப்புக்கள் அமைதியாக இருக்கும். ஆசிரியர் இல்லாத வகுப்பறையில் இருந்து கற்பித்தலில் ஈடுபடுவார். அயல் வகுப்பறைகள் மிக அமைதியாக இருக்கும். இவை இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. புலமைப்பரிசில் பரீட்சை தொடக்கம், உயர் வகுப்புப் பரீட்சைகள் வரை நல்ல பெறுபேறுகளைப் பெற ஆக்கமும் ஊக்கமும் எடுத்தவர். இவ்வூர் மக்களின் நன்மதிப்பையும் பெற்றவர். உசன் கிராமத்தைப் பற்றிப் பேசினால் பேசிக்கொண்டே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு"" என்னும் தலைப்பிலான இந்நூலை ஆக்கி வெளியிட இருக்கும் பேரம்பலம் ஆசானின் பெருமுயற்சிக்கு என்நல்வாழ்த்துக்கள். அன்னாரின் குடும்பம் நலமுடன் வாழ உசன் தெய்வங்களை வேண்டுகின்றேன். உசன் வாழ் என்னருமை உறவுகளுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

வாழ்க உசன் பதி. வளர்க அரும்பணி...

நன்றி வணக்கம்.

திருமதி. ச. பத்மமீரா

B.A.(Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உசனைச் சேர்ந்தவரும், உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவனும், அவுஸ்திரேலியாவில் தொழில் புரிபவருமான திரு. கிருஷ்ணமூர்த்தி நந்தன் அவர்கள் உள்ளத்தில் இருந்து வெளிப்படுத்தும் பொன்மொழிகள்.**

யாழ்ப்பாடியினால் பாடிச்சிறப்பிக்கப்பட்ட யாழ் நகரிலே தென்மராட்சியின் தென் கோடியில் உசன் என்னும் சிற்றூர் விளங்குகின்றது. இங்கே மக்கள் வாழவேண்டிய வசதிகள் அத்தனையும் அமையப்பெற்றது ஒரு சிறப்பு அம்சமாகும். மக்கள் தொழுகின்ற ஆலயமும் கற்றுக்கொள்ள பாடசாலையும் இருகண்கள் போல அக்கம்பக்கம் அமைந்திருப்பது கல்விகற்று முன்னேறிக்கொள்ள அடிப்படையாக அமைகின்றது.

சைவத்தையும், தமிழையும் இருகண்களாகப் போற்றிவரும் திரு.க.பேரம்பலம் ஓய்வு பெற்ற அதிபர் அவர்களின் சேவையும், பணியும் அளப்பரியவை.

தோன்றிற் புகழொடு தோன்றுக – அஃதுஇலாார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைய ஒரு குருவாக, தந்தையாக, நண்பனாக அனைத்து செயற்திறனோடு எம் ஊர்மக்களுக்கு ஆற்றும் தொண்டு அளப்பரியது.

"நிலத்தில் ஓடுவது தேர்
நீரில் ஓடுவது கப்பல்
இரண்டிலும் ஓடுவது தமிழர்"

எனக் கடல் கடந்து இருவேறு துருவங்களில் இயங்குகின்றது நம் உலகம். முரண்பாடுகளுக்கிடையே முகிழ்ந்திருக்கின்றது நம்பிரியங்கள். கள்ளிப் பூக்களாக... கடந்து விடமுடியாத எல்லைகள் எல்லாம் எளிதாய் தகர்த்து எறிகின்றது இவ் உசன்பதி என்னும் நூலின் நினைவுகள்.

இத்தகைய புல சிறப்புக்களுடன் எமது கிராமத்தின் பழைய புதிய வரலாறுகளை வெளியிட்டு, யாவருக்கும் பயன்பட வைத்த ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. பேரம்பலம் அவர்களின் செயலை உசன் வாழ் மக்கள் மட்டுமல்லாது பலநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் உசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அனைவரும் பெருமை அடைவதோடு என்றும் நினைவு கூரவேண்டும்.

"பெருமை உடையவர் ஆற்றுவார் – ஆற்றின்

அருமை உடைய செயல்"

என வாழ்த்தி எமது கிராமம் சிறப்புற தமிழும் சமயமும் கற்பித்து உயர்த்தி வைத்த ஓய்வு பெற்ற அதிபர் திரு.க.பேரம்பலம் ஐயாவை நாமும் எம்மூரும் காலமெலாம் நிலைக்கும் வண்ணம் சிறப்புற வாழ்ந்து பல சேவைகள் ஆற்ற வேண்டுமென வாழ்த்தி, பாராட்டுகின்றேன்.

வாழ்க தமிழ். வளர்க வையகம்.

அவுஸ்திரேலியா. கி.நந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சுவிஸ் நாட்டில் ஆரம்பத்திலிருந்து கல்வி கற்று பதவி வகிக்கும் இவ்வூரைச் சேர்ந்த ஜெகசோதி டுபினியின் அன்புமடல்**

அதிபர் க.பேரம்பலம் அவர்களுக்கும் அவரது துணைவியார் தங்கம்மா ஆசிரியருக்கும்,

உசன் கிராமத்தைப் பற்றி ஒரு அழியாத பொக்கிசமாகிய புத்தகத்தை வெளியிடுவதற்கு நன்றிகள் பல தெரிவித்து, சுவிஸ் நாட்டில் இருந்து வாழ்த்துகின்றோம். எனது பெயர் ஜெகசோதி டுபீனி. நான் சுவிஸ் நாட்டில் பிறந்து நல்ல முறையாக அப்பா, அம்மா உதவியுடன் தமிழ் கற்று இந்நாட்டில் இருக்கும் தொலைக்காட்சி, றேடியோ போன்றவைக்கு உசன் கிராமத்தின் புகழ்பற்றி எழுதி பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன்.

கருணை, கல்வி, வீரம், உணவு என்பவற்றை அளித்து இல்லை என்று வருவோரை வாழ வைக்கும் கிராமத்துக்கு நான் நுழையும்போது இருகரையும் நெற்பயிர்கள் என்னைத் தலையாட்டி வரவேற்றன. நடுவே றோட்டு, அதில் செல்லும்போது இந்தக் கிராமத்தின் அழகு மேலும் மேலும் அழகுதந்தது. கோவில், பாடசாலை, விளையாட்டு மைதானம், எத்தனை அழுகு. இந்தக் கிராமத்துக்கு, இதைப் பார்க்கும்போது என்னால் நம்பவே முடியவில்லை.

நான் உசன் கந்தசுவாமி கோவிலுக்குத் தான் முதலில் சென்றேன். அங்குள்ள அற்புதமான சிற்பங்களைக் கண்டு வியந்தேன். எவ்வளவு அற்புதம். பின்னர் நான் வீரபத்திரர் கோவிலுக்குச் சென்றேன். என் போன்ற நண்பர்களுடன் தமிழில் இக்கோவிலின் வரலாற்றைக் கேட்டு அறிந்தேன். நான் சுவிஸில் உள்ள பட்டதாரிகளில் ஒருத்தி. இந்நாட்டில் உள்ள அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒரு பொறுப்பான பெரிய பதவியில் இருக்கின்றேன். மேலும் சட்டத்தரணி பதவிக்குப் படித்துக் கொண்டிருக்கின்றேன். இப்பொழுது எங்கள் தமிழ் மக்கள் பிரச்சினை என்று நீதிமன்றம் சென்றால், டொச்சை தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணிபுரிகின்றேன். என்போன்று வெளிநாடுகளில் பிறக்கும் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதன் மூலம் உறவினர்களது அன்பைப் பெறக்கூடியதாக இருக்கும். நான் எனது அனுபவத்தின் மூலம் என் போன்றவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன். எனது விடுமுறைக் காலத்தில் நான் எனது அப்பா, அம்மா பிறந்த இடமாகிய உசன் கிராமத்துக்கு சென்று வந்த அனுபவத்தைக் கொண்டு இப்புத்தகத்தின் மூலம் எல்லோருடனும் பகிர்ந்துகொள்கின்றேன். இந்த நாட்டில் எவ்வளவு வசதிகள் இருப்பினும், அம்மா, அப்பா பிறந்த உசன் கிராமத்தில் நான் வாழ விரும்புகின்றேன். நான் கூடிய விரைவில் உவ்விடம் வருவேன்.

அன்புடன்,

ஜெகசோதி டுபினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் கிராம கீதம்

**இராகம் : தேஸ்** **தாளம் : ரூபகம்**

எங்களூ ராமெழில் பொங்கும் உசன் – உல
கெங்கும்பு கழ்பெற்றி லங்கும் உசன்
சங்கத்த மிழ்மக்கட் சந்ததியா – ரென்றும்
மங்களம் பொங்கிட வாழும் உசன்

விடத்தற்ப ளைகரம் பகமோடொட் டுவெளி
மிருசுவில் கொடிகாமம் தவசிகுளம்
இடையில்ல மைந்திடு இணையேயில் – லாமலே
இன்பம்கொ ழித்திடும் எங்கள் உசன்

வாழைப லாபனை மாமரம் தென்னை – யும்
வானை இடித்து வளையும் உசன்
வளமான நெல்வயல் வற்றாதநீர் – நிலை
மலிந்துகி டப்பதும் எங்கள் உசன்

கஜகேணிப் பிள்ளையா ருக்கொரு ஆலயம்
கந்தசா மியார்க்கி ருஆலயம்
விசையுறு வீரபத் ரஸ்வாமி – கண்ணகை
வீற்றிருந்தே யருள் வீசும் உசன்

சைவர்கி றீஸ்தவர் கத்தோலிக்கர் – என்றும்
சந்தோஷ மாய்க்கூடி வாழும் உசன்
மெய்ப்பொருள் காண்பதில் மிக்க நாட்டங் – கொண்டோர்
மேவிக்க ருந்துக்க லக்கும் உசன்

கல்வியைக் கண்களென் றேகொள்ளுவார் – அதைக்
கற்பதி லேநாட்டம் கொண்டிடுவார்
கல்விப்பய னேகடவுட் பணி
கண்டுபணி செய்வோர் வாழும் உசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுந்தொ ழிலினைத் தெய்வமா – கப்போற்றி
சேவைப லசெய்வோர் வாழும் உசன்
உய்யும்வழி யிதுதா னெனக்கொண் – டென்றும்
உழைத்துச் சிறப்பவர் வாழும் உசன்

பண்ணிசை யாழிசை நாதஸ்வரம் – தவில்
பாங்காய் இசைந்து ஒலிக்கும் உசன்
வண்ணக்க லாபம யிலாகி
வண்ணம களிரும் வாழும் உசன்

ஊர்விட்டு ஊர்சென்று வாழ்ந்திடினும் – வெளி
உலகிற்ப லநாடு ஏகிடினும்
ஊரின்வ ளர்ச்சிக்கு ஊட்டமளித் – திடும்
உள்ளங்கொண் டோர்களைக் கொண்ட உசன்

வளம்கொ ழிக்கமக்கள் உளம்செழிக் – கச்செய்யும்
வல்லப ரம்பொரு ளைப்பணிவோம்
இளமைமு துமை யெனும்பேத – மில்லாது
எல்லோரும் நல்லோராய் வாழ்ந்துயர்வோம்

வாழ்க எங்கள் நிலம்
வாழ்க எங்கள் உசன்
வாழிய வாழிய வாழியவே!

வாழ்க எங்கள் இனம்
வாழ்க எங்கள் மொழி
வாழிய! வாழிய!! வாழியவே!!!

இயற்றியவர் : "சிற்பி"

இசை அமைப்பு : திரு கா. குகபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

– மூதுரை

தினந்தோறும் மலர்கொண்டு, விநாயகப் பெருமான் திருப்பாதங்களைத் தொழுவோருக்கு, சொல்வளம் உண்டாகும். திருமகள் அருட் பார்வை கிடைக்கும். உடலை நோய் வருத்தாது.

## உசன் கிராம வரலாறு

### அமைவிடம்

எமது கிராமமாகிய உசன், தென்மராட்சிப் பிரதேசத்தின் கிழக்குப் பக்கத்தில் இருக்கும் கிராமங்களில் ஒன்றாகும். இதன் வடக்கெல்லையாக மிருசுவிலும், தெற்கெல்லையாக கெற்பெலியும், கிழக்கெல்லையாக கரம்பகமும், மேற்கெல்லையாக தவசி குளமும் உள்ளன. கிராமத் தலைமைக்காரர் நிர்வாகம் உள்ள காலத்தில் உசன் கிராமத் தலைமைக்காரர் நிர்வாகப் பிரிவில் கரம்பகம், விடத்தற்பளை, கெற்பெலி என்னும் கிராமங்களும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. கிராம சேவை அலுவலர் நிர்வாக முறைமை அறிமுகம் செய்யப்பட்ட போது அவை தனித்தனி கிராமசேவை அலுவலர் பிரிவாகப் பிரிந்தன. இன்று உசன் கிராமசேவை அலுவலராகத் திருமதி. சு. செல்வவிநாயகம் கடமையாற்றுகின்றார். இவருக்கு முன்பு முறையே திருவாளர்கள் தா. இராசகுலசிங்கம், யே. இராசா, எஸ். கந்தசாமி, வி. மார்க்கண்டு, எஸ். கணபதிப்பிள்ளை, வே. குமாரசாமி ஆகியோர் கடமையாற்றினர். இங்குள்ளவரின் பாவனையில் இருந்த உப தபால் நிலையமும் , புகையிரத நிலையமும் A9 பாதைக்கருகாமையில் மிருசுவிலில் இருந்தன.

### கிராமத்தின் சிறப்பியல்புகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கிராமத்தின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில், வளமான மருத நிலங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் மேற்கு ஓரங்களில் வளமான தோட்டநிலங்களும் காணப்படுகின்றன. மையப்பகுதியில் வருவாயைத்தரும் தென்னை, பனை, மா, பலா என்பனவும் இவ்வூருக்கு அழகைக் கொடுக்கின்றன. சைவ பாரம்பரியங்களுடன் வாழும் மக்கள், கந்தபுராண கலாசாரங்களில் நாட்டம் கொண்டவர்கள். சிறந்த விவசாயிகள் இம்மண்ணில் வாழ்ந்து பெருமை சேர்த்துள்ளனர். இலங்கையில் உண்டியல் இல்லாத கோவில் உசன் கந்தசாமி கோவில் என்ற வரலாற்றுச் சிறப்பையும் இவ்வாலயம் பெறுகின்றது.

நாவலர் பெருமான், சேர். பொன். இராமநாதன், குன்றக்குடி அடிகளார், கிருபானந்தவாரியார், நல்லை ஆதீன முதல்வர், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் பாதங்கள் பட்ட மண். சுருங்கக் கூறின் இக்கிராமம் நீர்வளம், நிலவளம், கல்வி கலாசார வளம், பொருளாதார வளம் ஆகியனவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

### உசன் குடிசனப் பரம்பல்


உசன் கிராம சேவை அலுவலர் பிரிவாகிய J/329 க்குரிய வரைபடம் இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளது. இப்படத்தில் கிராம எல்லைகள், புகையிரத வீதி, பாடசாலை, கிறிஸ்தவ தேவாலயம், சைவக் கோயில்கள் (உசன் கந்தசுவாமி கோயில், கஜகேணிப் பிள்ளையார் கோவில், உசன் வீரபத்திரர் கோயில்) வாசிகசாலை, வயல் நிலங்கள், கல்றோட்டுக்கள், தார் வீதிகள், மணல் ஒழுங்கைகள், குளம், பொது வாசிகசாலை, பொதுக் கிணறுகள், கட்டுவரம்பு, ஈச்சங்காட்டு மயானம், கொல்லதிடல் என்பன காட்டப்பட்டுள்ளன. உசன் கிராம சேவை அலுவலர் பிரிவில் ஆரம்பத்தில் 213 குடும்பங்கள் இருந்தன. இக்குடும்பங்களில் 2005 ஆம் ஆண்டு 18 வயதிற்கு மேற்பட்ட வாக்குரிமை பெற்ற 758 பேர் இருந்தனர். இவர்களுடன் விடத்தற்பளைக் கிராம சேவை அலுவலர் பிரிவில் இருந்து 17 குடும்பங்களும், மிருசுவில் கிராம சேவை அலுவலர் பிரிவில் இருந்து 15 குடும்பங்களும், கரம்பகம் கிராம சேவை அலுவலர் பிரிவில் இருந்து 19 குடும்பங்களும் உசன் கிராம சேவை அலுவலர் பிரிவுடன் இணைந்தன. தற்போது இப்பிரிவில் 264 குடும்பங்கள் வசிக்க வேண்டியவர்கள். இக்குடும்பத்தைச் சேர்ந்த 937 பேர் வாக்குரிமை பெற்றவராக உள்ளனர். 1998 ம் ஆண்டு இடப்பெயர்வுடனும், சீரற்ற சூழ்நிலை காரணமாகவும் இங்குள்ளோர் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாலும், இத்தொகையின் சற்றுக் குறைவானவரே கிராம சேவை அலுவலரின் உத்தேசக் கணக்கீட்டில் இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உசன் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் அமரர் வைத்திலிங்கம் அவர்கள்**



**உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா அமரர் க. வி. நடராசா அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி நிர்வாக முறைமை இருந்த காலத்தில் மிருசுவில் கிராம சபையின் பதினோராம் வட்டாரமாக உசன் கிராமம் இருந்தது. இவ் வட்டாரத்தின் அங்கத்தவராக ஆசிரியர் திரு.ஐ.கார்த்திகேசு அவர்கள் இருந்தார். இவரைத் தொடர்ந்து உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவாக சட்டத்தரணி ச. இராசரத்தினம் இருந்து வந்தார். அத்துடன் இவர் மிருசுவில் கிராம சபையின் தலைவராகவும் கடமையாற்றி வந்தார். இவர் தமது காலப்பகுதியில் பதினொரு வட்டாரங்களினதும் அபிவிருத்திக்கு அரும்பாடுபட்டார். இவருக்குப் பின் இவ் வட்டாரத்துக்குத் திரு. பெ. பொன்னம்பலம் (ஓவசியர்) அங்கத்தவராக இருந்து வந்தார். இவரும் எமது உசன் கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள் பலவற்றைச் செய்தார். சில காலத்தின் பின்னர் சனத்தொகை விகிதாசாரப்படி பதினோராம் வட்டாரமாக இருந்த உசன் கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. உசன் கிழக்கு பதினோராம் வட்டாரமாகவும், உசன் மேற்கு பன்னிரண்டாம் வட்டாரமாகவும் ஆயின. பதினோராம் வட்டாரத்திற்கு திரு. சி. பாலசிங்கம் அவர்களும், பன்னிரண்டாம் வட்டாரத்திற்குத் திரு. மு. சரவணமுத்து அவர்களும் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டு, அங்கத்தவர்களாக இருந்தனர். திரு. சி. பாலசிங்கம் உசன் கிராமசபையின் தலைவராகவும் இருந்தார். இவர்கள் இருவரும் சேர்ந்து உசன் கிராமத்திற்குப் பல நலத்திட்டங்களைச் செய்தனர். அவற்றுள் உசன் ஈச்சங்காட்டு மயானத்தைப் புனர்நிர்மாணம் செய்து கொடுத்தமை, குடிநீர்த் தேவைக்காக உசன் ஈச்சங் காட்டிலும், உசன் வடக்கிலும் (பனங்காட்டில்) இரு கிணறுகள் கட்டிக் கொடுத்தமை, உசன் நூலகத்திற்கு ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்தமை, இங்குள்ள மண் தெருக்கள் சிலவற்றைகக் கல் றோட்டாக்கிக் கொடுத்தமை என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். இதற்குப் பிறகு கிராமசபை நிர்வாக முறை மாற்றப்பட்டதும் மிருசுவில் கிராமசபைப் பிரிவுகள் சாவகச்சேரிப் பிரதேச சபையின் கீழ் மிருசுவில் உப நிலைய நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. பிரதேச சபைத் தேர்தல் நடைபெறாத காரணத்தால் இப் பிரதேச சபைச் செயலாளர் இவற்றை நிர்வகித்து வருகின்றார்.

## மக்களின் வாழ்க்கை முறையும் தொழில்வளங்களும்

வடக்குக் கிழக்கில் வளமான மருதநிலங்கள் என்று சொல்லப்படுகின்ற செழிப்பான ஏறக்குறைய 2500 ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்றன. இவற்றில் உசன் முருகன் ஆலயத்திற்கு 200 ஏக்கர் வரை இருக்கின்றது. ஏனைய நிலங்கள் இங்குள்ள மக்களுக்குரியவை. இவ்வயல் வெளியில் வேலாதுரவு, பெரியபரவை, ஈட்டிஎறிந்தான், புங்கடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவண்டை, கிராய்க்கட்டு ஆகிய குளங்கள் இருக்கின்றன. ஆதிகாலத்தில் இந்நிலங்கள் ஒழுங்காகப் பண்படுத்தப்பட்டு நல்ல விளைவைக் கொடுத்துவந்தன. மழை கூடினாலும் சரி குறைந்தாலும் சரி பரப்புக்கு சராசரி 2 புசல் விளைவைக் கொடுத்து வந்தது. ஆதிகாலத்தில் இங்குள்ள மக்கள் வீடுகளில் பெரும்பாலானவற்றில் (இழுபொறி வாகனம் வரமுன்) ஒரு சோடி வண்டில் மாடும் இரு குடில் பசுமாடுகளும் இருந்தன. இவற்றின் உணவுக்கு இவ்வயலில் பெறப்படும் வைக்கோல் இங்குள்ள பனை ஓலைகள் பெரிதும் உதவின. சிலர் இம்மாடுகளுக்காக மேய்ச்சல் நிலங்களையும் வைத்திருந்தனர். தோட்டம் செய்வோர் தோட்டங்களில் காணப்படும் புற்களைப் பயன்படுத்தினர். சிறு தானியச் செய்கை இந்நிலங்களில் செய்கை பண்ணும் முறை வருமுன் தங்கள் பட்டி மாடுகளை நெல் அறுவடை முடிவடைந்ததும் இவ் வயல் நிலங்களில் மேயவிட்டுவிடுவார்கள். விதைப்பு தொடங்கும் வரை இம்மாடுகள் இங்கு மேய்ந்து வந்தன. வயல்நிலங்கள் எருது மாட்டின் மூலம் உழுது பண்படுத்தப்பட்டன. இயற்கைப் பசளைகளை (மாட்டெரு, ஆட்டெரு, சாம்பல், குப்பைகூளங்கள்) பாவித்து வந்தனர். பள்ள நிலங்களில் வளரக்கூடிய "சொருகுரும்பை" என்னும் உள்ளூர் நெல்லும், தண்ணீர் குறைவாக நிற்கும் மேட்டு வயல் நிலங்களில் மொட்டைக் கறுப்பன் நெல்லையும் செய்கை பண்ணிவந்தனர். புதிய விவசாயச் செய்கை மாற்றமும், இழுபொறி இயந்திர உழவுமுறையும் வந்த காரணத்தால் பழைய விவசாய முறைகள் நலிவடைந்தன. புதிய விவசாய விஞ்ஞான முறை வந்த காரணத்தால் புதிய நெல்வர்க்கங்கள் (ஏச்4) செய்கைபண்ணப்பட்டன. செயற்கைப் பசளை முறை, நோய்களுக்கு மருந்தடிக்கும் முறை வந்த காரணத்தால் விளைவு கூடினாலும் உற்பத்திச் செலவு கூடியது. இந்நிலங்களில் அறுவடை செய்யும் காலத்தில் பள்ள நிலங்களில் நீர்தேங்கி நிற்கும். அறுவடை செய்த நெற்கதிர்களை தொட்டில்களில் அல்லது உயரமான மேசைகளில் வைத்துக்கட்டி பலர் சுமைமூலம் கரைக்குக் கொண்டுவந்து நெற்கதிர்களைப் பரப்பிக் காயவிட்டு சூடாக்குவர். (நெற்போர்) இங்கு விளையும் நெல்லை இங்குள்ள மக்களின் உணவுத் தேவைக்கு எடுத்துக்கொண்டு மிகுதி நெல்லை விற்று பணம் சம்பாதித்தனர். இந்நிலங்கள் 2002 ஆம் ஆண்டில் இருந்து யுத்த பீதியால் செய்கை பண்ண முடியாத நிலையில் இருக்கின்றன.

இங்குள்ள பண வருவாயைக் கொடுக்கக்கூடிய தென்னைகள், பனைகள், பல பரப்பளவில் காணப்படுகின்றன. இவற்றில் மா, பலா, என்பனவற்றையும் வைத்து உண்டாக்கி உள்ளனர். தென்னைகளின் தேங்காய்களை மாதமொருமுறை பறித்து விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றனர். பனைமரத்தின் விதைகளைப் பாத்தியில் இட்டு முளைக்கச் செய்து பின் கிழங்காகக் கிண்டி பலபயனுக்கும் எடுக்கின்றனர். பனை ஓலைகள் வேலி அடைக்கவும், தென்னைகளுக்கு பசளைக்காகவும், குருத்தோலைகள் பெட்டி, கடகம், பாய் என்பன பின்னவும் உதவுகின்றன. பலாப்பழம், மாம்பழம் என்பவற்றை கொடிகாமம் சந்தையில் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இப்பயிர்கள் இவ்வூர் மக்களின் பணப்பயிர்களாகப் பிரயோசனப்படுகின்றன.

ஆதியில் இங்குள்ள மக்கள் சைவர்களாக இருந்து வந்தனர். காலப்போக்கில் உசன் கிராமத்தின் வடமேற்குப் பக்கத்தில் சில குடும்பத்தினர் கிறிஸ்தவர்களாகவும், கத்தோலிக்கராகவும் வாழ்ந்து வருகின்றனர். இருந்தபோதிலும் மூன்று சமய மக்களும் இன்றுவரை மிக ஐக்கியமாக ஒரே குடும்பத்தவர்களாக இருந்து வருகின்றனர். ஆதிகாலத்தில் தற்போது வாழும் மக்களின் முன்னோர் உசன் தெற்கில் ஈச்சங் காட்டுத் தோட்டத்தையண்டிய பகுதியில் தான் வாழ்ந்து வந்தனர். அப்போது சாவகச்சேரி, கச்சாய் வழியாகத்தான் பெருந்தெரு சென்றது. துறைமுகமாக கச்சாய்த் துறைமுகம் பாவனையில் இருந்தது. தமது முக்கிய தொழிலாகிய தோட்டப் பயிர்ச் செய்கையையும் நெற் செய்கையையும் மேற்கொண்டிருந்தனர். இங்குள்ள மக்கள் தாய் தந்தையருடன் பாசத்துடன் இருந்து தமது குடும்ப வருவாயை விவசாயம் மூலம் பெருக்கினர். நேரத்தைப் பொன்னாக மதித்து, விடா முயற்சியால் முன்னேறினர். காலப் போக்கில் கண்டி வீதி பெருந்தெருவாக மாறவே தெற்கில் இருந்த மக்கள் படிப்படியாக தற்போதைய இடத்திற்கு மாறினர். இருந்தும் உசன் தெற்கிலேயே தொடர்ந்தும் தமது தொழில் வளத்தைப் பெருக்கி வந்தனர். முக்கியமாக ஈச்சங்காட்டுத் தோட்டத்தில் புகையிலை மற்றும் மிளகாய், சிறு தானியங்களைத் தமது முக்கிய பயிர்களாகச் செய்கை பண்ணி பொருள் வளத்தைப் பெருக்கினர். ஈச்சங்காட்டுப் புகையிலைக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் சந்தைமானம் இருந்தது. அதிகமான தோட்டக்காரர்கள் புகையிலை வியாபாரத்தை உபதொழிலாகச் செய்து பெரும் பொருள் ஈட்டினர்.

## உசன் நாமம் வந்த வரலாறு

நவக்கிரக செவ்வாய்க் கவசத்தில் ( ஆங்கார கவசம்)

படர்புகழ்க் குசன்புரக்க பாவடி பௌமன் காக்க
வுடல்படு மங்க மெலாமுறு தகரூர் வோன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கவசமாவது தெய்வ வழிபாட்டிற்குக் கருவியாக உள்ள அங்கங்கள் ஒன்பதில் ஒன்று. "குசன்" என்பது செவ்வாய்க் கிரகத்தைக் குறிக்கும். இவ்வாறு "குசன்" என்ற சொல் சுக்கிரன் கிரகத்தையும் குறிக்கும். குசன் என்ற சொல் காலகதியில் மருவி (க் + உ =கு) உசன் என்ற நாமமாக வந்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. உசன் கிராமம் மிகத் தொன்மை வாய்ந்தது. இங்குள்ளவர்கள் சைவாசாரத்தின்படி வாழ்ந்தவர்கள். செவ்வாய், சுக்கிரன் தோசம் உள்ளவர்கள் முருகவழிபாடுடையவர்கள். 19 ஆம் நூற்றாண்டில் பெரியார் வினாசித்தம்பி அவர்கள் மண்ணின் கீழ் கண்டெடுத்த அதிசய வேல் இங்கு ஆதியில் முருகன் கோவில் இருந்ததென்பதையும், இங்குள்ளவர்கள் முருக வழிபாடுடையவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. இங்குள்ள முருகன் கோயிலில் நவக்கிரக வழிபாடு ஆதியில் இருந்த காரணத்தால் தற்போதிருக்கும் உசன் முருகன் கோவிலிலும் ஆரம்ப காலத்திலேயே நவக்கிரக வழிபாடு இருந்துவந்தது. குசன் என்ற செவ்வாய்க் கிரகத்தை வழிபாடு செய்த காரணத்தால் இவ்வூருக்கு குசன் என்ற பெயர் வந்தது என்பது ஓர் வரலாறு. அது மட்டுமல்ல 1008 சிவதலங்களில் "உசனேஸ்வரமும் ஒன்று. உசன் + ஈஸ்வரம் = உசனேஸ்வரம். எந்தப் பக்கத்தில் இருந்து பார்த்தாலும் சைவசமயத்தில் இருந்து தான் உசன் என்ற பெயர் வந்திருக்கலாம் என்பதை ஆய்வாளர்கள் கொள்ள இடமிருக்கின்றது.

உசன் பெயர் வந்தமைக்கு இவ்வூரவரின் மூதாதையர் கூறும் செவிவழிக் கதை (கர்ண பரம்பரைக் கதை) ஒன்று இருந்து வருகின்றது. ஊர்களின் பெயர் வந்தமைக்கு பலரும் பலவாறு வரலாறுகளைக் கூறுகின்றனர். தமிழ் அகராதி, யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாண வைபவமாலை, ஊரும் பேரும் ஆகிய நூல்களைக் வைத்துக்கொண்டு ஊர்களின் பெயருக்கு உதாரணம் காட்டுகின்றனர். இவற்றில் தமிழ் அகராதியை விட ஏனைய மூன்று நூல்களில் வரும் சில வரலாறுகள் கர்ண பரம்பரைக் கதை ( செவி வழியாகக் கேட்டு வந்தவை) தமிழ் அகராதியை அடிப்படையாகக் கொண்டு வந்த பெயர்கள் சொற்பதங்களைப் பிரித்து ஊர்களுக்கு பொருள் கூறும் முறை. எது எப்படியிருப்பினும் தொல்பொருள் ஆராய்ச்சி மூலமும், தனிப்பட்டவர்கள் மண்ணை அகழ்வு செய்யும்போது கண்டெடுக்கப்பட்ட தடயங்கள் மூலம் கண்டறிந்த ஊர்ப்பெயர்களே உண்மைப் பெயராகக் கொள்ளலாம். வரலாற்று நூல்களும் வேறுபட்ட சரித்திரத்தை கூறுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. முன்னுதாரணமாக உசன் பெயர் வந்தமையை யாழ்ப்பாணச் சரித்திரத்தின் 88ஆம், 89ஆம் பக்கத்தில் காயப்பட்டணத்தில் இருந்து சில சோனகர் மிருசுவில் என்னும் இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறினார்கள். இவர்கள் குடிகொண்ட இடம் "உசன்" என்னும் சோனகத் தலைவனுக்குரிய இடம் ஆனமையினால் உசன் வழங்குகின்றது. இவர்கள் இங்கிருந்து அகன்று சோனகம் புலவிலே சிலகாலம் வைகி (வைகி = இருந்து) அதுவும் வாய்ப்பாகாமையினால் நல்லூர் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வைபவமாலையின் 60ஆம் பக்கத்தில் முகமது மார்க்கத்தவர்களாக ஆக்கப்பட்ட தமிழ் வம்சத்தவரான சில சோனகக் குடிகள் காயப்பட்டணம் முதலிய இடங்களில் இருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து, சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாழ், முகாவில் என்னும் ஊர்களில் உள்ள சந்தைகளில் வியாபாரம் செய்து கொண்டு தாங்கள் இருந்த இடத்திற்கு உசன் என்று பெயரும் இட்டார்கள். சிறிது காலத்தின் பின் அவ்விடம் வசதிப்படாததினால் இவர்கள் நல்லூருக்குச் சென்றார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிருசுவிலின் தெற்குப் பக்கம் கெற்பெலிக் கடல் வரை குறிப்பிடலாம். இச்சோனகரில் ஒரு பகுதியினர் தமிழ் வம்சத்திலிருந்து முகமது மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் மிருசுவில் பகுதிக்கு வரமுன் இங்குள்ள மிருசுவில், உசன், கெற்பெலி ஆகிய பகுதிகளில் தமிழ் வம்சத்தவர்கள் பரம்பரையாக வாழ்ந்துள்ளனர். இங்கு வியாபாரத்திற்கு வந்த சோனகரும் சிறு தொகையினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் குடியிருந்த இடம் சில ஏக்கர் கணக்கைக் கொண்ட காணிகளாகத் தான் இருந்திருக்கலாம். மிருசுவிலின் தெற்குப் பக்கம் என்பது எந்த இடம் என்பதை அறியமுடியாமல் இருக்கின்றது. "உசன் " என்பவர் இருந்து வர்த்தகம் செய்த இடம் குறிப்பிட்ட சில ஏக்கர் காணியாகத்தான் இருந்திருக்கலாம். இதனால் இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் இவர் தொழில் செய்த இடத்தை "உசன்" என்று கூறி வந்திருக்கலாம். சோனகர்களும் இங்குள்ள தமிழ் மக்களின் நிலத்தை குத்தகைக்கு வேண்டி இருக்கலாம் அல்லது விலைக்கும் வேண்டியிருக்கலாம். இங்கிருந்து செல்லும்போது இவற்றை உரியவர்களுக்கு அல்லது இங்கிருந்த தமிழ் மக்களுக்கு விற்றுவிட்டுச் சென்றிருக்கலாம். அத்தோடு விநாசித்தம்பி உடையார் மண்ணின் அடியில் கண்டெடுத்த வேல் இந்தப் பகுதியில் சைவசமயத்தைச் சேர்ந்த தமிழர்கள் வாழ்ந்த பிரதேசம் என்பதையும் இதன் அடிப்படையில்தான் உசன் நாமம் வந்திருக்கவேண்டும் என்பதையும் உறுதிசெய்கின்றது. அத்தோடு முஸ்லீம்கள் இலங்கைக்கு வருமுன் உசன் காணிகளின் தோம்பு உறுதிகளின் அடிப்படையில் வந்த காணிகள் அத்தனையிலும் "கச்சாய் கோயிற்பற்று உசன் இறை" என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. இது ஒன்றே உசன் நாமம் சோனகர் இலங்கைக்கு வருமுன் இருந்தமையை வலுவூட்டுவதாக இருக்கின்றது.

### மக்களின் கல்வி

ஆரம்ப காலத்தில் உசன் பாதிரி பாடசாலையில் இங்குள்ள சிறார்கள் கல்வி கற்று வந்தனர். வசதி படைத்தவர்கள் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளிலுள்ள விடுதிகளில் தங்கிக் கல்வி கற்றனர். காலம் செல்ல உசன் சைவப் பாடசாலையிலும் மற்றும் அயலூர்களில் உள்ள உயர் கல்லூரிகளுக்கு நாளாந்தம் சென்று கல்வி கற்று வந்தனர். உசன் சைவ வித்தியாசாலை தரம் உயர்ந்ததும், இப் பாடசாலையில் உயர் கல்வியைக் கற்றனர். இங்குள்ள பலர் அரசாங்க ஊழியர்களாகவும், சிலர் தனியார் துறையில் உத்தியோகத்தராகவும், கடமையாற்றினர். இவர்களில் பலர் ஆசிரியர்களாக, அதிபர்களாக, கணக்காளர்களாக, வங்கிச் சேவையாளராக, டாக்டர்களாக, பொறியியலாளராகக் கடமையாற்றுகின்றனர்.

### மக்களின் வணக்கத் தலங்கள்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஆலயமும், வித்தியாலயமும் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது மூதறிஞர் வாக்கு. ஓர் கிராமத்தில் ஆலயமணியோசையும், பாடசாலை மணியோசையும், நேரந் தவறாது ஒலிக்க, இவ்வோசைகள் மத்தியில் இல்லங்கள் அமைத்து வாழ்பவர்கள் பூர்விக புண்ணியம் செய்தவர்களே. இவ்வகையில் இவ்வூர் மக்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூறவேண்டும்.

### உசன் கந்தசுவாமி கோவில் வரலாறு

அருள்தந்து வினைதீர்க்கும் கலியுகவரதனே உசன்கந்தா
அருள்வேண்டி உன்மணியோசைகேட்டு கூடும் அடியவரின்
இருள் அகற்றி ஒளிகொடுத்து வாழவைத்த முருகையனே
கருணைக்கடலே உன்புகழ் காலத்தால் அழியாதப்பா

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு வாழ்ந்த வினாசித்தம்பி உடையார் அவர்கள் தற்போது கந்தசுவாமி கோவில் இருக்கும் காணியைத் துப்பரவு செய்யும்போது தற்போது நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு உசன் கந்தசுவாமி கோவில்



## அருள்மிகு உசன் கஜகேணிப் பிள்ளையார் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்வமரத்துக்குப் பக்கத்தில் ஓர் அற்புத வேலைக் கண்டெடுத்தார். பின்பு இதே இடத்தில் ஓர் சிறு கொட்டில் அமைத்துத், தான் கண்டெடுத்த வேலை வைத்து ஓர் சைவ அடியார் மூலம் பூசை செய்வித்து வந்தார். இவ்வடியாரை யாவரும் பூசாரியார் என அன்போடு அழைத்து வந்தனர். பின்பு இவரது மகன் திரு. வி. வைத்திலிங்கம் அவர்கள் இவ்வேல் இருந்த கொட்டிலை நிரந்தர கட்டடமாகக் கட்டி இவ்வடியாரைக் கொண்டு இவ்வேலுக்குப் பூசைகள் செய்வித்து வந்தார். இந்தக் கட்டடம் இருக்கும் இடத்தை, மடத்துக் கந்தசுவாமி கோவில் என்று இவ்வூர் மக்கள் அழைத்து வந்தனர். இன்றும் இப்புனித இடம் வசந்த மண்டபத்துக்கு முன்பாக இருக்கும், வெளி மண்டபத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது. தர்மகர்த்தாக்களும் இப்புனித கட்டடத்தை அழியாமல் பாதுகாத்து வருகின்றனர். காலப்போக்கில் (இங்குள்ள வேலாயுதப் பெருமானுக்கு தர்மகர்த்தாவாக இருந்த) திரு. வி. வைத்திலிங்கம் சைவ ஆகம முறைப்படி தற்போதிருக்கும் இவ்வாலயத்தைக் கட்டி 1924ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தையும் செய்து வைத்தார். ஆலய வாசலின் மேலுள்ள சிறு கோபுரத்தின் நடுவில் மகா கும்பாபிஷேக ஆண்டு வைரக்கல்லாற் செதுக்கப்பட்டிருப்பதை யாவரும் பார்க்கலாம். திரு. வி. வைத்திலிங்கம் அவர்களுக்குப் பின்பு இவரது சந்ததியினர் தொடர்ந்து தர்மகர்த்தாக்களாக இருந்து வருகின்றனர். இக் கட்டுரையின் இறுதியில் தர்மகர்த்தாக்கள், சிவாச்சாரியர்கள், மாலை கட்டுபவர்கள், கோயில் தொண்டு செய்பவர்கள், ஓதுவார்கள், புராணபடலம் செய்பவர்கள் ஆகியோரது விபரங்கள் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளன.

**மூர்த்திகள்**

மூலமூர்த்தி வேலாயுதப் பெருமான். பரிவார மூர்த்திகள் பிள்ளையார், வள்ளி தெய்வயானை சமேத சண்முகப் பெருமான், சந்திரசேகரர், சிவகாம சுந்தரேஸ்வரி சமேத நடேசப் பெருமான், பழனியாண்டவர், பூமிதேவி மகாதேவி சமேத மகாவிஷ்ணு பெருமான், நவக்கிரக மூர்த்திகள், வைரவப் பெருமானுடன் நாகதம்பிரான், சமய குரவர் நால்வர், துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி எழுந்தருளி, சண்டேசுரர் ஆகிய மூர்த்திகள் இங்குள்ளனர்.

**நடைபெறும் பூசைகள்**

நித்திய பூசைகளுடன் நைமித்திய பூசை என்று சொல்லப்படுகின்ற மகோற்சவமும் (வருடந்தோறும் வைகாசி பூர்வபக்க சஷ்டி திதி தொடங்கி மகோற்சவம் நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாகத்தன்று இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்) வருடந்தோறும் வருகின்ற விசேட தினங்களாகிய மணவாழக்கோலம், கார்த்திகை உற்சவங்கள், திருவெம்பாப் பூசைகள், நடேசரபிஷேகம், கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரி பூசைகள், தைப் பூசம், நால்வர் குருபூசை என்பன ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இங்குள்ள மகோற்சவம் 10 நாட்கள் நடைபெறுகின்றன. 3ம் நாள் உற்சவத்தை, கரம்பக ஊர் மக்களும், ஏனையவற்றை இவ்வூர் மக்களும் ஏற்று நடாத்துகின்றனர். மகோற்சவ காலத்தில் இங்குள்ள மக்கள் பக்தி சிரத்தையுடன் கோலாகலமாகக் காட்சியளிப்பர். தங்கள் இல்லங்கள், தெருக்களை நாள்தோறும் புனிதமாக்கி ஆலயத்திற்குச் சென்று உற்சவத்தில் கலந்துகொள்வர். முன்னைய காலத்தில் பாடசாலைக்கு 10 நாட்கள் விடுமுறை. வெளியூர்களில் வேலை செய்வோர் விடுமுறையில் வந்து இவ்வுற்சவத்தில் கலந்துகொள்வர். இன்றுகூட புலம் பெயர்ந்து வாழும் சிலர் ஆண்டு தோறும் வந்து இவ் உற்சவத்தில் கலந்து கொள்கின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் இவ்வாலயத்தில் மட்டும்தான் மண்பானைகளில் கும்பம் வைத்து அபிசேகம் நடைபெறுகின்றது. குறிப்பாக சிவராத்திரி தினத்தன்று நூற்றியெட்டுக் கலசங்கள் வைத்து, அபிசேகம் நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்கள் பக்தி சிரத்தையுடன் பரிபாலித்து வருகின்றனர். சட்டத்தரணி ச. இராசரத்தினம் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் தற்போதுள்ள தீர்த்தக் குளத்தைக் கட்டுவித்தார். தற்போதைய திருத்தேரைத் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசாரி திரு. செ. கந்தசாமி அவர்களைக் கொண்டு வடிவமைத்து, 1964ம் ஆண்டு வெள்ளோட்டத்தையும் நடாத்தி வைத்தார். இவருக்குப்பின் வந்த திரு. க. வி. நடராசா துடிப்புடன் பல ஆலயத் திருப்பணிகளைச் செய்தார். முக்கியமாக இவ்வாலயத்தில் பழனி, விஷ்ணு, சமய குரவர் நால்வர் ஆகியோருக்கு உரிய இடங்களைக்கட்டி திருவுருவங்களையும் பிரதிட்டை செய்து, கும்பாபிஷேகத்தையும் செய்துவைத்தார். அத்துடன் முருகனுக்குரிய பள்ளியறையையும் கட்டி இவ்வாலயத்தின் வரலாறுகளை இயம்பும் வகையில் பளையைச் சேர்ந்த புலவர் க. குமாரசாமி அவர்களைக்கொண்டு, "ஊஞ்சல் பாட்டையும்" உருவாக்கி "பள்ளியறைப் பூசையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இவர் காலத்தில்தான் இவ்வாலயத்துக்குரிய கைலாய வாகனம் உருவாக்கப்பட்டது. பள்ளிச் சிறாருக்குத் திருத்தொண்டில் ஆர்வத்தை உண்டாக்கும் பொருட்டு, "உசன் கந்தசுவாமி கோவில் தொண்டர்கள்" என்ற நாமத்துடன் கதர்ச் சால்வைகளை அன்பளிப்புச் செய்து, அவற்றை பூசை வேளைகளில் அணியும் முறையைக் கொண்டு வந்தார். சுருங்கக் கூறின் திரு. க. வி. நடராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ம் ஆண்டு தொடக்கம் அமரராகும் வரை இவ்வூரின் வளர்ச்சிக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட்டார். இவ்வூரின் அபிவிருத்திச் சபைகளின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஆலயப் பணியுடன், கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றைச் செய்த பெருந்தகை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். தர்மகர்த்தா திரு.க.வி.நடராசா அவர்கள் தமது உள்ளத்தில் தானிருக்கும் போதே நிர்வாகத்தைப் பரவலாக்கக் கருதி திரு.இ.திருஞானசோதியை சிறிது காலத்திற்காவது தர்மகர்த்தாவாக இருப்பதற்குரிய ஒழுங்கைச் செய்ய முயன்ற வேளையிலும் திரு.திருஞானசோதி அவர்கள் இதில் நாட்டம் கொள்ளவில்லை. சித்தப்பா திரு.நடராசா அவர்களிடம் தொடர்ந்தும் இப்பணியைச் செய்யுமாறு அன்புடன் வேண்டினார்.

இவருக்குப் பின் வந்த இவர் தனது மருமகன் திரு. கு. விமலதாஸ் அவர்களை தான் இருக்கும் போதே தர்மகர்த்தாவுக்குரிய கடமைகளைச் செய்வதற்கு நெறிப்படுத்தினார். இன்று திரு. கு. விமலதாஸ் அவர்கள் தர்மகர்த்தா வரிசையில் உரிய இடத்தைப் பிடித்தமைக்கு, முக்கிய காரணகர்த்தா அமரர் திரு. க. வி. நடராசா என்றால் மிகையாகாது. தர்மகர்த்தாக்கள் காலத்தில் இவரது காலம் அசாதாரண சூழ்நிலைக் காலம். இருந்தும் இவர் மிக அவதானத்துடன் தமது பணிகளை இங்குள்ளவர்களது ஒத்தாசைகளுடன் செய்து வருகின்றார். குறிப்பாக இவ்வாலயத்தின் புனர்நிர்மாண வேலைகளை 1999ம் ஆண்டு மிகப்பெரும் செலவு செய்து முடித்து, மகாகும்பாபிஷேகத்தையும் செய்து முடித்தார். இதற்கு இவ்வூர் மக்களும், இவ்வூரைச் சேர்ந்த புலம் பெயர்ந்தவர்களும் ஒரு பகுதி நிதியைத் தாமாகவே முன்வந்து கொடுத்துதவினர். சென்ற ஆண்டு பாவிக்க முடியாத நிலையில் இருந்த தீர்த்தக் குளத்தை, புதிதாகக் கட்டிமுடித்து முருகப்பெருமானை இக்குளத்தில் தீர்த்தமாடச் செய்தார். துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி என்னும் திருவுருவங்களுக்கு உரிய இடங்களைக்கட்டிப் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகத்தையும் செய்துவைத்தார். ஈழத்தில் உண்டியல் இல்லாக் கோயில் உசன் கந்தசுவாமி கோயில் என்ற பெருமையுடன் இருக்கும் முருகப் பெருமானுக்கு, வருமானத்தைக் கொடுக்கும் தென்னந் தோட்டங்கள் கடந்த 10 வருடங்களாக, யுத்த சூழ்நிலை காரணமாக அழிந்து வருவதை அறிந்து எதிர்காலத்தில் முருகனுக்கு வருமானத்தைக் கொடுக்கும் வகையை ஏற்படுத்த இவ்வூரில் முருகனுக்கு உள்ள காணிகள் அனைத்திலும் பெரும் சிரமங்கள் மத்தியில் தென்னைகளை உற்பத்தி செய்துள்ளார். இன்று இவை வருமானத்தைப் பெறும் நிலையில் உள்ளன. இப்பெருந்தொண்டு இவரின் தீர்க்க தரிசனத்தை எடுத்துக் காட்டுகின்றது. திரு. கு. விமலதாஸ் அவர்கள் இவ்வாலயத்துக்கு மட்டுமல்ல இவ்வூர் மக்கள் வணங்கும் ஆலயங்கள் நான்கிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டு செய்து வருகின்றார். இவ்வாலயத்திற்கு 1999ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலர் ஒன்று வெளியிடப்பட்டது. இதற்கு உதவியோர் பலர். அவர்களுள் (குறிப்பாக) இக்கிராமத்தின் வளர்ச்சியிலும் இங்குள்ள ஆலயத் தொண்டுகளில் முன்னின்று செயற்படுபவருமான "அருள் புடவை நிலைய உரிமையாளர்" திரு. வே. அருணாசலம், இவ்வூர் பொதுத் தொண்டுகளில் தாமாகவே வந்து உதவுபவருமான டாக்டர் ஐ. ஜெபநாம கணேசன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவ்வாலயத்திற்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த குன்றக்குடி அடிகளார், கிருபானந்த வாரியார் ஆகியோர் சமூகங் கொடுத்து "கந்தன் பெருமைபற்றி" கருத்துரை வழங்கினர். ஈழத்தின் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இவ்வாலயத்தின் உற்சவகாலத்தில் சங்கீத கதாப்பிரசங்கங்கள் செய்து வந்துள்ளார். திரு. க. வி. நடராசா அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்தபோது ஆலய புனர்நிர்மாண வேலைகளைச் செய்து மகா கும்பாபிஷேகத்தையும் செய்து வைத்த காலத்தில், ஆதீன முதல்வர் அவர்கள் கந்தபுராண வரலாறுபற்றித் தொடர் பிரசங்கஞ் செய்தார். இறுதி நாள் பிரசங்கத்தை முடித்துக்கொண்டு கொக்குவில் ஆலயத்திற்குப் பிரசங்கம் செய்யச் செல்லும் வழியில் இவர் மயக்கமுற்று ஆதீனம் சென்றவுடன் சமாதியானார். இறுதி நாள் முடிவில் ஆதீன முதல்வருக்கு "சிற்பி" அவர்கள் தலைமையில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கும் கடைசி நிகழ்ச்சி இவ்வாலயத்திலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் மக்கள் இடம்பெயர்ந்த காலத்தில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், இவரது துர்க்காபுர மகளிர் மாணவிகளும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நேரத்தில் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு.நடராசா அவர்களும் இவ்வாலய சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வரர், இவரின் சகோதரர் கேதீஸ்வரக் குருக்கள் ஆகியோர்கள் இவர்களை இன்முகத்தோடு வரவேற்றனர். ஆலய தர்மகர்த்தா திரு.க.வி.நடராசா அவர்கள் தான் இருந்த வீட்டை இவர்களுக்குக் கொடுத்து, துர்க்காபுர மகளிர் இல்லம் இங்கு நடைபெற உதவினார். அம்மா அவர்கள் ஆலய வீதியில் உள்ள சுந்தரேஸ்வரக் குருக்களின் இல்லத்தில் ஆறு மாதகாலம் தமது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிட்டுத் தமது நிர்வாகத்தை நடாத்தி வந்தார். முருகன் கோவில் ஆலய வீதியை அண்டிய பகுதியில் இடம்பெயர்ந்த சிவாச்சாரியார்கள் தங்கக் கூடிய தற்காலிக இல்லங்களை ஆலய சிவாச்சாரியார்கள் அமைத்துக் கொடுத்தனர். வெள்ளிதோறும் முருகன் கோயில் உதய காலப் பூசையைத் தொடர்ந்து கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நற்சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1981ம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் மூல மூர்த்தியாகிய வேலாயுதப் பெருமானுக்கு பிரதான கும்பநீரால் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ் வரக் குருக்கள் அபிஷேகம் செய்கின்றார்.



1981ம் ஆண்டு நடைபெற்ற உசன் சந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக பூர்த்தி விழாவில் பங்குபற்றிய சிவாச்சாரியர்கள் பாராட்டு விழாவில் எடுத்த படம். இப்படத்தில் ஆலய தர்மகர்த்தா திரு. க. வி. நடராசா அவர்களும் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களும் கும்பாபிஷேகத்தில் பங்குபற்றிய சிவாச் சாரியர்களும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1999ம் ஆண்டு நடைபெற்ற உசன் முருகன் கோவில் மகாகும்பாபிஷேகத்தில் "ஜலாதிவாசம்" நடைபெறுகின்றது. இவ் ஆலய தர்மகர்த்தா திரு. கு. விமலதாஸ் அவர்களும் அவர்தம் பாரியார் திருமதி. ச. விமலதாஸ் அவர்களும் இவர்களின் புதல்வர்களும், திருமதி கேதீஸ்வரக் குருக்களும் காணப்படுகின்றனர். தர்மகர்த்தாவின் மூத்த புதல்வர் புதிதாக வைக்கப்பட உள்ள வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுக சுவாமிக்கு ஜலாதி ஊற்றுகின்றார்.



உசன் கந்தசுவாமி கோவிலின் 1999ம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் விஷேட சங்க பூசை நடைபெறுகின்றது. பூசையை சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்களின் சகோதரரும் வேலணை முடிப்பிள்ளையார் கோவிலின் பிரதம சிவாச்சாரியருமான சிவஸ்ரீ இ. சோமாஸ்கந்தக் குருக்கள் (தற்போது அமரர்) செய்வதையும். பந்ததி மந்திர உபதேசத்தை சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஓதுவதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும். இதைக் கேட்கப் பல ஆர்வலர்கள் கூடுவர். பிற்பகலில் துர்க்காபுர மகளிரின் கூட்டுப் பிரார்த்தனை பக்தி சிரத்தையோடும், பண்ணோடும் நடைபெறும். இதைக் கேட்க பக்தர்கள் பலர் கூடுவர். வாரத்தில் மூன்று நாட்களுக்குக் குறையாது வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து இருக்கும் சிவாச்சாரியார்களின், வேத மந்திர ஓசை ஒரு மணித்தியாலம் வரை ஆறுமுக சுவாமி வாசலில் இடம்பெறும். ஆறுதிருமுருகன் போன்ற அறிஞர் பெருமக்கள் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் பணிகளுக்கு, உதவ நாள்தோறும் சமூகமளிப்பார்கள். இக்காலப்பகுதி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகக் கொள்ளலாம்.

இவ்வாலயம் தாபன காலம் தொடக்கம் இன்றுவரை பெருந்திருவிழா எதுவித தடங்கலுமின்றி நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டுகூட உற்சவம் நடைபெறுமோ என்றநிலை பலர் மனங்களிலும் குடிகொண்டிருந்த வேளையிலும்கூட, ஆலய தர்மகர்த்தா அவர்களின் மன உறுதியான செயற்பாட்டினால், பெருந்திருவிழா எதுவித தடங்கலும் இன்றி கடந்த காலங்களைப் போல் இனிது நடைபெற்று முடிந்தது. இவ்வாலயச் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ இ.கேதீஸ்வரசர்மா, இவர் தம் பாரியார் பிள்ளைகள் எதுவித சலனமும் இன்றி பெரும் சிரமங்கள் மத்தியில் இங்கே தங்கி இருந்து இவ் உற்சவத்தை நடாத்தி வைத்தனர். விசேட உற்சவங்களுக்கு சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள் இணுவிலில் இருந்து வந்து மேற்பார்வை செய்துவந்துள்ளார். இன்றைய நித்திய பூசையை சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ.கேதீஸ்வரர் அவர்கள் இணுவிலில் இருந்து நாளாந்தம் வந்து செய்கின்றார். இவ்வாலயம் சின்னையா சிவாச்சாரியார் பரம்பரையினர், ஆலயம் தாபித்த காலம் தொடக்கம் தொடர்ந்தும் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் அமரத்துவம் அடைந்த சோமசுந்தரக்குருக்களுக்கு இருபுதல்வர்கள் இருந்தனர். இவர்கள் இருவரில், இரத்தினசபாபதி ஐயர் இவ்வாலயத்தில் நித்திய பூசைகளைச் செய்து வந்தார். பிரம்மஸ்ரீ இ.ரங்கசாமிக் குருக்கள் இவ்வாலயத்தில் நடைபெறும் விசேட தினங்களுக்கும், பெருந்திருவிழாவுக்கும் சிவாச்சாரியாராகக் கடமையாற்றி வந்துள்ளார். இரத்தினசபாபதி ஐயர் இவ்வூர் மக்களுடன் சந்திக்கும் வேளையில் சுகநலங்களைக் கேட்காமல் செல்லமாட்டார். இவர் நித்திய பூசை நேரத்தில் மிகக் கண்டிப்பாக இருந்தவர். பூசைகளை விரைவாக நடாத்தினாலும், இவர் காட்டும் தீபத்தில் ஓர் விசேடம் இருப்பதை இன்றும் இங்குள்ள முதியவர்கள் பேசுவதைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது. இவரின் பிள்ளைகள் எண்மரில் நால்வர் பெண்கள். ஆண்கள் நால்வரும் யாழ்ப்பாணத்தில் பிரபல சிவாச்சாரியார்களின் வரிசையில் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்படுகின்றனர்.

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலின் பிரதம சிவாச்சாரியாராகக் கடமையாற்றிய சோமஸ்கந்தக் குருக்கள் எதிர்பாராத விதமாக அமரராகி விட்டார். இவரது இழப்பு உசன் கிராமத்துக்கு மட்டுமல்ல, வேலணைக் கிராமத்துக்கும் உரியதாகும். இவர் இவ்வூரில் 40 வருடங்களுக்கு மேல் சிவாச்சாரியாராக நற்பணியாற்றியவர். அளந்து, அறிந்து பேசுபவர். பிறந்த ஊர் பற்று நிறைந்தவர். இரண்டாவது மகன் இரங்கநாதக் குருக்கள் அவர்கள் லண்டன் ஆலயத்தில் சிவாச்சாரியாராகக் கடமையாற்றுகின்றார். மூன்றாவது மகன் சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரபல்யமான சிவாச்சாரியார். துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களின் துர்க்கையம்மன் கோவில் பிரதான சிவாச்சாரியராக 20 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியவர். அம்மாவின் நல்மதிப்பைப் பெற்றவர். ஈழத்தில் உள்ள பலரது பாராட்டுக்குரியவர். அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவில் அறங்காவலர்.

உசன் கந்தசுவாமி கோவில் பிரதான சிவாச்சாரியார் நாலாவது மகன் கேதீஸ்வரக் குருக்களாவார். இவர் தற்போது பிரபல சிவாச்சாரியாராக இருந்து யாழ்ப்பாணத்தில் குறிப்பாகத் தென்மராட்சியில் உள்ள ஆலயங்கள் சிலவற்றின் பெருந்திருவிழாக்களையும் நடாத்தி வருகின்றார். இவரைத் தற்போது அருள்வாக்களிக்கும் கேதீஸ்வரக் குருக்கள் என அழைத்து வருகின்றனர். இவர்களை உருவாக்கிய பெருமை உசன் கந்தசுவாமி கோயிலையும் இவர்கள் கல்வி கற்ற இராமநாதன் மகாவித்தியாலயத்தையுமே சாரும். மறுபக்கமாகப் பார்த்தால் இவர்களால் இவ்வாலயமும், பாடசாலையும் பெருமையடைவதாகவும் கொள்ளலாம்.

உசன் கந்தசுவாமி கோவில் பாகசாலை வேலைகளை 35 ஆண்டுகளுக்குமேல் அருந்தொண்டாற்றிய திருமதி இரத்தினசபாபதி சங்கரி அம்மா நினைவு கூரப்பட வேண்டியவர். இவர் ஆலய தர்மகர்த்தாக்களுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகியவர். இவ்வூர் மக்களின் பேரன்புக்குரியவர். ஆலயத்தொண்டில் 30 வருடங்களுக்கு மேல் அருந்தொண்டாற்றிய திருவாளர்கள் த.சரவணை, பொன்னையா, திருமதி.சரவணை ஆகியோர் நினைவுகூர வேண்டியவர்கள். தொடர்ந்து சரவணை குடும்பத்தின் தொண்டை அவர்கள் பிள்ளைகள் செய்து வருகின்றார்கள். இவர்களில் திருவாளர்கள் ச.செல்வராசா, ச.செல்லத்துரை, திருமதிகள் ந. பராசக்தி, அ. பூபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாலயத்தில் நீண்ட காலம் புராணபடலம் செய்த திருவாளர்கள் க.சின்னத்தம்பி, சி.கணபதிப்பிள்ளை, சண்முக உபாத்தியாயர், பண்டிதர் சி.சரவணமுத்து, சங்கீத பூஷணம் ச.பேரம்பலம், வா.சிவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பூத்தொண்டு செய்த திரு.செல்லத்துரை குடும்பத்தினரையும் தற்போது இவ் ஆலயத்தின் பூந்தோட்டத்தைப் பராமரிக்கும் திரு.கு.குணரத்தினம் ஆகியோரும் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

**உசன் கந்தசுவாமி கோவில் முத்துக் குமாரசுவாமி பேரில் பாடப்பெற்ற திருப்பள்ளி எழுச்சி**

பாடியவர் : க. குமாரசாமி (புலவர்) – பளை

திருச்சிற்றம்பலம்.

போற்றி ஓம் சடாட்சரமந்திரப் பொருளே
புண்ணியமூர்த்தியுன் பொற்பதம் நண்ணி
ஆற்றரும் விருப்புடை அடியவரெல்லாம்
அருகினில் வந்துன் அருள் பெற நின்றார்
மாற்றரும் விடிவெள்ளிதோற்றிய திப்போ
வைகறை புலர்ந்ததுன் மலர்முகங்காட்டாய்
சேற்றிதழ்கமல நற்தடமலிஉசன்பதிச்
செல்வக்குமாரா பள்ளி எழுந்தருளாயே (1)

கருணையின் வடிவே கார்த்திகை மைந்தா
கழலடிகாண வென்றடிவயர் கூடி
அருணன் இந்திரன் திசை வரவினை நோக்கி
ஆலய முன்றலிற் காவல் நிற்கின்றார்
பொருள் பொதி உசன் நகர்மருவியேயமர்ந்த
புண்ணியமுத்துக்குமர நற் தேவே
அருளமுதம் பொழி ஆறு முகேசா
ஆரழகா பள்ளி எழுந்தருளாயே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைச் செவ்வானந்தோற்றிய கீழ்த்திசை
கதிரவன் வருகை கண்டடியவரெல்லாம்
மாலை பள்ளித்தாமம் வயங்கு பூங்கூடை
வண்டுளக்காமுன்னங் கொண்டுவந்துற்றார்
சேல்மலிகயமிகு திருவுறை உசன் பதி
தேடியே யமர்ந்தருள் செல்வ நற் குமரா
மாலயற்கரியவர்கருளிய மருந்தே
மறை வடிவே பள்ளி எழுந்தருளாயே (3)

கருமுகிலூர்தியும் கார்வண்ண மாலும்
கமலமேலயனுங் காணுநற் கரியாய்
அருமை சேரடியவர்க் கெளிவருந்தேவே
ஆறுமாமுகத்தெம் ஐயனே நினது
திருமுகங்காண்பதற் கடியவர் திரண்டே
சேவித்து நிற்கின்றார் கோவிலின் மருங்கே
பெருமைசேர் உசன் முத்துக்குமர நற்பொருளே
பேரழகா பள்ளி எழுந்தருளாயே (4)

ஓங்குயர் சக்திகளா மிச்சை கிரியை
உயர்ஞான வல்லி தெய்வானை யம்மையர்கள்
பாங்கதாய் மேவிடப் பரிந்தருள் புரிகென
பழவடியார்கள் தொழுது நிற்கின்றார்
வீங்கிய தொல்புகழ் உசன் பதி தன்னில்
மேவிய முத்துக்குமர நற் பொருளே
ஈங்கெமக்குறு துயர் நீக்கிடுந் தேவே
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே (5)

கீதங்கள் பாடியே கின்னார் தொழுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளரொலி வண்டின மின்னிசை முரல
நாதஸ் வரத்தொடு நற்தவில் முழங்க
நங்கையர் சந்தன பாழித மேந்த
வேதங்க ளோதியே விற்பிரர் வேண்ட
விண்ணவர் மண்ணவர் காவல்நிற் கின்றார்
ஏதமில் உசன்பதி மேவிய செல்வ
இளங்குமரா பள்ளி எழுந்தருளாயே (6)

முப்பத்து முக்கோடி தேவர்கள் போற்ற
முரண்மிகு சூரனை யயில்கொடு தடிந்தே
செப்பிள முலைத்தேவ சேனையைவேட்டுத்
திருப்பரங் கிரியுறை தேவதேவாநின்
ஒப்பரும் மலரடி காண்பதற் கென்றெ
உனதடி யார்கணம் வாசல்நிற் கின்றார்
இப்புவி தனிலுயர் உசன்பதி மேய
இளங்குமரா பள்ளி எழுந்தருள்வாயே (7)

முந்திய முதல்நடு ஈறிலாப் பொருளே
மூவுலகுக்கு மோர் நாயக மூர்த்தி
வந்துன தடியவர் வாசலில் நின்றார்
வளரிளங் கதிர்முகங் காட்டிடா யென்றே
நன்துறை கழனிகள் செறிஉசன் பதியில்
நான்மறை யொலித்திட நயந்தினி துறையும்
அந்தமில் வேற்கரசே முத்துக்குமரா
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே (8)

பல்லிசை வாணர்கள் காடுனர் ஒருபால்
பணிபுரி தொண்டர்கள் தொழும்பர்கள் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிகீழ்த் திசைவரல் நோக்கியே கையில்

இணைதுணை மலர்களை ஏந்திநிக் கின்றார்

நல்லியல் அந்தணர் நான்மறை ஓதி

நயந்துன தருள்தனை நாடிநிக் கின்றார்

அல்லல்கள் நீக்கியே உசன்பதி அமர்ந்த

அருட்குமரா பள்ளி எழுந்தரு ளாயே (9)

வேதமும் வேள்வியும் ஆகிய முதலே

மென்மையும் வண்மையு மாகிய பொருளே

சீதமும் வெப்பமு மாகிய சுடரே

செங்கதிர் திங்களுக் கொளியருள் தேவே

நாதமும் விந்துவுமாகிய முழுதல்

நாயகா உசன்பதி நயந்தினி தமர்ந்தே

ஏதங்க ளறுத்தெமை ஆண்டருள் புரியும்

இளங்கும ராபள்ளி எழுந்தரு ளாயே (10)

திருச்சிற்றம்பலம்

## உசன் கந்தசுவாமி கோவில் முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

பாடியவர் : க. குமாரசுவாமி (புலவர்)

காப்பு

திருமருவு வளஞ்சிறந்து செல்வம் மல்கி

சிறந்திலங்கு உசன்பதியிற் சிறப்போ டன்று

கருணைசெறி காட்டுவள வதனில் வந்த

கந்தவேள் திருப்பாதங் கருத்திற் கொண்டே

பெருமைசெறி ஊஞ்சலிசை இனிதே பாடப்

பெட்புமிகு மைங்கரமுமொற்றைக் கோடும்

இருவினை நீக்கிடுயானை முகமுங் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரம்ப னிருசரணங் காப்பதாமே.

சீர்மேவு செந்நெல்செறி களனியோடே

தெங்கமரச் சோலைகளும் சேர்ந்தி லங்கும்

நேர்மேவு திருவுறை செங் கமலவோடை

நிம்பமொடு அத்திஆல் அரசு கொன்றை

தார்மேவு சண்பைபன்னீர் கடம்பு வில்வந்

தழைத்தோங்கு சோலைசெறி உசனில் வந்தே

ஏர்மேவு சினகரத்தி லினித மர்ந்த

எந்தைமுத்துக் குமாரரே யாட ரூஞ்சல் (1)

அரியசதுர் வேதந்தூணாக நாட்டி

ஆறங்க மழகுபெறு கோலாய்க் கோட்டி

பெரியசிவா கமங்கள்கயி றாகப் பூட்டி

பேசரிய பிரணவப் பொற் பீடத்தேற்றி

உரியகலைக் ஞானமதே விட்ட மாக்கி

ஓங்கியபொன் னூஞ்சல்மிசை உம்ப ராட்ட

வரியளிக ளிசைபாடும் உசனூர் தன்னில்

வதிந்த முத்துக் குமாரரே யாட ரூஞ்சல் (2)

தாண்டவ ராயன்மரபின் வளிவந்துற்ற

தனியடியான் வைத்திலிங்கன் தாபித்திட்ட

நீண்டபுகழ்ச் சினகரத்தி லினிதே வைகி

நினதடியார் பரம்பரையாய்ப் போற்றிப் பேண

ஈண்டுனருளி மழை பொழிந்தே உசனூர் தன்னில்

எக்குறையும் வராமற் கார்க்குந் தேவே

காண்டகைய சக்திதர ராக வைகுங்

கவின்செய் முத்துக் குமாரரே யாட ரூஞ்சல் (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமா யிரத் தெட்டு மரசு செய்த
அசுரேச னாஞ்சூர ணாணையாலே
விண்டுபிர மாதிசுரர் கூட்டமெல்லாம்
மேன்மைகெட்டுப் குற்றேவல் புரிந்தே எய்த்து
பண்டரன் றாளிணையில்விளப்பரம னீந்த
பரஞ்சுடரே அவுணர்குல காலா வேலா
வண்டுலவு மலர்ச்சோலை உசனில் மேய
வண்ண முத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (4)

மிக்கபுகழ் மறையோர்கள் வேத மோத
வெண்சங்க நாதமுடன் வீணை யோங்க
தக்கதவில் முரசிவைகள் தான்முழங்கச்
சல்லரிமத் தளதாள வரிசை மல்க
பக்கமெலா மடியார் குழாம் பரவி யேத்த
பரிவினொடு தொண்டர்கள் நற்பணியே செய்ய
ஒக்கவருள் உசன்பதியில் நயந்தே வைகும்
ஓங்கு முத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (5)

ஆலமுண்ட அரனார்க்கும் அகத்தி யர்க்கும்
அருணகிரி நாதருக்கு முபதே சித்தே
ஞாலமிசை ஞானபண் டிதனென் றோதும்
நற்பெயர்பெற் றிடுசுவாமி நாத னானாய்
பாலனாய் மதுரைதனி லவத ரித்தே
பண்டுசங்கத் தமிழாய்ந்த புலவரெறே
சீலமுடை அடியவர் வாழ் உசனில் மேய
செல்லமுத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள் அவ்வைமுன்பு பாலனாகி
அருந்தமிழ்வேட் டோதுவித்த அமல மூர்த்தி
சென்றுபொய்யா மொழிப்புலவ னோடு மோதித்
திருந்துமுட்டைக் கவிகேட்ட சேந்தாவின்று
ஒன்றுமறியா நாயேன் பனுவல் கேட்டே
உவந்தருள் செய் ஆறுமுகத் தேவதேவே
நின்றபுகழ்ச் செல்வமலி உசனில் மேய
நிகரில்முத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (7)

சின்னையாக் குருக்களுடை மரபில் வந்தோர்
திருந்தியபூ சனைசெய்யச் சிறப்போ டேற்றாய்
வண்ணமிகு நின்கோயிற் தொழும்ப ரேல்லாம்
வழிமரவு தவறாதுபணி செய்கின்றார்
பன்னுதமிழ்ப் பாவாணர் ஓது வார்கள்
பலருஞ்சற் றதிவழியே பாடி நின்றார்
இன்னமுறை தவறாதே உசனில் வைத்த
எழில்முத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (8)

ஐந்துமுகன் பாலகரே யாடீ ரூஞ்சல்
ஐந்துகரன் தம்பியரே யாடீ ரூஞ்சல்
கொஞ்சுமொழி வள்ளிதெய்வ யானையோடு
குலவுமயில் வீரரே யாடீ ரூஞ்சல்
வெஞ்சமர்செய் யவுணர்குலம் வீட்டி யிட்ட
வெற்றிவேற் கரதலத்தீ ராடீ ரூஞ்சல்
மஞ்சுதவழ் சோலைசெறி உசனில் மேய
வள்ளல்முத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணமு மாகமு மரனும் வாழி

ஆனினமு மந்தணரும் அரசும் வாழி

வாரணமா முகன் வாழி மாலும் வாழி

மலைமகளோ டரனருளும் மலிந்து வாழி

காரனகஞ் சுகக்கடவுள் வீரன் வாழி

கனகமழை பொழி யுமா முகிலும் வாழி

சீரனவே புரியுமுசன் பாதயில் மேய

செல்வமுத்துக் குமாரரே யாடீ ரூஞ்சல் (10)

திருச்சிற்றம்பலம்

## உசன் கந்தசுவாமி கோவில் ஊஞ்சற் பதிகம்

பாடியவர்: வித்துவான் சி. சரவணமுத்து

காப்பு

திருவாரு முசன்பதியிற் செவ்வேள், தன்னைச்

சீரூஞ்சற் பதிகத்தாற் சிறியேன் பாடக்

கருவாரு முயிர்க்குயிராய்க் கலந்த பெம்மான்

காதலிக்கத் தேவர்கணங் கரங்கள் கூப்ப

உருவாருங் கஜமுகனை ஒறுத்தாட் கொண்டோய்

ஒப்பரிய பாரதத்தை உலகுக் கீந்தோய்

மருவாரும் பதமலர்கள் மனதிற் கொண்டேன்

மழகளிறே நினதருளைப் பாலிப் பாயே.

சீராரும் நால்வேதத் தூண்கள் நாட்டித்

திவ்யசிவா கமமென்னும் வளைகள் பூட்டிப்

பேராரும் உபநிடதப் பலகை யேற்றிப்

பெருமைமிகு வேதாங்க வடங்கள் கோத்தே

ஏராரச் செய்திட்ட எழிலார் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமருள் வள்ளிதெய்வ யானை யோடும்
பாராருக் கருள்புரிய உசனில் மேவும்
பரம்பொருளாம் முருகோனே ஆடீ ரூஞ்சல். (1)

தண்மதியுஞ் சூரியருங் குடைகள் தாங்கத்
தாசரெனப் பிரமன்மால் கவரி வீச
விண்ணவர்கோன் முதலானோர் வட்டந் தாங்க
மேன்மைபெறு முடுக்கணங்கள் தீபம் ஏந்த
பண்ணினொடுங் கின்னரர்யா ழிசையை மீட்கப்
பாங்காரும் வள்ளிதெய்வ யானையோடும்
மண்ணவருக் கருள் புரிந்திவ் வுசனில் மேவும்
வண்மைநிறை கற்றபகமே யாடீ ரூஞ்சல். (2)

சயந்தனே முதலானோர் களாஞ்சி யேந்தத்
தக்கவெழி வரம்பையர்கள் நடன மாட
இயங்கள்பல கந்தருவர் ஏந்திப் பாட
ஈட்டில்லாத் தும்புருநா ரதரும் மீட்க
அயலினிலே அம்மையப்பர் அமர்ந்து நோக்க
ஆறுமுகங் கொண்டருளூ மலகில் சோதீ
நயமாரும் உசன்பதியே பதியாக் கொள்ளும்
நாயகனாம் முருகோனே ஆடி ரூஞ்சல் (3)

கஞ்சவகை தண்ணுமைசல் லரியுஞ் சங்கும்
கலந்திசைத்துச் சிவகணத்தார் களிமீக் கூரக்
கஞ்சமலர் கொண்டமரர் பாதந் தூவக்
கார்த்திகையா ரிருமருங்கும் வடந்தொட்டாட்ட
மஞ்சணியுங் கோபுரமார் கோவில் மேவும்
மணிக்குன்றே உசன்பதியை மகிழுங் கந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுதொழில் புரிந்தருளி யடியார்க் காக்கும்

ஆரமுதே வேல்முருகா ஆடீ ரூஞ்சல் (4)

எண்ணரிய வேதத்தின் இசைகள் பேணி

எம்மருங்கு மந்தணர்கள் ஏந்திப் போற்ற

விண்ணவர்கள் தாம்வாழ்வான் விரும்பி யேத்த

மெய்யடியார் பிறப்பறுத்தல் வேண்டிப் போற்ற

மண்ணவர்கள் பண்ணமைந்த பாட்டாற் போற்றும்

மாமருந்தே குகபரனே உசனில் மேவும்

கண்ணிறைந்த கடப்பமலர் சூடுஞ் செவ் வேளள்

காதலிப்போர் மணவாளர் ஆடீ ரூஞ்சல் (5)

நவபேத மனைத்துமுன துருவிற் காட்டி

நண்ணரிய பரம்பொருளாம் வடிவுங் காட்டிப்

பவபேத மனைத்துமறுத் தாளுஞ் சாமீ

பதமுத்தி யபரமுத்திப் பதங்கள் காட்டிச்

சிவபேத மனைத்தையுமே கடந்த சோதித்

திவ்வியதோர் சொரூபமே உசனில் மேவி

நவபேத மணியணிகொள் ஊஞ்சல் வைகும்

நாயகனே சண்முகனே யாடீரூஞ்சல் (6)

முடிகடொறுஞ் செறிந்தமணி யொளியை வீச

முகங்கடொறுங் கருணைமழை யருளை வீசப்

படிகடொறும் ஞானவேல் மருளை வீசப்

பாங்குடனே யெழுந்தருளு முசனூர்க் கந்தா

அடிகடொறுந் தண்டைசிலம் பொலியை யார்ப்ப

ஆரணமுந் தமிழ்மறையுங் கிளிகள் பாட

முடிகடொறும் மயிலாடுங் கோவில் மேவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழின் வித்தகனே யாடீ ரூஞ்சல் (7)

உருத்திரரே படைக்கலமாய்ப் பரித்த செல்வா
உயர்சங்கத் தமிழ்ப்புலவோ யாடீ ரூஞ்சல்
கருத்துடனே தொழுமடியார்க் கருளுங் கந்தா
காங்கேயா சரவணனே யாடீ ரூஞ்சல்
விருப்பமுறுஞ் சங்கரனார் திருமால் கோவில்
விளங்குமுசன் பதியமர்ந்தோ யாடீ ரூஞ்சல்
பொருப்பிலுறை வள்ளிபதம் பணியுஞ் சேந்தா
பூவுலகிற் கொருமருந்தே யாடீ ரூஞ்சல் (8)

ஓங்காரத் துட்பொருளே யாடீ ரூஞ்சல்
உம்பர்பிரான் மான்மருகா ஆடீ ரூஞ்சல்
பாங்காரும் பச்சைமயிலேறி வந்தே
பக்தர்களுக் கருள்பவனே யாடீ ரூஞ்சல்
தேங்காருஞ் சோலைகளும் மாவும் நெல்லுஞ்
சிறந்துவள ருசன்பதியே யிடமா வைகி
நீங்காதே யாறுபடை வீடுங் கொண்டோய்
நின்மலனே சிவகுருவே யாடீ ரூஞ்சல் (9)

திரிபுரிநூல் மார்பிலங்க ஆடீ ரூஞ்சல்
சேவல்கொடி மீதிலங்க வாடீ ரூஞ்சல்
கருமயிலுங் களிகூர வாடீ ரூஞ்சல்
கரமேந்தும் வேல்விளங்க ஆடீ ரூஞ்சல்
முருகலரும் கடம்பிலங்க ஆடீ ரூஞ்சல்
முன்தாளைக் கோடிலங்க ஆடீ ரூஞ்சல்
வருமடியார் மனங்களிப்ப உசனூர் மேவி
வரமருளும் பெருமாளே யாடீ ரூஞ்சல் (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியதாம் பரமசிவமாந் தலைவா வாழி
சண்முகனாய்ச் சரவணத்தே யுதித்தோய் வாழி
முத்தியுநற் சித்திகளும் அருள்வோய் வாழி
மூவுலகும் பரம்பொருளாம் முதல்வா வாழி
துத்திசெறி முலையுமையாள் பாலா வாழி
துயரகற்றும் மூவிலைவேற் குமரா வாழி
நித்தியமாய் உசன்பதியில் நிறைவோய் வாழி
நீள்சேவற் கொடியுடையாய் வாழி வாழி (11)

திருச்சிற்றம்பலம்

**கஜகேணிப் பிள்ளையார் கோவில்**

இன்னருள் தந்தருளும் கஜகேணிப் பிள்ளை யாரே
வன்செயலால் அச்சங்கொண்டு ஓடி வந்து தஞ்சம்புக
அன்னவரைக் காத்தருளி அச்சந்தனை அகற்றி
இன்பந்தனை எம்மூருக்கு அளித்தருளும் விநாயகனே

வளமான தோட்ட நிலங்கள் சூழவுள்ள இடத்தில் பிள்ளையார் கோவில்கொண்டு அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார். இவ்வாலயம் தொன்மையும் புதுமையும் நிறைந்த ஆலயம். (கஜ = யானை) யானைகள் அணியாக வந்து இங்குள்ள குளத்தில் நீர்பருகிச் செல்வதால் இவ்வாலயத்திற்கு கஜகேணிப் பிள்ளையார் என பெயர் வந்ததாக கர்ணபரம்பரைக் கதை இருந்து வருகின்றது. இவ்விடங்களில் யானைகள் வளர்க்கப்பட்டதற்கு, ஆதாரமாகப் பூசகர் வி.வேலுப்பிள்ளை இருந்த காணியில் ஓர் கேணி வெட்டியபோது, இங்கு இறந்த யானையின் தடயங்கள் இருந்தாகப் பலரும் கூறி வருகின்றனர். இவ்வாலயத்தின் கருவறையில் உள்ள கலசம், வெள்ளை நிற வைரக் கல்லினாலானது என்பது இவ்வாலயத்தின் விசேட அம்சம். திரு. சுவாமிநாதர் அவர்களின் பரம்பரையினர் இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்களாக இருந்து வருகின்றனர். தற்போது சு. விநாசித்தம்பி அவர்கள் அறங்காவலராக இருந்து வருகின்றார். இவரது நெருங்கிய உறவினர் டாக்டர் மாணிக்கம் அவர்களின் பெரு முயற்சியினால் இவ்வாலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. டாக்டர் மாணிக்கம் அவர்களும், அவரின் தந்தை திரு. சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா அவர்களும், இவ்வாலயத்தை பக்தி சிரத்தையுடன் தமது குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இவ்வாலயத்தின் திருத்த வேலைகளை இவ்வூர் மக்களிடமும் புலம் பெயர்ந்து வெளிநாட்டில் இருக்கும் இவ்வூரைச் சேர்ந்தவர்களிடமும் நிதி உதவியைப் பெற்று டாக்டர் மாணிக்கம் செய்து வருகின்றார். தர்மகர்த்தா திரு. சு. விநாசித்தம்பி அவர்களின் சம்மதத்துடன் இக்கருமங்கள் இங்கு இனிது நடைபெற்று வருகின்றன. உசன் வாழ் மக்கள் தமது எந்த ஒரு நற்கருமங்களுக்கும் முதலில் இவ்விநாயகப் பெருமானை வழிபட்டே செய்கின்றனர்.

இவ்வாலயத்தின் நித்திய பூசைகளையும் விசேட தினங்களில் நடைபெறும் அபிஷேகங்களையும் மீசாலையைச் சேர்ந்த சுந்தர ஐயர் அவர்கள் முன்னர் செய்து வந்தார். அவரையடுத்து உசன் கந்தசுவாமி கோயில் சிவாசாரியார் பரம்பரையினரே செய்து வந்தனர். அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்போது கொடிகாமத்தைச் சேர்ந்த சைவக் குருக்கள் ஒருவர் நித்திய பூசைகளைச் செய்து வருகின்றார்.

இவ்வாலயத்தில் நித்திய பூசைகளுடன் விசேட தினங்களாகிய மணவாளக் கோலம், ஆவணிச் சதுர்த்தியுடன் சனிக்கிழமை தோறும் அக்காலத்திலும் இக்காலத்திலும் அபிஷேக பூசைகள், பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. சனிக்கிழமை தோறும் நடைபெறும் அபிஷேகங்களை அக்காலத்தில் செய்து வந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் செய்து வருகின்றனர். உசன் கந்தசுவாமி கோயில் சிவாச்சாரியார் கேதீஸ்வரக் குருக்கள் அவர்கள் கடந்த 8 வருடங்களுக்கு மேல் வருடந்தோறும் விசேட ஹோமம் செய்து வருகின்றார். இப்பணியில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல சிவாச்சாரியர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர். அக்காலத்தில் இவ்வாலயத்திற்குச் சரியைத் தொண்டு செய்து சைவ ஆசாரப்படி பக்தி சிரத்தையோடு பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டோர் பலர். அவர்களுள் துறவி பொன்னர், திருவாளர்கள் த. கந்தையா, தர்மகர்த்தா சுவாமிநாதன், இவரது சகோதரர் வல்லிபுரம் மற்றும் கார்த்திகேசு, கணபதிப்பிள்ளை சகோதரர்கள், தம்பிமுத்து, கணக்கர் கந்தையா ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## உசன் வீரபத்திரர் கோயில்

தக்கன்வேள்வி தகர்த்து வானவர் துயர்தீர்த்த உசன்பதி வீரபத்திரா
பக்கம் தோறும் வந்து நேர்த்திகள் பலசெய்யும் அடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவத்தைப் பார்த்து பலவாறு வரமளித்து வீறுகொண்டாய்
திக்குத்தோறும் இப்புவியில் உன்னருள் திகழுதப்பா.

ஆதிகாலத்தில் இயக்கச்சியை அண்டிய கிராமமாகிய சங்கத்தார் வயலில் இருந்த திரு. சின்னத்தம்பி அவர்கள் சூலாயுதம் ஒன்றை வைத்து வழிபாடு செய்து வந்தார். சில காலத்தின் பின்னர் அவர் இடம் பெயர்ந்து உசனில் குடியேறினார். இங்கு வந்து வசிக்கும் காலத்தில் கிளாக்கர் கணபதிப்பிள்ளை அவர்களின் காணியில் இருந்த சிறு கொட்டிலில் தான் அங்கிருந்து எடுத்து வந்த சூலத்தை வைத்து பூசை வழிபாடுகள் செய்து வந்தார். வெள்ளிக்கிழமை பூசைக்கு பிரசாதங்களைச் செய்து கொண்டிருக்கும் போது பூசகர் திரு. சின்னத்தம்பி அவர்கள் அருள் கொண்டு இச்சூலத்தை எடுத்துச் சென்று தற்போது இருக்கும் காணியின் மேற்குப் பக்கத்தில் நின்ற கொக்கட்டி மரத்தடியில் வைத்தார். பின்பு சிலகாலம் இம்மரத்தடியில் வெள்ளி தோறும் பூசைகள் நடைபெற்றன. இப்பூசைகளில் வீரபத்திரரின் அருள் பெற இவ்வூர் மக்கள் பலர் பக்தி சிரத்தையுடன் கலந்துகொண்டு வந்தனர். பலர் தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்ய வெள்ளிக்கிழமைகளில் பெரும் பூசைகளைச் செய்து வந்தனர்.

இவரைத் தொடர்ந்து, இவரின் மருமகன் திரு. வி. வேலுப்பிள்ளை அவர்கள் பூசகராகவும் தர்மகர்த்தாவாகவும் இருந்து வந்தார். இவர் காலத்தில் இவரின் சகோதரர் திரு. வி. சபாபதிப்பிள்ளை அவர்கள் இவருடன் சேர்ந்து ஓர் கொட்டில் அமைத்தனர். இதில் சூலத்தை வைத்து பூசை வழிபாடுகளைத் திரு. வேலுப்பிள்ளை செய்து வந்தார். இதைத் தொடர்ந்து இவ்விடத்தில் கல்லால் தற்போது இருக்கும் மூல மண்டபத்தையும் அடுத்து வரும் ஒரு மண்டபத்தையும் கட்டி பூசை வழிபாடுகளைச் செய்து வந்தார். இக்கட்டட வேலைகளுக்கு இவ்வூர் மக்கள் தாமாகவே முன்வந்து பண உதவி செய்தனர். பூசகர் வேலுப்பிள்ளை அவர்களின் நெருங்கிய உறவினராகிய திரு. வே. கனகரத்தினம் அவர்கள் இவ்வாலயத்திற்குரிய மணிக்கோபுரத்தை தன் பெருமுயற்சியினால் கட்டுவித்துக் கொடுத்தார். இவ்வாலயத்தின் முன்பிருந்த முன் கொட்டிலையும் மண் வீடாக இருந்த மடப்பள்ளியையும் பின்பு இவ்வூர் மக்கள் கொடுத்த அன்பளிப்புக்கள் மூலம் கட்டி முடித்தார். பூசகர் வேலுப்பிள்ளை பூசை செய்ய முடியாத காலப் பகுதியில் திரு. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பூசை செய்தார். இக்காலப் பகுதியில் இக்காணியினை உரிமையாளர் திரு. திருமதி. சின்னத்துரை அவர்களிடம் இருந்து கொள்வனவு செய்தார். தற்போதுள்ள வெளி மண்டபத்தை இவ்வாலயத்தில் ஆரம்ப காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாக்கள், சிவாச்சாரியார், புராணபடனம் செய்வோர் திருத்தொண்டு

- தர்மகர்த்தாக்கள்
  - திரு. வி. வைத்திலிங்கம் (உறவினர்)
  - திரு. பெ. இராமநாதன் (மகன்)
  - திரு. இ. கனகரத்தினம் (மைத்துனர்))
  - திரு. ச. இராசரத்தினம் (சகோதரர்)
  - திரு. க. வி. நடராசா (மருமகன்)
  - * திரு. இ. திருஞானம்
  - திரு. கு. விமலதாஸ்
- சிவாச்சாரியர்கள்
  - சின்னையாக் குருக்கள் (மகன்)
  - முத்துக்குமாரக் குருக்கள் (மகன்)
  - சோமசுந்தரக் குருக்கள் (மக்கள்)
    - இரத்தினசபாபதி ஐயர் (மக்கள்)
      - சோமாஸ்கந்தக் குருக்கள் (அமரர்)
      - இறங்கநாதக் குருக்கள் (லண்டன்)
      - சுந்தரேஸ்வரக் குருக்கள்
      - கேதீஸ்வரக் குருக்கள்
      - சங்கரசுப்பிரமணிய சர்மா (மருமகன்)
    - இறங்கசாமிக் குருக்கள் (ஆண்பிள்ளைகள் இல்லை)
- ஓதுவார்கள் புராணபடனம் செய்வோர்
  - திரு. சின்னத்தம்பி உசன்
  - திரு. தா. கந்தையா உசன்
    - திரு. சி. கணபதிப்பிள்ளை உசன்
    - திரு. தி. சண்முகம் விடத்தற்பளை
    - பண்டிதர் சி. சரவணமுத்
      - திரு. க. சிவப்பிரகாசம் ஆசிரியர் – உசன்
      - திரு. சி. வினாசித்தம்பி வடக்கு மிருசுவில்
      - திரு. வா. சிவப்பிரகா வடக்கு மிருசுவில்
  - திரு. காசித்த விடத்தற்பளை
  - திரு

* திரு. இ. திருஞானம் (சட்டத்தரணி இராசரத்தினம் அவர்கள் மகன்)
இவர் வெளிநாடு செல்ல இருந்தபடியால் கடமை ஏற்க முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தொண்டு செய்வோர், பூமாலை கட்டுபவர்கள் விபரம் ஒரே பார்வையில் அன்று தொடக்கம் இன்று வரை

செய்வோர்

யா

திரு. காசித்தம்பி
விடத்தற்பளை

திரு. சின்னையா உபாத்தியாயர்
வடக்கு மிருசுவில்

திருத்தொண்டு செய்வோர்

திரு. த. சரவணை குடும்பம்

திரு. த சரவணையின் பிள்ளைகள்

1. திருமதி ந. பராசக்தி
2. திரு. ச. செல்வராசா
3. திரு. ச. செல்லத்துரை

திரு. சுந்தரம்

திரு. சு. கஜன்

திரு. பொன்னையா
திரு. செ. அம்பலவாணர்

பூத்தொண்டு செய்வோர்,
பூமாலை சாத்துவோர்

திரு. செல்வத்துரை – கொடிகாமம்
(மகன்)

திரு. பொன்னுத்துரை – கொடிகாமம்
(மகன்)

திரு. பொ. கேதீஸ்வரன்

மா

தர் சி. சரவணமுத்து
ர்

சங்கீதபூசணம் ச. பேரம்பலம்

திரு. கா. சி. நடராசா
உசன்

திரு. வே. மார்க்கண்டு
உசன்

ந. வா. சிவப்பிரகாசம்
க்கு மிருசுவில்

திரு. க. திருநாவுக்கரசு
உசன்

திரு. சி. கனேசு
விடத்தற்பளை

திரு. தி. வல்லிபுரம்
(உசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து பூசைகளுக்குத் தொண்டாற்றி வந்த திரு. சி. கந்தையாவின் உதவியுடன் இவ்வூரவரும் சேர்ந்து கட்டி முடித்தனர்.

இவரைத் தொடர்ந்து இவரது சகோதரரின் மகன் திரு. ச. சின்னராசா அவர்கள் பூசகராகவும் தர்மகர்த்தாவாகவும் கடமையேற்றார். இவர் காலத்தில் ஆலயமும் குறிப்பாக மூன்றாம் மண்டபமும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இந்தியாவில் உருவாக்கப்பட்ட கருங்கற் பிள்ளையாரையும், எழுந்தருளியையும் வைத்து கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. அத்துடன் தற்போது மணிக்கோபுரம் இருக்கும் இடம் உள்வீதிக்கு தேவை வரும் எனக் கருத்திற் கொண்டு புதிதாக ஓர் மணிக் கோபுரமும் உருவாக்கப்பட்டது. இங்கிருந்த மடப்பள்ளியையும் இடித்துப் புதிதாக மிக விசாலமான மடப்பள்ளியையும் கட்டுவித்தார். மேற்கூறிய புனர்நிர்மாண வேலைகளில் இவ்வூர் மக்களுடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் இவ்வூர் மக்களும் திரு.சின்னராசா அவர்களுக்கு பல உதவிகளைச் செய்தனர்.

இரண்டாவது அன்னதான மடக் கட்டடத்தை, கொடிகாமம் மணியம் களஞ்சிய உரிமையாளர் திரு. நா. சிவசுப்பிரமணியம் அவர்கள் கட்டிக் கொடுத்தார். கூரைக்குரிய மரங்களை திரு. மு. சரவணமுத்து அன்பளிப்புச் செய்தார். ஆலயத்தின் மின் இணைப்பு வேலைகளை இவ்வாலயத்துடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள திரு. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் தமது செலவில் செய்து முடித்துள்ளார். இங்குள்ள தீர்த்தக் கிணற்றையும், எழுந்தருளியையும் வாகனத்தையும், இவ்வாலயத்தில் தொண்டு செய்பவர்களில் ஒருவரும், பூசகர் பூசை செய்ய முடியாத நேரங்களில் பூசை செய்பவருமான, இவ்வூரைச் சேர்ந்த திரு. தா. தயாபரன் அவர்கள் செய்து உதவினார். அன்னதான மடத்தை இவ்வூரைச் சேர்ந்த திரு மு. சரவணமுத்து அவர்கள் கட்டிக்கொடுத்தார். இங்குள்ள நீர் விநியோகத்தை இலகுபடுத்துவதற்காக நீர்த்தாங்கிகளுடன் குழாய்களைப் பொருத்தி பைப்புக்களையும் திருமதி. இ. கதிர்காமநாதன் அமைத்துக் கொடுத்தார். இவ்வாலயத்தின் வர்ண வேலைகளை ஒரு தடவை உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு. கு. விமலதாஸ் செய்து கொடுத்தார். இங்கு மூல மூர்த்தியாக வீரபத்திரரும் பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், காத்தவராயர், காளி, வைரவர் ஆகிய மூர்த்திகள் உள்ளனர். இங்கு வெள்ளி தோறும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆண்டில் விசேட பூசைகளாக மணவாளக்கோலம், திருவெம்பா, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பூரம் என்பன நடைபெறுகின்றன. இவ்வாலயப் பூசைகளில் பெருந்திரளானவர்கள் கலந்து கொள்கின்றனர். தமது நேர்த்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனை முடிப்பதற்காக பலர் (இப்பூசைகளை எடுத்துச் செய்கின்றனர்) விசேட பூசைகளை தம் உபயமாகச் செய்விக்கின்றனர்.

## புதுக்குளத்துக் கண்ணகை அம்மன் கோவில்

புதுக்குளத்தில் வீற்றிருக்கும் புதுமையான கண்ணகையே
புதுமைதனை அறிந்து மூன்றூரும் திங்கள்தனில் கூடி
மாதுளம்பழத்துடன் முக்கனியும் சேர்த்து இனிய நல்ல பொங்கல்செய்வர்
சாதுவான இம்மக்கள் துயர்தீர்த்து வேண்டுவன ஈந்தாய் அம்மா

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பழமை வாய்ந்த கண்ணகை அம்மன் ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் தீர்த்தக் குளத்தை வெட்டியபோது ஓர் புதுமையான அம்மன் சிலை இங்கு கண்டெடுத்த படியால் இவ்வாலயத்திற்குப் புதுக்குளத்து அம்மன் என்ற பெயர் வந்தது என்பது வரலாறு. இந்த அம்மன் சிலை 2ம் மண்டபத்தில் வைத்து பூசை செய்யப்படுகின்றது. இது விடத்தற்பளையில் இருந்தாலும் இதன் தர்மகர்த்தாக்களாக உசனைச் சேர்ந்தவர்களே இருந்து வருகின்றனர். இவ்வாலயத்தில் உசன், விடத்தற்பளை, கரம்பகம் ஆகிய மூன்று கிராமத்தைச் சேர்ந்த மக்களும் வணங்கி வருகின்றனர். இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்களாக திரு. துரையர் அவர்களின் பரம்பரையினர் இருந்து வருகின்றனர். தற்போது திரு. ந. நவக்குமார் தர்மகர்த்தாவாக இருந்து வருகின்றார். இவர் வெளியிடத்தில் வசிப்பதனால் இவரின் நெருங்கிய உறவினர் டாக்டர் மாணிக்கம் பூசகரின் உதவியுடன் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றார். இவ்வாலயத்தின் பூசகராக திரு. வல்லிபுரம் பின்னர் அவர் மகன் திரு. பெரியதம்பி ஆகியோரைத் தொடர்ந்து இப்போது அவருடைய பேரன் திரு. சி. சிவராசா பூசகராக இருந்து வருகின்றார்.

இவ்வாலயம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இதற்கு டாக்டர் மாணிக்கம் முன்னின்று செயற்பட்டார். இவருக்கு உறுதுணையாக பூசகர் திரு. பெ. சிவராசா அவர்களும் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு. கு. விமலதாஸ் ஆகியோர் துணை நின்று செயற்பட்டனர். முக்கியமாக ஆலயத்தை முற்றாக அகற்றி, மூலமண்டபத்தையும் இணைமண்டபத்தையும் கருங்கல்லால் கட்டியதுடன் வெளி மண்டபத்தைப் புதிதாக கல்லால் கட்டிப் பழைய மடப்பள்ளியை அகற்றி புதிய மடப்பள்ளியை மிக விசாலமாகக் கட்டினர். அத்துடன் அன்னதான மடத்தையும் புனர்நிர்மாணம் செய்வித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு உசன் வீரபத்திரர் கோவில்



## அருள்மிகு புதுக்குளத்துக் கண்ணகை அம்மன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு புதுக்குளத்துக் கண்ணகை அம்மன் தீர்த்தக் குளம்



அருள்மிகு வயற்கரை முருகன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருப்பணிகளுக்கு மேற்கூறிய மூன்று ஊர் மக்களும், இவ்வூர்களைச் சேர்ந்த புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போரும் பெரிதும் உதவினர்.

இங்கு நித்திய பூசைகளுடன் (ஆண்டு தோறும் இவ்வாலயத்தில) மணவாளக் கோலம், பங்குனித் திங்கள் மற்றும் மானம்பூத் திருவிழா, திருவெம்பாப் பூசை ஆகியன சிறப்பாக நடைபெறுகின்றன. பங்குனித் திங்கள் காலங்களில் மூன்று கிராம மக்களும் அம்மனுக்குப் பொங்கல், படையல் செய்து வருகின்றனர். அத்துடன் கடைசித் திங்களில் பலர் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற பாற் செம்பு, காவடி எடுப்பர். மானம்பூத் திருவிழா அன்று வருடம் ஒருமுறை ஒவ்வொரு ஊருக்கும் அம்மன் திக்குவிஜயம் செய்வார். அன்று அவ்வூர் மக்கள் தமது தெருக்களை துப்பரவு செய்து சந்திகள், வீடுகள் தோறும் பந்தல்கள் அமைத்து அம்மனை பக்தி பூர்வமாக வரவேற்பர். இவ்வாலயத்தில் வாரம் தோறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் உசன் கிராமத்தைச் சேர்ந்த திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பாரியாரும் வேறு சிலரும் சரியைத் தொண்டு செய்து வருகின்றனர். அத்துடன் திங்கள் தோறும் பூசைக்கும் திருத்தொண்டு செய்து வருகின்றனர்.

### வயற்கரைக் கந்தசுவாமி கோவில்

கருங்கல்லால் நின் சிலை செய்வித்த நாவலர் பெருமான்
கருணையோடு அளிக்கக் கருவறையில் இருந்து அருள்செய்யும்
பெருமை மிகு வயற்கரை வேலவனே வரலாறு படைத்தவனே
வருமவர்கள் வினைதீர்த்து வளமாக வாழவைத்தாய்.

இவ்வாலயம் புதுக்குளத்துக் கண்ணகை அம்மன் தீர்த்தக் குளத்துக்கு அருகாமையில் கிழக்குப்பக்கமாக உள்ளது. அம்மன் கோவில் தர்மகர்த்தாவின் நெருங்கிய உறவினராகிய பங்கசம் அம்மாவின் சந்ததியினர்கள் தர்மகர்த்தாக்களாக இருந்து வருகின்றனர்.

1876 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மழை மிகக் குறைவாகப் பெய்தது. குளம், கேணிகள் நீரின்றி வரண்டன. தானியப் பயிர்களும், பணப்பயிர்களும், கருகின. காலரா நோய் மக்களை வருத்தியது. உணவுப் பொருட்களின் விலையும் பலமடங்கு அதிகரித்தன. அக்கால அரசஅதிகாரிகளும் வாளாவிருந்தனர். மனிதாபிமானம் படைத்த நாவலர் பெருமான் இக்காலத்தில் சிறந்த சமூகத் தொண்டராக விளங்கினார். சமயவேறுபாடின்றி பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.07.1877 ஆம் ஆண்டு தொடக்கம் நாள் தோறும் வண்ணார்பண்ணை சிறாம்பியடியில் வாழ்ந்த திரு.வைத்தியநாதர் பொன்னம்பலம் என்பவரின் தென்னந்தோட்டத்தில் கஞ்சி சமைத்து ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. கஞ்சி உணவு பெரிய தொட்டியில் இடப்பட்டு உபசரிக்கப்பட்டதால் கஞ்சித்தொட்டி என இத்தருமம் அழைக்கப்பட்டது. இத்தருமம் தொடர்ந்து 1878 தைவரை ஏழு மாதங்கள் நடைபெற்றன. பின்பு நல்ல மழை பெய்தது. இத்தருமம் நிறுத்தப்பட்டது. இத்தருமத்தில் வயற்கரை முருகன் கோவில் தர்மகர்த்தாவும் நெல்மூட்டைகளை வழங்கிய காரணத்தால் நாவலர் பெருமான் இந்தியாவில் இருந்து வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரின் கருங்கல்லால் செய்த சிலையை நல்லூர் கந்த சுவாமி கோவிலில் வைக்கச் சில தடங்கல்கள் ஏற்பட்டதால் வயற்கரைக் கந்தசுவாமி கோவிலுக்கு அன்பளிப்புச் செய்தார். இத்திருவுருவம் இன்றும் இக்கோவிலின் கருவறையில் இருக்கின்றது. இச்சிலையின் படமும் கீழ்க்குறிப்பும் 1967ஆம் ஆண்டு நாவலர் சிலை திறப்பு விழா சிறப்பு மலரில் இருக்கின்றது.

இவ்வாலயத்தின் சிவாச்சாரியார்களாக உசன் சந்தசுவாமி கோவில் சிவாச்சாரியர் பரம்பரையினரே கடமையாற்றி வந்தனர். யுத்தச் சூழ்நிலை காரணமாகவும் தர்மகர்த்தா வெளிநாட்டில் இருப்பதாலும் சிலகாலம் இவ்வாலயத்தில் பூசைகள், வழிபாடுகள் நடைபெறவில்லை. தற்போது விடத்தற்பளையைச் சேர்ந்த அடியார் திரு. வீ. காசிநாதர் அவர்களின் பெருமுயற்சியால் நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு இவ்வூரவர்கள் பெரிதும் உதவி செய்கின்றனர். தற்போது 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. இங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளில் மூன்று ஊர் மக்களும் கலந்து கொள்கின்றனர். பூசகர் திரு. வி. காசிநாதர் அவர்கள் பக்தி சிரத்தையுடன் பூசைகளை செய்து வருகின்றார்.

## சாமி சின்னத்தம்பி அவர்களால் தாபிக்கப்பட்ட முருகன் கோயில்

இவ்வாலயம் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. சாமி சின்னத்தம்பி அவர்கள் ஓர் சிவபக்தன், துறவி, சைவாசாரப்படி வாழ்ந்தவர். இவர் முதல்முறை கதிர்காம கந்தனை தரிசிக்கக் கால்நடையாக யாத்திரை செய்தார். பின் வீடு திரும்பியதும் தமது வீட்டிற்கு அருகாமையில் ஓர் கொட்டில் அமைத்து வேலை வைத்து நித்திய பூசை வழிபாடுகள் செய்து வந்தார். சிறிது காலத்தின் பின் இவ்வாலயத்தைக் கல்லால் கட்டி, ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு உசன் காளி கோவில்



## அருள்மிகு உசன் தெற்கு முருகன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கோபுரத்தையும் மடப்பள்ளியையும் தாபித்தார். கதிர்காம உற்சவ காலத்தில் இங்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். இவருக்குப் பின் இவரது மருமகன் சாமி தம்பிப்பிள்ளை பூசகராக இருந்து சைவாசாரப்படி நித்திய பூசை வழிபாடுகளைச் செய்து வருகிறார். தற்போது மூல மண்டபத்தில் அம்பாளையும் வைத்து பூசை வழிபாடுகளைச் செய்து வருகிறார்.

**உசன் காளி கோவில்**

இவ்வாலயத்தை வயற்கரை முதலி என்பவர் தாபித்தார். தமது குல தெய்வமாக ஆரம்பத்தில் வீட்டில் வைத்து வழிபாடு செய்த இவர் இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன் உசன் வீரபத்திரர் கோவிலுக்கருகாமையில் தனது காணியில் ஓர் கொட்டில் அமைத்து இக்காளி அம்பாளுக்கு பூசை வழிபாடுகளைச் செய்துவந்தார். சிறிது காலம் செல்ல இவ்வாலயத்தை அயலவர்கள் உதவியுடன் கல்லால் கட்டி, வெளிமண்டபம், மணிக்கோபுரம், மடப்பள்ளி என்பவற்றையும் அமைத்து, வெள்ளி தோறும் பூசை வழிபாடுகளைச் செய்து வந்தார். இப்பூசைகளை அயலவர்களும் சேர்ந்து செய்கின்றனர். தற்போது இவரது மகன் திரு.மு.மார்க்கண்டு பூசகராக இருந்து சைவாசாரப்படி பூசைவழிபாடுகளைச் செய்து வருகின்றார்.

**உசன் சமாதி மடம்**

சுன்னாகத்தில் நடராசாச் செட்டியார் என்னும் ஒருவர் இருந்தார். இவர் யாழ்ப்பாணம் பொன்னம்மா மில் உரிமையாளரான பொன்னம்மாவின் சகோதரர். இவருக்கு சிந்தாமணி, மாணிக்கத்தம்மா, மங்களம் ஆகிய மூன்று பிள்ளைகள் இருந்தனர். இவர்களில் சிந்தாமணி, மாணிக்கத்தம்மா ஆகியோர் ஆத்மீகத்துறையில் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரும் ஏழாலையில் இருந்த சடைவரத சுவாமியினது சீடர்களாக இருந்து தியானம் கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபாடு காட்டி வந்தனர். இவர்கள் துறவு வாழ்வில் ஈடுபட்டனர். சடைவரத சுவாமிகள் மாணிக்கத்தம்மாவின் பெயரை மங்கயற்கரசியாக மாற்றினார். மங்களம்மாவை தந்தையார் நடராசாச் செட்டியார் திருமணம் செய்து வைத்தார். மங்கயற்கரசியும், இவர் சகோதரி சிந்தாமணியும் தங்களுக்கு அமைதியான ஓர் இடத்தில் காணி வாங்கி, இதில் ஓர் மடத்தையும் கட்டித்தருமாறு தந்தையார் நடராசாச் செட்டியாரைக் கேட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிரகாரம் நடராசா அவர்கள் உசன் ஊர் எல்லையில் உள்ள தவசிகுளத்தில் (தற்போது மடம் இருக்கும்) 80 பரப்புத் தென்னங்காணியை வாங்கி 1918ஆம் ஆண்டு இக்காணியில் ஓர் மடத்தையும் கட்டிக் கொடுத்தார். இதில் மங்கயற்கரசி அம்மாவும் (சடையம்மா), சிந்தாமணி அம்மாவும் குடிபுகுந்தனர். இம்மடத்தில் இவர்கள் இருவரும் பஜனைகள், நால்வர் குருபூஜைகள் என்பவற்றைச் செய்து வந்தனர். இவற்றில் பல அடியார்கள் கலந்து வந்தனர். இம்மடத்திற்கும், உசன் கிராமத்திற்கும் பல தொடர்புகள் இருந்து வந்தமையால், உசன் சமாதி மடம் எனப் பலரும் அழைத்து வந்தனர்.

இம்மடத்திற்கு அருகாமையில் பொன்னம்மா மடம் இருந்து வந்தது. இதில் பொன்னம்மா சமாதியும், இதற்கருகாமையில் அம்மன் சிலையையும் வைத்து பொன்னம்மாவின் உறவினர் வழிபாடு செய்து வந்தனர். மங்கயற்கரசி அம்மா, இங்கிருந்த அம்மன் சிலையை தனது மடத்திற்கு மாற்றி, இதற்குப் பூசைகளைச் செய்து வந்தார். அத்தோடு பொன்னம்மா சமாதியடைந்த (கார்த்திகை உத்தர நட்சத்திரம்) குருபூசையையும் தானே தனது மடத்தில் செய்து வந்தார். மங்கயற்கரசி அம்மாவின் குருவாக இருந்த ஏழாலை சடைவரத சுவாமியின் சமாதிநிலையை பொன்னம்மா அவர்களே ஏழாலை மயானத்தில் செய்து, ஓர் மடத்தையும் கட்டி வைத்தார். மங்கயற்கரசி அவர்கள் தமது குருவாகிய சடைவரதரின் குருபூசையையும், பொன்னம்மா அவர்களின் குருபூசையையும் இம்மடத்திலேயே ஆண்டு தோறும் செய்து வந்தார். சடைவரதர் சுவாமியின் சமாதியையும், தனது உசன் மடத்தில் கட்டி வைத்தார். இவர்களின் குருபூசைகளுக்கு ஏழாலை, சுன்னாகம் ஆகிய கிராம மக்கள் பெரிதும் உதவினர். குறிப்பாக ஆயுள்வேத வைத்தியர் திரு. பேரம்பலம் அவர்கள் பெரிதும் உதவி வந்துள்ளார்.

மங்கயற்கரசி அம்மாவின் இளைய சகோதரி மங்களம் அவர்கள் தமது கணவரை இழந்துவிட்டார். இவருக்குப் பிள்ளைகளும் இல்லாத காரணத்தால் இம்மடத்திலேயே வாழ்ந்து வந்தார். இவர் சிறிது காலத்தில் மரணம் அடைந்துவிட்டார். இவரது மரணச்சடங்கை மங்கயற்கரசி அம்மா ஈச்சங்காட்டுச் சுடலையில் செய்து வைத்தார். மங்கயற்கரசி அம்மா 1958 ஆம் ஆண்டு தமது வாரிசாக, ஏழாலையைச் சேர்ந்த நாகலிங்கம் குணரத்தினம் என்பவரை ஏற்றுக்கொண்டார். இவரைப் படிக்க வைத்து ஆயுள்வேத டாக்டராக்கினார். இரண்டாவது சகோதரியாகிய வாலாம்பிகை அம்மா (சிந்தாமணி) தைமாத பூர நட்சத்திரத்தில் சமாதியானார். இவரது சமாதிப் பேற்றையும் மங்கயற்கரசி செய்து வைத்தார். மங்கயற்கரசி அம்மா 1975 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் கிறீஸ்தவ தேவாலயம் (அ.மிசன்)



உசன் சமாதி மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 7ம் திகதி கார்த்திகை உத்தர நட்சத்திரத்தில் (88வது வயதில்) சமாதியானார். இவரின் சமாதிப் பேற்றை இவரது வாரிசு குணரத்தினம் அவர்கள் செய்து வைத்தார்.

திரு. ந. குணரத்தினம் அவர்களுக்கு எழுதிய மரண சாசனத்தின் படி மேற்கூறிய நால்வரது குருபூசைகளையும், வருடந்தோறும் செய்து வருகின்றார். இடப்பெயர்வு காரணமாக தற்போது புன்னாலைக்கட்டுவனில் (தற்காலிகமாக) செய்து வருகின்றார். உசன் மடத்தை புனர்நிர்மானம் செய்யும் பணியில் திரு. குணரத்தினம் ஈடுபட்டுவருகின்றார்.

இம்மடத்துடன் ஈழத்தில் உள்ள பல சுவாமிகள் தொடர்புள்ளவர்களாக, இருந்து வந்துளளனர். குறிப்பாக யோகர் சுவாமிகள், மட்டக்களப்பைச் சேர்ந்த சித்த ஆனைக்குட்டிச் சுவாமிகள், ஏழாலை சடைவரத சுவாமிகள் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். தெல்லிப்பளை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் இடப்பெயர்வின் போது இம்மடத்தை தரிசித்துள்ளார்.

## உசன் கிராம வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வரும் சங்கங்களும், மன்றங்களும்

### உசன் கிராம முன்னேற்ற சங்கமும் சனசமூக நிலையமும்

இச்சங்கம் 1949ம் ஆண்டு ஆரம்பத்தில் வாலிபர் சங்கம் என்ற அமைப்பாக இவ்வூரின் சமூக, சமயப் பணிகளைச் செய்து வந்தது. இதில் திருவாளர்கள் த . நல்லதம்பி, ஐ. கார்த்திகேசு, ஆ. பொன்னுத்துரை, பெ. இராசரத்தினம், அ. இ. ஐயாத்துரை, எஸ். நல்லையா பெ. நல்லதம்பி, க. கணபதிப்பிள்ளை ஆகியோர் முக்கிய பங்காற்றினர். பின்பு இவர்களைச் சேர்த்து தலைமையாசிரியர் திரு மு. சி. சிற்றம்பலம் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் உசன் கிராம முன்னேற்றச் சங்கத்தைத் தாபித்தார். இச் சங்கத்தின் முதல் தலைவராக திரு மு. சி. சிற்றம்பலம் அவர்களும் செயலாளராக ஆசிரியர் ஐ. கார்த்திகேசு அவர்களும் பொருளாளராக திருவாளர் த. நல்லதம்பி அவர்களும் கடமையாற்றினர். இச்சங்கத்தின் ஓர் அங்கமாக உசன் சனசமூக நிலையத்தையும் தாபித்தனர். இச்சங்கம் ஆரம்பத்தில் துடிப்புடன் செயற்பட்டு உசன் கெற்பெலித் தெருவைத் திறந்து வைத்தது. பலநாட்களாக இதன் அங்கத்தவர்கள் செய்த சிரமதானத்தினால் உருவான இத்தெருவை உசன் கிராமசபையின் பெருவீதியாகப் பதிந்தனர். இவ்வாறு இக் கிராமத்தில் சிறு ஒழுங்கைகளை அகலத் தெருக்களாக்கினர். இதன் பின்பு உசன் கிராம முன்னேற்ற சங்கத்தின் தலைவராகச் சட்டத்தரணி ச. இராசரத்தினம், செயலாளராக பண்டிதர் சி. சரவணமுத்து, பொருளாளராக திருவாளர் தா. செல்வரத்தினம் என்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றினர். உசன் கந்தசுவாமி கோவில் மடத்தில் இருந்து இயங்கிய உசன் சனசமூக நிலையத்தையும் கிராம முன்னேற்றச் சங்கத்தையும் பாடசாலைக்கருகாமையின் வடக்குப் பக்கமாக உள்ள உசன் கந்தசுவாமி கோவிற் காணியில் அரச நிதி பெற்று ஓர் கட்டடம் அமைத்து இக்கட்டடத்தில் இயங்கச் செய்தனர். உசன் சனசமூக நிலையத்திற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் எனப் பெயர் சூட்டி இதன் ஓர் அங்கமாக ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தைத் தாபித்து உசன் கிராம சபையில் பதிந்தனர்.

இக் காலகட்டத்தில் இச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் ம. இராசகாரியர், பெ. நல்லதம்பி அ. இ. ஐயாத்துரை, க. நல்லதம்பி, ஆ. பொன்னுத்துரை ஆகியோர் கடமையாற்றினர். 1963ம் ஆண்டு தொடக்கம் இச் சங்கத்தின் தலைவராக திரு க. வி. நடராசா, செயலாளராக ஆசிரியர் க. பேரம்பலம், தனாதிகாரியாக தொடர்ந்து திரு தா. செல்வரத்தினம் என்பவர்கள் கடமையாற்றினர். தலைவர் திரு.க. வி. நடராசா அவர்களின் துடிப்பான செயற்பாட்டினால் இச் சங்கம் பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செய்தது. இதற்கு உதவியாக இதன் செயற்குழு உறுப்பினர்களாகிய திருவாளர்கள் சிவராசா, கு. கமலதாஸ், வே. கனகரத்தினம், க. அரியரத்தினம், ச. தாமோதரம்பிள்ளை ஆகியோர் செயற்பட்டனர். சனசமூக நிலையத்தில் உள்ள நூலகத்தில் புதினப் பத்திரிகைகள் ஒழுங்காக நாளாந்தம் வைக்கப்பட்டன. இதனால் வாசிக்கும் ஆற்றல் இங்குள்ளோருக்கு ஊட்டப்பட்டது. ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தைச் செயற்பட வைப்பதற்காக கிராம முன்னேற்றச் சங்கத்துக்கருகாமையில் ஓர் கரப்பந்தாட்ட மைதானம் உருவாக்கப்பட்டது.

இவர்களைத் தொடர்ந்து இச்சங்கத்தின் தலைவராக திரு.க.சிவானந்தம் அவர்களும் செயலாளர், பொருளாளராக முறையே திருவாளர்கள் எஸ். இராசலிங்கம், ச. கணேசானந்தன், ஆகியோரும் கடமையாற்றினர். சிறிது காலத்தின் பின்பு திரு. இராசலிங்கத்திற்குப் பதிலாக செயலாளராகத் திரு. வெ. கருணானந்தம் கடமையாற்றினார். இவர்கள் காலத்தில் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தை வலையடித்து, நவீனமயமாக்கினர். இக்கிராமத்துப் பெண்பிள்ளைகளின் நலன்கருதி தையல் நிலையத்தை இயங்கச் செய்தனர்.

### சமாதான சபை

உசன் கிராம முன்னேற்ற சங்கத்தினால் ஓர் பஞ்சாய முறையிலான ஐவர்களைக் கொண்ட சபை நிறுவப்பட்டது. இதில் தலைவராக ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி, செயலாளராக ஆசிரியர் திரு க. பேரம்பலம், உறுப்பினர்களாக திருவாளர்கள் க. வி. நடராசா, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு செ. சிவப்பிரகாசம், உசன் தெற்கைச் சேர்ந்த திரு.ஆ. சிதம்பரப்பிள்ளை (மூத்தார்) ஆகியோர் கடமையாற்றினர். கிராமங்கள் தமக்கிடையே ஏற்படும் சிறு பிணக்குகளைத் தீர்க்க நீதி மன்றம் செல்லாது இச் சபை மூலம் தீர்ப்பது தான் பஞ்சாய முறை. இந்த வகையில் அப்போது இக் கிராமத்தில் இயங்கிய இச் சபை இவ்வூர் மக்களின் பல பிணக்குகளைத் தீர்த்து வைத்தது. இச் சபை ஞாயிற்றுக்கிழமைகளில் மாதம் இரு முறை கூடும். பிணக்குகள் அதிகரித்தால் கிழமை தோறும் கூடும். இச் சபையின் செயலாளர் அறிக்கைகளை ஒழுங்காக வைத்திருப்பர். இச் சபையின் தீர்ப்பில் திருப்திப்படாதவர்கள் நீதிமன்றத்திற்கு மேன் முறையீடும் செய்யலாம். நீதி மன்றத்தினர் சமாதான சபையின் அறிக்கையைக் கோருவார்கள்.

இக் கிராம வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய உசன் கிராம முன்னேற்ற சங்க முன்னாள் தலைவரும் உசன் கந்தசுவாமி கோவில் தருமகர்த்தாவாகவும் இருந்து அமரத்துவம் எய்திய சட்டத்தரணி எஸ். இராசரத்தினம் அவர்களின் திருவுருவப்படம் 1971ம் ஆண்டு இம் மண்டபத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. செயலாளராக இருந்தவர் இடமாற்றம் பெற்று வவுனியா சென்றதால் இவ்வூரைச் சேர்ந்த அதிபர் திரு வி. பெ. செல்லத்துரை அவர்கள் 1974ம் ஆண்டு செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இன்று இச் சபையின் தலைவராக திரு கு. ஈசா, செயலாளராக திரு செ. மதுராகரன், பொருளாளராகத் திரு து. சொரூபன் ஆகியோர்கள் கடமையாற்றுகின்றார்கள். இவர்களது செயற்பாடுகள் ஆரம்பத்தில் சிறப்பாக இருந்த போதிலும் சீரற்ற நாட்டு நிலை காரணமாகவும் இங்குள்ள பலர் இடம்பெயர்ந்துள்ளதாலும் தேவை ஏற்படும் போது மட்டும் கூட்டங்களைக் கூட்டிச் செயற்படுகின்றனர்.

## உசன் ஐக்கிய நாணய சங்கம்

இச்சங்கம் இவ்வூரில் உள்ள விவசாயிகளின் நன்மை கருதி, தலைமை ஆசிரியர் திரு மு.சி.சிற்றம்பலம் அவர்களின் பெருமுயற்சியால் 1951ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச் சபையைப் பதிவு செய்வதற்கு) அப்போதைய கூட்டுறவு ஆணையாளராக இருந்த திருவாளர் குக் நேரில் இச் சங்கத்துக்குச் சமூகமளித்து இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் வினாக்கள் மூலம் பரீட்சித்த பின்பே இச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் 35 அங்கத்தவர்கள் இருந்தனர். காலம் செல்ல 1963 வரை 54 பேர் அங்கத்துவம் பெற்றனர். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65 அங்கத்தவர்கள் உள்ளனர்.

இச் சங்கம் ஆரம்பித்ததன் நோக்கம் இங்குள்ள விவசாயிகளும் சிறு வர்த்தகர்களும் குறைந்த வீத வட்டிக்குக் (இரு பிணையாளர்களுடன்) கடன் பெற்றுத் தமது தொழிலை விருத்தி செய்ய வாய்ப்பளிப்பதே. ஆரம்பத்தில் இச் சங்கம் அங்கத்தவர்கள் சேமத்துடன் வங்கியில் பெருந் தொகைக் கடன் பெற்று அங்கத்தவர்களுக்குக் கடனைக் கொடுத்தது. 10 ஆண்டுகளுக்கு மேல் சங்கம் வளர்ச்சியடைந்து, முதலாம் தரத்துக்கு உயர்த்தப்பட்டது. இக்காலத்தில் இருந்து இன்றுவரை சங்கத்தின் முதலீட்டிலிருந்து கடன் கொடுத்து வருகிறது. ஆரம்பத்தில் 250 ரூபா ஒரு அங்கத்தவருக்கு கடன் கொடுத்து வந்தது. இன்று 15,000 ரூபா வரை அங்கத்தவர்களுக்கு கடன் கொடுத்து வருகிறது.

இச் சங்கம் தனது பொன்விழாவை 2000 ஆம் ஆண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடியது. சாவகச்சேரி பிரதேச செயலர் திரு பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். எமது கிராமசேவை அலுவலர் திருமதி. சு.செல்வவிநாயகம் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். இச் சங்கத்தின் உத்தியோகத்தர்களாக நீண்ட காலம் பணியாற்றியவர்களின் விபரம் வருமாறு:

ஆரம்பத்தில் இச் சங்கத்தின் தலைவராகத் திரு. மு. சி. சிற்றம்பலம், செயலாளராகத் திரு ஆ. இளையதம்பி, பொருளாளராக திரு. வே. அருணாசலம் ஆகியோர் கடமையாற்றினர். இவர்களைத் தொடர்ந்து தலைவர்களாகத் திருவாளர்கள் த. சி. றிச்செட், செ. சிவப்பிரகாசம், ம. இராசகாரியர், எஸ். கார்த்திகேசு, க. பேரம்பலம் ஆகியோர் கடமையாற்றினர். செயலாளராக திரு ஆ. இளையதம்பி அவர்கள் தொடர்ந்து 30 ஆண்டுகள் கடமையாற்றியது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் க. அரியரத்தினம், ச. சுப்பிரமணியம், றி. துரைராசசிங்கம், சி. இராசமோகன், தி. வல்லிபுரம் ஆகியோர்கள் செயலாளராக கடமையாற்றினர். பொருளாளர்களாகத் திருவாளர்கள் சி. சரவணமுத்து, க. பேரம்பலம், மு. சுப்பிரமணியம், ச. சரவணமுத்து, சு. பாஸ்கரன், க. செல்லத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.

செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் த. சரவணை, வே. சுப்பையா, அ. இ. ஐயாத்துரை, கா. செல்வராசா, சி. கந்தையா, வி. சபாபதிப்பிள்ளை, செ. அம்பலவாணர், நா. கார்த்திகேசு, ச. சின்னராசா என்போர் பணியாற்றினர். தற்போது தலைவராகத் திரு. க. பேரம்பலம், உபதலைவராகத் திரு. க. திருநாவுக்கரசு, செயலாளராகத் திரு. தி. வல்லிபரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளராகத் திரு க. செல்லத்துரை ஆகியோர் கடமையாற்றுகின்றனர். செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் கா. செல்வராசா, க. நவரத்தினம், வெ. கனகரத்தினம், வே. மனோகரன், ச. செல்லத்துரை, து. சொரூபன், சி. இராசமோகன் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

இச் சங்கம் இன்றுவரை செய்து முடித்த சமூக சேவைகள்

1. ஈச்சங்காட்டு மயான திருத்த வேலைகள் இரு முறை செய்துள்ளது.
2. புதுக்குளத்து அம்மன் கோவில் திருக்குளத்தைத் துப்பரவு செய்தமைக்கு இரு முறை ஒரு பகுதி நிதியை அன்பளிப்புச் செய்துள்ளது.
3. உசன் பாடசாலையில் இயங்கும் முன்பள்ளிச் சிறுவர் நலன் கருதி உபகரணங்கள் வாங்குவதற்கு ரூபா 5000.00 அன்பளிப்புச் செய்தது.
4. 2005ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் இறந்த வடமராட்சி கடற் தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்துக்குள் இரங்கல் கூட்டத்தை நடாத்தியது. உறவுகளை இழந்த 25 குடும்பங்களுக்கு இச் சங்க அங்கத்தவர்களின் நன்கொடையுடன் சங்க இலாபப் பணத்தில் ஐம்பதாயிரத்தையும் சேர்த்து மொத்தம் ஒரு இலட்சம் ரூபாவை (100,000.00) அன்பளிப்புச் செய்தது. சங்கத் தலைவர் அவர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருடன் நேரில் சென்று இக் குடும்பங்களைத் தெரிவு செய்தார். அவர்கள் ஒழுங்கு செய்த வைபவத்தில் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டு தனித்தனிக் குடும்பங்களை அழைத்து இந் நன்கொடையைக் கொடுத்தனர். இவ் வைபவத்தில் உரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் கூறிய ஒரு விடயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். யாழ் மாவட்டத்தில் பல ஐக்கிய நாணய சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அனர்த்தம் நடந்து ஒரு மாதத்திற்குள் தாமாக முன்வந்து இந்த அன்பளிப்புச் செய்தமையைப் பாராட்டுவதாகவும் இது ஒரு முன்மாதிரியான செயலாகும் என்றும் கூறி உசன் கிராமத்தின் பெருமைகளையும் எடுத்துக் கூறினார். இச்சங்க வரலாற்றில் இது ஓர் மைல் கல்லாகும்.
5. உசன் கெற்பெலி வீதி திருத்தத்திற்கு ஒதுக்கிய நிதியைப் பயன்படுத்த வேண்டும் எனில் இப்பாதை அகலப்படுத்தப்படுவது அவசியம். அகலப்படுத்தாவிட்டால் நிதி திரும்பிச் செல்லும் என்ற காரணத்தால் உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தின் தீர்மானப்படி இவ் வேலையைச் செய்து முடிப்பதற்கு திருவாளர்கள் க. பேரம்பலம், க. திருநாவுக்கரசு, கு. ஈசா, வே. மனோகரன், க. நவரத்தினம், வே.கனகரத்தினம் ஆகியோரைக் கொண்ட செயற்குழுவுடன் இப் பகுதி கிராம அலுவலரையும் சேர்த்து ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஒரு மாத காலத்தில் இக்குழுவினர் அகலப்படுத்தும் வேலையைச் செய்து முடித்தனர்.

## இந்து இளைஞர் மன்றம்

உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு க. வி. நடராசா அவர்கள் 20 மாணவர்களுக்கு மேல் சேர்த்து உசன் கந்தசுவாமி கோவில் தொண்டர்களாக ஓர் தொண்டர் சபையைத் தாபித்தார்.

மேலும் சைவத் தொண்டில் நாட்டம் பெறச் செய்து எதிர்காலத்தில் இக்கிராமத்தில் நலத்திட்டங்களுக்கு, இவர்களை ஈடுபடுத்தலாம் என்ற நோக்கத்துடன் திருவாளர்கள் க.இராமநாதன், க.வெற்றிவேலு, ஆலயத் தருமகர்த்தா க.வி.நடராசா, கு.கமலதாஸ், ச.செல்லத்துரை, து.சொரூபன், இ.முருகதாஸ் சங்கீத பூசணம் ச. போரம்பலம், தி . வல்லிபுரம் சு.அருட்பிரகாசம் ஆகியோர் உசன் இந்துமாமன்றத்தை ஆரம்பித்தனர். இம்மன்ற கூட்டங்களை ஆலய வாசலில் கூட்டினர். அத்துடன் இம்மன்றத்தைப் பதிவு செய்வதற்கு இதற்கென்று ஓர் யாப்பையும் தயாரித்தனர். திரு க.ஸ்ரீராமநாதன் அவர்கள் பெருமுயற்சி எடுத்து இச்சங்கத்தைப் பதிவித்தார். அத்துடன் இம்மன்றத்துக்கும் ஒரு குறிப்பிட்ட நிதியை இந்து கலாசார அமைச்சில் இருந்து ஒதுக்கச் செய்தார். இன்று இம்மன்றத்தின் தலைவராகத் திரு கு. கமலதாஸ், செயலாளராக திரு இ. முருகதாஸ், பொருளாளராகத் திரு து. சொரூபன் என்பவர்கள் கடமையாற்றுகின்றனர். இம்மன்ற செயற்பாடுகள் இக்காலகட்டத்திலும் சிறப்பாக நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உசன் மாதர் சங்கம்

இச்சங்கம் பெண்கள் நலன்களைப் பேணும் நோக்குடன் இவ்வூரைச் சேர்ந்த திருமதிகள் சூசைமரியதாசன், க. தம்பிப்பிள்ளை, த. பாலகுமாரன் ஆகியோரின் பெருமுயற்சியால் தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதன் செயற்பாடுகள் இவ்வூர்ப் பெண்பிள்ளைகளின் நலன் கருதிச் சுறுசுறுப்பாக நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையியல் பயிற்சி, தலைமுடி அலங்காரம் போன்ற நீண்ட நாட்களுக்குரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. காலகதியில் இதன் செயற்பாடுகள் நலிவடைந்தன. தற்போது ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களுக்குரிய நலத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மாதர் சங்கம் அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உசன் கிராம சேவை அலுவலர் இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

## மனமகிழ் மன்றம்

இம்மன்றத்தை தாபித்தவர்கள் இவ்வூரைச் சேர்ந்த திருவாளர்கள் க. சிவானந்தம், வெ.கருணானந்தம், ஐ. ஜெபநாமகணேசன் ஆவர். பொறுப்புணர்ச்சியுடன் செயல் வீரர்களாகச் செயற்பட்டு யாவரது நன்மதிப்பையும் பெற்றனர். தாம் கற்ற பாடசாலையான உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஓர் அரங்கு இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கொடைவள்ளல் பலரிடம் சென்று நிதி சேகரித்து இப்பணியை மேற்கொண்டு குறுகிய காலத்தில் நிறைவு செய்தனர். இதற்கு பெரும் பண உதவி செய்தவர் மில்க்வைற் உரியாளர் சமூகஜோதி கனகராசா என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரங்கை கட்டுவதற்குரிய சிரமதான வேலைகளை இவர்கள் மூவருடன் இங்குள்ள வாலிபர்கள் பலர் சேர்ந்து செய்தனர். இவ்வரங்கிற்குத் தமது மனமகிழ் மன்றம் என்ற நாமத்தையும் சூட்டி திறப்பு விழாவையும் சிறப்புறச் செய்து வைத்தனர். இத்திறப்பு விழாவில் நிதி உதவிய பெரியார்கள் பலரையும் அழைத்துக் கௌரவித்தனர். குறிப்பாகக் கொடைவள்ளல் சமூகஜோதி கனகராசா இவ்விழாவில் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்.

## உசன் திடுக்கிடும் நாடக மன்றம்

இவ்வூரைச் சேர்ந்த திரு வே. கனகரத்தினம், உசன் கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம், ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் என்பவற்றில் செயற்குழு உறுப்பினராக இருந்து இக்கிராமப் பற்று நிறைந்தவராகச் செயற்பட்ட காலத்தில் நாடகத் துறையில் ஆர்வம் நிறைந்தவராகவும் காணப்பட்டார். நாடகத்துறையை விருத்தி செய்யும் நோக்குடன் "திடுக்கிடும் நாடக மன்றத்தை" தாபித்தார். இவருடன் திருவாளர்கள் வெற்றிவேலு, ச. சின்னராசா என்போரும் சேர்ந்து பல நாடகங்களை அரங்கேற்றினர். இந்த நாடகங்களை ஆசிரியர் ஐ. வரதராசா நெறிப்படுத்தினார். இந்த நாடகங்கள் மூலம் சேர்ந்த பணத்தை சமூக சமயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்குச் செலவு செய்தார். குறிப்பாக உசன் சந்தியில் உள்ள பஸ்தரிப்பில் பயணிகள் நன்மைகருதி ஓர் கட்டடத்தைக் கட்டி அதற்குத் தமது நாடகமன்றத்தின் பெயராகிய "திடுக்கிடும் நாடக மன்றம்" என்னும் நாமத்தையும் சூட்டினார். இக்கட்டடம் இன்றும் எதுவித சேதமும் இன்றி இருக்கின்றது.

## உசன் சனசமூக நிலையம்

ஆரம்பத்தில் உசன் கிராம முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து நடைபெற்ற, சனசமூக நிலையம் பிற்காலத்தில் தனியாக இயங்கியது. இதன் உத்தியோகத்தராகத் திருவாளர்கள் வி. மார்க்கண்டு, கே. வெற்றிவேலு, சோ. ஸ்ரீகாந்தன் முதலியோர் கடமையாற்றினர். உசன் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தைப் பாவிக்க முடியாத காரணத்தால் இதன் செயற்பாடுகளுக்குத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. தற்போது கனடாவில் இருக்கும் திரு. சோ. ஸ்ரீகந்தன் அவர்கள் தான் செல்லும் முன் இந்த நிலையத்தின் வங்கிப் கணக்குப் புத்தகத்தை உசன் கிராமசேவை அலுவலரிடம் கையளித்துச் சென்றுள்ளார். இக்கணக்கில் வங்கியில் 10,000 ரூபா இருப்பதாக உசன் கிராம சேவை அலுவலர் என்னிடம் கூறினார். இந்நிலையத்தை இயங்கச் செய்யுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் காரியாலய கிராம சேவை உத்தியோகத்தர் ஆலோசனை வழங்கியுள்ளார். உசன் கிராம சேவை அலுவலர் திருமதி. சு. செல்வவினாயகம் இதுபற்றி இவ்வூர் மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## உசன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்களும், மிருசுவில் கிராமத் தலைமைக்காரராக இருந்த திரு. இராசா அவர்களும், மற்றும் மிருசுவில், உசன் வாழ் மக்கள் சிலரும் சேர்ந்து மிருசுவில் நவஜீவன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை, தென்மராட்சி, கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைச் சங்கமாக அமைத்தனர். அப்போது நல்ல முறையில் உசன் சங்கக் கடை இயங்கியதாலும் இதன் நிர்வாகி திரு. தா. செல்வரத்தினம் இவ்வூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றதாலும் உசனில் ஓர் கூட்டுறவுச் சங்கக் கிளையை அமைக்க மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இருந்தும் இவ்வூரில் இருந்த தலைமை ஆசிரியர் திரு. மு. சி. பதஞ்சலி அவர்களும், ஆசிரியர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஓர் கூட்டுறவுக் கிளை அமைப்பதற்கு முயன்றனர். இவ்வூர் மக்களில் பலர் இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வம் காட்டாதபடியால் இம்முயற்சி கைகூடவில்லை. கால கதியில் சங்கக் கடைகளின் முறை நீக்கப்பட்டன. இவ்வூரைச் சேர்ந்த திருவாளர்கள் கே. இராமநாதன், த. செல்லத்துரை, க. திருநாவுக்கரசு, வே. கார்த்திகேசு, கே. அருட்பிரகாசம், வே. அருணாசலம், செ. இராசமோகன், க. நவரத்தினம், வே. கனகரத்தினம் ஆகியோரின் பெருமுயற்சியால் புதிதாக ஓர் கிளை தாபிக்கப்பட்டது. மிருசுவில் நவஜீவனத்தில் தமது பங்கீட்டுப் பொருட்களை பெற்று வந்த உசன் மக்களுக்கு உசனில் ஓர் கிளை அமைத்ததனால் இவர்களின் பெரும் சிரமங்கள் குறைந்தது. கடந்த ஒகஸ்ட் 11ம் திகதி உசன் பகுதியில் ஏற்பட்ட பீதியால் பலர் இடம் பெயர்ந்தனர். உசன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும், இவ்வூரைச் சேர்ந்தவருமான திரு. தேவகுமார் அவர்களும், திரு. சி. காஞ்சிவன் மற்றும் இங்குள்ள சிலரும் சேர்ந்து பாதுகாப்பாக உள்ள திரு. காஞ்சிவன் வீட்டில் உள்ள அறையில் பொருட்களை வைத்து இக்கிளையை நடத்தி வருகின்றனர். இதனால் இங்குள்ள மக்கள் தூர இடங்களுக்குச் சென்று தமது நிவாரணப் பொருட்களைப் பெறும் சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன. திரு. தேவகுமார் அவர்கள் சங்கப் பொதுமுகாமையாளராக இருப்பது இக்கிளையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்து வருகின்றது. இக்கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளராக முறையே திருவாளர்கள் சி. காஞ்சீவன், க. திருநாவுக்கரசு, ச. செல்லத்துரை ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

## முன்பள்ளிகள்

1968 ஆம் ஆண்டு இவ்வூரைச் சேர்ந்த திரு.சு.பொன்னம்பலம் அவர்கள் அமரர் இராசக்கோன் அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் இங்குள்ள சிறார்களின் நன்மை கருதி ஓர் முன்பள்ளியை ஆரம்பித்து நடத்தினார். இவர் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட்டுக்கள் மூலம் கல்வி கற்பித்தார். அதே நேரம் கண்டிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் பாலர்களை வழிநடத்தினார். இவர் பாலர்களின் எழுத்தாற்றலை வளர்த்தார். இவர் பலகாலம் இம்முன்பள்ளியை நடத்தி வந்தார். இவருக்கு பின் இவரது சகோதரி செல்வி சு.அன்னலட்சுமி இப்பணியை மேற்கொண்டார். இவர் பாலர் கல்வி ஆசிரிய பயிற்சியைப் பெற்று நவீன கல்வித்திட்டத்திற்கேற்ப பாலர்களுக்குக் கல்வி போதித்து வருகின்றார். இராசக்கோன் அவர்களது வீட்டில் ( உசன் கந்தப் பெருமானுக்குரிய ஆதனவீடு) இருந்த முன்பள்ளியை உசன் வசந்தா கல்வி நிலையக் கட்டடத்திற்கு மாற்றி நடத்தி வந்தார். பின்பு உசன் இராமநாதன் மகாவித்தியாலய ஆரம்ப வகுப்புக்களின் ஓர் பகுதியில் இப்பாடசாலை அதிபரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையில் இருந்து வருகின்றது. தொடர்ந்தும் செல்வி. சு.அன்னலட்சுமி ஆசிரியராக இருந்து வருகின்றார்.

## உசன் கிறிஸ்தவ தேவாலய நிர்வாகத்தில் இருந்த முன்பள்ளி

இப்பள்ளி தேவாலயத்திற்குப் பக்கத்தில் நவீன மயப்படுத்தப்பட்ட கட்டடத்தில் 1985 ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்று வந்தது. இங்கும் முன்பள்ளி ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் கற்பித்து வந்தனர். இடப்பெயர்வு காரணமாக இப்பள்ளி இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

## உசன் கிராமத்தில் வசிக்கும் கத்தோலிக்க மக்கள்


1994 ஆம் ஆண்டில் இங்கு 23 கத்தோலிக்கக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இவர்கள் மிருசுவிலில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களின் உறவினர்கள். இவர்கள் எல்லோரும் படித்தவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும், அரசாங்க உத்தியோகத்தவர்களாகவும் இருந்தனர். சிலர் சிறந்த விவசாயிகளாகவும் இருந்தனர். மிருசுவிலில் சென் நீக்கிலஸ் தேவாலயத்தைத் தமது வணக்கத் தலமாகக் கொண்டிருந்தனர். நாள் தோறும் அதிகாலையில், இங்கு நடைபெறும் பூசை வழிபாட்டில் தவறாது கலந்து கொள்வர். தேவாலயத்திற்குப் பக்கத்தில் உள்ள மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் தமது கல்வியைத் தொடர்ந்தனர். இத்தேவாலயமும், பாடசாலையும் தொன்மை வாய்ந்தவை. இப்பாடசாலை ஒரு காலத்தில் சிறந்த கல்வி நிறுவனமாகத் திகழ்ந்தது. கிளாலி போன்ற தூர இடத்துக் கத்தோலிக்கப் பிள்ளைகள் இங்கு கல்வி கற்று வந்தனர். காலப் போக்கில் உசன் கிராமத்துக் கத்தோலிக்கப் பிள்ளைகள் தமது உயர்கல்வியை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தனர். இங்கு வாழ்ந்த கத்தோலிக்க மக்களும், சைவ மக்களும் ஒரே குடும்பத்தினர் போல் என்றும் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர். இடப்பெயர்வு, சீரற்ற நாட்டு நிலைமை காரணமாக இங்குள்ள பலர் வெளிநாடுகளுக்கும் சிலர் யாழ்ப்பாணத்திற்கும் சென்று வாழ்கின்றனர்.

## உசன்வாழ் கிறீஸ்தவ மக்கள்


இற்றைக்கு சுமார் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலேயர் யாழ் குடாநாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காலத்தில் அவர்கள் குடாநாட்டில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம் வீதியை சாவகச்சேரி பரிஷ் குருவானவர் திறந்து வைக்கின்றார்



டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம் கானி நுழை வாயிலை உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் திரு. கு. விமலதாஸ் அவர்கள் திறந்து வைக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலும் தேவாலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றை அமைத்து மக்களுக்குத் தன்னலங்கருதாது தொண்டாற்றி வந்தனர். கிறிஸ்தவ சமயத்தைக் கைக்கொண்டு அத்துடன் ஆங்கிலத்தையும் கற்றுத் தேறியவர்களுக்கு அரசில் உயர் பதவிகளும் சிறந்த சமூக அந்தஸ்தும் பெறும் வாய்ப்புகள் உண்டாகின. அத்துடன் அக்காலத்தில் சிறந்த கல்வி வாய்ப்புக்கள் கிறிஸ்தவ கல்லூரிகளிலே இருந்தன. அதனால் அநேகர் மதமாற்றம் பெற்று ஆங்கில மொழியையும் கற்று, அதன் மூலமாக தொழில் வாய்ப்புக்களையும் பெற்று, சமூகத்தில் மேலோங்கி நின்றனர்.

அக்கால கட்டத்தில் 1911ம் ஆண்டு உசன் கிராமத்திலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் அதனுடன் இணைந்தாற்போல் ஒரு ஆரம்ப தமிழ் பாடசாலையும் அமைக்கப்பட்டன. அக்காலத்தில் உசனில் வேறு பாடசாலைகள் இல்லாத காரணத்தால் கல்வி ஆர்வம் கொண்ட உசன் பிள்ளைகள் எல்லோரும் இப்பாடசாலையிலே தான் எழுத்தறிவு பெற்றனர். அத்துடன் உசன் தேவாலயத்தினூடாகக் கிறிஸ்தவ சமயம் ஊரிலே அறிமுகமானபோது பலர் அம்மதத்தைத் தழுவ முற்பட்டனர். இத்தேவாலயம் கிராமத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்திருந்த படியால் அச்சுற்றாடலில்தான் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் சிறந்த கல்வி அறிவுடையவர்களாகவும் சீரிய பண்புள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களில் தற்போதைய சந்ததியினர் உயர் தொழில்கள் புரிந்து கொண்டு சிறப்புற வாழ்க்கை நடத்துகின்றனர்.

## ஆசீர்வாதம் வீதி

இக்கிராமத்தில் கிறிஸ்தவ பாடசாலை ஆரம்பமான காலத்தில் வாரிக்குட்டி சட்டம்பியார் என்று அழைக்கப்பட்ட வாரித்தம்பி என்பவர் உசனில் வசித்து வந்தார். இவர் ஒரு நில புலச் சொந்தக்காரராவார். பலராலும் நன்கு மதிக்கப்பட்டவராகவும் ஒரு கல்விமானாகவும் திகழ்ந்தார். அக்காரணத்தினாலேயே அவர் உசன் கிறிஸ்தவ பாடசாலையில் பல காலம் வேதனம் எதுவும் பெறாமல் ஆசிரிய பணியாற்றினார். இவர் ஒரு சிறந்த இறைபக்தனாகவும் காணப்பட்டார். திரு வாரித்தம்பி ஆசிரியர் அவர்கள் பாடசாலையில் இலவசமாக இவ்வூர்ப்பிள்ளைகளுக்கு கற்பித்ததுடன் நிற்காது தமது வீட்டில் வைத்து பிள்ளைகட்கு உணவும் கொடுத்து வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் மூன்றாம் நாலாம் சந்ததியினர் இன்று "ஆசீர்வாதம்" என்ற குடும்பப் பெயருடன் சிலர் உள்நாட்டிலும், பலர் வெளிநாடுகளிலும், நீதிபதி, மருத்துவர், பொறியியலாளர் போன்ற உயர் பதவிகளை வகித்து வருகின்றார்கள்.

டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம் என்பவர் இவர்களில் ஒருவராவார். இவர் கனடா நாட்டில் மருத்துவராக பணிபுரிகின்றார். இவர் முன்கூறிய வாரித்தம்பி ஆசிரியரின் பூட்டன் ஆவார். இவர் சில காலத்திற்கு முன்னர் இலங்கை வந்தபோது தனது மூதாதையரின் கிராமமான உசனைப் பார்க்க வந்தார். தம் மூதாதையர் வாழ்ந்த இடத்தை இங்குள்ள சிலரின் உதவியுடன் அடையாளம் கண்டார். அந்த நிலம் எல்லாம் தற்போது வேறு ஆட்களின் கைக்கு மாறிவிட்டமையால் மிக மனவேதனை அடைந்தார். எப்படியேனும் தமக்கு அந்த நிலம் வேண்டும் என்ற ஆசை மேலோங்க அந்தக் காணியின் ஒரு பகுதியை அதிக விலை கொடுத்து வாங்கினார். இந்நிலத்திலே தம் மூதாதையரின் பெயர் விளங்கப் பொதுப்பணி ஏதும் செய்ய வேண்டும் என்றும் திட்டமிட்டுள்ளார்.

இவ்விடம் அவர் வருகை தந்த நாட்களில் இக் கிராம மக்கள் ஊரின் இயல்பான மணல் பாதைகளிலே அதிக சிரமத்துடன் கால் நடையாகச் செல்வதையும் வண்டிகளை நகர்த்துவதையும் கண்டு அதி வியப்பும் பரிதாபமும் அடைந்தார். தாம் வாங்கிய காணியின் அருகாமையாகச் செல்லும் ஆயிரத்து நானூறு அடி நீளமான மண் ஒழுங்கையை விசாலித்து கல்லிட்டு அதன்மேல் தாரிட்டுச் சிறந்ததோர் வீதியை அமைத்து இவ்வூர் மக்களின் பாவனைக்காகக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அதன்படி கனடா நாடு திரும்பியதும் உடனடியாக வேண்டிய பணத்தை அனுப்பி இவ் வீதி அமைப்புப் பணியைத் திறம்படச் செய்வித்தார். கிராம மக்களின் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தனதாக்கிக் கொண்டார்.

இன்றைய யுத்த சூழலில் இப் பகுதியில் உள்ள அனைத்துத் தெருக்களும் மூடப்பட்டிருக்கும் நிலையில் ஊர் மக்கள் அனைவரும், இவ்வொரேயொரு வீதியூடாகத்தான் ஆலயத்திற்குப் பயணம் செய்வதைப் பார்க்க மிக ஆனந்தமாக இருப்பதுடன் வள்ளல் இந்திரன் ஆசீர்வாதம் அவர்களையும் நினைவுகூரச் செய்கிறது. உசன் முருகன் ஆலய உற்சவ காலத்திலே மக்கள் பாவிக்கக் கூடியதாக உள்ள இந்த ஒரே ஒரு வீதி ஊடாகப் பக்தர்கள் பெருந்திரளாகப் போக்குவரத்து செய்ததை கண்ணுற்ற போது முருகப் பெருமான் தான் வள்ளல் ஆசீர்வாதம் ஊடாக இவ் வீதியை அமைத்தாரோ என்று அந்தப் பக்தர்கள் பேசிக்கொண்டதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக் கூடியதாகவும் இருந்தது.


இவ்வாறு நாட்டுக்குப் பெரும்பணியாற்றிய வைத்திய கலாநிதி இந்திரன் ஆசீர்வாதம் அவர்களுக்கு இவ்வூர் மக்கள் யாவரும் தமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரும், அவரது குடும்பமும் இறையாசி பெற்று நீடூழி காலம் வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றார்கள். இவ் வீதியை முன்னின்று செய்து கொடுத்தவர் இவ்வூரைச் சேர்ந்த திரு. வி. கனகலிங்கம் ஆவார். இவ் வீதிக்கு இவ்வூரவர் "ஆசீர்வாதம் வீதி" என நாமம் சூட்டியதுடன் திறப்பு விழாவை ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. கா. செல்வராசா தலைமையில் கோலாகலமாகச் செய்தும் வைத்தனர். வாழ்த்துரைகளை உசன் இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. கு. கமலதாஸ் அவர்களும் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாள் திரு. யோ. யோன்பிள்ளை அவர்களும் வழங்கினர். "ஆசீர்வாதம்" வீதியைச் சாவகச்சேரிப் பகுதி கிறிஸ்தவப் பங்குத்தந்தை திறந்து வைத்தார். இவர் பொதுப்பணி செய்வதற்கு வாங்கி வைத்திருக்கும் காணியின் நுளைவாயிலை உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு.கு.விமலதாஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பொதுப்பணி வேலைகளைச் செய்யும் நோக்கத்தில் இவ்வேலையைச் செய்துகொடுக்கும் திரு.வி.கனகலிங்கம் அவர்கள் மூலப்பொருட்களைப் கொள்வனவு செய்யும் வேலைகளில் ஈடுபட்டுள்ளார். எப்படிப்பட்ட பொதுப்பணிகளைச் செய்யவேண்டும் என்ற ஆலோசனைகளை இப்பகுதி மக்களின் அபிப்பிராயத்தையும், இங்குள்ள ஐக்கிய நாணய சங்கம், இந்து இளைஞர் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம் என்பவற்றின் ஆலோசனைகளையும் பெறுவதில் திருவாளர்கள். கா.சி.செல்வராசா , வி.சிவலிங்கம் கு.கமலதாஸ் ஆகியோர் ஈடுபாடு காட்டிவருகின்றனர். ஒட்டுமொத்தமாக எல்லோரது ஆலோசனைகளையும் கேட்டறிந்து இவர்களின் முடிவின்படி பின்வரும் முன்மொழிவுகளை டாக்டர் இந்திரன் பார்வைக்கு அனுப்ப உள்ளனர்.


1) இங்குள்ள பாலர் கல்விநிலையம் 1965 ஆம் ஆண்டில் இருந்து நிரந்தர இடமில்லாது மூன்று தற்காலிக இடங்களில் நடைபெற்று வந்துள்ளது. உசன் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற முன்பள்ளியும் தற்போது மூடப்பட்டுள்ளது. அமைதியான சூழலில் உள்ள இக்காணியில் ஓர் முன்பள்ளிக் கட்டடம் 40" X 20" அளவு கொண்டதாக அமைக்க வேண்டும். இக்கட்டடத்தின் அளவை டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம் அவர்கள் விரும்பினால் கூட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரிக்குட்டிச் சட்டம்பியார் குடும்பம்



டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இங்குள்ள படித்துவிட்டு வேலை இல்லாது இருக்கும் பிள்ளைகள் தொழிற் கல்வியைப் பெறக்கூடியதாக ஓர் தையல் நிலையமோ அல்லது கணனி நிலையத்தையோ அமைக்கக்கூடிய ஓர் கட்டடம் இதனுடன் இணைத்துக் கட்டுதல். அல்லது இங்குள்ள சங்கங்கள் தங்கள் பொதுக் கூட்டங்களை நடாத்த இங்கு ஓர் இடமில்லை. உசன் கிராம முன்னேற்றச் சங்க சிறு கட்டடமும் 8 ஆண்டுகளுக்கு மேல் பாவிக்க முடியாத ஓர் சூழ்நிலையில் இருந்து வருவதால் ஒரு பொதுக் கூட்டத்தை நடாத்தும் ஓர் மண்டபத்தை அமைத்தல். இதில் ஓர் பகுதியில் நூலகத்தையும் நடத்தலாம்.

இம்முன்மொழிவுகள் டாக்டர் இந்திரன் ஆசீர்வாதம் அவர்களின் அனுமதிக்கு அனுப்ப உள்ளனர். இவ்வேலைகளைச் செய்வித்துக் கொடுக்கும் திரு.வி.கனகலிங்கம் அவர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடுகளில் வசிக்கும் உசன் வாழ் மக்கள் இவ்வூரின் அபிவிருத்திப் பணிகளுக்குச் செய்யும் சேவைகள்

எல்லாவற்றுக்கும் அரச நிதியை எதிர்பார்த்திருக்காது மக்கள் தமது கிராம வளர்ச்சியைத் தாமே செய்ய வேண்டிய காலமிது. எமது கிராம மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இவர்களும் அங்கு பல இன்னல்கள் மத்தியிலும் கடும் உழைப்பாலேயே வாழ்க்கையை நடத்தி வருகின்றனர் என்பதை நாம் நன்கு அறிவோம். இதன் மத்தியிலும் இவர்கள் தனித்தும், கூட்டுச் சேர்ந்தும் உசன் மக்கள் வணங்கும் ஆலயங்களின் திருப்பணி வேலைகளுக்கும், உசன் பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கும், கிராம வீதிகளைப் புனர் அமைப்பதற்கும் நிதி உதவி அளித்து வருகின்றனர். கனடா நாட்டில் தான் இங்குள்ள பலர் வசிக்கின்றனர். இவர்கள் "உசன் ஒன்றியம்" என்னும் அமைப்பை ஏற்படுத்தக் கடந்த ஏழு வருடங்களாகப் பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது ஓர் சிறந்த செயற்பாடாகும். இவ்வாறு ஏனைய நாடுகளிலும் உள்ளவர்கள் ஒன்று கூடி இது போன்ற அமைப்புகளை ஏற்படுத்தலாம். கனடாவாழ் உசன் மக்கள் தமது நிதியைக் கொண்டு உசன் கெற்பெலி வீதியில் இருந்து திரு சி. தனபாலசிங்கம் அவர்கள் வீட்டின் சந்தியை அடையும் மண் தெருவை நவீனப் படுத்திக் கல்றோட்டாக மாற்றி உள்ளனர். இன்று விடத்தற்பளை, கெற்பெலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் மக்கள் இவ் வீதியாலேயே பயணம் செய்கின்றனர். கனடா நாட்டில் அமைக்கப்பட்டுள்ள உசன் ஒன்றியமும் ஏனைய நாடுகளில் வசிக்கும் ஊரவர்களும் இங்குள்ள ஆலயங்களின் புனர்நிர்மாண வேலைகளுக்கு உதவினார்கள். இன்று இங்குள்ள ஆலயங்கள் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன. இங்குள்ள பாடசாலையை நவீனப்படுத்தியுள்ளார்கள். இச் சேவைகள் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவை. பாராட்டப்பட வேண்டியவை.



எம் வெளியூர் உறவுகளுக்கு!

டாக்டர் கணேசரின் நற்செய்தி......

இம்முறையும் எம் கந்தனின் உற்சவம் இனிதே நிறைவேறிவிட்டது. ஆயிரம் ஆயிரம் மக்கள் கூடி இருந்து திருவிழா பார்த்தகாலம் மாறி இன்று பிற்பகல் 4 மணிக்குகெல்லலாம் திருவிழா முடிந்து வீட்டிற்குள்ளே நாமெல்லாம் முடங்கி விடுவோம். இங்குள்ள ஒரு சிலரால் மட்டும்தான் இவை நிறைவேற்றப்பட்டாலும், பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் உங்கள் ஆத்மபலமும், ஆதரவும், எம்மீதும் எம் கிராமத்தின் மீதும் இருப்பதால், எந்த இடர்களுக்கு மத்தியிலும். எம்மால் இவற்றை முன்னெடுத்துச் செல்லமுடிகிறது.

உங்களில் பலர் எமது கிராமத்தை விட்டுச் சென்று ஓரிரு தசாப்தங்கள் கடந்து விட்டன. உங்கள் வாரிசுகள் உங்கேயே ஜனனமாகி உவ்விட, மொழி பேசினாலும், எமது கிராமத்தையும் எமது மொழியையும் பழக்க வழக்கங்களையும் பாரம்பரியங்களையும் சொல்லிக் கொடுக்க தவறி இருக்க மாட்டீர்கள் என்றே நம்புகின்றோம். தவறி இருப்பின் அது ஒரு வரலாற்றுத் தவறாகும். எமது உசன் கிராம வழிகாட்டியாகத்தான் உசன் கிராம பரிணாம வளர்ச்சியைத் தன்னால் இயன்றளவு பிரதிபலிக்கப் பண்ணும் ஒரு கடினமான பணியில் இறங்கி அதில் வெற்றியும் கண்டுள்ளார் பேராசான் உயர் திரு.பேரம்பலம். அவரது விடாமுயற்சியும், எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமை என்பவற்றையும் நாம் எல்லோரும் அறிந்ததே. மேலும் இந்நூலை ஆக்குவதற்குரிய திறமை, அனுபவம், தகுதி ஆகிய மூன்றும் ஒருமித்து அவரிடம் காணப்பட்டமையே இந்நூலின் சுகப் பிரசவத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

"வாழ்கின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்ற ஆணித்தரமான கருத்தையே இந்நூலின் மூலம் எமது மக்களுக்கு வெளிக்கொண்டு வருகின்றார். சரித்திரம் என்பது மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகத்தின் சான்று. முற்காலத்தில் எத்தனை நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவை எல்லாம் சரித்திரமாவதில்லை. எந்தத் தியாகத்தில் பிரதிபலிப்பிருக்கின்றதோ அது மட்டும்தான் சரித்திரமாகின்றது.

அன்பான உறவுகளே இன்று வீடுகளும் கிராமங்களும், ஏன் நாடும்கூட வெளிநாட்டு உதவிகளிலேயே தங்கி இருக்கின்றன. நீங்கள் உங்கிருந்தாலும் எமது மக்கள், கிராமம், பாடசாலை, ஆலயங்கள் என்பன எத்துறை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் எவ்வளவு சிரத்தையாக இருக்கின்றீர்கள் என்பது நீங்கள் இதுவரை எமது கிராமத்துக்குச் செய்த அன்பளிப்புக்கள் சான்று பகருகின்றன. இங்கு மாணவர்கள் கணனிகளைத் தொட்டுப் பார்ப்பதற்கே பணம் செலுத்த வேண்டி உள்ள நிலையில், எல்லா மாணவர்களும் பயிலுவதற்கேற்ற வகையில் எமது பாடசாலையைக் கணனிமயமாக்கி உள்ளீர்கள். அத்துடன் கணனி அறைகள், வகுப்பறை ஒலிபெருக்கிகள், எறிகருவிகள், தொலைக்காட்சி, போட்டோப் பிரதி இயந்திரம், வகுப்பறை புத்தக அலுமாரிகள், மோட்டார்கள் இன்னும் எத்தனையோ எங்கு பார்த்தாலும் உங்கள் பெயர்கள் பொறிக்கப்பட்ட அன்பளிப்புக்கள் காட்சி அளிக்கின்றன. மேலும் கிராமத்து மண் தெருக்கள் எல்லாம் தார் வீதிகளாக மாற்றி இருக்கின்றீர்கள். இங்குள்ள மக்களின் வணக்கத் தலங்கள் எல்லாவற்றையும் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கச் செய்துள்ளீர்கள்.

உங்கள் கிராமத்தை, சிறப்பாக்கி அழகாக்கி இவற்றின் காட்சிகளை நேரில் பார்த்து இரசிக்க வேண்டும் என்ற உங்கள் சிந்தனையை இன்றைய சூழ்நிலை தடுக்கின்றது. என்றோ ஒருநாள் நிலைமை சீராகி உங்கள் கனவு, நனவாகி, கிராமம் புதுப்பொலிவு பெறும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

நீங்கள் இக்கிராமத்தின் அபிவிருத்திக்கு உதவும் உதவிகளைத் தனிப்பட அனுப்பாது ஒரு கட்டமைப்பு ரீதியாக வழங்கினால் நன்கு திட்டமிட்ட அபிவிருத்திக்கு வழிவகுப்பதுடன் தேவையற்ற விமர்சனங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். இக்கட்டமைப்பானது பின்வருமாறு அமையலாம் என யான் எண்ணுகின்றேன். இக்கிராமத்தில் நல்ல முறையில் இயங்கும் கிராம முன்னேற்றச் சங்கம், உசன் ஐக்கிய நாணய சங்கம்,இந்து இளைஞர் சங்கம், உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட உசன் கிராம அபிவிருத்தி நிறுவனம் ஒன்று அமைக்க வேண்டும். இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு அமையலாம்.

1) வெளிநாடுகளில் இருக்கும் எமது உறவுகளில் இருந்து நிதியைப் பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இக்கிராமத்தின் அபிவிருத்தி பற்றித் திட்டமிடல்.

3) திட்டமிட்ட அபிவிருத்தியையும் இதற்குரிய செலவு மதிப்பீட்டையும் முன்கூட்டியே உங்களுக்கு அனுப்பி வைத்து உங்களது அனுமதி பெறல்.

4) இத்திட்டங்களை நிறுவனமே செய்து முடித்தல்.

5) கணக்கறிக்கைகளை வெளியிடுதலும் உங்களின் அங்கீகாரத்தைப் பெறலும்.

இதே போல் நீங்களும் இரண்டு விதமான அமைப்புக்களை ஏற்படுத்தலாம்.

1) உசன் கிராம அபிவிருத்திக் குழு (ஓர் நிறுவனம்)

2) உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் அமைப்பு

இதில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் அனைவரையும் உள்வாங்க வேண்டும். குறிப்பாக இப்பாடசாலையில் கல்வி பயின்ற, அயற்கிராமத்தவரையும் இதில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்வமைப்பு பாடசாலையின் அபிவிருத்திக்குரிய வேலைகளின் விபரத்தையும், இதற்குரிய மதிப்புத் திட்டத்தையும் உசன் அபிவிருத்தி நிறுவனம் மூலம் பெற்றுக்கொள்ளும். இதற்குரிய அங்கீகாரம் உங்களிடமிருந்து கிடைத்ததும், இவ்வபிவிருத்தி வேலைகளை இந்நிறுவனம் நேரடியாகச் செய்து கணக்கறிக்கைகளை உங்களுக்கு அனுப்பி இதன் அங்கீகாரத்தையும் பெறும். இவ்விபரங்களை இரு பகுதியினரும் மக்கள் பார்வைக்கு வெளியிட வேண்டும். இங்குள்ள ஆலயங்களும், பாடசாலையும், தங்களது தேவைகளை உசன் அபிவிருத்தி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கலாம். நிறுவனம் இதை உங்களுக்குச் சமர்ப்பிக்கும்.

இவ்வாறு சீரான கட்டமைப்புக்களுடன் உசன் கிராம அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றால் நம்பகத்தன்மை எல்லோருக்கும் ஏற்படுமென எண்ணுகின்றேன். இது எனது அன்பான வேண்டுதலாகும்.

"வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் இவ்வரலாற்று நூல் மூலம் உங்களுடன் தொடர்புகொள்ள வைத்தமைக்கு நூலாசிரியர் திரு.க. பேரம்பலம் அவர்களுக்கும் இந்நூலை வாசிக்க இருக்கும் உங்களுக்கும் நன்றிகூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

வைத்திய கலாநிதி

ஐ.ஜெபநாமகணேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜகேணிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வீதி

உசன் கந்தசாமி கோவில் குருக்களாகிய பிரம்மஸ்ரீ கேதீஸ்வர சர்மா, மண்வீதியாக இருந்த இவ்வீதியை இங்குள்ள இளைஞர்களின் உதவியுடன் உசன் கந்தசாமி கோவிலிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட செங்கற்களை வாகனங்களில் கொண்டு சென்று கொட்டி அதன்மேல் களி, ஊரி என்பவற்றை இட்டு கற்தெருவாக மாற்றியுள்ளார். இதனால் இன்று வாகனங்களில் பிள்ளையார் கோவிலுக்கு இலகுவாகச் செல்லக்கூடியதாக இருக்கின்றது. குருக்கள் ஐயா அவர்களது சேவை பெரிதும் போற்றப்படவேண்டியதொன்றாகும்.

## உசன் கிராமத்திற்கு மின் விநியோகம் கிடைத்தமை

இவ்வூரைச் சேர்ந்த திரு. நாகராசா அவர்கள் வடபகுதி மின்சார சபையில் நிர்வாக உத்தியோகத்தவராகக் கடமையாற்றிய காலத்தில் அவரது பெரு முயற்சியால் உசன் கிராமத்திற்கு மின்சாரம் கிடைத்தது.

## உசன் கிராம வளர்ச்சியில் நினைவு கூறப்பட வேண்டியவர்கள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

– வள்ளுவர் நீதி –

எமது கிராமத்தில் உள்ள பலர் பலவாறு இக்கிராமத்துக்குத் தொண்டாற்றி உள்ளனர். ஆலயப் பணி, கல்விப் பணி, சமூகப் பணி, சமயப் பணி என்பவற்றில் நாட்டங் கொண்டு செயற்பட்டவர்களில் சிலரை நினைவு கூருவோமாக.

## அமரர் திரு.மு.சி.சிற்றம்பலம் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்

இவரது சேவைகள் இந்நூலின் பல இடங்களில் செறிந்திருப்பதைப் பார்க்கலாம். குறிப்பாகப் பாடசாலையின் வரலாற்றில் அதிபர்கள் சேவையில் இவரது சேவைகள் இருப்பதைப் பார்க்கலாம். உசன் கிராமத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்கவராக இருந்து வந்தவர். இவர் இக்கிராமத்தில் புகுந்த நாட்கள் தொடக்கம் அமரராகும் வரை உசன் கிராமத்தின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தவர். அதே நேரம் பிறந்த கிராமத்தின் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்தியவர். எமது பிரதேசத்தில் இவர் பெருமையை அறியாதவர் ஒருவருமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே கூறலாம். இவர் தென்மராட்சியில் கிழக்குப் பக்க ஊர் மக்களின் நல்மதிப்பைப் பெற்றவர். சமயாசாரப்படி வாழ்ந்து காட்டியவர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்


நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கணம் வகுத்தால் போல் வாழ்ந்து காட்டியவர். நாட்டுப் பற்றாளர். சோதிடவிற்பன்னராகவும், அளவையாளராகவும் இருந்து எவ்வித வேதனமும் பெறாது இச்சேவையைச் செய்தவர். 1964ம் ஆண்டு இவரின் சேவைநலன் பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவுக்கு அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர் கோவில் நாகதம்பிரானைத் தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தார். இவ்வாலயத்தின் வரலாற்றைச் சித்திரிக்கும் "கப்பல் திருவிழா" நிகழ்ச்சியை 50 ஆண்டுகளுக்கு மேல் நெறிப்படுத்தினார். இவ்வாண்டு இவரின் 103 வது பிறந்ததினமாகும். இவ்வூரில் வாழ்பவர்கள் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து வாழும் இவ்வூர் மக்கள் இவரது நினைவு தினத்தைக் கொண்டாட வேண்டுமென்ற வேண்டுதலையும் பணிவன்புடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

**சட்டத்தரணி ச.இராசரத்தினம், முன்னாள் உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர்**

இப்பெரியார் வி.வைத்திலிங்கம் அவர்களின் நெருங்கிய உறவினர். முன்னாள் உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலரும் அமரருமான திரு.இ.கனகரத்தினம் அவர்களின் மைத்துனர். சட்டத்தரணி பட்டம் பெற்றாலும் தனது சொந்தக் கடமைகள் காரணமாக சட்டத்தரணி தொழிலில் ஈடுபடவில்லை. இவர் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவாகவும், உசன் சைவத்தமிழ் கலவன் பாடசாலையின் உள்ளூர் முகாமையாளராகவும், மிருசுவில் கிராம சபைத் தலைவராகவும், உசன் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும் பல வருடங்கள் கடமையாற்றியவர். இவரின் நற்சேவைகளை இன்றும் இங்குள்ள மக்கள் பாராட்டுகின்றார்கள். இவரின் இச்சேவைகள் இந்நூலில் பல இடங்களில் வருவதைப் பார்க்கலாம். இவர் தலைமை ஆசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள் மேல் நல்ல மதிப்பை வைத்திருந்தார். இவரின் சேவையை நினைவு கூருவதற்காக இவரின் திருவுருவப் படம் உசன் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இருப்பதை யாவரும் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு க. வி. நடராசா

(சமாதான நீதவான்,

உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர்,

ஓய்வுபெற்ற புகையிரத நிலைய சிரேஷ்ட எழுதுநர்)

## ஆலய பணி

இவர் 1962ம் ஆண்டு உசன் கந்தசாமி கோயில் அறங்காவலராக ஏற்று 35 வருடங்கள் கடமையாற்றி உள்ளார். மிக எளிமையானவர். அடக்கமானவர் சிறந்த நிர்வாகி, செயல் வீரன் சைவசமய நூல்களைப் படிப்பதில் ஆர்வமுடையவர். சைவசமய ஆசாரத்தைக் கடைப்பிடிப்பவர். இவர் அறங்காவலராக இருந்த காலத்தில் ஆலயத் திருப்பணிகளை துரிதமாகச் செய்வித்தவர். இவ் விபரங்கள் இவரது தர்மகர்த்தா சேவை காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## கல்விப் பணி

இவர் உசன் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராக இருந்த போது பாடசாலையின் மேற்கு மண்டபம், வடக்கில் இருக்கும் அதிபர் காரியாலயத்துடன் இருக்கும் கட்டடம், தெற்கு மண்டபம் ஆகிய கட்டட வேலைகளை பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் உறுதியாகவும் மேலதிக வேலைகளைத் தனது பணத்திலும் கட்டி முடிப்பித்துக் கொடுத்தார். இப்பாடசாலையின் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் உடற்கல்விச் செயற்பாடுகளுக்காக உசன் கந்தசுவாமி கோயில் காணியில் இருந்து ஒன்றேமுக்கால் பரப்பை அன்பளிப்புச் செய்தார்.

## சமூகப் பணி

உசன் கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராக 30 ஆண்டுகள் வரை கடமையாற்றி பல நலன் திட்டங்களை செயற்படுத்தினார். கிராமமுன்னேற்ற சங்கக் கட்டடத்தை நவீன மயமாக்கி நூலகத்தையும் இங்கு ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தை தாபித்து நவீன முறையில் கரப்பந்தாட்ட மைதானத்தையும் தாபித்தார். இவ்வூரில் உள்ள சிறு பிணக்குகளை சமாதான சபை மூலம் தீர்த்து வைப்பதற்குரிய நடைமுறையை ஏற்படுத்தினார். இவரின் பெருமை பற்றி துர்க்காதுரந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள், இவர் அமரராகிய 31ம் நாள் இவ்வூர் மக்கள் வெளியிட்ட நினைவஞ்சலி சிறப்பு மலரில் (08.09.1996) "மனிதரில் மாணிக்கம்" என்ற தலைப்பில் பின்வருமாறு கூறியுள்ளார்.

உசன்பதியை அலங்கரித்த உத்தமர் நடராசா ஜே.பி. அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை என்று நினைக்க முடியாமல் இருக்கின்றது. கொள்கையால் பெரியவர், குணத்தால் பெரியவர், பக்தியால் பெரியவர், பண்பாட்டால் பெரியவர், கொடையால் பெரியவர், கோடீஸ்வரர். ஆனால் இத்தனைக்கும் தன்னைக் காட்டிக்கொள்ள மாட்டார். எங்கள் மகளிர் இல்லப் பிள்ளைகளையும், பணியாளர்களையும் இருகரம் நீட்டித்தன் மாளிகையிலேயே ஆறுமாதங்கள் தங்கியிருக்க வழிகாட்டிய தந்தை இவர். 60 பேர் கொண்ட எமது இல்ல உறுப்பினர் மிக மிக அமைதியாகவும், ஆனந்தமாகவும் உசன் கந்தனை நாளும் வழிபட்டுக் கொண்டு காலத்தைக் கழித்தனர். இதற்கெல்லாம் பேருதவி புரிந்த இப் பெருந்தகையை என்றென்றும் எமது இதயத்தலிருத்தி பூசிப்பது ஒன்றே எமது கடமையாகும்.

### வைத்திய கலாநிதி க. மாணிக்கம் ஓய்வுபெற்ற சுகாதாரப் பணிப்பாளர்

சைவாசாரப்படி வாழ்ந்த திருவாளர் தா. கந்தையா அவர்களின் புதல்வர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர். தலைமை ஆசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்களைக் குருவாக மதிப்பவர். குருபக்தியும், இறைபக்தியும் கொண்டவர். உசன் கந்தசுவாமி கோவில் தாபகர். திரு.வி.வைத்திலிங்கம் அவர்களின் நெருங்கிய உறவினர். இவர் வைத்தியக் கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கையின் பல பகுதியிலும் உயர் பதவி வகித்தவர். இதனால் எமது கிராமத்துக்குப் பெருமை தேடித் தந்தவர். இவர் ஓய்வு பெற்றபின்பே உசன் கிராமத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார். இடப்பெயர்வுகளின் போதும் தமது வீட்டிலேயே வாழ்ந்தவர். இவர் பகவத் கீதை நூலை நன்கறிந்து அதன்படி வாழ்ந்து வருபவர். மிக அமைதியானவர். தான் செய்த நற்கருமங்களை பிறர் அறிவதை விரும்பாதவர். இறைவழிபாடுடையவர். இவர் தனது நற்கருமங்களை ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் நிறைவாகச் செய்துள்ளார். இச்சேவைகள் இந்நூலின் ஆலயங்கள், பாடசாலை வரலாறுகளில் வருவதை யாவரும் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. கு. விமலதாஸ். சாவகச்சேரி நீதிமன்ற சிரேஷ்ட எழுதுநர், உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா**

இவர் உசன் முருகன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்த க.வி.நடராசா அவர்களின் மருமகன். இவரின் சேவை நயப்புக்கள் வருகின்ற உசன் கந்தசுவாமி கோவில் வரலாற்றில் விபரமாக இருக்கின்றது. இவர் ஆலய தர்மகர்த்தாவாக கடமையாற்றிவரும் காலம் மிகச் சிக்கல் நிறைந்த காலம். இருந்தும் இவரது நிர்வாகத் திறமை காரணமாக யாவரினதும் ஒற்றுமையையும் பெற்று ஆலயத்தைச் சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றார். ஆலய வளர்ச்சியில் இவர் காலம் சிறப்புமிக்கதாக உள்ளது. இவர் இவ்வூரில் உள்ள ஏனைய ஆலயங்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகின்றார். இவர் இங்குள்ள பாடசாலைக்கும் அமரர் க.வி.நடராசா அவர்கள் செய்த பணியைத் தாமும் செய்து வருகின்றார். உசன் கந்தசுவாமி கோவில் பூஜை வழிபாடுகள் இக்கட்டான சூழ்நிலையிலும் நடைபெற்று வருவது இவரது நிர்வாகத் திறமையை எடுத்தக் காட்டுவதாக அமைகின்றது.

**திரு த. நல்லதம்பி**

திரு மு. சி. சிற்றம்பலம் அவர்களைக் குருவாக மதித்தவர். உசன் சைவ வித்தியாலயத்தின் பழைய மாணவர் சைவ நெறிகளின் படி ஒழுகியவர். சைவ சமயப் பெரியார்களைப் பற்றி நன்கறிந்தவர். ஒழுக்க சீலர் இவ்வூரைச் சேர்ந்த திருவாளர்கள் த. வைத்திலிங்கம் (தபாற்காரர்) த. சரவணமுத்து (உசன் சைவவித்தியாசாலை ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் சகோதரர். சைவ சமயப் பிரசங்கி. இவர் இங்குள்ள இளைஞர்களை ஒன்று திரட்டி உசன் வாலிபர் சங்கத்தைத் தாபித்தவர். அத்துடன் இவர்கள் மூலம் உசன் கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளைச் செய்தவர். உசன் மதுவிலக்குச் சங்கத்தைத் தாபித்தவர் இவரே. இவருடன் திருவாளர்கள் சி. கணபதிப்பிள்ளை ஆ. பொன்னுத்துரை ஆகியோரும் இணைந்து செயற்பட்டனர். இவர் பின்பு தன் தொழில் காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு அங்கும் காந்தியம் என்ற அமைப்பைப் பல கிராமங்களில் நிறுவி பல நலத்திட்டங்களைச் செயற்படுத்தினார். இன்றும் கிளிநொச்சியில் இவரது திருவுருவப் படங்களை சில நிறுவனங்களில் காணலாம்.இவர் வவுனியா மாவட்டத்தில் வேலை செய்த காலத்தில் வவுனியா அரசாங்க அதிபர்களுடன் இணைந்து "சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தை" நகரின் மத்தியில் அமைத்துச் சமய சமூகப் பணிகளைச் செய்து வந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு.பெ.பொன்னம்பலம் ஓய்வு பெற்ற ஓவசியர்

இவர் இவ்வூரைச் சேர்ந்தவர். பலகாலம் தமது உத்தியோகம் காரணமாக வெளி இடங்களில் வேலை செய்தவர். பிற்காலத்தில் பளை தொடக்கம் சாவகச்சேரி வரை பெருந்தெருக்களின் பராமரிப்புப் பொறுப்பை ஏற்று நடத்தியவர். அத்துடன் உள்ளூர் பெருந்தெருக்களையும் பராமரித்தவர். ஊர்ப்பற்று நிறைந்தவர். பொதுப்பணிக்கு மனம் கோணாது உதவியவர். உசன் கந்தசுவாமி கோவில் பற்று நிறைந்தவர். உசன் 11ஆம் வட்டாரத்திற்கு அங்கத்தவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர். இவர் இக்காலப் பகுதியில் இவ்வூரின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டவர். உசன் ஐக்கிய நாணய சங்க ஆரம்ப அங்கத்தவர்.

### திரு ஐ. கார்த்திகேசு

இவர் ஆசிரியத் தொழில் புரிந்தவர். கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொடிகாமத்தைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் திரு. ஐ. முருகேசு அவர்களின் சகோதரர். இவர் உசன் கிராமத்தில் வசித்த காலத்தில் திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்களுடன் சேர்ந்து உசன் கிராம முன்னேற்ற சங்கத்தைத் தாபித்தார். முதல் செயலாளராகத் துடிப்புடன் செயற்பட்டார். பல எதிர்ப்புகள் மத்தியில் இங்குள்ள சிலருடன் சேர்ந்து உசன் வீதியினைக் கெற்பெலி வீதியுடன் இணைத்தார். இது இக்கிராமத்தின் வரலாற்றுச் சாதனை என்றே கூறலாம். இவர் மிருசுவில், உசன் 11ஆம் வட்டாரத்துக்கு கிராம சபை அங்கத்தவராக இருந்தவர்.

### திரு. த. சி. றிச்சேட் ஓய்வு பெற்ற மேற்பார்வை உத்தியோகத்தர்

இவர் ஆங்கிலத் துரைமாரின் கீழ் தேயிலைத் தோட்டத்தில் மேற்பார்வை உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். திரு. மு. சி.சிற்றம்பலம் அவர்களின் பின் உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராக 15 ஆண்டுகள் வரை கடமையாற்றினார். கண்ணியமானவர். அளவறிந்து அன்பாகப் பேசுபவர். கூட்டங்கள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாக வேண்டுமென்பதில் கண்டிப்பாக இருந்தவர். கூட்டங்களை நெறிப்படுத்தி நடாத்துவதில் வல்லவர். பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதிலும் வல்லவர். இவர் உசன் கிராம முன்னேற்றச் சங்கத்திலும் உபதலைவராக இருந்து கடமையாற்றியவர். திரு. மு. சிற்றம்பலம் அவர்கள்கூட இப் பெரியாரிடம் ஆலோசனைகளைப் பெற்று வந்தார் என்பது இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்கும் சிறப்புக்கும் சான்று.

### திரு.ஆ.சிதம்பரப்பிள்ளை (மூத்தார்)

இவர் நிலபுலச் சொந்தக்காரர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் உறவினர். சிறந்த விவசாயி. சைவப் பாரம்பரியங்களின்படி வாழ்ந்தவர். உசன் கிராம முன்னேற்றச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் ஆரம்ப கால செயற்குழு உறுப்பினர். உசன் பஞ்சாய சபையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றியவர். கிராம அபிவிருத்திக்கும் குறிப்பாகப் பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவி வழங்கியவர்.

### திரு. ம. இராசகாரியர்

கண்ணியம், கடமை, கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தவர். இவர் உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர். இச்சங்கத்தில் 15 வருடங்களுக்கு மேல் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயற்பட்டவர். இவை தவிர இங்குள்ள அபிவிருத்திச் சங்கங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்து அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டவர். உசன் ஐக்கிய நாணய சங்க பொன்விழாவில் இவரைக் கௌரவித்து உசன் ஐக்கிய நாணய சங்கம் பெருமை சேர்த்துக் கொண்டது.

### திரு. நா. சிவசுப்பிரமணியம்

உசன் இராமநாதன் மகாவித்தியாலயப் பழைய மாணவர். மேல் கல்வியினைத் தொடராது தமது குடும்பத்தை உயர்த்தும் நோக்குடன் வர்த்தகத்தில் ஈடுபட்டவர். இவர் தனது பெரு முயற்சியால் முன்னுக்கு வந்தவர். கொடிகாமத்தில் மணியம் களஞ்சியம் என்ற வர்த்தக நிலையத்தை ஏற்படுத்தி யாழ் மாவட்ட முன்னணி வர்த்தக உரிமையாளரில் ஒருவராகத் திகழ்ந்தவர். இவர் ஊர்ப்பற்று நிறைந்தவர். உசன் கந்தசுவாமி கோவிலையும் தான் கற்ற உசன் இராமநாதன் மகாவித்தியாலத்தையும் பக்தி சிரத்தையுடன் நேசித்தவர். இவற்றின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவர். மற்றும் இங்குள்ள ஏனைய ஆலயங்களுக்கும் அயற்கிராமத்திலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் யாவற்றுக்கு நிதி உதவி செய்தவர். இவர் எம்மை விட்டுப் பிரிந்தமை எமக்கு மட்டுமல்ல தென்மராட்சிக்கே பெரும் இழப்பாகும். இவர் இல்லா விட்டாலும் இவரது பிள்ளைகள் தந்தையின் கடமைகளை செய்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு ச. போரம்பலம் (சங்கீத பூசணம்)

இவருடைய மூதாதையர் மன்னங்குறிச்சியில் வசித்தவர்கள். இவர் இந்தியா அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்று சங்கீதபூசணம் பட்டம் பெற்றவர். சிறுவயதில் இருந்து சமய அறிவுடன் புராணபடனம் செய்வதிலும் திருமுறைகளை பண்ணுடனும் பக்தியுடனும் அட்சரப்பிழையின்றி ஓதுவதிலும் வல்லவர். இறை பக்தி நிறைந்தவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலத்தில் 20 வருடங்கள் வரை சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றியவர். இதன் மூலம் பல சங்கீத ஆசிரியர்களை உருவாக்கியவர். எல்லோருக்கும் இனியவர். பிரசங்கி உசன் கந்தசுவாமி கோவிலில் பக்தி சிரத்தைகொண்டு 40 வருடங்கள் வரை ஓதுவாராகவும் புராணபடனம் செய்பவராகவும் செயலாற்றியவர். கஜகேணிப் பிள்ளையாருக்கும், மன்னங்குறிச்சிக் கந்தசுவாமி கோவிலுக்கும், நாவலடி துர்க்கை அம்மன் கோவிலுக்கும் ஓதுவராக இருந்து சமயப்பணியாற்றியவர். குறிப்பாக உசன் வாழ்மக்களின் இல்லங்களில் நடைபெறும் அபரக்கிரியைகளில் தவறாது பங்குபற்றித் திருமுறைகளை ஓதுபவர். இவரின் மரணச் சடங்கு கொழும்பில் நடைபெற்றதால் இங்குள்ள மக்கள் கலந்து கொள்ள முடியாமற் போனது இங்குள்ளவர்களுக்கு இன்றும் மனவேதனையைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. அவர் ஆற்றிய சைவப் பணிக்கு ஓர் இரங்கல் நிகழ்ச்சி நாட்டின் சீரற்ற நிலை காரணமாக நடத்த முடியாமை துரதிஸ்டமே.

### திரு அ.வேலுப்பிள்ளை

இவ்வூரின் சிறந்த விவசாயி என்று கூறப்படும் அருணாசலம் அவர்களின் (அருணர்) பிள்ளைகளில் ஒருவர். இங்குள்ள எல்லோரும் அருணற்றை வேலுப்பிள்ளை என அன்பாக அழைப்பர். இவரும் தந்தையைப் போலச் சிறந்த விவசாயி. இவர் ஈச்சங்காட்டில் உள்ள தோட்டத்தில் தான் தனது நேரத்தைச் செலவு செய்வார். மிக அமைதியாக வாழ்ந்தவர். இல்லற வாழ்வை வெறுத்துத் துறவற வாழ்வில் வாழ்ந்தவர். திருவாளர் மு. சி. சிற்றம்பலம், க. வி. நடராசா ஆகியோருடன் நெருக்கமாகப் பழகுபவர். உசன் ஐக்கிய நாணய சங்க ஆரம்பகால உறுப்பினர். பொதுத் தொண்டிற்கு தாராளமாக உதவியவர். தான் செய்யும் நற்கருமங்களைப் பிறருக்குக் கூறாதவர். நாம் எல்லோரும் ஆலயங்களுக்குச் சென்று வணங்கி ஆண்டவன் அருள் பெறுகின்றோம். திரு. வேலுப்பிள்ளை அவர்கள் இவ்வகையில் நாட்டம் கொள்ளாது இங்குள்ள ஆலயங்களுக்கு முன்பாகவும் வீதி தோறும் நிழல் கொடுக்கும் விருட்சங்களின் கன்றுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நடமாட்டம் குறைந்த நேரங்களில் நட்டு அவற்றுக்குப் பாதுகாப்பான அடைப்புக்களையும் எற்படுத்தி அவற்றுக்குரிய நீரையும் ஊற்றிப் பராமரித்து வந்தார். இவற்றிற்காக நாள் தோறும் பலமணி நேரங்களைச் செலவு செய்தார். இன்று உசன் கந்த சுவாமி கோவில், கஜகேணி பிள்ளையார், வீரபத்திரர் கோவில் ஆகியவற்றின் முகப்பிலும் வீதிகளிலும் காணப்படும் பெரும் விருட்சங்கள் யாவற்றையும் இவரே வளர்த்து உருவாக்கினார். இதைச் சரியைத் தொண்டில் மேலான தொண்டாக நாயன்மார்கள் கூறுகின்றனர்.

### திரு. சி. இரங்கநாதன்

தொழில் காரணமாக இவர் வெளியூர்களில் நின்றவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயப் பழைய மாணவர். இப்பாடசாலையில் பற்றுக் கொண்டவர். 1991 1992ம் ஆண்டுகளில் இவ்வூர் சங்கங்களின் நிர்வாகியாக இருந்து செயற்பட்டவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்தியவர். மைதானம் முழுவதற்கும் இளைஞரது ஒத்தாசையுடன் பலநாள்கள் ஈடுபட்டு புல்பதித்தவர். இதற்காகத் தனது வாகனத்தையும், பொருளுதவியையும் செய்தவர். மற்றும் பாடசாலையின் நூலக வளர்ச்சிக்கும் பெரும்பணியாற்றியவர். இவருடன் சேர்ந்து திருவளர்கள் பிரபாகரன், கு.மகேந்திரன், து.சொரூபன் என்பவர்கள் செயற்பட்டனர்.

### திரு. க. சிவானந்தன் அஞ்சல் திணைக்கள உபஅதிபர்

இவர் இளம் வயதில் இருந்து ஊர்ப்பற்றை வளர்த்துக் கொண்டவர். எடுத்த கருமத்தை நிறைவேற்றும் வரை ஓயமாட்டார். யாவரது நன்மதிப்பையும் பெற்றவர். பேச்சாற்றல் மிக்கவர். தான் படித்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கு ஓர் திறந்த வெளி அரங்கு இல்லாத பெரும் குறையைப் போக்க எண்ணித் தன்னுடன் டாக்டர் ஐ. ஜெபநாபகணேசன், வெ.கருணானந்தன் அவர்களையும் சேர்த்து நிதி சேகரிக்கும் பல முறைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றித் திறப்பு விழாவையும் வெகு விமரிசையாக நடத்தி முடித்தவர். பாடசாலையின் வரலாற்றில் இவரது சாதனை பலராலும் போற்றப்பட்டது. இவர் 1991ம் ஆண்டு உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்த காலத்தில் பாடசாலை அபிவிருத்தி வேலைகள் பலவற்றைச் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணகர்த்தாவாக இருந்தார். குறிப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களை உரிய காலங்களில் கூட்டி, செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்தார். நிதி முகாமைத்துவ அறிக்கைகளைத் தனாதிகாரியுடன் சேர்ந்து அடிக்கடி சங்க அங்கத்தவர் பார்வைக்குக் கொடுத்து வந்தார்.

மிருசுவில் பிரதேச சபை நூலகத்தை உசன் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் இயங்கச் செய்து இந்நூலகச் சங்கத்தின் தலைவர் பொறுப்பையும் ஏற்று நூலகத்தை அபிவிருத்தி செய்தார். இச்சபையின் செயற்பாடாக மாதமொரு முறை கருத்தரங்குகளை ஏற்படுத்தி ஆர்வலரின் விருப்பத்தை நிறைவு செய்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து பல்துறைசார் அறிஞர்களை இக்கருத்தரங்கில் பங்குபற்றச் செய்தார்.

**திரு. கு. கமலதாஸ்**

ஊர்ப்பற்றும், தமிழ்ப்பற்றும், சமூக சேவை ஆர்வமும் உடையவர். இக்கிராமத்தின் வளர்ச்சியில் 1965 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை பாடுபட்டு வருபவர். இவர் 40 வருடங்களுக்கு மேலாக இங்குள்ள அபிவிருத்திச் சங்கங்களில் அங்கம் வகித்து இக்கிராமத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். சிறந்த வாசகர். நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுபவர். உசன் இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர்.

**டாக்டர் ஐ. ஜெபநாமகணேசன்**

**திரு வே. அருணாசலம் ( உரிமையாளர் அருள்புடவை அகம் )**

இவர்கள் இருவரும் இங்குள்ள ஆலயங்கள் பாடசாலை, கிராமம் ஆகியவற்றின் அபிவிருத்தித் தொண்டுகளில் தாமாக வந்து ஈடுபடுபவர்கள். தமது செயற்பாடுகளை மற்றவர்கள் அறிந்து புகழ்வதை விரும்பாதவர்கள். உசன் கந்தசுவாமி கோவில் முன்னாள் தர்மகர்த்தா திரு க. வி. நடராசா அவர்கள் அமரரான 31ம் நாள் நினைவு மலரை வெளியிட வேண்டுமென விரும்பியவர்கள் பலர். அவர்களுள் முன்னணியில் நின்று செயற்பட்டவர்கள் இவர்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இவ்வாறே உசன் கந்தசுவாமி கோவில் 1999 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரை வெளியிட உதவியவர்களில் இவர்கள் முன்னணி வகித்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஒப்பிலாமணி ஓய்வு பெற்ற சிரேஷ்ட எழுதுநர்**

இவர் உசன் இராமநாத மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளராகப் பலவருடங்கள் கடமையாற்றியவர். கிராம வளர்ச்சிக்கு அக்கறையோடு பணி செய்தவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

**திரு.தா.செல்வரத்தினம்**

உசன் சங்கக் கடையின் உரிமையாளர். நிலபுல சொந்தக்காரர். சிறந்த தென்னந்தோட்டப் பராமரிப்பாளர். ஊர்ப்பற்றும், இங்குள்ள ஆலயங்களின் மேல் பக்தியும் உடையவர். ஊர் மக்களுடன் அன்பாகப் பழகுபவர். உசன் கிராம முன்னேற்றச் சங்கத்தில் பலகாலம் தனாதிகாரியாகக் கடமையாற்றியவர். உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்.

**திரு. தி. வல்லிபுரம் ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்**

இவர் தமது அரச சேவையை பல ஆண்டுகள் வெளிமாவட்டத்தில் ஆற்றி, பின்பு இடமாற்றம் பெற்று இங்கு கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஊர்பற்று, மண்பற்று நிறைந்தவர். ஆலயத் தொண்டில் ஈடுபாடு காட்டுபவர். அமைதியானவர். ஊரில் உள்ள அபிவிருத்திச் சங்கங்களிலும் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றார். உசன் ஐக்கிய நாணய சங்கச் செயலாளர். உசன் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றி வருபவர்.

**திரு. ஸ்ரீ. இராமநாதன் ஓய்வுபெற்ற அரச உப்பளத்தின் முகாமையாளர்**

இவர் இக்கிராமத்தின் அபிவிருத்திச் சபைகளில் அங்கம் வகித்து வருகின்றார். குறிப்பாக உசன் இந்து இளைஞர் மன்றத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். இம்மன்றத்தைப் பதிவு செய்வதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர். மிருசுவில் வைத்திய நிலையத்தின் அபிவிருத்திச் சபையில் முக்கிய பதவிகளில் இருந்து பணியாற்றியவர்.

**திரு. க. திருநாவுக்கரசு பரந்தன் கெமிக்கல் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்**

இவர் இவ்வூரின் வளர்ச்சியில் ஈடுபாடு காட்டுபவர். மிக அமைதியானவர். சமயப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர். ஆலயப் பணியில் ஈடுபாடு உடையவர். உசன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக ஒன்பது ஆண்டுகள் வரை கடமையாற்றிப் பாடசாலையின் அபிவிருத்தியில் பெரும்பங்காற்றியவர். உசன் கந்தசுவாமி கோவிலில் ஓதுவார்கள், புராணபடனம் செய்பவர்களில் இவரும் ஒருவர். உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் உப தலைவராகக் கடமையாற்றி வருகின்றார். உசன் கூட்டுறவு கிளையின் செயலாளர்.

**திரு.ச.செல்லத்துரை ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

ஆலயத் தொண்டில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்றார். அசாதாரண சூழ்நிலையிலும் இவ்வூரில் இருந்து தொண்டாற்றி வருபவர். இவ்வூரில் உள்ள அபிவிருத்திச்சபைகளில் உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் துரித அபிவிருத்திக் குழுவின் தற்போதைய செயலாளர். உசன் கூட்டுறவுக் கிளையின் தனாதிகாரி, பொதுச்சபை அங்கத்தவர்.

**திரு. வே. கார்த்திகேசு ஓய்வு பெற்ற சிரேஷ்ட எழுதுநர்**

இவர் மீசாலையைச் சேர்ந்தவர். இவ்வூரில் புகுந்தவர். இவ்வூர் அபிவிருத்திச் சபைகளில் அங்கம் வகித்தவர். உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் உபதலைவராக கடமையாற்றியவர். பாடசாலை அபிவிருத்திச் சபையில் நிர்வாக சபை உறுப்பினராக பலகாலம் இருந்து நல்ல பல ஆலோசனைகளை வழங்கி பாடசாலையின் அபிவிருத்திக்குப் பாடுபட்டவர்.

**திரு.சு.பாஸ்கரன்**

இவர் இங்குள்ள மன்றங்கள், அபிவிருத்திச் சங்கங்களின் முக்கிய பதவிகளில் இருந்து கடமையாற்றியவர். குறிப்பாக உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் தனாதிகாரியாகப் பலகாலம் கடமையாற்றியவர். உசன் ஐக்கிய நாணய சங்கப் பொன் விழா சிறப்புற நடைபெற முன்னின்று பாடுபட்டவர். ஆலயத் தொண்டுகளிலும் தாமாக வந்து பணியாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. இ. சுப்பிரமணியம், (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)**

**திரு. க. செல்வரத்தினம் ( ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

இவர்கள் இருவரும் வெளியூரில் கடமையாற்றினாலும் இவ்வூரின் அபிவிருத்திக்கு தங்களது பங்களிப்பைத் தாராளமாக வழங்கி வந்தவர்கள். ஊரின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர்கள்.

**பழம் பெரும் குடியினர்........**

**திருமதி பங்கசம் அம்மா**

உசன் கந்தசுவாமி கோவிலின் முகப்பில் உள்ள விசாலமான காணியில் சிற்ப வேலைப்பாடுடைய பெரிய வீட்டில் வசித்தவர். இவரும் இப்பகுதியில் நிலபுலச் சொந்தக்காரர். தர்மசிந்தனை உடையவர். வயற்கரைக் கந்தசுவாமி கோவிலுக்கு இவரது பரம்பரையினரே தர்மகர்த்தாக்களாக இருந்து வந்துள்ளனர். இவரது மூதாதையர் நாவலர் பெருமான் நடாத்திய கஞ்சித் தொட்டித் தருமத்திற்கு நெல்மூட்டைகளை வாரி வழங்கியவர்கள்.

**திருமதி சிவஞானம் சிவசுப்பிரமணியம்**

இவர் உசன் கந்தசுவாமி கோவில் முன்னாள் தருமகர்த்தா திரு. இராமநாதன் அவர்களின் இரண்டாவது மகளாவார். இவர் கணவர் கணக்காளர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுடன் கொழும்பில் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவர். தமது தென்னந் தோட்டங்களை நிர்வகிப்பதற்காகப் பிற்காலத்தில் தமது மகன் திரு. சி. தயானந்தனுடன் (பபி) தந்தையாருடைய வீட்டில் வசித்தவர். திரு. சி. தயானந்தன் அவர்கள் அரச தொழிலில் நாட்டங்கொள்ளாது, தமது தென்னந் தோட்டங்களை விவசாய விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்து நல்ல வருவாயைப் பெற்று வந்தவர். மிக அமைதியாக வாழ்ந்து கொண்டிருப்பவர்.

**திரு. இராசக்கோன்**

திரு.இராசக்கோன் இவ்வூரைச் சேர்ந்தவர். சுதேச வைத்தியர். இவரது பாரியார் கெருடாவில் கந்தசுவாமி கோவிலடியைச் சேர்ந்தவர். இவ்வாலயத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். இவர்கள் இருவரும் உசன் முருகனையும் கெருடாவில் கந்தனையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தற்பளைச் சம்பாவெளிப் பிள்ளையாரையும் குலதெய்வங்களாகக் கருதி பக்தி சிரத்தையோடு வழிபட்டு வந்தவர்கள். கெருடாவிலைச் சேர்ந்த இவரது பெறா மகன் திரு.நடராசா அவர்கள் அரச பாற்சபையில் முதுநிலை உத்தியோகத்தராக இருந்தபடியால் இங்குள்ள பிள்ளைகளின் போஷாக்கை விருத்திசெய்யும் பொருட்டு இலவச பால் வழங்கும் செயற்பாட்டை திருமதி இராசக்கோன் அம்மா உசன் கந்தசுவாமி கோவில் ஆரம்ப தர்மகர்தாவின் வீட்டில் நடாத்தி வந்தார்.

### சேமன் வேலுப்பிள்ளை

இவர் மிருசுவில் கிராமசபை தலைவராக இருந்தவர். உசனில் நிலபுல சொந்தக்காரராக இருந்தவர். பங்கசம்மாவின் நெருங்கிய உறவினர். புதுக்குளத்து கண்ணகை அம்மன் கோவிலின் தர்மகர்த்தா. இவரின் பரம்பரையினரே தொடர்ந்தும் இக்கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்து வருகின்றனர். இன்று இவரின் சந்ததியனரான திரு.ந.நவக்குமார் அறங்காவலராக இருந்து வருகிறார். இவர் இந்துப்போட் இராசரத்தினம் அவர்களின் பேத்தியை விவாகம் செய்துள்ளார்.

### டாக்கர் ஏ. பி. ரி. துரை

டாக்கர் ஏ.பி.ரி.துரை கல்வி அதிகாரி ஏ.பி.ரி.சின்னக்கோன், திரு.ஏ.பி.ரிபொன்னுக்கோன் ஏ.பி.ரி.இராசையா ஆகியோர் சகோதரர்கள். இவர்கள் கல்விமான்களாகவும், நிலபுலச் சொந்தக்காரர்களாகவும் இருந்தனர். இவர்களில் திரு.இராசையா அவர்கள் திரு.சி.சாம் அவர்களின் தந்தையார். கல்விமானாக இருந்தாலும் தமது நிலங்களைப் பார்ப்பதற்காக அரச தொழிலில் ஈடுபடவில்லை. சகோதரர்களின் தென்னந்தோட்டங்களையும், வயல் நிலங்களையும் பராமரித்து வந்தார். வைத்திய கலாநிதி துரை அவர்கள் தமது தொழில் காரணமாக இங்கு வசிப்பது குறைவாக இருந்தது. இவரது மகள் பேராசிரியர் திருமதி. சின்னத்தம்பி ஆவார். துரை அவர்கள் தமது உசன் காணி 50 பரப்பிலே தமது தேவைக்காகப் 10 பரப்பை வைத்துக்கொண்டு மிகுதி 40 பரப்பையும் வீடு கட்டக் காணியில்லாத உசன் மக்கள் எண்மருக்குத் தலா ஐந்து பரப்பு வீதம் மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்த தருமவான். அவர் தமது காணியில் கட்டிய மேல் வீடு உசன் மணியம் மில்லின் எதிர்ப்பக்கத்தில் இருக்கின்றது. இவரின் சகோதரர் திரு.சின்னக்கோன் வடமாநில உடற்கல்வி அதிகாரியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றியவர். மிக உயரமானவர். கவர்ச்சியானவர். ஆங்கில அறிவாற்றல் மிக்கவர். தலைமையாசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள் காலத்தில் உசன் பாடசாலைக்கு அடிக்கடி மேற்பார்வைக்காக வருபவர். இப்பாடசாலையில் பற்றுறுதி கொண்டவர். திரு.ஏ.ரி.பொன்னுக்கோன் மிருசுவில் புகையிரதநிலையத்திற்கண்மையில் வசித்தவர். மனைவியார் கச்சாய் அரசினர் வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்தவர். இவர் இனுவில் வைத்தியசாலையில் நிர்வாக அதிகாரியாக இருந்தவர். பிற்காலத்தில் மிருசுவில் கிராம சபையில் தலைவராக இருந்தவர். இச்சபையின் வட்டாரங்களை எதுவித பாகுபாடும் காட்டாமல் அபிவிருத்தி செய்தவர். மிகநேர்மையானவர். அத்தோடு கண்டிப்பானவர். தர்மவான். டாக்டர் துரை, திரு.பொன்னுக்கோன் தங்கள் காணிகளில் சிலவற்றை வசதி குறைந்தவர்களுக்கு ஈந்த வள்ளல்கள். இவர்கள் நால்வரும் கிறிஸ்தவர்கள் உசன் கிறிஸ்தவ தேவாலயத்தைத் தமது வணக்கத் தேவாலயமாகக் கொண்டவர்கள்.

## இக்கிராமத்தில் இருந்த கல்வி அதிகாரிகள், அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் விபரம்

### திரு.வி.கே. நாதன் வடமாநிலக் கல்வி அதிபதி

இவர் உசன் பெரியதம்பி அவர்களின் சகோதரர். ஓவசியர் திரு.பெ.பொன்னம்பலம், அதிபர்.வி.பெ.செல்லத்துரை ஆகியோரின் சிறிய தந்தை. இவர் கல்வி அதிபதியாக இருந்த காலத்தில் தான் உசனைச் சேர்ந்த திரு.ஏ.பி.ரி. சின்னக்கோன் அவர்கள் வடமாநில உடற்கல்வி அதிகாரியாக இருந்தார். இவர்கள் சமகாலத்தில் இப்பதவிகளில் இருந்த காரணத்தால் உசன் கிராமம் பெருமை அடைந்தது.

### திரு. யோ. யோன்பிள்ளை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.

மிக அமைதியானவர். அடக்கமானவர். கல்விமான். பட்டிமன்றங்களுக்குத் தலைமை தாங்குபவர். இவர் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியராக, உப அதிபராக 18 வருடங்கள் வரை சேவையாற்றியவர். திரு.யோன்பிள்ளை பதவி உயர்ச்சி பெற்று மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் சிலகாலம் அதிபராக இருந்து பின்பு பதவி உயர்ச்சி பெற்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. மு. சிவம் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்வி)**

ஊர்ப்பற்று நிறைந்தவர். அடக்கமானவர். குருபக்தி நிறைந்தவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆரம்ப கல்வி தொடக்கம் உயர் கல்விவரை பெற்றவர். ஆரம்பத்தில் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் பின்பு பதவி உயர்ச்சி பெற்று முறை சாராக் கல்விக்கு யாழ் மாவட்டம் அனைத்துக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

**திரு. எஸ். ஐயாத்துரை ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்.**

நாட்டுப் பற்று, கடமைப் பற்றுடன் விடாமுயற்சியால் முன்னுக்கு வந்தவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன். திரு.மு.சி.சிற்றம்பலம், பண்டிதர் தம்பு ஆகியோரில் பற்றுக் கொண்டவர். ஆரம்பத்தில் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றி கடும் உழைப்பால் கூட்டுறவு உதவி ஆணையாளர் வரை பதவி உயர்ச்சி பெற்று ஓய்வு பெற்றவர்.

**திரு.க.பொன்னுத்துரை தென்மராட்சி கல்வி வலயத்தில் கணக்காளர்**

குருபக்தி, ஊர்ப்பற்று நிறைந்தவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று இங்கிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பட்டம் பெற்றவர். ஆசிரிய சேவையில் ஈடுபடாது எழுதுநர் சேவையில் சேர்ந்து விடாமுயற்சியால் கணக்காளர் பரீட்சையில் சித்தியடைந்து வலிகாமக் கல்விவலயத்திலும், யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்திலும் கணக்காளராகக் கடமையாற்றித் தற்போது தான் பிறந்த பிரதேசமாகிய தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கணக்காராகக் கடமையாற்றுகின்றார்.

**திரு. இ. சிவராசா ஓய்வு பெற்ற உதவி சுங்க அத்தியட்சகர்**

உசன் திரு.இ.சுப்பிரமணியத்தின் (மில் மணியம்) சகோதரர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழையமாணவர். குடும்பப்பற்றும், ஊர்ப்பற்றும் நிறைந்தவர். சுங்கத் திணைக்கள எழுதுநர் சேவையில் சேர்ந்து தமது விடாமுயற்சியாலும், கடமை உணர்வாலும் உதவிச் சுங்க அத்தியட்சகர் வரை பதவி உயர்வு பெற்றுக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் தொழில் காரணமாக கொழும்பில் வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாளர்கள் க. இராமலிங்கம், க.நவரத்தினம் ஓய்வுபெற்ற வருமானவரி அதிகாரிகள்**

தொழில் காரணமாக கொழும்பில் வசித்தவர்கள். ஒரே காலத்தில் உசன் இராமநாதன் மகாவித்தியலயத்தில் கல்வி கற்று எழுதுநர் சேவையில் சேர்ந்தவர்கள். கீழ்படிவும், குருபக்தியும், ஊர்ப்பற்றும் உடையவர்கள். உழைப்பால் உயர்ந்து வருமானவரி அதிகாரிகளாகக் கடமையாற்றிவந்த இருவரும் ஓய்வுபெற்றுள்ளனர்.

**திரு. பு. நவரத்தினசிங்கம் மாகாண அஞ்சல் அத்தியட்சகர்.**

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்தவர். உதவி தபால் அதிபராகக் கடமையில் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று பதுளை, மட்டக்களப்பு மாவட்ட உதவி அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றியவர். குடும்பப் பற்றும் தான் கற்ற பாடசாலைப் பற்றும் நிறைந்தவர். சிறந்த நிர்வாகி.

**திரு. சி. சின்னத்தம்பி – முதலாந்தரத் தலைமை ஆசிரியர்**

வரணி, ஒட்டுவெளி, குடத்தனை ஆகிய மிசன் பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். உசன் பஞ்சாய சபையின் தலைவராகக் கடமையாற்றி யாவரது நன்மதிப்பைப் பெற்றவர். முன்னாள் மிருசுவில் கிராமசபையின் தலைவர். திரு.சி.பாலசிங்கத்தின் தந்தையாவார்.

**திரு. மு. சி. பதஞ்சலி முதலாந்தரத் தலைமை ஆசிரியர்**

திரு.மு.சி.சிற்றம்பலம் (தலைமை ஆசிரியர்) அவர்களின் சகோதரர். அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் தலைவராகப் பல வருடங்கள் கடமையாற்றியவர். புகழ்பூத்த தலைமை ஆசான் என இலங்கையில் யாவராலும் போற்றப்பட்டவர். மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை, கச்சாய் அரசினர் வித்தியாசாலை ஆகியவற்றில் பலகாலம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். உசன் கிராமத்துக்கு ஓர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையைக் கொண்டு வரவேண்டும் என அத்திவாரமிட்டவர்.

**திரு. வி. சுப்பிரமணியம், முதலாந்தரத் தலைமையாசிரியர்**

கடமை காரணமாக வவுனியா பண்டாரிக்குளத்தில் வாழ்ந்தவர். இவ்வூரைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வெற்றிவேலு மற்றும் திரு. கு. ஈசா அவர்களின் மாமனார். கடமை உணர்ச்சியுடன் தமது கடமையைச் செய்தவர். எழுதுமட்டுவாழ் சி.சி.பாடசாலை வவுனியா சி.சிபாடசாலை, கோவிற்புதுக்குளம் கணேச வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். வவுனியா தமிழ் ஆசிரிய சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றியவர்.

## திரு. செ. சிவப்பிரகாசம் முதலாந்தரத் தலைமை ஆசிரியர்

சி.இராசமோகன் அவர்களின் தந்தையாவார் ஒட்டுவெளி சி.சி.தமிழ் கலவன் பாடசாலை, விடத்தற்பளை கமலாசினி வித்தியாசாலை ஆகியவற்றில் பலகாலம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். உசன் ஐக்கிய நாணய சங்கத்தில் பலகாலம் தலைவராகக் கடமையாற்றியவர். கரப்பந்தாட்ட வீரர். உசன் ஸ்ரீமுருகன் கரப்பந்தாட்டத்தினர் நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு நடுவராக அனேக காலம் கடமையாற்றியவர்.

## திரு. வி .பெ. செல்லத்துரை இரண்டாம்தர அதிபர்

வைத்தியக் கலாநிதி செ.அசோகன் அவர்களின் தந்தை. இவர் இலங்கை அரசினர் பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவரும் ஆற்றல் மிகுந்த அதிபரென யாவராலும் போற்றப்பட்டு வந்தவர். வடக்கு மிருசுவில் அரசினர் வித்தியாலயம், ஒட்டுவெளி சி.சி.தமிழ் கலவன் பாடசாலை, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றியவர். உசன் கிராம முன்னேற்றச் சங்க செயலாளராகவும் கடமையாற்றியவர்

## திரு. சே. செல்லையா இரண்டாம் தரத் தலைமை ஆசிரியர்

இவர் உசன் திருமதி.சே.பொன்னம்மா அவர்களின் ஒரே மகன். சங்கத்தானையை வாழ்விடமாகக் கொண்டவர். இலங்கையின் பல பாகங்களிலும் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். அகில இலங்கை அரசினர் ஆசிரிய சங்கத்தில் பல பதவிகளை வகித்தவர். சங்கத்தானை இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுத் தலைமையாசிரியராகப் பலகாலம் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. தி. கதிரித்தம்பி இரண்டாந்தர அதிபர்

இவர் இலங்கையில் பல பகுதிகளிலும் ஆசிரியராகக்கடமையாற்றி, பின்பு விடத்தற்பளைக் கமலாசனி வித்தியாசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது அதிபர் பதவி உயர்ச்சி பெற்று அப்பாடசாலையிலேயே அதிபராகப் பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் விளையாட்டுத்துறையில் ஆற்றல் மிக்கவர். சிறந்த சாரண ஆசிரியர். கரப்பந்தாட்ட வீரர். உசன் ஸ்ரீ முருகன் கரப்பந்தாட்ட குழுவில் ஒருவராக இருந்து விளையாடியவர்.

### திரு.மு.சுப்பிரமணியம் இரண்டாந்தர அதிபர்

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர். இவர் அதிபராக இலங்கையில் பலபாகங்களிலும் கடமையாற்றியவர். இவ்வூரில் பொதுத் தொண்டுகளில் ஈடுபாடு காட்டும் திரு.சு.பாஸ்கரனின் தந்தை. இவர் தொடர்ந்து அரசினர் பாடசாலைகளில் கடமையாற்றிய காரணத்தால் கல்வித் திணைக்கள சட்டதிட்டங்களை நன்கறிந்தவர். விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் நீண்டகாலம் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ்ப்பற்றும், ஊர்ப்பற்றும் உடையவர். உசன் ஐக்கிய நாணய சங்கத்தின் ஆரம்ப கால அங்கத்தவர். இச்சங்கத்தில் எட்டு வருடங்களுக்கு மேல் தனாதிகாரியாகக் கடமையாற்றியவர்.

### திரு. ச. இராசரத்தினம் மூன்றாந்தர அதிபர்

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவர். இவர் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1972 ஆம் ஆண்டு அதிபராகப் பதவி உயர்ச்சி பெற்று எழுதுமட்டுவாழ் சி.சி.த.கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

### திரு. மா. பரமநாதன் முதலாந்தர அதிபர்

இவர் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றியவர். தனது பிற்கால வாழ்வை வவுனியாவில் கழித்தவர். உசன் கிராமத்திற்கு மின்சாரம் பெறுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுனிவேசல் சண்வீம் மோட்டார் சைக்கிள்




மிகப் பழமைவாய்ந்த துள்ளுபோட் கார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனர் திரு.நாகராசா அவர்களுடன் சேர்ந்து அரும்பாடுபட்டவர். உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்.

### திரு. கே. கனகரத்தினம் இரண்டாந்தர அதிபர்

இவர் பட்டதாரி கல்வி டிப்ளோமாவுடன் கல்வி முதுமாணிப் பட்டமும் பெற்றவர். ஆரம்பத்தில் பொது எழுதுநராகக் கடமையாற்றிய பின் ஆசிரிய வேலைக்கு மாறியவர். அமைதியானவர். கல்விமான். அவர் கரம்பகம் அரசினர் வித்தியாலயம், நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றித் தற்போது விடத்தற்பளை கமலாசினி வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

### திரு .சோ. ஸ்ரீகந்தன் இரண்டாந்தர அதிபர்

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் 17 வருடங்களுக்கு மேல் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றியவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியர். இவர் காலத்தில் இப்பாடசாலை மாணவர்கள் க.பொ.த.(சா/த) வகுப்புப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்ற னர். தான் கற்பித்த பாடசாலைகளில் பற்றுறுதி கொண்டவர். இவர் எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாசாலை, கொடிகாமம் அரசினர் பாடசாலை ஆகியவற்றில் அதிபராக் கடமையாற்றி தனது 57 வது வயதில் ஓய்வு பெற்றவர். தற்போது கனடா நாட்டில் வசித்து வருகின்றார்.

### திருமதி சி. சின்னத்தம்பி. III ம் தர அதிபர்

இவர் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் பலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றியவர். பின்பு பதவி உயர்ச்சிபெற்று பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் கனிஸ்ட அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். பிரபல தாவரவியல் ஆசிரியர் திரு.சி.குணசீலன் அவர்களின் தாயாராவார்.

### இக்கிராமத்தில் உள்ள மிகப் பழைய வாகனங்கள்

### யுனிவேசல் சண்வீம் மோட்டார் சைக்கிள்

இது 1949ஆம் ஆண்டில் பாவனையில் இருந்தது. காப்பிலியர் என்னும் கறுப்பர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கப்பட்டது. இதன் அதிகூடிய வேகம் 140 மைல். மிகப் பாரமானது. செயினும் செயின்வீலும் இல்லாமல் பெல்ற்றில் இயங்குகின்றது. டிவறஞ்சல் மொடல். (பழைய அலங்கி மொடல்) உசன் கந்தசாமி கோவில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ கேதீஸ்வர சர்மாவிடம் பலவருடங்களாக இது இருந்து வருகின்றது. யாழ்மாவட்டத்தில் இவ்வகை மோட்டார் சைக்கிள் ஒருவரிடமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மிகப் பழமைவாய்ந்த துள்ளூபோட் கார்

இது 1920ஆம் ஆண்டில் பாவனையில் இருந்தது. Z முதல் எழுத்தைக் கொண்டது. மிகப் பாரமானது. உருவத்தில் பெரியது. வலுவான என்ஜினைக் கொண்டது. கரடுமுரடான பாதையில் ஓடக்கூடியது. அதன் உடற்பகுதி பலகையால் செய்யப்பட்டது. இதன் கூடாரம் திறந்து மூடக்கூடியது. வேட்டையாடுவதற்குப் பாவிக்கக்கூடியது. உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவால் ஆலய பாவனைக்கு (யந்திரத்தை எடுத்து) என்று வாங்கப்பட்டது. இன்று இவ்வாகனத்தை ஆலயச் சிவாச்சாரியார் திருத்தி ஓடுவதற்கு ஆயத்தம் செய்கின்றார்.

எமது கிராமம் வளம் நிறைந்தது, வளர்ச்சி கண்டு புதுப்பொலிவுடன் 1998 வரை காட்சி தந்தது. இங்குள்ள மக்களும் வெளிநாடுகளில் வாழ்ந்த எமது உறவுகளும் மனநிறைவோடு வாழ்ந்தனர். இன்று நாம் நிம்மதி இல்லாத ஓர் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மக்களில் பெரும் பகுதியினர் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். ஒரு சிலர் வெளிநாடுகளில் வாழும் தமது உறவுகளுடன் சேருகின்றனர். எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களும் இடப்பெயர்வால் வேறு பாடசாலைகளில் கற்கின்றனர். ஆலய தர்மகர்த்தா மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரின் பெரு முயற்சியால் ஆலயத்தில் பூசை வழிபாடுகளும், பாடசாலை இடம் பெயர்ந்து இருந்தாலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. எமது கிராமமும் பாடசாலையும் முன்பிருந்த நிலைக்கு வரும், வரவேண்டுமென நாம் எல்லோரும் விரும்புகின்றோம். எல்லாம் வல்ல கலியுகவரதனான உசன் கந்தப் பெருமானை நாம் எல்லோரும் துதிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் உதயமான வரலாறு

ஆதியில் உசன் கிராமத்தில் உள்ள சைவப் பிள்ளைகள் இங்கு சைவப் பாடசாலை இல்லாத காரணத்தால் வடமேற்கில் உள்ள கிறிஸ்தவ பாடசாலையில் கல்வி கற்று வந்தனர். வசதி படைத்த பிள்ளைகள் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளின் விடுதிகளில் தங்கிக் கல்வி கற்றனர். இவற்றால் ஏற்பட்ட சிரமங்களைப் போக்க இங்குள்ள சிலர் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு வி. வைத்திலிங்கம் அவர்களின் தலைமையில் ஆலய முன்றலில் கூடி ஆலோசித்து, பாடசாலை அமைத்துத் தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பை திரு. வைத்திலிங்கம் அவர்களிடம் இவர்கள் ஒப்படைத்தனர்.

சைவப் பாரம்பரியங்களுக்கு ஏற்ப வாழ்ந்த சைவ மாணவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் சென்று படிப்பதால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு சேர் பொன் இராமநாதன், சட்டத்தரணி இராசரத்தினம், சேர் துரைச்சாமி போன்ற சைவப் பெரியார்கள் ஒன்று கூடி 1923ம் ஆண்டு மார்கழி 9ம் திகதி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை அமைத்தனர். இதற்கு சேர் பொன் இராமநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்.

### சேர். பொன். இராமநாதனின் கல்விப் பணிகள்

மேலை நாட்டாரின் ஆட்சி முறையினால் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த சைவப் பிள்ளைகளின் கல்விப் பாரம்பரியங்கள், சமய அனுட்டானங்கள், மொழி மரபுகள், பண்பாடுகள் என்பன அருகிச் செல்வதைக் கண்ட ஆறுமுகநாவலர் அவர்கள் இவற்றைக் காக்குமாறு சைவப் பெரியார்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோளை விடுத்தார். இதற்குரிய ஒரே வழியாகப் பிறமதப் பாடசாலைகளில் சைவப் பிள்ளைகள் கற்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் கிராமங்கள், நகரங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்து, அவற்றில் சைவப்பிள்ளைகளைப் படிக்கச் செய்யவேண்டுமெனக் கருதினார். இதற்கு முன்னுதாரணமாக வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை 1848 ஆம் ஆண்டு நிறுவினார். சைவப் பெரியார்களாகிய சேர்.பொன்.இராமநாதன், சேர்.துரைச்சாமி, சட்டத்தரணி இராசரத்தினம், சிவபாதசுந்தரம் ஆகியோரையும் இப்பணியை மேற்கொள்ளுமாறு தூண்டினார். கிராமங்களில் வாழ்ந்த சைவப் பெரியார்களும், தங்கள் ஊர்களில் சைவப் பாடசாலைகளை நிறுவத் தொடங்கினர். உதாரணமாக பெரியார்கள் மழவராயர் புத்தூரில் சோமாஸ்கந்தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியையும், நீர்வேலி அத்தியார், அத்தியார் இந்துக் கல்லூரியையும், கந்தரோடையில் திருவாளர்கள் சி. கந்தையா, அ. கந்தையா முறையே ஸ்கந்தவரோதய கல்லூரி, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளையும் நிறுவினர். சைவபரிபாலன சபையினர் இந்துக் கல்லூரிகளை நிறுவ ஆரம்பித்தனர். முதலில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி தாபிக்கப்பட்டது.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் சைவப் பெண்பிள்ளைகள் விடுதி வசதியுடன் தங்கிப் படிப்பதற்காக 1913ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரியை ஆரம்பித்தார். ஆரம்பித்து மூன்று வருடங்களுக்குள் இக்கல்லூரியுடன் இணைத்து ஓர் அனாதைப் பெண் பிள்ளைகள் விடுதியையும் ஏற்படுத்தினார். இதன் பின் 1921ஆம் ஆண்டு ஆண் சைவப் பிள்ளைகளுக்கென்று விடுதி வசதியுடன் கூடிய பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார். இவ்விரு கல்லூரிகளையும் "பரமேஸ்வராக் கல்வி அபிவிருத்திச் சபை" என்னும் நிறுவனத்தின் மூலம் நடாத்தி வந்தார். இதன் முகாமையாளராகவும், தலைவராகவும் தானே கடமையாற்றினார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் சைவாசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஓர் சைவாசிரிய கலாசாலையையும் நிறுவினார். இவ்வாசிரிய பயிற்சி மூன்று ஆண்டுகளைக் கொண்டது. ஆசிரிய மாணவர்கள் ஆசிரிய பயிற்சியுடன் மதுரைப் பண்டிதர் பரீட்சைக்கும் தோற்றிச் சித்தியடைய வேண்டியிருந்தது. பரமேஸ்வராக் கல்வி அபிவிருத்திச் சபையின் கீழ் 1926ஆம் ஆண்டு உசன் கிராமத்தில் ஓர் சைவப்பாடசாலையை சேர்.பொன் இராமநாதன் நிறுவினார். சேர் பொன்.இராமநாதன் அவர்களுக்குப் பின் பெரியார் மகாதேவாவும் இவரைத் தொடர்ந்து சேர் பொன இராமநாதனின் மருமகன் செனட்டர் நடேசன் அவர்களும் பரமேஸ்வராக் கல்வி அபிவிருத்திச் சபையின் முகாமையாளராக இருந்து, இப்பாடசாலைகளைத் தொடர்ந்து நடாத்தி வந்தனர். பரமேஸ்வரா கல்லூரியே 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்ந்தது. பெண்கள் நலங் கருதி கொழும்பு மங்கையர் கழகத்தையும் நிறுவி லேடி இராமநாதன் அவர்கள் முகாமையாளராக இருந்து வந்தார்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

நாவலர் பெருமானின் தூண்டுதலால் 1923 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9ம் நாள் கிராமங்கள் தோறும் பரந்த அளவில் பாடசாலைகளை அமைக்கும் நோக்கத்துடன் பலருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் பொன்னம்பலம் இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேர்ந்து ஓர் சங்கத்தை சோ பொன் .இராமநாதன் அவர்கள் கூட்டினார். இச்சங்கமே சைவவித்தியா விருத்திச் சங்கமாகும். இதில் பல சைவப் பெரியார்கள் கலந்து கொண்டனர். சேர்.துரைச்சாமி, சட்டத்தரணி சு.இராசரத்தினம், சிவபாதசுந்தரம் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். சோ .பொன். இராமநாதனைத் தலைவராகவும் முகாமையாளராகவும் இச்சங்கத்துக்கு தெரிவு செய்தனர். இவருடன் சேர்ந்து செயற்பட சட்டத்தரணி இராசரத்தினம் (இந்துபோட்) சேர்.துரைச்சாமி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். சட்டத்தரணி இராசரத்தினம் அவர்களின் துரித செயற்பாட்டை அறிந்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் இவரிடமே சகல பொறுப்புக்களையும் • படிப்படியாக ஒப்படைத்து தான் ஓர் ஆலோசகராக இருந்து வந்தார். அத்துடன் பரமேஸ்வராக் கல்வி அபிவிருத்தி சபை தான் ஆரம்பித்த இருபதுக்கும் மேற்பட்ட சைவப்பாடசாலைகளையும் சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆலோசகராகத் தொடர்ந்தும் சேர்.பொன் இராமநாதன் அவர்களே கடமையாற்றி வந்தார்.

இக்காலப் பகுதியில் சைவமக்கள் செய்து கொண்ட புண்ணியத்தால் சேர்.பொன்.இராமநாத வள்ளல் வித்திட்டு வளர்த்த சைவவித்தியாவிருத்திச் சங்கமென்ற இளமையுள்ள விருட்சத்தைப் பல கிளைகளுடன் பூத்து, காய்த்து, கனிகளை உதவச் செய்தவர் சட்டத்தரணி சு.இராசரத்தினம் என்றால் மிகையாகாது. இவர் தனது சட்டநூற்றொழிலைத் துறந்து, சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நலனுக்கே இரவும், பகலும் கஷ்டங்களை பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது உழைத்த பெருந்தகையாவார். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராக சேர்.பொன் இராமநாதன் அவர்களுக்குப் பின் வைத்தியகலாநிதி எஸ்.சுப்பிரமணியமும், முகாமையாளராகத் திரு.எஸ்.அச்சலிங்கமும் செயலாளராக சட்டத்தரணி சு.இராசரத்தினமும் தனாதிகாரியாக திரு.ஏ.கே.நவரத்தினமும் போசகராக சேர்.டபிள்யூ .துரைச்சாமியும் கடமையாற்றினர். இந்துப் போட் இராசரத்தினம் அவர்களின் 35 ஆண்டுகள் வியத்தகு சேவையால் இலங்கையில் 1958 ஆம் ஆண்டு பின்வரும் கல்வி, தொழில், நிலையங்கள் இருந்தன.

| | | |
|---|---|---|
| 1. | சைவ வித்தியாசாலைகள் | 156 |
| 2. | ஆங்கில வித்தியாசாலைகள் | 7 |
| 3. | திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை | 1 |
| 4. | 300 பிள்ளைகள் தங்கியிருந்த அநாதை விடுதிகள் (ஆண், பெண்களுக்குத் தனித்தனியாக) | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் இந்துப்போட் இராசரத்தினம் அவர்கள்



அமரர் வி. வைத்திலிங்கம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5. | நெசவுப்பள்ளிகள் | 15 |
| 6 | கூடைகள் இழைக்கும் பள்ளிகள் | 16 |

இவற்றில் 1500 ஆசிரியர்களும் 35000 மாணவர்களும் இருந்தனர். இந்துப்போட் இராசரத்தினம் சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை, தத்துவஞானி பொ.கயிலாயபதி ஆகியோரை பேராசிரியர்களாக நியமித்தார். இக்கலாசாலையின் அதிபர்களாக புகழ்பூத்த மயிலிட்டி சுவாமிநாதன், இவரைத் தொடர்ந்து இடைக்காடு திரு.க.கந்தையாவையும் நியமித்து 1000 இற்கு மேற்பட்ட சைவ ஆசிரியர்களை உருவாக்கினார். இப்படிப்பட்ட பெருந்தகையான இந்துப் போட் இராசரத்தினம் அவர்களின் தாபகர் தினவிழாவை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் உட்பட ஒரு சில பாடசாலைகளே கொண்டாடி வருகின்றன. ஏனைய பாடசாலைகள் இவர் சேவையை நினைவுகூராது விடுவது நன்றி மறந்த செயலாகக் கருத இடமுண்டு. எதிர்காலத்திலாவது பெருமகனார் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் தாபகர் ஞாபகார்த்த விழாவை கொண்டாடுவார்கள் என அறிஞர் பெருமக்கள் விரும்புகின்றனர். தேட முடியாத இப்பாடசாலைகளின் விபரங்கள் எதிர்காலத்தின் நன்மை கருதி இந்நூலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## எதிர்பாராத சந்திப்பு

திரு வி. வைத்திலிங்கம் அவர்கள் இந்துப் போட் இராசரத்தினம் அவர்களை சந்தித்து உசனிலே சைவப் பாடசாலை ஒன்றைத் தாபிக்க வேண்டுமெனக் கோர இருந்தார். எதிர்பாராத விதமாக கொடிகாமம் திருநாவுக்கரசு மடத்தில் கொடிகாமம் வாழ் மக்களால் சேர் பொன் இராமநாதன் அவர்களைப் பாராட்டி எடுக்கப்பட்ட பெருவிழாவில் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு. வி. வைத்திலிங்கம் அவர்களையும் ஒரு பிரமுகராக விழாக்குழுவினர் அழைத்திருந்தனர். விழாவில் கலந்துகொண்டு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய வைத்திலிங்கம் அவர்களும் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பே, உசன் கிராமத்தில் பாடசாலை இல்லாத குறையை சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கு எடுத்துக் கூறி ஓர் சைவப் பாடசாலையை அமைத்துத் தருவதற்குரிய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார். காணியையும் மற்றும் கட்டட உபகரணங்களையும் தான் அன்பளிப்புச் செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார். கூட்ட முடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் பொன். இராமநாதன் அவர்கள் உசன் பாடசாலை அமைய இருக்கும் காணியை பார்க்க வருவதை திரு. வைத்திலிங்கம் அவர்கள் மூலம் அறிந்த உசன் மக்கள் உசன் சந்தியில் இருந்து சேர் பொன் இராமநாதன் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தனர். முதலில் உசன் கந்தசுவாமி கோவில் பூசையில் கலந்துவிட்டு சேர் பொன் இராமநாதன் அவர்கள் தற்போது பாடசாலை இருக்கும் காணியை திரு வி. வைத்திலிங்கம் அவர்களுடன் சென்று பார்வையிட்டார். அங்கு கூடியிருந்த உசன் மக்கள் மத்தியில் பாடசாலை அமைத்துத் தருவதாக சேர் பொன் இராமநாதன் அவர்கள் வாக்குறுதி அளித்தார். இதன்படி 1926ம் ஆண்டு திரு வி. வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. சேர் பொன் இராமநாதன் அவர்களும் லேடி இராமநாதன் அவர்களும் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பாடசாலை அமைய இருக்கும் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தனர். இக்கட்டடம் துரிதகதியில் கட்டிமுடிக்கப்பட்டது. இதற்குரிய பனைமரங்களை திரு. வைத்திலிங்கம் அவர்களுடன் இவ்வூரில் உள்ள மக்களும் அன்பளிப்புச் செய்தனர். இக்கட்டடம் பாடசாலைக் கட்டடங்களின் விபரப்படத்தில் 1 என்ற இலக்கத்தால் குறிக்கப்பட்டுள்ளது. முதல் அறை அதிபர் காரியாலயம் 2ஆம், 3ஆம் 4ஆம் அறைகள் வகுப்பறை, 4வது பெரிய மண்டபம் இதில் வகுப்புக்களும் சிலவேளைகளில் கூட்டங்களும் நடைபெறும். 8 அடி அகலமான இரு விறாந்தைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ் விறாந்தைகளில் தேவைக்கேற்ப சிறு தொகை மாணவர்களைக் கொண்ட வகுப்புக்கள் நடைபெற்றன. இக் கட்டடத்தில் உசன் சைவ வித்தியாசாலை 1926ம் ஆண்டு பிற்பகுதியில் உசன் கந்தப்பெருமான் அருளாட்சியுடன் சேர் பொன் இராமநாதன் அவர்களாலும் லேடி இராமநாதன் அவர்களாலும் முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. உசன் மடத்தில் இருந்து கல்வி கற்றபிள்ளைகள் ஆரம்பத்தில் இங்கு சேர்க்கப்பட்டனர். இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியராக வட்டுக் கோட்டையைச் சேர்ந்த திரு. எஸ். சரவணமுத்து அவர்கள் முகாமையாளர் சேர் பொன் இராமநாதன் அவர்களால் நியமனம் செய்யப்பட்டார். உள்ளூர் முகாமையாளராக ஆரம்பத்தில் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவும், இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னின்று பாடுபட்டவருமான திரு வி. வைத்திலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவாக உள்ளவர்களே இப்பாடசாலையின் உள்ளூர் முகாமையாளர்களாகக் கடமையாற்றி வந்தனர். இப்பாடசாலையின் முகாமையாளர் வரிசையில் சேர் பொன் இராமநாதன் அவர்களைத் தொடர்ந்து திருவாளர் மகாதேவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் அவரைத் தொடர்ந்து சேர் பொன் இராமநாதன் அவர்களின் மருமகன் செனட்டர் எஸ். நடேசன் அவர்களும் கடமையாற்றினர்.

பாடசாலை மாணவர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டமை காரணமாக உயர் வகுப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. 1940ஆம் ஆண்டளவில் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி பாராட்டத்தக்க பெறுபேறுகளைப் பெற்றனர். இதனால் தென்மராட்சியின் ஏனைய பகுதி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் இங்கு கல்வி கற்கத் தொடங்கினர். இதற்கு அரும்பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் விபரங்கள் தொகுப்பாகத் தரப்பட்டுள்ளன. உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்கும் சட்டமூலத்தின்படி 1961ஆம் ஆண்டு இப் பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக உள்வாங்கப்பட்டது.

**பாடசாலை தரமுயர்த்தப்பட்டு உசன் இராமநாதன் மகாவித்தியாலயமான வரலாறு**

1937ஆம் ஆண்டிலே தலைமையாசிரியராகப் பொறுப்பேற்ற திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்களின் ஆற்றல் மிகு செயற்பாட்டால் பாடசாலை வளர்ச்சி அடைந்து தென்மராட்சித் தொகுதியில் கல்லூரி அந்தஸ்தை அடையும் நிலைக்கு உயர்ந்தது. திரு மு. சி. சிற்றம்பலம் அவர்கள் தான் ஓய்வு பெறுமுன் இப்பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்த வேண்டும் என்று இத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் உதவியை நாடினார். எல்லா வளங்களையும் இப்பாடசாலை கொண்டிருந்தாலும் விளையாட்டு மைதானம் இல்லாதது குறையாக இருந்தது. மகா வித்தியாலயமாக உயர்த்தப்படுவதற்கு அது தடையாகவும் இருந்தது. திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள், உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவாக இருந்தவரும் இப்பாடசாலையில் பற்றுறுதி கொண்டிருந்தவருமான சட்டத்தரணி ச. இராசத்தினத்தின் உதவியை நாடினார். பெருந்தகை இராசரத்தினம் அவர்கள் கோயில் காணி 25 பரப்பைப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் பாவனைக்கு அன்பளிப்புச் செய்தார். பின்பு திருவாளர் மு. சி. சிற்றம்பலம் அவர்களின் பெருமுயற்சியாலும் இத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்களின் விடாமுயற்சியாலும் இப்பாடசாலை மகாவித்தியாலயமாக 1963ஆம் ஆண்டு தரமுயர்ந்தது. பாடசாலையைத் தாபித்த சேர்.பொன் இராமநாதன் அவர்களின் நன்றியை நிரந்தரமாக நினைவுகூரும் வகையில் "இராமநாதன் மகாவித்தியாலயம்" என்ற பெயரும் சூட்டப்பட்டது. (நன்றி = நன்மை, நற்செயல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கீதம்

இராகம் : மோகனம்

தாளம் : ஆதி

வாழ்க வாழ்கவே என்றும் வாழ்க வாழ்கவே
வளமிகுந்த கல்வித்தீபச் சுடரினாலே எம்மைக்காத்து
வாழ்க வாழ்கவே என்றும் வாழ்க வாழ்கவே
வளம் மிகுந்த கல்வித்தீபச் சுடரினாலே எம்மைக் காத்து
வாழ்க வாழ்கவே

அன்புஅறிவு பண்பு நல்ல ஒழுக்கம் தெய்வபக்தியும்
அறம் விரும்பும் நெஞ்சினோடு தேசபக்தி யாவையும்
இனிமையான மொழியினிலே எங்களுக்கு ஊட்டிடும்
இராமநாதன் மகாவித்தியாலயமாம் அன்னையே
வாழ்க வாழ்கவே

அன்னை மொழி செந்தமிழ் அவனி போற்றும் ஆங்கிலம்
பல்கலை விஞ்ஞானம் விவசாயம் விளையாட்டுக்கள்
சொல்லரிய நன்மைதரும் சமய உண்மை யாவையும்
செம்மையாகப் போதித்தெம்மை செகம் புகழச்செய்யும் அன்னை
வாழ்க வாழ்கவே

செந்தமிழர் சேர்ந்து வாழும் செழுமைமிக்க உசனிலே
கந்தவேளின் கருணையோடு கல்வியைப் பரப்பவே
எந்தைபோல் இலங்கி நின்ற இராமநாத வள்ளலின்
இலட்சியத்தின் சின்னமாக எத்திசையும் போற்றவே
வாழ்க வாழ்கவே

("சிற்பி")



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலைக் கீதம் எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு.சி.சரவணபவன் ("சிற்பி") அவர்களால் ஆக்கப்பட்டது. இக் கீதம் கவிநயமும், கருத்தாழமும் கொண்டது. அன்பு, அறிவு, பண்பு, நல்லொழுக்கம், தெய்வ பக்தி அறச்செயல்களில் நாட்டம், தேசபக்தி போன்ற விழுமியங்களை இனிய மொழியால் எங்கள் நெஞ்சில் பதிய வைக்கும் அன்னை போன்ற இராமநாதன் மகாவித்தியாலயம் – தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், பலவித கலைகள், விளையாட்டு முதலியவற்றுடன் சமய உண்மைகளையும் செம்மையான முறையிற் போதிக்கும் இராமநாதன் மகாவித்தியாலயத்தையும், இவற்றை உள்ளடக்கிய சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற இராமநாத வள்ளலுடைய இலட்சியத்தின் சின்னமாக விளங்கும் இராமநாதன் மகாவித்தியாலயம் கந்தப் பெருமானின் அருளால் எண்டிசையும் புகழ் பரப்பி வாழ வேண்டும் என்பதைக் கல்லூரிக் கீதம் கூறுகின்றது.

இப்பாடசாலைக் கீதத்திற்கு இசை அமைத்தவர்கள் இப்பாடசாலைக் கீதத்தை ஆக்கிய திரு. சி. சரவணபவன் ("சிற்பி") அவர்களும் இப்பாடசாலையின் சங்கீத ஆசிரியர் திரு. ச. பேரம்பலம் அவர்களும் என்பது இங்கு குறிப்பிடவேண்டும். இப்பாடசாலைக் கீதம், பாடசாலையின் காலை ஆராதனையிலும், பாடசாலையின் முக்கிய வைபவங்களிலும் ஒலிப்பரும்.




## பாடசாலை இலச்சினை

ஓர் பாடசாலையின் இலச்சினையானது பாடசாலையின் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. உசன் இராமநாதன் இலச்சினை அழகும், அர்த்தமும் கொண்டது. இந்த இலச்சினையை வரைந்தவர் இப்பாடசாலையின் முகாமையாளரும் இலங்கை அரசாங்க அமைச்சருமான சு. நடேசன் அவர்களால் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட உப அதிபர் பண்டிதர் எஸ். கே. தம்பு அவர்களே. இவர் சித்திரக் கலையை நன்கு கற்றவர். இவ் இலச்சினையிற் காணப்படுகின்ற ஒவ்வொரு அம்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாதானத்துடன் தொடர்புடைய பொருளையே புலப்படுத்துகிறது. இந்த இலச்சினையில் வட்ட வடிவமைப்பினுள் புத்தகம், நீர், சூரியன் ஆகியவற்றுடன் "கல்விப் பயனே கடவுட் பணி" என்னும் மகுடவாசகமும் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியப்பணி, "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்னும் நீதிவாசகத்துக்கு வலுவூட்டுவனவாக இவ்வாசகம் அமைகிறது. இவ்விலச்சினையின் உட்பாகத்தில் அமைந்த நூல் கல்விப்பணியை மேற்கொள்ளும் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் தேவையான அறிவுச் செல்வத்தை குறிக்கும் சின்னமாகும். நீர்ப்பரப்பு எமது நாட்டின் இயற்கை வளமாகிய கடல் வளத்தையும், கடல் வளத்தின் செல்வத்தையும் மற்றும் எமது நாட்டில் உள்ள பாரிய குளங்களின் நீர்த்தேக்கத்தையும், இதன் மூலம் எமது விவசாயத்தின் பயன்பாடுகளையும் குறிக்கும்.

மத்தியில் அமைந்துள்ள சூரிய ஒளி உலகெலாம் ஒளிபரப்பி இருளை அகற்றுவது போல், மாணவர்களிடையே அஞ்ஞானத் திரையை அகற்றி, அறிவொளியைக் கல்வி மூலம் பரப்பவேண்டும் என்னும் கருத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நீர்ப்பரப்பில் அமைந்துள்ள "தாமரை மலர்" சைவ சமய தத்துவத்தின்படி கல்வித் தெய்வமான சரஸ்வதி வெண் தாமரைப் பூவில் இருந்து அருளாட்சி செய்பவள் என்னும் தத்துவத்தைப் புலப்படுத்துகிறது. பாடசாலையின் பெயர், இடம் என்பன வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளன. வெளிப்புறமாக அமைந்துள்ள நெற்கதிர் எமது நாட்டின் முக்கிய பயிராகப் பயன்படுகிறது. எமக்கு இன்றியமையாத உணவைக் குறிக்கும் மங்கலச் சின்னமாக வெளிப்புறத்தே நெற்கதிர் அமைந்துள்ளது.

## பாடசாலையின் பௌதீக வளங்கள்


ஓர் பாடசாலையின் பௌதீக வளங்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் பெருந்துணைபுரிபவை இவற்றுள் பாடசாலைக் காணிகள், கட்டடங்கள், ஆசிரிய ஆளணிகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

## பாடசாலையின் காணிகள் விபரம்

படத்தில் காட்டப்பட்டுள்ள A எழுத்துப் பொறிக்கப்பட்ட காணி திரு. வி. வைத்திலிங்கம் அவர்களால் 1926ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிப்பதற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதன் விசாலம் 10 பரப்பு. பின்பு 1964ஆம் ஆண்டு B எழுத்துப் பொறிக்கப்பட்ட 6 பரப்பும் 3/8 குழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உசன் இராமநாதன் மகா வித்தியாலய வரைபடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்களால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து உசன் பரஞ்சோதி சகோதரர்களிடம் இருந்து பாடசாலைக்கென்று 1964 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. C எழுத்துப் பொறிக்கப்பட்ட 1 ¾ பரப்பு 1991 ஆம் ஆண்டு உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திருவாளர் க. வி. நடராசா அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது. இக் காணி முருகன் கோவில் ஆதனத்தில் இருந்து அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதற்குள் நிற்கும் வேப்பமரம் முருகன் கோவில் தேவைக்குப் பாவிக்கப்பட வேண்டி வரும்போது தர்மகர்த்தா அவர்களுக்கு தறிக்கும் உத்தரவாதமும் அளிக்கப்பட்டது. படத்தில் D எழுத்துக் குறிக்கப்பட்ட காணி ஆரம்பத்தில் திருமதி இராசரத்தினம் அவர்களுக்குரிய ஆதனம் இலங்கை அரசாங்கத்தின் காணிச் சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரவே இக்காணியை அரசாங்கம் எடுத்தது. இதன் நிர்வாகம் ஆரம்பத்தில் தென்னை அபிவிருத்திச் சபையில் இருந்து வந்தது. சில ஆண்டுகளின் பின் இதன் நிர்வாகம் உதவி அரசாங்க அதிபர் பொறுப்பின் கீழ் வந்தது. இக்காலப்பகுதியில் பாடசாலைத் தேவைக்கு இக்காணி பயன்படுத்தப்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டு தென்மராட்சி பிரதேச உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு பு. சுந்தரம்பிள்ளை அவர்களால் எழுத்து மூலமாகப் பாடசாலைத் தேவைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் விசாலம் 16 பரப்பு ஆகவே உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கென்று மொத்தமாகத் தற்போது 2 ஏக்கரும் 3/8 குழியும் இருக்கின்றது. இத்துடன் பாடசாலை விளையாட்டு மைதானப் பாவனைக்கு உசன் கந்தசுவாமி கோவில் ஆதனத்தில் 25 பரப்பும் இருக்கின்றது. இவ்விளையாட்டு மைதானத்தில் இருக்கும் வருமானம் உசன் கந்தசுவாமி கோயிலுக்குரியது.

**கட்டடங்கள் விபரம்**

பாடசாலைக் கட்டடத்தின் விபரம் படத்தில் இலக்கங்களால் குறிக்கப்பட்டுள்ளது. இலக்கம் 1 சேர் பொன் இராமநாதன் அவர்களால் கட்டப்பட்டது. மகாவித்தியாலமானதும் 1978ம் ஆண்டு இக்கட்டடத்தின் வடக்கு மண்டபம் விஞ்ஞான கூடமாக மாற்றப்பட்டது. இதன் பின் திரு ஐ. வரதராசா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் இக்கட்டடம் அரச நிதியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இவ்வேலையை உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு கு. விமலதாஸ் அவர்கள் சிறந்த முறையில் செய்வித்துக் கொடுத்தார்.

இலக்கம் 2 இக்கட்டடம் 110 x 20 அடி விசாலமானது. இக்கட்டடம் ஆரம்பத்தில் நெசவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையமாக இருந்தது. குடிசைக் கைத்தொழில் இலாகாவால் நிர்வகிக்கப்பட்டது. இந்நெசவு நிலையத்தில் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய பெண் பிள்ளைகள் இப்பயிற்சியைப் பெற்றனர். நெசவு ஆசிரியராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. பழனிச்சாமி என்பவர் கடமையாற்றினார். இங்கு நெசவு பயிற்சியை முடித்தவர்களில் சிலர் நெசவு ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை பெற்று ஆசிரியராகவும் வந்திருக்கிறார்கள். பயிற்சி பெறும் மாணவிகள் தொகை குறையவே இக்கட்டடம் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. அரைநிரந்தரக் கட்டடமாக இருந்த இக்கட்டடம் 1970ம் ஆண்டு இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை உசன் கிராம முன்னேற்றச் சங்கம் எடுத்து உறுதியாக கட்டிக் கொடுத்தது. இதன் விபரம் உசன் கிராம முன்னேற்றச் சங்கம் இப்பாடசாலைக்குச் செய்த பணியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலக்கம் 3 இக்கட்டடம் தலைமை ஆசிரியர் திரு மு. சி. சிற்றம்பலம் அவர்களால் அரைநிரந்தரக் கட்டடமாக இவ்வூர் மக்களின் உதவிபெற்றுக் கட்டப்பட்டது. ஆரம்பித்த காலம் தொடக்கம் உயர் தரவகுப்புக்கள் இங்கு நடைபெற்று வந்தன. இக்கட்டடம் பின்பு நிரந்தரக் கட்டடமாகத் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டது. இக்கட்டட ஒப்பந்தத்தையும் உசன் கிராம முன்னேற்றச் சங்கம் எடுத்து உறுதியாகக் கட்டிக் கொடுத்தது. அத்துடன் இக்கட்டடத்துடன் சேர்த்து ஓர் காரியாலய அறையும் கட்டிக் கொடுத்தது. இவ்வேலையையும் உசன் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தாவும், உசன் கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவருமான திரு க. வி. நடராசா அவர்கள் செய்து கொடுத்தார்.

இலக்கம் 4ல் குறிப்பிட்ட கட்டடம் 1968ஆம் ஆண்டு இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்கள் ஒதுக்கிய நிதியில் கட்டப்பட்டது. இக்கட்டடத்தையும் உசன் கிராம முன்னேற்றச் சங்கம் ஒப்பந்தம் செய்து கட்டிக் கொடுத்தது. காரியாலய அறையுடன் வகுப்புக்களுக்குரிய மண்டபமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட இக்கட்டடம் உசன் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு க. வி. நடராசா அவர்களின் பெருமுயற்சியாலும் இங்குள்ள மக்கள் செய்த சிரமதான வேலைகளினாலும் பாடசாலையின் தேவை கருதி நூலகமாகவும், ஆசிரியர் தங்குமறையாகவும் மாற்றி அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இலக்கம் 5 இது படத்தில் காட்டியவாறு வடக்குப் பக்கத்தில் உள்ள காணியில் அமைக்கப்பட்டது. இது அதிபர் திரு சி. சரவணபவன் அவர்கள் காலத்தில் அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கட்டப்பட்டது. இக்கட்டடம் அரசாங்க ஒப்பந்தக்காரரால் கட்டிக் கொடுக்கப்பட்டது. இது இப்பாடசாலையின் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டது.

இலக்கம் 6 திறந்தவெளி அரங்கு இது உசன் மனமகிழ் மன்றத்தின் தாபகர்களான திருவாளர்கள் க. சிவானந்தம், ஐ. ஜெபநாமகணேசன் வே. கருணானந்தன் ஆகியோரின் பெரு முயற்சியால் கட்டிக் கொடுக்கப்பட்டது. இதன் விபரம் மனமகிழ் மன்றத்தின் வரலாற்றில் குறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

இலக்கம் 7 பாடசாலையின் வடக்குப் பக்கத்தில் காணப்படும் தொழில் பாடத்திற்குரிய அறைகள் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அரச ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டது. இது அதிபர் திரு க. சிவபாதசுந்தரம் அவர்களின் காலத்தில் கட்டப்பட்டது. பின்பு 1992ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. பாடசாலை அபிவிருத்தி நிதியில் இருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற் குழுவினர்களால் புனர்நிர்மாணம் செய்து முடிக்கப்பட்டது.

இலக்கம் 8 1991 ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் தீர்மானப்படி அபிவிருத்திச் சபை அங்கத்தவர்கள், மற்றும் நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் ஆகியோரது அன்பளிப்புகள் மூலம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களால் 10 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது. செயலாளர் திரு. க. சிவானந்தம் அவர்களின் ஆற்றல் மிகு செயற்பாட்டாலும் இங்குள்ள பெற்றோர், பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து சிரமதானம் செய்ததாலும் இதற்குரிய பணத்தில் ஒரு பகுதி மிஞ்சியது. இப்பணத்தைக் கொண்டு தான் தொழில் பாட அறைகள் திருத்தி அமைக்கப்பட்டன. இக்கட்டடத்திற்குரிய கூரைச் சீற்றுக்குரிய செலவு முழுவதையும் வைத்திய காலாநிதி க. மாணிக்கம் அவர்களும், கொடிகாமம் மணியம் வர்த்தக நிலைய உரிமையாளர் திரு நா. சிவசுப்பிரமணியம் அவர்களும் ஏற்றுக் கொண்டனர். இக்கட்டடத்திற்குரிய சீமெந்து முழுவதையும் கல்வி அபிவிருத்திக் கழகம் அன்பளிப்புச் செய்தது.

இலக்கம் 9 தெற்குப் பக்கத்தில் இருக்கின்ற காணியில் கல்விக்கழகம் கல்வி அபிவிருத்திக்காக ஒரு கட்டடத்தைக் கட்டிப் பாவித்தனர். பின்பு இக்கட்டடத்தைப் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர். அக்கட்டடமே கனிஷ்ட அதிபர் காரியாலயமாகும்.

இலக்கம் 10 பிரார்த்தனை மண்டபம். இப்பாடசாலை மாணவர்களுக்கு காலை ஆராதனைக்கும் விழாக்கள் நடைபெறும் போதும் பாவிப்பதற்கு உரியது. இவ்வூரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவரும், இப்பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி. ஈஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் தமது மகன் திரு. க. பிரேமருபனின் ஞாபகார்த்தமாகத் கட்டி 2005ஆம் ஆண்டு அன்பளிப்புச் செய்தார். இப்பிரார்த்தனை மண்டபம் பாடசாலை அரங்குடன் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 11, 12 பாடசாலைப் பிள்ளைகளின் குடிநீர்த் தேவைக்காகக் கட்டப்பட்ட கிணறுகள் இரண்டையும் குறிக்கின்றன. 11ஆம் இலக்கம் இடப்பட்ட கிணறு சேர் பொன் இராமநாதன் அவர்களால் கட்டப்பட்டது. 12ஆம் இலக்கமிடப்பட்ட கிணறு பாடசாலைப் பிள்ளைகளின் அதிகரிப்பால் கல்வித் திணைக்கள நிதியில் இருந்து கட்டப்பட்டுள்ளது.

## பாடசாலை அதிபர்கள் உபஅதிபர்கள் ஆசிரியர்களின் சேவை விபரம்

### அதிபர் சேவையின் முக்கியத்துவம்

ஓர் ஊருக்கு கோவிலும் வித்தியாலயமும் இரு கண்கள் போன்றன. கோவிலும் வித்தியாலயமும் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது மூதறிஞர் வாக்கு. ஓர் மாணவனைச் சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய மனிதனாக உருவாக்குவது பாடசாலைக் கல்வியாகும். பாடசாலைக் கல்வியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் முதனிலை முகாமையாளர் அதிபர் ஆவார். அவரின் செயற்பாட்டில் தான் பாடசாலையின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தங்கியிருக்கிறது என்பது யதார்த்த பூர்வமான உண்மையாகும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் வித்தியாலயத்தின் அதிபர்களின் வரலாற்றை நோக்குவது சிறப்பானதாகும்.

### திரு. எஸ். சரவணமுத்து

| | |
|---|---|
| காலம் | : 1926 – 1930 |
| கல்வித் தகைமை | : பயிற்றப்பட்ட தமிழ் முதலாந்தரம் , முதலாந் தர தலைமை ஆசிரியர் |
| வதிவிடம் | : வட்டுக்கோட்டை |

சேர். பொன். இராமநாதன் அவர்களை தலைவராகக் கொண்ட நேர்முகச் சபையினால் தெரிவு செய்யப்பட்டார். இவ்வித்தியாலயத்தின் முதல் அதிபர் என்ற பெருமைக்குரியவர். தமிழ், சைவம் ஆகிய பாடங்களில் புலமை மிகுந்தவர். இவ்வித்தியாலயத்தில் தங்கியிருந்து மாணவர்களுக்கும், வளர்ந்தோருக்கும் மாலை நேரங்களில் கல்வி கற்பித்து பெருமதிப்பைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசாமி சர்மா**

காலம் : 1931 – 1935

கல்வித் தகைமை : பண்டிதர், வித்துவான்

வதிவிடம் : இந்தியா (தமிழ் நாடு)

இவர் தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ், சைவ அறிவில் பாண்டித்தியம் பெற்றவர். இக்கல்லூரியின் முகாமையாளராக இருந்த சேர் பொன் இராமநாதன் அவர்களின் மருமகன் அமைச்சர் சு.நடேசபிள்ளை அவர்களின் ஆலோசனைப்படி இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் பாடசாலை வளாகத்தில் தங்கியிருந்து முழு நேரமாகக் கல்விப் பணியாற்றியவர்.

**திரு. கே. கே. பொன்னையா**

காலம் : 1936

கல்வித் தகைமை : பயிற்றப்பட்ட தமிழ் முதலாந் தரம்

வதிவிடம் : வடக்கு மிருசுவில்

மாணவர் கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் கவனம் செலுத்தினார்.

**திரு. மு. சி. சிற்றம்பலம்**



காலம் : 1937 – 1963

கல்வித் தகைமை : பயிற்றப்பட்ட முதலாந்தரம்,

முதலாந் தரத் தலைமை ஆசிரியர்


வதிவிடம் : உசன்

இவர் நாகர் கோவிலைப் பிறப்பிடமாகவும் உசனைப் புகுந்த இடமாகவும் கொண்டவர். இக்கல்லூரியின் வரலாற்றில் இவரது காலம் பொற்காலம் என்று கருதப்படுகின்றது. இவரது கம்பீரமான தோற்றம், தேசிய உடை, நெற்றியில் திருநீற்றுப் பூச்சு, சந்தனப் பொட்டு உற்சாகமூட்டும் இனிய பேச்சு, சீரிய நோக்கு சிறந்த பண்பாடு, கம்பீரமான நடை, இவை எல்லாம் இன்றும் நீங்கா நினைவுகளாக அமைபவை. இவர் தனது 27 ஆண்டு காலச் சேவையில் பாடசாலையின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி சமூகத்தாரோடும் ஒன்றிணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஆசிரியர் திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்களின் சேவை நலன் பாராட்டுவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கர்ம வீரனாகச் செயற்பட்டவர். இவரது காலத்தில் பாடசாலை சிரேஷ்ட நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டது. தான் ஓய்வு பெறும் முன் இப்பாடாசாலையை மகாவித்தியாலயமாக்க வேண்டுமென அரும்பாடுபட்டு 1963ஆம் ஆண்டு மகா வித்தியாலயம் ஆக்கினார்.



**திரு.எஸ்.சத்தியமூர்த்தி**

காலம் : 1963 – 1968

கல்வித்தகைமை : B.A.(Hons) Dip.In.Edu.

வதிவிடம் : சுன்னாகம்

பாடசாலை மகாவித்தியாலயமானபோது முதல் அதிபர் பொறுப்பை ஏற்றவர். கம்பீரமான தோற்றமுடையவர். இவ்வூரில் தங்கியிருந்து கல்விப் பணியாற்றியவர். க.பொ.த.(உ.த) வகுப்பை முதல் ஆரம்பித்தவர். ஆசிரியர்களது நன்மதிப்பைப் பெற்றவர். க.பொ.த.(உ.த.) வகுப்பில் நல்ல பெறுபேற்றை பெறப்பாடுபட்டவர். இவர் காலத்தில்தான் முதல் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது.

**திரு. எஸ். சிவலிங்கம்**

காலம் : ஒரு வாரம்

கல்வித் தகைமை : பயிற்றப்பட்ட 1ம் தராதரம், பண்டிதர் S.L.P.S. 1

சொந்த இடம் : நுணாவில்



**திரு. செ. சிவப்பிரகாசம்**

காலம் : 1968 – 1969


கல்வித் தகைமை : பயிற்றப்பட்ட 1ம் தராதரம், S.L.P.S.I

சொந்த இடம் : வரணி

நிர்வாகத் திறமை உடையவர். கல்வித் திணைக்களங்களில் இருந்து வளங்களை இப்பாடசாலைக்குக் குவித்தவர். முக்கியமாகக் கற்பித்தலில் சிறந்த ஆசிரியர் பலரை இப்பாடசாலைக்கு நியமித்த பெருமைக்குரியவர். பாடசாலைக்குரிய தளபாடங்களைத் திணைக்களத்தில் பெற்றவர். இவர் மாற்றம் பெற்று வரணி மகாவித்தியாலயத்திற்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. இ. கனகலிங்கம்**

காலம் : 1969 – 1970

கல்வித் தகைமை : B.Sc. Dip.In.Edu. S.L.E.S.III

சொந்த இடம் : யாழ்ப்பாணம்

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராக இருந்து இங்கு மாற்றப்பட்டார். விளையாட்டுத் துறையில் ஈடுபாடு உடையவர். இப்பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தியவர். இவர் காலத்தில் மாணவர் வரவு அதிகரித்துக் காணப்பட்டது. கற்றல் கற்பித்தலில் கவனம் செலுத்தியவர்.




**திருமதி எஸ். சிவசங்கரம்**

காலம் : 1970 – 1971

தராதரம் : B.A (Hons), Dip in Edu, SLES Class 3,MA

சொந்த இடம் : கரவெட்டி

இவர் கழுத்துறையில் உள்ள அளுத்கம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இக்கல்லூரிக்கு நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. மிகக் குறுகிய காலத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார்.



**திரு. வி. கே. நடராசா**

காலம் : 1971 – 1973

தராதரம் : B.A (Hons), Dip in Edu, SLES Class 3

வதிவிடம் : கரவெட்டி

இவர் மகாவித்தியாலயத்தின் பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும் சேவையாற்றியவர். இக்காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் மிகத் திருப்தியாக அமைந்ததுடன் பலர் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர். பண்டைய ஈழம் என்ற வரலாற்று நூலை எழுதியதுடன் அப்பாடத்தை இக்கல்லூரியில் கற்பித்து அதியுயர் பெறுபேறுகளைப் பெற வழி அமைத்தவர். பாடசாலையில் சிறந்த நிர்வாகியாகச் செயற்பட்டதுடன் இணைப்பாட விதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளுக்கும் புத்தூக்கம் அளித்தார். இவர் இங்கிருந்து கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரிக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்றார்.



**திரு. சி. சிவசரவணபவன் ("சிற்பி")**

காலம் : 1974 – 1984

தராதரம் : B.A (Hons), Dip in Edu, MA, SLES Class 3

வதிவிடம் : கந்தரோடை, சுன்னாகம்

இவர் சிறந்த கவிஞர், எழுத்தாளன், சொற்பொழிவாளன், சிறந்த ஆசிரியராகச் செயற்பட்டவர். இவர் புகழ் பிறந்த நாட்டில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் நிலைபெற்றிருந்தது. "சிற்பி" என்ற புனைபெயரிலே இலக்கிய உலகிற் பிரபல்யமானவர். இக்கல்லூரியில் இந்திய வரலாறு, ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களையும் சிறந்த முறையில் கற்பித்து தனக்கென ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கினார். இவர் ஊரில் வசித்து, பாடசாலையை வளர்ப்பதிலும் சைவவிழாக்களை ஒழுங்குபடுத்தி நடத்தியும் கூடிய கவனம் செலுத்தி வந்தார். சொற்பொழிவுகள் பட்டிமன்றங்கள் என்பவற்றை நடாத்தி சைவமும் தமிழும் பிரகாசிக்க அயராது பாடுபட்டார். இவருடைய காலத்தில், அமரரான அதிபர் சிற்றம்பலம் அவர்களை நினைவுகூர்ந்து அவரைக் கௌரவிக்கும் வகையில் சிற்றம்பலம் இல்லத்தை தாபித்தார். இக்கல்லூரியில் இன்று இசைக்கப்படும் கல்லூரிக் கீதத்தை அழகுற அமைத்தார். இதற்கு இசையமைத்த பெருமையும் இவருக்குரியதாகும். இவர் இங்கு 16 வருடம் சேவையாற்றி இப்பாடசாலையின் வளர்ச்சியிலும் இக்கிராம வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியவர். இவர் பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். உசன் கிராம மக்கள் எடுக்கும் விழாக்களிலும் உசன் மக்களின் இல்லங்களில் நடக்கும் வைபவங்களிலும் தவறாது பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது.



**திரு. த. சிவபாதசுந்தரம்**

காலம் : 1984 – 1990

தராதரம் : B.Sc. (Hons), Dip in Edu


வதிவிடம் : சாவகச்சேரி

இவர் யா / சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் உப அதிபராக இருந்து இக்கல்லூரிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக நியமிக்கப்பட்டவர். இவரது நிர்வாகத் திறமையாலும் அளப்பெரும் சேவையாலும் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றார். தென்மராட்சி கிழக்கில் உள்ள பத்துப் பாடசாலைகளுக்குக் கொத்தணி அதிபராக நியமிக்கப்பட்டார். உசன் கொத்தணி அதிபராக இருந்த காலத்தில் இக்கொத்தணிக்கான கொடியையும் கீதத்தையும் உருவாக்கியிருந்தார். இவர் காலத்தில்தான் இப் பாடசாலையின் தொழில் நுட்ப பாட அறைகள் திணைக்கள நிதி மூலம் கட்டப்பட்டன.



திரு. க. பேரம்பலம்

காலம் : 1991 – 1993

தராதரம் : பயிற்றப்பட்ட தமிழ் முதலாம் தரம் SLPS I

வதிவிடம் : உசன், மிருசுவில்

கீழ் தரப்படும் சேவைக் குறிப்புகள் இப்பாடசாலை ஆசிரியரும் பாடசாலை பழைய மாணவியுமான, திருமதி ஜெயக்கொடி மனோகரன் அவர்கள் சமர்ப்பித்த (பட்டப் பின் பரீட்சையின்) சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயமும் என்ற ஆராய்ச்சிக் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இவர் இக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் சிற்றம்பலம் அவர்களின் வாரிசாகவும் அவரின் நல்மாணாக்கனாகவும் கருதப்படுகின்றார். இவர் காலத்தில் கல்லூரியின் பௌதீகவளம் பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், சமூக உறவுகள் மேம்பட்டு இருந்தன. உயர்தர மாணவர் மன்றத்தின் அனுசரணையுடன் கலைவிழா நடத்தப்பட்டு கல்லூரியின் நூலகம் விஸ்தரிக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இடைநிலை வகுப்பிற்கான கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. பழைய மாணவர் சங்கம் புனரமைக்கப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்டது. இவரின் முயற்சியினால் விளையாட்டு மைதானம் புதுப்பிக்கப்பட்டது. நிர்வாகத்தைப் பரவலாக்கி பொறுப்புக்களை பகிர்ந்தளித்து அவர்கள் மூலம் கல்லூரியின் வினைத்திறனை அதிகரித்தார். இவர் உசன் கொத்தணி அதிபராக இருந்து கொத்தணிப் பாடசாலைகளைச் சிறந்த முறையில் மேற்பார்வை செய்து அதிபர்களுக்கு வழிகாட்டி மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இக்கல்லூரி ஸ்தாபகரின் நோக்கங்களை மனதிற்கொண்டு செயற்பட்டதாலும் முருகப் பெருமானின் திருவருளினாலும் பதவியுயர்வு பெற்று தென்மராட்சி வலயத்தின் உதவிக்கல்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.



**திரு. ஐ. வரதராசா**

காலம் : 1983 – 2002

தராதரம் : B.A, Dip in Edu, S.L.P.S. 1

வதிவிடம் : எழுதுமட்டுவாழ்

இவர் யா / எழுதமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து மாற்றம் பெற்று இப்பாடசாலையின் அதிபராகவும் உசன் கொத்தணி அதிபராகவும், பதவி உயர்வு பெற்றார். இவர் இப்பாடசாலைக்கு அதிபராக வருவதற்கு முன்னர் பட்டதாரி ஆசிரியராக 9 ஆண்டுகள் இக்கல்லூரியில் கடமையாற்றியுள்ளார். இக்காலத்தில் நாடகத்துறை, பட்டி மன்றம், பேச்சாற்றல் மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்தி தனக்கென்றொரு மாணவ பரம்பரையை உருவாக்கினார். இவருடைய காலத்தில் கொத்தணி முறை நீக்கப்பட்டமையினால் தனது பாடசாலையில் முழுக்கவனத்தையும் செலுத்தி கற்றல் கற்பித்தலை மேம்படுத்தினார். இவர் காலத்தில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் கட்டிய கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. மாணவர்களின் ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு, நேரமுகாமைத்துவம் போன்றவற்றைக் கடைப்பிடித்து சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவர் இக்கல்லூரியின் பரீட்சைப்பெறுபேறு, இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்திய வேளையில் பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டு, மாணவர்கள் பல பகுதிகளுக்கும் செல்லவே மாணவர் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இக்காலத்தில் இவரும் இக்கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றார்.

8160 c.c



**திரு. கே. சுப்பிரமணியம்**

காலம் : 2003 – 2004

தராதரம் : B.A, Dip in Edu, S.L.P.S 1

இவர் யா / மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் பெற்று வந்தார். பழைய மாணவர் சங்கம். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் ஆதரவுடன் பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துக்கொண்டு இருந்தபோது யா / வரணி மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. ந. நவரத்தினராசா**

காலம் : 2004 தொடக்கம் இன்று வரை

தராதரம் : B.A, Dip in Edu, S.L.P.S I

பதிவிடம் : கொடிகாமம்

இவர் யா / வரணி மகாவித்தியாலயத்தில் இருந்து இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டவர் பாடசாலையில் பல்வேறு செயற்றிட்டங்களை சமூகத்தோடு இணைந்து மேற்கொண்டவர். பாடசாலையின் உட்பகுதியில் நவீன பூங்காவை உருவாக்கி கவர்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் சூழலுக்கு வழிவகுத்துள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் உசன் மக்கள் பாடசாலை அபிவிருத்திக்கென்று நிதி அன்பளிப்புச் செய்தனர். மக்கள் மண்டபம் லண்டன் கனக தூர்க்கா ஆலயத்தின் சார்பில் இப் பாடசாலை பழைய மாணவன் வைத்தியக் கலாநிதி வே. பரமானந்தம் அவர்களால் நவீன மயமாக்கப்பட்டது.

இப்பாடசாலையின் பௌதிக வளங்களைப் பின்வருவோர் அன்பளிப்புச் செய்துள்ளனர் எனப் பாடசாலை அதிபர் திரு. ந. நவரத்தினராசா பட்டியலிட்டு என்னிடம் தந்துள்ளார்

மணிமண்டபம், மனமகிழ் மன்றத்தினர் கட்டிய பிரார்த்தனை மண்டபத்திற்கு வெளியே பிரேமருபன் ஞாபகார்த்தமாக இவரின் தாய் திருமதி கணபதிப்பிள்ளை நாகரத்தினம் (சுவர்ணம் அம்மா) அவர்கள் கட்டி அன்பளிப்புச் செய்துள்ளார். பாடசாலை மேற்குப்பக்க மதிலை இப்பாடசாலையின் பழைய மாணவர் திரு.நிமலன் என்பவர் கட்டி அன்பளிப்புச் செய்துள்ளார். முகப்பு வளைவு இளைஞர் ஒன்றியத்தின் சார்பில் டாக்டர் ஜெயராமயமோகன் அன்பளிப்புச் செய்துள்ளார். நுழைவாயில் கதவினை அமரர் திரு.சி.பத்மநாதன் ஞாபகார்த்தமாக அவர் மகன் திரு.சுகந்தன் அன்பளிப்புச் செய்துள்ளார். ஒலிபெருக்கி சாதனத்தை இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், அமரருமான திரு.சி.கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர். டென்மார்க் இத்தாலியில் வசிக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவன் திரு.சசிகாந்தன் அன்பளிப்புச் செய்துள்ளார். D.V.D பிளேயரை இப்பாடசாலையின் பழைய மாணவரும் இவ்வூரைச் சேர்ந்தவருமான திரு.சு.இரவீந்திரன் அன்பளிப்புச் செய்துள்ளார். C.D பிளேயரைக் கொடிகாமத்தைச் சேர்ந்த திரு.சீலன் அன்பளிப்புச் செய்துள்ளார். தொலைபேசியை இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் அமரருமான திருமதி.பு.குமாரசாமி ஞாபகார்த்தமாக மகன் திரு.கு.இராஜேந்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்புச் செய்துள்ளார். நிழற்படப் பிரதி இயந்திரத்தைப் பண்டிதர் சி.சரவணமுத்து அவர்களின் 80 ஆவது பிறந்ததினப் பரிசாக அவரின் பிள்ளைகள் வழங்கியுள்ளனர். நீர்தடாகம் இவ்வூரைச் சேர்ந்தவரும் கனடாவில் வாழ்பவர்களுமான திரு.சு.குகநாதன் குடும்பத்தினரின் அன்பளிப்பு நிதியில் இருந்து கட்டப்பட்டுள்ளது. கனடாவாழ் உசன் மக்கள் ஒன்றியத்தின் அன்பளிப்பு நிதியில் இருந்து பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதி கணனி அறையாக அமைக்கப்பட்டு பின்வரும் பொருட்களும் வாங்கப்பட்டன. தொலைக்காட்சிப் பெட்டி, பிறிண்டர், நான்கு கணனி மேசைகள், 3000 w மின் பிறப்பாக்கி, F.M. மைக், உபகரணங்கள் இதில் அடங்கும். ஒலி, ஒளி கூடம், மின் இணைப்பு இவ்வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கம் செய்து கொடுத்துள்ளது.

கபேட், அலுமாரி, புத்தகம் என்பவற்றைப் பின்வருவோர் அன்பளிப்புச் செய்துள்ளனர். திருவாளர்கள் வை.பிரதாபன் (பிரான்ஸ்) த.குமாரலிங்கம் (அவுஸ்திரேலியா) திருமதி.சி.ஜெயந்த் (சுவிஸ்) திருவாளர்கள் தா.சிவகுருநாதன் (இலண்டன்) ஐ.கமலாதரன் (இத்தாலி) கு.ஜீவானந்தராசா (பிரான்ஸ்) து.சந்திரமோகன் (இலண்டன்) பண்டிதர் சி.சரவணமுத்து (அமெரிக்கா) சிறிதரன் (சுவிஸ்)

அதிபர் திரு.ந.நவரத்தினம் அவர்கள் காலத்தில் சேர்.பொன் இராமநாதன் சிலையும், சரஸ்வதி சிலையும் அமைக்கப்பட்டன.

உசன் இராமநாதன் மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையில் பலகாலம் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து நல்ல பல ஆலோசனைகள் வழங்கியவர்கள் பலர். குறிப்பாக திருவாளர்கள் தி.வல்லிபுரம், நா.கார்த்திகேசு, திரு.இராமநாதன். இவ்வாறு பல்வேறு தந்திரோபாயத்திட்டங்களை மேற்கொண்டு மாணவரின் தேர்ச்சி மட்டத்தை அதிகரிக்க முற்பட்ட வேளை நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்லூரி யா/போக்கட்டி றோ. க. பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

## உப அதிபர்கள்

பாடசாலைகளில் அதிபர் சேவை திறம்பட செயற்பட உதவுபவர் உப அதிபராவார். பாடசாலைகளில் அதிபர் இல்லாத இடத்து பாடசாலைப் பொறுப்பை ஏற்று நடாத்தவேண்டியவராக இவர் இருக்கின்றார். பொறுப்பும் கடைமை உணர்ச்சியும் உள்ளவராக உப அதிபர் இருக்க வேண்டும். இவ்வகையில் இப்பாடசாலையில் கடமையாற்றிய உப அதிபர்கள் வரலாறு வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் எஸ். கே. தம்பு



காலம் : 1948 – 1968

கல்வித் தராதரம் : பயிற்றப்பட்ட முதலாந்தரம், பண்டிதர் S.T.P.S. III

இடம் : வடக்கு மிருசுவில்

இவர் இப்பாடசாலையில் கல்விகற்றவர். இப்பாடசாலையின் முகாமையாளராக இருந்த மந்திரி நடேசபிள்ளை அவர்களின் மேற்பார்வையில் இருந்த பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியகலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றதுடன் மதுரைப் பண்டிதர் பட்டமும் பெற்றவர். முகாமையாளர் நடேசன் அவர்களால் இப்பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றவர். உயர்வகுப்புக்களில் எந்தப் பாடத்தையும் திறமையாகக் கற்பிப்பதில் வல்லவர். தலைமையாசிரியர் திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்களின் கீழ் உப அதிபராக நியமனம் பெற்றவர். சிறந்த நிர்வாகி திரு. மு. சி. சிற்றம்பலம் அவர்கள் இவரைத் 'தம்பி' என அன்பாக அழைப்பார். காலை 8 மணிக்கு பாடசாலைக்கு வந்து மாலை 5 மணி வரை பாடசாலையில் இருந்து பொறுப்புடன் கடமையாற்றியவர். எப்போதும் வெள்ளிற தேசிய உடையில் காட்சி அளிப்பார். இவர் கற்பித்த பாடங்களின் பெறுபேறுகள் மிகச் சிறந்தவையாக காணப்பட்டன. கலைஞர், நாடக ஆசிரியர், நாடகங்களை நெறிப்படுத்துபவர். இப்பாடசாலையின் வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்குண்டு. இவர் இங்கிருந்து பதவி உயர்ச்சி பெற்று புகலாவை சரஸ்வதி மகா வித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார்.

இவருக்குப் பின் இங்கு பகுதித் தலைவர்களாக இருந்து கடமையாற்றிய திருவாளர்கள் வி. கே. நடராசா, சி. சரவணபவன் ("சிற்பி") ஆகியோர் 1969 – 1973 வரை உப அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர். இவர்களது கல்விச் சேவை விபரங்கள் அதிபர் சேவையில் இடம் பெற்றுள்ளன.

**திரு. எஸ். குலசிங்கம்**

தராதரம் : பயிற்றப்பட்ட தமிழ், பயிற்றப்பட்ட ஆங்கிலம் தரம் 1

சொந்த இடம் : எழுதுமட்டுவாழ்

இவர் ஆங்கில ஆசிரியராக இருந்தாலும், பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியதராதரமும் பெற்றிருந்தார். விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார். மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருந்து நிர்வாகப் பொறுப்பை அதிபர் இல்லாதவிடத்து ஏற்று நடாத்தியவர். எல்லோரது நன்மதிப்பையும் பெற்றவர். இவர் இங்கு கடமையாற்றிய காலத்தில் அமரத்துவம் எய்தினார்.

### திரு. யோ. யோன்பிள்ளை

தராதரம் : TT1, B.A, Dip in Edu

சொந்த இடம் : உசன்

இவர் கற்பித்தலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற வழி வகுத்தவர். அமைதியான சுபாவமுடையவர். யாவருடனும் அன்பாகப் பழகுபவர். புவியியல், சமூகக் கல்விப் பாடங்களைச் சிறந்த முறையில் கற்பித்தவர். உயர்தர மாணவர் மன்றச் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர். கொத்தணி அதிபர் இல்லாத இடத்து பாடசாலை நிர்வாகத்தை ஏற்று சிறந்த முறையில் நடாத்தியவர். நடிகர், நாடக ஆசிரியர். இவர் பின்பு முதலாந்தர அதிபர் பதவி உயர்ச்சி பெற்று மிருசுவில் றோ. க. பாடசாலை அதிபராகி நியமனம் பெற்றார். சிறிது காலத்தின் பின் இவர் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். அங்கு கடமையாற்றும் போது ஓய்வு பெற்றவர்.

### திரு. எஸ். செல்வச்சந்திரன்

தராதரம் : கணித விசேட பயிற்சி

சொந்த இடம் : உடுப்பிட்டி

இவர் இப்பாடசாலையில் 15 வருடங்களுக்கு மேல் கணித ஆசிரியராக இருந்து பிள்ளைகளின் கணிதபாட அடைவு மட்டத்தை கூட்டியவர். மதிநுட்பம் படைத்தவர். கொடுத்த பொறுப்பைத் திறம்படச் செய்யும் ஆற்றல் படைத்தவர். இவர் இங்குள்ள பிள்ளைகளின் பெற்றோர்களையும் நன்கறிந்தவர். மிகத்துடிப்புடன் செயற்பட்டவர். விளையாட்டுத் துறையிலும் தேர்ச்சி பெற்றவர். இப் பாடசாலையில் ஒழுக்காற்றுத் துறைக்குப் பொறுப்பாக இருந்தவர். சிறந்த நிர்வாகியெனக் கல்வித் திணைக்களத்தால் பாராட்டப்பட்டவர். அதிபர் கொத்தணிப் பாடசாலைகளுக்கு மேற்பார்வைக்குச் செல்லும் காலங்களில் பாடசாலை நிர்வாகத்தைத் திறம்படச் செய்தவர். இவரின் நிர்வாகத் திறமையை நன்கறிந்த கல்வித் திணைக்களத்தினர் இவரைப் பதவி உயர்த்தி எழுதுமட்டுவாழ் அரசினர் வித்தியாலயத்தின் அதிபராக நியமித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. அ. அகிலதாஸ்**

தராதரம் : B.A, Dip in Edu, S.L.P.S II

சொந்த இடம் : ஒட்டுவெளி, எழுதுமட்டுவாழ்

இவர் இப்பாடசாலையின் பழைய மாணவர். இங்கிருந்தே பல்கலைக்கழகம் சென்றவர். இப்பாடசாலையின் நல்ல ஆசிரியர் என போற்றப்பட்டவர். இப்பாடசாலையில் பற்றுறுதி கொண்டவர். இவர்காலத்தில் இப் பாடசாலையில் உயர்தர மாணவர் மன்றத்தின் செயற்பாட்டில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தார். க.பொ.த உயர் வகுப்புக்களின் பகுதித் தலைவராக கடமையாற்றினார். இப்பாடசாலையின் நூலக அபிவிருத்திக்கு பல திட்டங்களைச் செயற்படுத்தியவர். இவர் அதிபர் சேவை II ல் சித்தியடைந்த போதும் வேறு பாடசாலைக்கு பதவி உயர்ச்சி பெற்றுச் செல்லாது, இப்பாடசாலையில் சில காலம் உப அதிபராகக் கடமையாற்றியவர். எதிர் காலத்தில் இப்பாடசாலையின் அதிபராக வரவேண்டுமென இவ்வூர் மக்கள் விரும்பிய போதும் இவரை வெற்றிடமாக உள்ள கச்சாய் அரசினர் வித்தியாலயத்தின் அதிபராகக் கல்வித் திணைக்களம் நியமித்தது. இன்று இவர் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் புகழ் பூத்த அதிபராக இருந்து வருகின்றார்.

**திரு. வே. நாகராசா**

தராதரம் : B.A, Dip in Edu

சொந்த இடம் : வடக்கு எழுதுமட்டுவாழ்

இவர் கற்பித்தலில் ஆற்றல் உள்ள ஆசிரியர், மிக அமைதியானவர். பாடசாலையின் நிர்வாகத்துக்கு உதவியாக இருந்தவர். உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்பித்தலில் பெரும் பங்காற்றியவர். இப்பாடசாலையின் பரீட்சைகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டவர். இவர் அதிபர் திரு. ஐ. வரதராசா காலத்தில் உப அதிபராக கடமையாற்றியவர். இவர் பின்பு சாவகச்சேரி கல்வி வலையத்தில் சமூகக்கல்விப் பாடத்தின் சேவைக்கால ஆலோசக ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்.

**திரு. சி . மனோகரன்**

தராதரம் : B.A, Dip in Edu. M.Phil

சொந்த இடம் : சண்டிலிப்பாய்

கல்விச் செயற்பாட்டில் புது முறைகளைக் கண்டறிய வேண்டும் என்னும் ஆர்வம் நிறைந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சேவையாற்றி வருபவர். ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகுபவர். அதிபர் கொடுத்த பொறுப்புக்களைத் திட்டமிட்டுச் செய்பவர். தூர இடத்தில் இருந்தாலும் நேரத்துடன் வந்து தமது கடமையைச் செய்பவர்.


## உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர் விபரம் 1937–2007

ஆசிரியப்பணி தெய்வீகப்பணி, பொறுப்பானபணி, மிகக்கடினமானபணி என்பது கல்வியியலாளர் கருத்து. ஓர் நல்லாசிரியனை சமூகம் என்றும் மறப்பதில்லை. சமூகத்தில் ஓர் மதிப்பான இடத்தை ஆசிரியர் பெறுகின்றார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை சமூகத்தில் ஓர் நற் பிரசையாக்குவது ஆசிரியரின் பெருங்கடமையாகும். அந்தவகையில் தலைமையாசிரியர் சிற்றம்பலம் அவர்காலத்தில் இருந்து தற்போதைய காலம் வரை கடமையாற்றி மாணவர்களின் உயர்ச்சிக்கு ஏணியாக இருந்த ஆசிரியர்களின் விபரம் குறிப்பிடப்படுகின்றது. ( மிகக் குறுகிய காலம் கடமையாற்றிய ஆசிரியர்கள் பெயர்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை)

| | | |
|---|---|---|
| பண்டிதர் எஸ். வேலுப்பிள்ளை | : | கல்வயல் |
| பண்டிதர் எஸ். சிதம்பரப்பிள்ளை | : | இடைக்காடு |
| பண்டிதர் எஸ். கே. தம்பு | : | வடக்கு மிருசுவில் |
| திரு. த. சரவணமுத்து | : | உசன் |
| திரு. கே. ஐயாத்துரை | : | அரியாலை |
| திரு. கே. கந்தையா | : | மட்டுவில் |
| திரு. எஸ். குமாரவேலு | : | மட்டுவில் |
| திரு. கே. கந்தசுவாமி | : | திருநெல்வேலி |
| திரு. மகாராசா | : | நுணாவில் |
| திரு. வி. பேரின்பநாயகம் | : | நுணாவில் |
| திருமதி. நா. பரமசாமி | : | நுணாவில் |
| திருமதி. என். தையல்நாயகி | : | மீசாலை |
| பண்டிதர் சி. சரவணமுத்து | : | உசன் |
| திரு. ஆ. கந்தர் | : | உசன் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவி ஆசிரியர்கள் திருவாளர்கள்

ஐ. சுந்தரர், சி. கணபதிப்பிள்ளை ஆகியோரின் சேவை நயப்பு



உதவி ஆசிரியர் திரு. த. ஞானசமுந்தர அவர்களின் சேவைநலன் பாராட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு. சி. கணபதிப்பிள்ளை | : | உசன் |
| திருமதி. க. தம்பிப்பிள்ளை | : | உசன் |
| திருமதி. தெ. பேரம்பலம் | : | உசன் |
| திருமதி. பரமேஸ்வரன் | : | தெல்லிப்பளை |
| திருமதி. செ. பாக்கியம் | : | மிருசுவில் |
| திருமதி. ப. அழகரத்தினம் | : | சாவகச்சேரி |
| திருமதி. சி. சுப்பிரமணியம் | : | உசன் |
| திருமதி. மகாராணி | : | மீசாலை |
| செல்வி. உ. கணபதிப்பிள்ளை | : | உசன் |
| செல்வி. கந்தையா | : | அரியாலை |
| திரு. சி. கணேசலிங்கம் | : | மீசாலை |
| திரு. ஆர். மயில்வாகனம்பிள்ளை | : | வல்வெட்டித்துறை |
| திரு. ச. பேரம்பலம் | : | உசன் |
| திரு. ஏ. தங்கராசா | : | அரியாலை |
| திரு. ரி. புவனசுந்தரம் | : | திருநெல்வேலி |
| திரு. சி. சிவசரவணபவன்("சிற்பி") | : | கந்தரோடை |
| திரு. வி. கே. நடராசா | : | கரவெட்டி |
| திருமதி.சி.சின்னத்தம்பி | : | உசன் |
| திரு. க. தாமோதரம்பிள்ளை | : | உசன் |
| திருமதி. பொ. யோன்பிள்ளை | : | உசன் |
| திருமதி. சி. கதிரித்தம்பி | : | உசன் |
| திருமதி. க. கார்த்திகேசு | : | உசன் |
| திரு. வே. பஞ்சாட்சரம் | : | மீசாலை |
| திரு. கே. மார்க்கண்டு | : | மீசாலை |
| திரு. வல்லிபுரநாதன் | : | கொடிகாமம் |
| திரு. த. செல்லப்பா | : | மட்டுவில் |
| திரு. து .நடராஜலிங்கம் | : | எழுதுமட்டுவாழ் |
| பிரம்மஸ்ரீ சோ.சுப்பிரமணிய ஐயர் | : | சாவகச்சேரி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| திருவாட்டி பு.சிவராசபிள்ளை | : | மீசாலை |
| திரு.அ.நடேசபிள்ளை | : | புலோலி |
| திரு.பொ.சற்குணநாதன் | : | உசன் |
| திருமதி.லி.சுப்பிரமணியம் | : | உசன் |
| திரு.எஸ்.பரம்சோதி | : | உசன் |
| திருமதி. சூசை மரியதாசன் | : | உசன் |
| திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா | : | வடக்கு மிருசுவில் |
| திரு. வி. பரமானந்தம் | : | வடக்கு மிருசுவில் |
| திரு. ஐ. வரதராசா | : | எழுதுமட்டுவாழ் |
| திரு. க. பேரம்பலம் | : | உசன் |
| திரு. கிறிஸ்தோபர் | : | பளை |
| திரு. ஆர்.சி. யோசெப்பு | : | படித்த மகளிர் திட்டம், மிருசுவில் |
| திருமதி. லூர்ட்ஸ் நவரத்தினம் | : | மிருசுவில் |
| திருமதி. பு. நவரத்தினம் | : | படித்த மகளிர் திட்டம், மிருசுவில் |
| திருமதி. இ. ஞானசோதி | : | மிருசுவில் |
| திரு. சோ. ஸ்ரீகாந்தன் | : | உசன் |
| திரு. எஸ். செல்வச்சந்திரன் | : | படித்த மகளிர் திட்டம், மிருசுவில் |
| திருமதி. பு. குமாரசாமி | : | உசன் |
| திருமதி. ஆர். சிவலோகநாதன் | : | உசன் |
| திருமதி. சி. ஸ்ரீராமநாதன் | : | உசன் |
| திருமதி. ச. சுப்பிரமணியம் | : | கரம்பகம் |
| திரு. வி. மார்க்கண்டு | : | உசன் |
| திருமதி. மு. மார்க்கண்டு | : | உசன் |
| திரு. கே. வெற்றிவேலு | : | உசன் |
| திரு. எஸ். குலசிங்கம் | : | எழுதுமட்டுவாழ் |
| திரு. ஏ. எக்ஸ். அலெக்ஸ்சாந்தர் | : | மிருசுவில் |
| திருமதி. லீ. குகபாலன் | : | உசன் |
| திரு. ஆ. சோதிலிங்கம் | : | எழுதுமட்டுவாழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவி ஆசிரியர் திருமதி நாகம்மா பரமசாமி அவர்களின் சேவைநலன் பாராட்டு



உதவி ஆசிரியர் திரு. கே. கந்தையா அவர்கள் சேவை நலன் பாராட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செல்வி. ப. பொன்னையா | : | மாவிட்டபுரம் |
| திருமதி. மகாரஞ்சிதம் | : | மீசாலை |
| திருமதி. இ. பாலசுப்பிரமணியம் | : | உசன் |
| திரு. கே. தம்பு | : | அல்லாரை |
| திரு. ந. நவரத்தினராசா | : | கொடிகாமம் |
| திருமதி. புஸ்பலதா | : | படித்த மகளிர் திட்டம், மிருசுவில் |
| திருமதி. தருமலிங்கம் | : | தவசிகுளம் |
| திரு. அ. அகிலதாஸ் | : | ஒட்டுவெளி |
| திருமதி. நாகேஸ்வரி | : | உசன் |
| திருமதி. ஞா. சுப்பிரமணியம் | : | உசன் |
| செல்வி. த. கணேசு | : | விடத்தற்பளை |
| திரு. மோகனதாஸ் | : | மீசாலை |
| செல்வி. ப. இளையதம்பி | : | விடத்தற்பளை |
| திரு. வே. நாகராசா | : | எழுதுமட்டுவாழ் வடக்கு |
| திருமதி. த. குகதாசன் | : | உசன் |
| திரு. செ. சிவப்பிரகாசம் | : | முகமாலை |
| திரு. க. சிவகோசரியர் | : | கொடிகாமம் |
| திரு. எஸ். ஆர். மகேந்திரன் | : | மீசாலை |
| திருமதி. சோ. திருஞானமூர்த்தி | : | முகமாலை |
| திரு. எஸ். ஆர். மகேந்திரன் | : | நுணாவில் |
| செல்வி. இ. சிவமணி | : | உசன் |
| திருமதி. த. யோகராசா | : | உசன் |
| செல்வி. சு. பாலசுப்பிரமணியம் | : | உசன் |
| செல்வி. வி. ஒப்பிலாமணி | : | உசன் |
| திருமதி. செ. தர்மகுலசிங்கம் | : | உசன் |
| திருமதி. செ. மனோகரன் | : | மிருசுவில் |
| திருமதி. மாலினி | : | வடக்கு மிருசுவில் |
| திரு. எம். பாஸ்கரன் | : | கல்வயல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவி ஆசிரியர் திருமதி தெ. பேரம்பலம் அவர்களின் சேவைநலன் பாராட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செல்வி. கு. பாலசிங்கம் | : | உசன் |
| திரு. செ.செல்வரஞ்சன் | : | எழுதுமட்டுவாழ் |
| திரு. அ. நடராசா | : | உசன் |
| திருமதி.பு.சிவராசபிள்ளை | : | மீசாலை |
| திரு.மயில்வாகனம் | : | மீசாலை |
| திரு.இ. சாம் | : | உசன் |
| திரு.ஐ.மகேந்திரம் | : | விடத்தற்பளை |
| திரு.சி.சிவகரன் | : | உசன் |
| திரு.தி.கிரிதரன் | : | எழுதுமட்டுவாழ் |
| திரு.க.சிவப்பிரகாசம் | : | உசன் |
| திரு.மு.சுவாமிநாதன் | : | உசன் |
| திரு.ச.லலீசன் | | |
| திரு.வெ.சிவப்பிரகாசம் | | |
| திரு.எஸ்.மனோகரன் | : | சண்டிலிப்பாய் |
| திருமதி.பி.சண்முகம் | : | மீசாலை |
| திருமதி.ந.நந்தகுமார் | | |
| திரு.ந.பாலசுப்பிரமணியம் | | |
| செல்வி.க.சுபாசினி | : | எழுதுமட்டுவாழ் |
| திரு.க.குகதாசன் | : | மீசாலை |
| திருமதி.பா.சிவகரன் | : | உசன் |
| திருமதி.சி.சிவகுமார் | : | உசன் |
| செல்வி.த.றஜிதா | : | மீசாலை |
| திருமதி. ப. அமிர்தலிங்கம் | : | வடக்கு மிருசுவில் |
| திருமதி.ந.ஜென்சன் றொனால்ட் | : | உசன் |
| செல்வி த.சுந்தரரூபி | : | உசன் |
| செல்வி க. தவசொரூபி | : | விடத்தற்பளை |
| திருமதி.மா.அமிர்தலிங்கம் | : | கொடிகாமம் |
| செல்வி.கோ.நிரஞ்சினி | : | கச்சாய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி.இ.பிரபாகரன் | : | உசன் |
| செல்வி.தி.இராகினி | : | வடமராட்சி |
| செல்வி பா.குகதர்சினி | : | மிருசுவில் படித்த மகளிர் திட்டம் |
| செல்வி சி.இரஞ்சிதமலர் | : | கொடிகாமம் |
| திருமதி.க. கிறிஸ்ரீன் இரஞ்சன் | : | மிருசுவில் |
| திருமதி.செ.தனபாலசிங்கம் | : | உசன் |
| திரு.ந.அன்பழகன் | : | கொடிகாமம் |
| திரு.ப. அசோகன் | : | வடக்கு மிருசுவில் |
| திரு.ஆனந்தசிவம் | | |

**கல்விசாரா உத்தியோகத்தர்கள்**

திரு.ரி.திருநாவுக்கரசு

திரு.வரதன்

திருமதி.வி.பாலசுப்பிரமணியம்

திரு.கணேசலிங்கம்

செல்வி.மு.கமலாம்பிகை

திரு.யோகானந்தன்

**கூடிய காலம் கடமையாற்றிய அதிபர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. மு. சி. சிற்றம்பலம் | – | 27 வருடங்கள் |
| 2. | திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) | – | 11 வருடங்கள் |
| 3. | திரு. ஐ. வரதராசா | – | 10 வருடங்கள் |

**கூடிய காலம் சேவையாற்றிய உப அதிபர்கள்**

1. பண்டிதர் எஸ். கே. தம்பு அவர்கள் – 20 வருடங்கள்

**கூடிய காலம் சேவையாற்றிய ஆசிரியர்கள் விபரம் : 30 – 33 வருடங்கள்**

திருமதி தெ. பேரம்பலம்

திருமதி. க. தம்பிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. பொ. யோன்பிள்ளை

திருமதி.க.தம்பிப்பிள்ளை

திருமதி. ஜெ. ஶ்ரீராமநாதன்

**கூடிய காலம் சேவையாற்றிய ஆசிரியர்கள் : 25 - 29 வருடங்கள்**

திருமதி. எஸ். சிவலோகநாதன்

திருமதி. சி. கதிரித்தம்பி

திருமதி. க. கார்த்திகேசு

திரு. ச. பேரம்பலம் (சங்கீத ஆசிரியர்)

திருமதி. தர்மலிங்கம்

திருமதி. சிவசுப்பிரமணியம்

**இப்பாடசாலையில் அதிபர் தரங்களுடன் கடமையாற்றியோர்கள்**

1. பண்டிதர் எஸ். கே. தம்பு அவர்கள் அதிபர் தரம் III உப அதிபர் 20 வருடங்கள்
2. திரு. ஐ. மாணிக்கம் அவர்கள் அதிபர் தரம் III கனிட்ட அதிபர் 2 வருடங்கள்
3. பண்டிதர் சி. சரவணமுத்து அவர்கள் அதிபர் தரம் III கனிட்ட அதிபர் 8 வருடங்கள்
4. திரு. ஐ. சின்னையா அவர்கள் அதிபர் தரம் II ஒரு வருடம்

**உசன் கொத்தணி**

கல்வி அமைச்சின் நிர்வாக மாற்றத்தின்படி வட்டாரக் கல்வி அதிகாரிகளின் நிர்வாகம் ஒழிக்கப்பட்டுக் கொத்தணி முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் பிரகாரம் தென்மராட்சிக் கல்வி வட்டாரத்தில் 1988 ஆம் ஆண்டு உசன் கொத்தணி முதலில் ஆரம்பிக்கப்பட்டது. உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தை மூலாதாரப்பாடசாலையாகக் கொண்டு ஒன்பது அங்கத்துவப் பாடசாலைகள் இவ்வமைப்பின் கீழ் இயங்கின. மூலாதாரப் பாடசாலை அதிபரே அங்கத்துவப் பாடசாலைகளை மேற்பார்வை செய்தார். வட்டாரக் கல்வி அதிகாரி அவர்களின் அதிகாரங்கள் கொத்தணி மூலாதாரப் பாடசாலை அதிபருக்கிருந்தன. இதனால் மூலாதாரப் பாடசாலை அதிபர் கொத்தணி அதிபரென்ற பெயருடன் தமது கடமைகளை செய்து வந்தார். உசன் கொத்தணி அதிபராக முதலில் இருந்தவர் திரு. க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாதசுந்தரம் அவர்கள் ஆவார். உசன் கொத்தணியின் அங்கத்துவப் பாடசாலைகளாகப் பின்வரும் பாடசாலைகள் இருந்தன.

1. எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயம்
2. எழுதுமட்டுவாழ் அரசினர் வித்தியாலயம்
3. மிருசுவில் அரசினர் வித்தியாலயம்
4. மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
5. விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
6. கெற்பெலி அரசினர் வித்தியாலயம்
7. கரம்பகம் அரசினர் வித்தியாலயம்
8. ஒட்டுவெளி அமெரிக்கமிசன் பாடசாலை
9. எழுதுமட்டுவாழ் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை

கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் மூலாதாரப் பாடசாலையில் நடைபெறும். கொத்தணி அதிபரின் காரியாலயமும் மூலாதாரப் பாடசாலையில் இருந்தது. கொத்தணி அதிபரின் உதவியாளராக ஒரு ஆசிரியர் கடமையாற்றுவார். இவர் கொத்தணி அதிபரின் காரியாலயத்தில் இருந்து கடமையாற்றுவார். கொத்தணி அதிபருக்குக் கீழ் அங்கத்துவப் பாடசாலைகளில் ஒரு அதிபர், கொத்தணி உப அதிபராகக் கடமையாற்றுவார். கொத்தணி அதிபர் விடுமுறையில் நிற்குங் காலங்களில் இவரின் கடமைகளைக் கொத்தணி உப அதிபர் செய்வார். கொத்தணிக்கென்று ஓர் கொடி, கொத்தணிப் பாடசாலைக் கீதம், கொத்தணிக்கென்று ஓர் இலச்சினை என்பனவும் இருந்தன. கொத்தணி நிகழ்ச்சிகள் யாவும் மூலாதாரப் பாடசாலையில் நடைபெற்றன.

உசன் கொத்தணி அதிபர்களாக முறையே திருவாளர்கள் க. சிவபாதசுந்தரம், க. பேரம்பலம், ஐ. வரதராசா ஆகியோர் கடமையாற்றினர். உசன் கொத்தணி உப அதிபராக எழுதுமட்டுவாழ் அரசினர் பாடசாலை அதிபர் திரு.வே.மார்க்கண்டு கடமையாற்றினார். கொத்தணி உதவியாளராக முறையே திருவாளர்கள் செ.சிவப்பிரகாசம், ஏ.எஸ்.அன்ரன் ஆகியோர் கடமையாற்றினர். கொத்தணி முறை பின்பு மாற்றப்பட்டு கோட்டக்கல்வி அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையின் பரீட்சைகளின் அடைவு மட்டமும் (பரீட்சைப்பெறு பேறுகள்) அதன் மூலம் இங்கு கல்வி கற்றவர்கள் பெற்ற தொழில் வாய்ப்புக்களும்**

146 மாணவர்களைக் கொண்டு ஆரம்பமான இப்பாடசாலையில் 1992ம் ஆண்டு ஆரம்ப வகுப்புக்களில் (I - V) 334 மாணவர்களும் இடைநிலை வகுப்புக்களில் (VI - XI) 530 மாணவர்களும் உயர்தர வகுப்புகளில் கலை, வர்த்தகம் ஆகியவற்றில் 88 மாணவர்களும் சேர்ந்து மொத்தமாக 952 மாணவர்கள் கல்வி கற்றனர். ஆசிரியர்களாக 40 பேரும் இங்கு கடமையாற்றினர். ஆரம்பத்தில் இருந்து இங்கு கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களில் பெரும் பகுதியினர் செயற்றிறன் மிக்கவர்களாக இருந்தனர். இவர்களின் பெருமுயற்சியால் இங்கு கல்வி கற்ற மாணவர் ஒழுக்கம் சார்ந்த கல்வியுடன் நல்ல பரீட்சைப் பெறுபேறுகளையும் பெற்றனர். இதனால் அயற் கிராமங்களான செம்பியன் பற்று, பளை, எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, கரம்பகம், கெற்பெலி, மிருசுவில், வரணி, கச்சாய் போன்ற இடங்களில் இருந்து இங்கு வந்து பலர் கல்வி கற்றனர். இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த திரு மு. சி. சிற்றம்பலம் காலத்தில் ஏற்படுத்திய பரீட்சைகளின் சாதனை மட்டம் இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் காரணமாகவே இப்பாடசாலை துரித வளர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு (S.S.C) 1953ஆம் ஆண்டில் இருந்து க.பொ.த சாதாரண வகுப்பாக மாற்றப்பட்டது. இவ் வகுப்புக்களில் சித்தியடைந்த ஒரு பகுதியினர் ஆசிரிய கலாசாலை புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்ததும் ஆசிரிய கலாசாலைகளுக்கு ஆசிரிய பயிற்சி பெறச் செல்வர். ஒரு பகுதியினர் பொது எழுதுநர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடைந்தவர்கள் எழுதுநர் சேவையில் சேர்வர். வசதிபடைத்தவர்கள் சிலர் உயர்கல்வி பெறச் செல்வர். இப்பாடசாலை 1963 ஆம் ஆண்டு தரம் உயர்ந்ததும் இங்கேயே உயர்தர வகுப்பில் பலர் கற்கத் தொடங்கினர். முதலில் இப்பாடசாலையில் 1965ம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு (கலை) மூவர் தோற்றி மூவரும் சித்தியடைந்தனர். பல்கலைக்கழகத்திற்கு இருவர் தகுதி பெற்றனர். முகமாலையைச் சேர்ந்த ப. அரியரத்தினம் என்ற மாணவனும் உசனைச் சேர்ந்த வ. நாகேஸ்வரி என்ற மாணவியுமே இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் செல்வி வ. நாகேஸ்வரி சங்கீதத்துறையில் நாட்டம் கொண்ட காரணத்தால் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று விட்டார். ஆகவே செல்வன் ப. அரியரத்தினம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்பைத் தொடரச் சென்றார். காலப்போக்கில் இவரைத் தொடர்ந்து 200 மாணவர்களுக்கு மேல் உள்வாரியாகவும் 200 மாணவர்களுக்கு மேல் வெளிவாரியாகவும் பட்டம் பெற்றுள்ளனர். க.பொ.த உயர்தர வகுப்பில் சித்தியடைந்த பல நூற்றுக்கணக்கானோர் ஆசிரியர்களாகவும் எழுதுநர்களாகவும் மற்றும் பலர் வேறு துறைகளுக்கும் சென்றுள்ளனர்.

இப்பாடசாலையின் வரலாற்றில் முதல் பல்கலைக்கழகத்திற்கு சென்ற மாணவன் என்ற பெருமையை செல்வன் திரு. ப. அரியரத்தினம் பெறுகின்றார். இவர் தற்போது முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். இவரை இந்நூலாசிரியர் 1991ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் நடைபெற்ற தமிழ் விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளச் செய்ததோடு அதே தமிழ் விழாவில் இவருக்குக் கல்வி கற்பித்த பண்டிதர் எஸ்.கே.தம்பு அவர்களையும் அழைத்து அதே விழாவில் ஒன்று சேர்த்துக் கௌரவித்தனர். தற்போதய அதிபர் சிலைகள், பிரார்த்தனை மண்டபம் ஆகியவற்றை திறப்பதற்காக 2005 ம் ஆண்டு எடுத்த விழாவிற்கு விருந்தினராக அழைத்து கௌரவித்தார். பட்டதாரிகள் இப்பாடசாலையில் இல்லாத காரணத்தால் க.பொ.த (உ.த) வகுப்புகளுக்கு ஆரம்பத்தில் பண்டிதர் எஸ். கே. தம்பு அவர்களும் வித்துவான் சி. சரவணமுத்து அவர்களும் கற்பித்துச் சிறந்த பெறுபேற்றை பெற்றமை பாடசாலையின் வரலாற்றுச் சாதனைகளில் முதல் இடத்தைப் பெறுகின்றது. இவர்கள் இருவரும் மாற்றம் பெற்றுச் செல்ல பட்டதாரிகள் பலர் இப்பாடசாலைக்கு நியமனம் செய்யப்படவே தொடர்ந்து இப்பாடசாலையின் பரீட்சை அடைவு மட்டம் பாராட்டத்தக்க வகையில் உயர்வடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி போதித்த திருவாளர்கள் சி. சிவசரவணபவன் ("சிற்பி"), வி. கே. நடராசா, எ. தங்கராசா, வே. பஞ்சாட்சரம், திருமதி. பரமேஸ்வரன், திரு. ஐ. வரதராசா, திரு. அ. அகிலதாஸ் செல்வி வி. ஒப்பிலாமணி, திரு. வே. நாகராசா, திரு. எஸ். ஆர். மகேந்திரன், திரு. எஸ். பாஸ்கரன், திருமதி மா. முத்துலிங்கம், செல்விகள் க. தயாநிதி, இ. பராசக்தி, திருமதி. ஜெ. மனோகரன், திருமதி த. தருமலிங்கம், திரு. அ. நடராசா என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஓர் பாடசாலையின் வளர்ச்சி மட்டத்தைச் சீர்தூக்கி ஆய்வு செய்யும் போது பாடசாலைப் பரீட்சைப் பெறுபேறுகளை வைத்து மட்டும் பார்ப்பதில்லை. பாடசாலையின் இணைப்பாடச் செயற்பாடுகளாகிய உடல் சார்ந்த செயற்பாடுகள், விளையாட்டுப் போட்டிகள், உடற் கல்விப் போட்டிகள், குழு விளையாட்டுக்கள், சாரணியம், முதலுதவி, கலை கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். இப்பாடசாலையின் மேற்படி செயற்பாடுகளில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப, கனிஷ்ட இடைநிலை கல்வி பெற்றோர்

### வைத்தியர்கள்

1. க. மாணிக்கம் – உசன்
   – பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்
2. வே. பரமநாதன் – உசன்
   – லண்டன்
3. ச. கணேசானந்தன் – உசன்
   – லண்டன்
4. க. செல்வராசா – உசன்
   – லண்டன்
5. செல்வி யோ. கணபதிப்பிள்ளை – உசன்
   – அவுஸ்ரேலியா
6. செல்வி சி. சுமதி – உசன்
   – கொழும்பு
7. செல்வி பொ. ஸ்ரீகாந்தன் – உசன்
   – லண்டன்
8. க. சிவசுதன் – உசன்
   – அவுஸ்ரேலியா
9. திருமதி பொ. பாலினி – உசன்
   – கொழும்பு
10. செல்வி கு. ஆனந்தி – எழுதுமட்டுவாழ்
    – கொழும்பு
11. சி. சுதோகுமார் – உசன்
    – கொழும்பு

### பொறியியலாளர்கள்

1. திரு. க. வல்லிபுரம் – உசன்
   – அவுஸ்ரேலியா
2. திரு. ச. முருகானந்தன் – உசன்
   – சிங்கப்பூர்
3. திரு. சி. அஜந்தன் – உசன்
4. சி. சுவேந்திரன் – உசன்

### பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

1. திருமதி. மி. துஸ்யந்தி – உசன்
   – சிரேஷ்ட விரிவுரையாளர்,
   விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்
2. செல்வி. தி. தியாகினி – கரம்பகம்
   – விரிவுரையாளர்,
   மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்
3. திரு. தி. கருணாகரன் – உசன்
   – ஆங்கில போதனாசிரியர்,
   ELTC, யாழ் பல்கலைக்கழகம்

### வங்கி முகாமையாளர்கள்

1. திரு. சி. சுந்தரேஸ்வரன் – கந்தரோடை
   – ஹற்றன் நசனல் வங்கி

### கணக்காளர்கள்

1. திரு. எஸ். சங்கர் – கனடா

### சித்த மருத்துவர்கள்

1. ஐ. ஜெபநாமகணேசன் – உசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சித்திரம்

கல்வித்திட்டத்தில் பாட மாற்றங்கள் காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றன. கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்கள் நடைமுறைக்கு வந்த காலத்தில் ஆரம்பத்தில் இப்பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் தட்டுப்பாடு காரணமாக, அடைவு மட்டம் சாதாரண நிலையில் இருந்து வந்தது. ஆனால் திருவாளர்கள் சி. ஆ. சோதிலிங்கம், து.நடராஜலிங்கம் சோ. ஸ்ரீகந்தன், எஸ். செல்வச்சந்திரன், எவ். யோசேப், எஸ். ஆர். மகேந்திரன் ஆகியோரின் விடாமுயற்சியால் இப்பாடங்களில் பரீட்சைப் பெறுபேறுகள் துரிதமுன்னேற்றங் கண்டன. குறிப்பாக திரு. சோ.ஸ்ரீகாந்தன் விஞ்ஞான பாட ஆசிரியராக இருந்த காலத்தில் விஞ்ஞான பாடத்தில் விசேட சித்தி உட்பட பல மாணவர்கள் திறமைச் சித்திகள் பெற்றனர். இவ்வாறே கணித பாடத்திலும், விசேட சித்திகள், திறமைச் சித்திகள் முன்னைய ஆண்டுகளைவிட அதிகரித்துக் காணப்பட்டன. இப்பாடங்களின் அடைவு மட்டங்கள் தொடர்ந்து, நல்ல நிலையில் இருந்ததன் காரணமாக இப்பாடசாலையில் இருந்து க.பொ. த. (உ.த) வகுப்பில் கற்பதற்குக் கூடிய தொகையினர் தகுதி பெற்றனர். இவ்வாறே ஆங்கில விசேட பயிற்சி பெற்ற ஆசிரியராக திருவாளர்கள் தி. வல்லிபுரநாதன், எவ். யோசேப் ஆகியோர் நியமனம் பெற்றனர். அத்துடன் திரு. சி. சிவசரவணபவன் ("சிற்பி") அவர்களும் இப்பாட போதனையில் அதிக ஆர்வம் காட்டினார். இவர்கள் நற்சேவையால் இப்பாடசாலையின் அடைவு மட்டம் உயர்ந்தது. குறிப்பாக திரு. யோசேப் ஆசிரியர் அவர்கள் தொடர்ந்து 20 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய காரணத்தால், ஆரம்ப வகுப்பில் இருந்து உயர் வகுப்பு வரை ஆங்கில பாட அறிவை விருத்தி செய்தார். அத்துடன் க. பொ. த (சா.த) வகுப்பில் மாணவர்கள் விசேட, திறமை, சாதாரண சித்திகளைப் பெறவும் காரணமாக இருந்தார்.

எஸ். ஆர். மகேந்திரன் 1988 ஆம் ஆண்டு இப் பாடசாலைக்குச் சித்திர ஆசிரியராக நியமிக்கப்பட்டவர். அதன் பின்னர் மாணவர்கள் பலர் சித்திரப் பாடத்தைத் தமது விருப்பத்திற்குரிய பாடமாக எடுத்து, க. பொ. த (சா.த) பரீட்சையில் பாராட்டத்தக்க பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டனர். இவர் இங்கு 10 வருடங்களுக்கு மேல் நல்லாசிரியராக கடமையாற்றியவர். அத்துடன் ஒழுக்காற்றுக்கும் தளபாடங்களுக்கும் பொறுப்பானவர். பாடசாலையின் சித்திர வேலைகளைத் தானே முன் நின்று செய்தவர். மேற்கூறிய பாடங்களின் தேர்ச்சி மட்டம் கூடிய காரணத்தால் க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறுகள் யாழ் மாவட்ட பிரபல கல்லூரிகளுடன் ஒப்பிடக்கூடியதாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 – 1992 வரை எடுக்கப்பட்ட க.பொ.த. (சா.த), க.பொ.த (உ.த) தரம் ஆகிய வகுப்புக்களின் பெறு பேறுகளின் அட்டவணை இங்கு தரப்படுகின்றது

க.பொ.த. (சா.த)

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 1988 | 68 % |
| 1989 | 68 % |
| 1990 | 72 % |
| 1991 | 75 % |
| 1992 | 78 % |

க.பொ.த. (உ.த)

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 1988 | 55 % |
| 1989 | 58 % |
| 1990 | 60 % |
| 1991 | 62 % |
| 1992 | 65 % |

இவ்விபரம் 1992ம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டது.

## இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு வகுப்பு மாணவர்களின் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள்

ஆரம்ப வகுப்புக்களில் இடும் அத்திவாரமே மேல் வகுப்புக்களுக்குப் பெரிதும் உதவி வந்தன. இப்பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்விக்கு ஆரம்ப காலத்தில் பொறுப்பாளராக திருமதிகள் நா.பரமசாமி, தையல்நாயகி, திரு.சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் பொறுப்பாக இருந்தனர். ஆசிரியர் திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்கள் 5ஆம் வகுப்புக்குத் தொடர்ந்து பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தைக் கூட்டியதோடு புலமைப் பரிசில் பரீட்சையில் பல மாணவர்களையும் சித்தியடையச் செய்தார். காலம் செல்ல இப்பாடசாலையில் பல பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக் கடமை ஆற்றத் தொடங்கினர். திருமதிகள் தெ.பேரம்பலம், சீ.சுப்பிரமணியம், த.தம்பிப்பிள்ளை, பொ.யோன்பிள்ளை, சி.கதிரித்தம்பி, சூசை மரியதாசன், க.கார்த்திகேசு, பு.குமாரசாமி, இ.பாலசுப்பிரமணியம், மு.மார்க்கண்டு, சிவசுப்பிரமணியம், செல்வி.உமையம்மா, திருவாளர்கள் க.தாமோதரம்பிள்ளை, வே.மார்க்கண்டு, கே.மார்க்கண்டு, திருமதி.சு.சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1972 – 1995 வரை சாவகச்சேரிக் கல்வி வலையத்தில் பயிற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஆசிரியர்களில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இருந்த பாடசாலையாக இப்பாடசாலை கணிக்கப்பட்டது. இதனால் ஆரம்ப வகுப்பு அடைவுமட்டம் கூடியதாகக் காணப்பட்டது.

இப்பாடசாலையின் அதிபரின் கீழ் இவ் ஆரம்பப் பிரிவு நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் ஒரு சிரேஷ்ட ஆசிரியர் மேற்பார்வையில் இப்பிரிவு இருந்து வந்தது. ஆரம்பத்தில் தலைமையாசிரியர் திரு.ஐ.மாணிக்கம் அவர்கள் பொறுப்பாக இருந்தார். இவரைத் தொடர்ந்து திருமதி.பு.குமாரசுவாமியும் இவரைத் தொடர்ந்து திருமதி சூசை மரியதாசனும் பின்பு திருமதி பொ.யோன்பிள்ளையும் கடமையாற்றினார்கள். தற்போது திருமதி.த.யோகராசா கடமையாற்றி வருகின்றார்.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

### உடற்கல்வி

உரமான உடலே உறுதியான கல்வி என்ற கல்விக் கோட்பாட்டின் அடிப்படையில் பாடசாலைகளில் உடற்கல்வி மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள், பெரு விளையாட்டுக்கள், பாடசாலை கொத்தணி, கோட்டம், வலயம், மாவட்ட, மட்டங்களில் நடைபெற்று வந்தன. இப்பாடசாலை மாணவர்கள் இவற்றில் பங்குபற்றி சாதனை புரிந்துள்ளனர். உடற்கல்விப் போட்டிகளில் பங்குபற்றிய இப்பாடசாலைக் குழுவினர் வருடந்தோறும் மாவட்டமட்டம் வரை சென்று பரிசில் பெற்றுள்ளனர்.

### பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி

இப்பாடசாலை மகாவித்தியாலயமானதும் மாணவர்கள் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டனர்..

1. நாவலர் இல்லம் : ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் கல்வித் தொண்டு, சமயத் தொண்டு ஆற்றிய நாவலர் பெருமானின் நாமத்தைக் கொண்டமைக்கப்பட்டது.
2. வைத்திலிங்கம் இல்லம் : இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்குப் பெரும் தொண்டாற்றிய பெரியார் வைத்திலிங்கம் அவர்களின் நாமத்தைக் கொண்டமைக்கப்பட்டது.
3. நடேசன் இல்லம் : இப்பாடசாலையின் முதல் முகாமையாளராக இருந்த சேர் பொன் இராமநாதன் அவர்களின் மருமகனும் அவரையடுத்து முகாமையாளராக இருந்த பெரியார் நடேசன் அவர்களின் ஞாபகார்த்தமாக இப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்முறையாக 1964ஆம் ஆண்டு இங்கு இல்லவிளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. அதிபர் திரு. ம. சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விசேட விருந்தினர்களாக இப்பாடசாலையின் முன்னை நாள் தலைமை ஆசிரியர் திரு மு. சி. சிற்றம்பலம் அவர்களும் உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சட்டத்தரணி எஸ். இராசரத்தினம் அவர்களும் சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இப்பாடசாலையின் அதிபராக திருவாளர் சி. சிவசரவணபவன் ( "சிற்பி" ) கடமையாற்றிய காலத்தில் நாலாவது இல்லம் உருவாக்கப்பட்டது. அதற்கு இப்பாடசாலையின் நீண்டகாலமாகத் தலைமையாசிரியராக இருந்து பாடசாலை தரமுயர அரும்பாடுபட்ட திரு மு. சி. சிற்றம்பலம் அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.

வெற்றிக் கேடயங்கள், வெள்ளிக் கோப்பைகள் பல யாழ்ப்பாணம், சாவகச்சேரி வர்த்தகப் பெருமக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. இவை அதிபர் சத்தியமூர்த்தி காலத்திலும் அவரைத் தொடர்ந்து பின் கடமையாற்றிய அதிபர் காலங்களிலும் சேகரிக்கப்பட்டன. இவ்விபரங்களின் பட்டியல் பாடசாலைக்குத் தற்சமயம் செல்லமுடியாத காரணத்தால் வெளியிட முடியவில்லை.

## சாரணியம்

1980ஆம் ஆண்டு சாரணியம் ஆசிரியர் திரு க. மார்க்கண்டு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. 1982ம் ஆண்டு 20 மாணவர்கள் இதில் சித்தியடைந்தனர். சாரணிய செயற்பாட்டிற்குரிய கூடாரம் வாங்குவதற்குரிய நிதியை வைத்திய கலாநிதி க. மாணிக்கம் அன்பளிப்புச் செய்தார்.

## தமிழ் மொழி, கலை, கலாசார மன்றங்கள்

இவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் வகுப்பு ரீதியாக மூன்று மன்றங்கள் இங்கு இயங்கின. இயல், இசை, நாடகம் என்பவற்றில் மாணவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதே இவற்றின் நோக்கம். மாணவர்கள் வகுப்பு ரீதியாக மூன்றாக பிரிக்கப்பட்டனர். மாதம் ஒரு முறை பிற்பகலில் இம்மூன்று மன்றங்களும் கூடும் இவற்றை ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியர் செயற்பாட்டில்விட்டு உபஅதிபர் பண்டிதர் தம்பு அவர்களும் ஆசிரியர் ஐயாத்துரை அவர்களும் மேற்பார்வை செய்தனர். பின்பு இவற்றை பகுதித் தலைவர்களாகிய திரு சி. சிவசரவணபவன் ("சிற்பி") திரு வி. கே. நடராசா அவர்களும் ஆரம்ப வகுப்புப் பொறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசிரியர்களும் மேற்பார்வை செய்தனர். முக்கியமாக சங்கீத, நடன ஆசிரியர்கள் இவற்றில் பொறுப்பானவர்களாகச் செயற்பட்டனர். உயர்தர மாணவ மன்றத்திற்கு திரு அ. அகிலதாஸ் அவர்கள் பகுதி தலைவராக இருந்து செயற்திறனுடன் செயற்பட்டார். இவருக்கு உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரிதும் துணையாக நின்ற காரணத்தால் 1992ஆம் ஆண்டு மன்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சி மூலம் இப்பாடசாலை நூலக அபிவிருத்திக்கு எழுபத்தையாயிரம் ரூபா வரை நிதி சேர்த்து நூலக நிதி என்ற பெயரில் வங்கியில் இட்டனர்.

மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் "இளந்தளிர்" என்ற சஞ்சிகை மாணவர் மன்றங்களின் கூட்டு முயற்சியால் வெளியிடப்பட்டது. தென்மராட்சிப் பாடசாலைகளுள் இத்தகைய ஒரு சஞ்சிகையை அச்சில் வெளியிட்ட பெருமை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கே உரியது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் " இளந்தளிர்" வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### சைவ மன்றம்

தாபகரின் நோக்கத்தை நிறைவு செய்ய இங்குள்ள சைவப்பிள்ளைகளின் உள்ளங்களில் சைவ அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கவும், சைவப் பற்றை ஏற்படுத்தவும் இம்மன்றம் பெரிதும் உதவுகின்றது. இம்மன்றம் காலை ஆராதனையையும் ஒழுங்கு செய்வதோடு சைவசமய விழாக்களையும் கொண்டாடி வருகின்றது. இம்மன்றப் பொறுப்பாசிரியர்களாக சைவாசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

### கத்தோலிக்க மன்றம்

இம்மன்றம் கத்தோலிக்கப் பிள்ளைகளின் காலை ஆராதனைக்குப் பொறுப்பாக இருப்பதோடு கத்தோலிக்க மத விழாக்களையும் நடத்தி வருகின்றது. கத்தோலிக்க ஆசிரியர்கள் இம்மன்றத்திற்குப் பொறுப்பாக இருந்து வருகின்றனர்.

### பாடசாலை அபிவிருத்திச் சபை

பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் பெற்றார் ஆசிரியர்கள் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் ஆகியனவற்றைப் பாடசாலைகளில் அமைத்துப் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்கு அதிபருடன் சேர்ந்து செயற்படும் படியான நடைமுறைகள் கட்டாயப்படுத்தப்பட்டன. எக்காரணம் கொண்டும் இவை அதிபரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்களில் தலையிடக் கூடாதென்பது கல்விஅமைச்சின் வரையறையாகும். இதற்கமைய ஓர் சுற்று நிருபமும் வெளியிடப்பட்டது. அரசுகள் மாறும் போது சுற்றுநிருபங்களிலும் மாற்றம் செய்து வந்தனர். இதற்கமைய பெற்றார் ஆசிரிய சங்கம் என்ற பெயர் காலப் போக்கில் பாடசாலை அபிவிருத்திச் சபையாக மாற்றி அமைக்கப்பட்டது. இவை அமைக்கப்பட்டதன் காரணமாகப் பல பாடசாலைகளில் பௌதிக வளங்களில் அபிவிருத்தி ஏற்பட்டது. ஒரு சில பாடசாலைகளில் நிர்வாகத்துக்கும், அபிவிருத்தி சபையினருக்கும் ஒத்துப் போகாமையையும் காணக்கூடியதாக இருக்கிறது. இவை பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெருந் தடையாக இருந்து வருவதையும் நாம் காண்கின்றோம். இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் இப்படியான ஓர் சூழ்நிலை வந்ததே கிடையாது. இப்பாடசாலையின் அபிவிருத்திச் சபைச் செயலாளர்களாகப் பலர் கடமையாற்றி உள்ளனர். இங்குள்ள சில விபரங்களின்படி திருவாளர்கள் ஆ.இளையதம்பி, க.ஒப்பிலாமணி, சி.ஈஸ்வரபாதம், க..சிவானந்தன், க.திருநாவுக்கரசு, திருமதி.இ.கனகரத்தினம் ஆகியோர் கடமையாற்றி வந்துள்ளனர். தலைவராகப் பாடசாலை அதிபர்களே கடமையாற்ற வேண்டியவர்கள். பொருளாளராக ஆசிரியர்களில் ஒருவர் இருப்பார். செயற்குழு உறுப்பினர்கள் சுற்று நிருபத்திற்கு அமைய வரையறை செய்யப்பட்டுள்ளன. தலைவரைத் தவிர்த்து ஏனையோர் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பெற்றார், ஆசிரியர்களைக் கொண்டு தெரிவு செய்யப்படுவார்கள். இச்சபையில் பெற்றோரும், பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களும் மட்டும்தான் அங்கம் வகிக்க முடியும். சுற்று நிருபத்தில் உள்ளபடிதான் நலன்விரும்பிகளோ, பழைய மாணவர்சங்கத்தில் உள்ளவர்களோ செயற்குழுவில் அங்கம் வகிக்க முடியும். அதிபர் விரும்பும் இடத்து பாடசாலையின் அபிவிருத்திக்கென்று தேவை ஏற்படும் வேளைகளில் உத்தியோகப்பற்ற குழுக்களை நியமித்து பாடசாலையில் அபிவிருத்திகளைச் செய்யலாம். சில பாடசாலைகள் செய்தும் வருகின்றன. இப்பாடசாலை அபிவிருத்திச் சபையில் நீண்ட காலம் செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் நா.கார்த்திகேசு, குணபாலசிங்கம், தி.இராமநாதன், பொ.சிவபாதம், சவரிமுத்து, க.சரவணமுத்து ஆகியோர் இருந்து வருகின்றனர். தற்போதிருக்கும் அதிபர் திரு.நவரத்தினராசா அவர்கள் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஓர் துரித அபிவிருத்திக் குழுவினரை நியமித்துள்ளார். இக்குழுவில் திருவாளர்கள் ச.செல்லத்துரை, டாக்டர் மாணிக்கம், சு.அருணாசலம், டாக்டர்.ஐ.ஜெபநாமகணேசன், மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் பாலச்சந்திரன, திருவாளர்கள் கு.விமலதாஸ்,தி.ஸ்ரீஇராமநாதன், க.சுகந்தன், இ.முருகதாஸ், திருமதி.இ.கனகரத்தினம், சிவஸ்ரீ.இ.கேதீஸ்வரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சிவப்பிரகாசம், ஆ.நடராசா, வே.கனகரத்தினம், க.ஸ்ரீகந்தராசா, க.திருநாவுக்கரசு, தி.வல்லிபுரம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

1991 ஆம் ஆண்டு இச்சபை தனது ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்தில் 95 வீதமான பெற்றோர் கலந்து கொண்டனர். அன்று புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விசேட அதிதியாக உசன் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா திரு க. வி. நடராசா கலந்து சிறப்பித்தார். இச்சபைக்குரிய புதிய செயலாளராக இவ்வூரைச் சேர்ந்தவரும் தபால் அதிபருமான திரு க. சிவானந்தம் அவர்களும் பொருளாளராக இப்பாடசாலையின் ஆசிரியர் திருமதி புஸ்பராணி அவர்களும் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழு உறுப்பினர்களாக அயற்கிராமங்களையும் பிரதி நிதித்துவம் செய்யக்கூடிய வகையில் எட்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர். இககூட்டத்தில் பாடசாலை நலத்திட்டங்கள் சிலவற்றைச் செய்வதற்காக முன் மொழிவுகள் செய்யப்பட்டன. இவற்றில் ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகளின் இட நெருக்கடியைப் போக்க பாடசாலையின் தெற்குப் பக்கத்தில் உள்ள காணிக்குள் 80 “ X 27 “ கொண்ட கட்டடம் அமைக்க வேண்டும். இதற்குரிய நிதியையும் கட்டடத்திற்குரிய பனைமரங்களையும் பாடசாலை மாணவர்களின் பெற்றார் நலன் விரும்பிகள் அன்பளிப்பில் இருந்து பெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்டட மூலப்பொருட்கள் தட்டுப்பாடான நேரத்திலும் செயலாளர் அவர்களதும் கட்டடச் செயற்குழு உறுப்பினர்களது விடாமுயற்சியால் இக்கட்டடம் 10 மாதத்துக்குள் கட்டிமுடிக்கப்பட்டது. இதற்கு பெற்றார், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அன்பளிப்புச் செய்தனர். இதற்கு செயலாளரினது துரித செயற்பாடுகளே காரணமாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கட்டடத்திற்கு வேயப்பட்ட கூரைத் தகட்டின் செலவை வைத்திய கலாநிதி க. மாணிக்கம் அவர்களும் கொடிகாமம் மணியம் களஞ்சிய உரிமையாளரும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவருமான திருவாளர் நா. சிவசுப்பிரமணியம் அவர்களும் ஏற்றுக் கொண்டனர். இக்கட்டட அன்பளிப்பில் மிஞ்சிய தொகையில் ஒரு பகுதியை தொழில் கூட அறைகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய தொகை பாடசாலை அபிவிருத்திச் சபைக் கணக்கில் வங்கியில் வைக்கப்பட்டது. இதன் விபரம் செயலாளர் அறிக்கைப் பதிவேட்டிலும் பொருளாளர் கணக்கறிக்கைக் கொப்பியிலும் இருக்கின்றது. இக்கட்டடத்திற்கு மக்கள் மண்டபம் என்ற பெயர் பாடசாலை அபிவிருத்தி சபையின் தீர்மானத்தின்படி சூட்டப்பட்டது. இக்கட்டடத் திறப்பு விழாவில் தென்மராட்சி வலையக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். சிவானந்தம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார். மற்றும் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மனைப்பொருளியல் அறையை வைத்திய கலாநிதி க. மாணிக்கம் அவர்களும் வாழ்க்கைத் தொழில் பாட அறையை கொடிகாமம் மணியம் களஞ்சிய உரிமையாளர் திரு. நா. சிவசுப்பிரமணியம் அவர்களும் திறந்து வைத்தனர்.

திரு.ஐ.வரதராசா அதிபராக இருந்த காலத்தில் திரு.க.திருநாவுக்கரசு பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளராகக் கடமையாற்றினார். இவரும் பொறுப்புணர்ச்சியுடன் செயலாளராகக் கடமையாற்றிப் பாடசாலையின் அதிபருடன் இணைந்து அபிவிருத்தி வேலைகளைச் செய்தார். இவர்கள் இருவரும் நிதியை சிக்கனமாகப் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் சேர் பொன் இராமநாதனால் கட்டப்பட்ட கட்டடம் திணைக்கள நிதியில் இருந்து புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளரும் செயற்குழு உறுப்பினர்களும் சேர்ந்து உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திரு.கு.விமலதாஸ் அவர்களிடம் கொடுத்துச் செய்வித்தனர். இவ்வேலையைப் பெரும் சிரமங்கள் மத்தியிலும் திரு.கு.விமலதாஸ் சிறந்த முறையில் புனர்நிர்மாணம் செய்து கொடுத்தார். செயலாளர் திரு.க.திருநாவுக்கரசு ஒன்பது வருடங்கள் அதிபர் நிர்வாகத்தில் தலையிடாது பாடசாலை அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார். இவரைத் தொடர்ந்து திருமதி.இ.கனகரத்தினம் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

திரு ஐ. வரதராசா அவர்களிடம் பாடசாலை அபிவிருத்திச் சபையின் கையிருப்பு 1 ¾ இலட்சம் ரூபா கையளிக்கப்பட்டது. இவர் காலத்திலும் இப்பணம் பேணப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இவர்களுக்குப் பின் வந்த அதிபர்களில் திரு. சுப்பிரமணியம் சொற்பகாலம் கடமையாற்றியவர்.

### பழைய மாணவர் சங்கம்

இங்குள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் பழைய மாணவர் அங்கம் வகிப்பதால் பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்பு சிறந்த முறையில் செயற்படவில்லை. 1992ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் சுற்றறிக்கைப்படி பாடசாலைகள் தோறும் பழைய மாணவர்கள் சங்கம் அமைக்கப்பட்டு இதன் உத்தியோகத்தர் விபரம் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டி இருந்தது. இதன்படி 1992ஆம் ஆண்டு பழையமாணவர்கள் சங்கம் கூடி உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெற்றது. இதன் தலைவராக பாடசாலை அதிபர் அவர்களும் செயலாளராக இப்பாடசாலையின் பழையமாணவராகிய திரு. அ. அகிலதாஸ் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளராக இப்பாடசாலையின் பழைய மாணவி திருமதி க. தம்பிப்பிள்ளை அவர்களும் செயற்குழு உறுப்பினர் ஆறுபேரும் தெரிவு செய்யப்பட்ட பின்பு 2002ஆம் ஆண்டு இவ்வூர் பழைய மாணவர்கள் பலரும் சேர்ந்து குறிப்பாக திருவாளர்கள் க.சுகந்தன், கு.தனபாலசிங்கம் ஆகியோரின் முயற்சியால் உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயலாற்றி வந்தனர். இங்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சங்கச் செயற்பாடுகளும் மந்த நிலையை அடைந்தன.

இன்றுள்ள நிலையில் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இங்கு கற்ற இவ்வூரைச் சேர்ந்தவர்களும், அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் இங்கிலாந்து, கனடா, சுவிஸ்லாந்து, அவுஸ்ரேலியா, பிரான்சு, இத்தாலி, நோர்வே ஆகிய இடங்களில் வசிக்கின்றனர். இவர்கள் உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க யாப்பின் பிரதிகளைப் பெற்று இதன் கிளைகளை உவ்விடங்களில் அமைக்கலாம் என்பது எனது பணிவான கருத்து.

## புலமைப்பரிசில் நிதி அன்பளிப்புக்கள்

ஆண்டுதோறும் இப் பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைவாக வறுமைக் கோட்டின் கீழுள்ள பிள்ளைகளுக்கும் மற்றும் உயர் புள்ளி பெறும் மாணவர்களுக்குமாக புலமைப்பரிசில் நிதி வழங்கப்படுகின்றன.

### 1. திருமதி லீலாவதி ஞாபகார்த்தப் புலமைப்பரிசு

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்து அமரரான திருமதி லீலாவதி குகபாலன் ஞாபகார்த்தமாக திரு. ச. குகபாலன் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டு இப் புலமைப்பரிசில் வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

### 2. செல்வி த. வித்தியா புலமைப்பரிசு

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியும் இவ்வூரைச் சேர்ந்தவருமான அமரரான செல்வி வித்தியா தனபாலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக திரு. திருமதி தனபாலசிங்கம் அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

### 3. இளையதம்பி புலமைப்பரிசு

இவ்வூரைச் சேர்ந்தவரும் இப்பாடசாலையின் பழைய மாணவரும் உசன் இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலய அபிவிருத்திச்சபை மற்றும் உசன் ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் முன்னாள் செயலாளருமாகவிருந்து அரும்பணியாற்றி அண்மையில் அமரரான திரு.ஆ.இளையதம்பி அவர்கள் ஞாபகார்த்தமாக அவரின் பிள்ளைகளினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

### 4. இராசகுலசிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

உசன் கிராமத் தலைமைக்காரராக பல்லாண்டுகள் கடமையாற்றியவர். இக்கிராமத்தின் அபிவிருத்திக்கு அத்திவாரமிட்டவர். கிராம சேவை அலுவலராகத் தனங்கிளப்பு கிராமத்துக்கு நியமிக்கப்பட்டு பின்பு ஓய்வு பெற்றவர். அண்மையில் அமரரான இவரின் ஞாபகார்த்தமாக இவரது மகள் திருமதி இ. கதிர்காமநாதன் அவர்களால் இப்புலமைப் பரிசிற்கான நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

### அன்றும் இன்றும்

ஆரம்ப காலத்தில் வகுப்பறையின் ஒருபகுதியே அதிபரின் காரியாலயமாக இருந்தது. ஆசிரியர்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது. ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் இரு வகுப்புக்களுக்குக் கற்பிக்க வேண்டி இருந்தது. தலைமை ஆசிரியர் திரு.மு.சி.சிற்றம்பலம் அவர்கள் தனது கடமைகளுடன் மேலதிகமாக ஒரே நேரத்தில் இருவகுப்புக்களுக்கு எண்கணித பாடத்தைக் கற்பிப்பார். இடையிடையே பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு இரு விறாந்தையாலும் வீறுநடை போட்டுச் சுற்றி வகுப்பறைக் கற்பித்தலை மேற்பார்வை செய்வார். அமைதியை உறுதிப்படுத்துவார். மதிய உணவு நேரத்தில் காரியாலய வேலைகளைக் கவனிப்பார். பாடசாலை மேலதிக வகுப்புக்கள் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும். இக்காட்சிகள் யான் கற்ற காலத்தில் கண்டவை. பரீட்சைப் பெறுபேறுகள் அக்காலத்தில் வீரகேசரி பத்திரிகையின் முற்பக்கத்தில் வரும். இதில் இலங்கையின் முதன்மைப் பெறுபேறுகள்தான் முதல்நாள் வரும். பண்டிதர் தம்பு அவர்கள் கொடிகாமத்தில் இருந்து பத்திரிகையை எடுத்து வருவார். (அதிகமாகப் பாராட்டுக்குரிய பெறுபேறுகளாகத் தான் இருக்கும்.) இப்பாடசாலைப் பெறுபேறுகளும் முதற் பக்கத்தில் இடம் பெற்றிருக்கும். தலைமை ஆசிரியர் திரு.சிற்றம்பலம் அவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்வார். பாடசாலை தொடங்கியதும் அவை அடங்கிவிடும். கற்றல், கற்பித்தல் வேலைகள் தொடரும். பாடசாலை விட்டபின்பே சித்தியடைந்த மாணவர்கள் தலைமை ஆசிரியரைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்தவர்களுக்கு அடுத்த வேலை வாய்ப்புக்குரிய பரீட்சைகள் பற்றிய வழிகாட்டலும், சித்தியடையத் தவறியவர்களுக்கு, மீள்பரீட்சைக்குரிய வழிகாட்டலும் நடைபெறும்.

இக்காலத்தில் பாடசாலைகளின் பௌதிக வளங்கள் அளப்பரியன. அதிபர் காரியாலயம், வகுப்பறைகள், தொழிற் கல்விக்கூடங்கள், விஞ்ஞான செய்முறை அறை, ஆரம்ப வகுப்பறைகள், நூலகம் ஆகியன நவீன மயம். அதிபர் தமது காரியாலயத்தில் இருந்தவாறே பாடசாலையை நிர்வகிக்கக் கூடியதாக இருக்கின்றது. பாடசாலையின் பரீட்சை அடைவுமட்டமும் அக்காலத்தில் இருந்தவாறு பேணப்பட்டு வருகின்றது. இதற்காகப் பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள், குறிப்பாக வெளிநாட்டில் வசிக்கும் இவ்வூர் மக்கள் யாவரையும் பாராட்டுவோமாக.

உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட பலர் இங்கேயே பட்டம் பெற்று வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பொறியியலாளர்களாக, டாக்டர்களாக, கணக்காய்வாளர்களாக, மற்றும் பல உயர் பதவிகளில் கடமையாற்றுகின்றார்கள். இவர்கள் விபரம் இந்நூலின் இறுதியில் அட்டவணைப்படுத்தி உள்ளேன். இவர்களில் ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறும் வயது உடையோர் சேவை நலன் பற்றி இந்நூலில் எழுதி உள்ளேன். குறிப்பாக இப்போதைய சூழலில் பாடசாலைக்குச் சென்று முக்கியமான சில ஆவணங்களைப் பெறமுடியவில்லை. அதனால் அதிபர், ஆசிரியர், பழைய மாணவர்கள் சம்பந்தமான விபரங்களில் சில தவறுகள் நேர்ந்திருக்கலாம். சிலரது பெயர்கள் விடுபட்டும் இருக்கலாம். பெருமனது கொண்டு இத்தவறைப் பெரிதுபடுத்த மாட்டீர்கள் என நம்புகின்றேன்.

தாபகரின் நோக்கத்தை இன்றுவரை பூர்த்திசெய்த எமது அன்னையாகிய இராமநாதன் மகாவித்தியாலயம் புதுப்பொலிவுடன் இருப்பதையிட்டு நாம் எல்லோரும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இதற்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற எல்லாம்வல்ல உசன் கந்தப் பெருமானை வேண்டுவோமாக.

**எமது வளமான வாழ்வுக்கு வழிவகுத்த எமது கிராமமும்**

**பாடசாலையும் தாயகமும் வளமுடன்**

**வாழ்க! வளர்க!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசன் இராமநாதன் மகாவித்தியாலயமாம் அன்னை செம்மையுடன் வளர்த்தெடுத்து அவனியில் வாழ்வாங்கு
சார்ந்த உத்தியோகத்தர் பலர். இவர்கள் விபரங்களை அன்றுதொட்டு இன்றுவரை எடுப்பது சாத்தியமற்றது
உள்ளவர்களது சிலரது பெயர்களை (யான் அறிந்த மட்டில) அட்டவணையில் காட்டியுள்ளேன். சிரேஷ்ட்ட

**கல்வி அமைச்சு**

| | | |
|---|---|---|
| 1. திரு. ப. அரியரத்தினம் | – முகமாலை | – வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 2. திரு. க. பேரம்பலம் | – உசன் | – உதவிக் கல்விப்பணிப்பாளர் |
| 3. திரு. மு. சிவம் | – உசன் | – உதவிக் கல்விப்பணிப்பாளர் |
| 4. திரு. எஸ். கே. தம்பு | – வடக்கு மிருசுவில் | – அதிபர் |
| 5. பண்டிதர். சி. சரவணமுத்து | – விடத்தற்பளை | – அதிபர் |
| 6. திரு. கே. இராமநாதன் | – வடக்கு மிருசுவில | – அதிபர் |
| 7. திரு. எஸ். சேனாதிராசா | – பளை | – அதிபர் |
| . திரு. எம். சுப்பிரமணியம் | – உசன் | – அதிபர் |
| 8. திரு. கே. தம்பு | – அல்லாரை | – அதிபர் |
| 9. திரு. எஸ். நடராசா | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 10. திரு. கே. நடராசா | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 11. திரு. எஸ். சின்னராசா | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 12. திரு. கே. கணபதிப்பிள்ளை | – நாகர்கோவில் | – அதிபர் |
| 13. திரு. எஸ். நாகராசா | – சாவகச்சேரி | – அதிபர் |
| 14. திரு. ஐ. சின்னையா | – கொடிகாமம் | – அதிபர் |
| 15. திரு. க. அருணாசலம் | – கச்சாய் | – அதிபர் |
| 16. திரு. வே. தியாகராசா | – தனியூற்று | – அதிபர் |
| 17. செல்வி. திரவியம் | – சச்சாய | – அதிபர் |
| 18. திரு. அ. அகிலதாஸ் | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 19. திரு. குணநாதன் | – நீர்வேலி | – அதிபர் |
| 20. திருமதி. சி. சின்னத்தம்பி | – உசன் | – அதிபர் |
| 21. திரு. எஸ். கணபதிப்பிள்ளை | – விடத்தற்பளை | – அதிபர் |
| 22. திரு. த. சண்மகசுந்தரமூர்த்தி | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 23. திரு. எஸ். இராசரத்தினம் | – உசன் | – அதிபர் |
| 24. திரு. க. நடராசா | – எழுதுமட்டுவாழ் | – அதிபர் |
| 25. திரு. மா. பரமநாதன் | – உசன் | – அதிபர் |

**பொது நிர்வாக அமைச்சு**

1. திரு. எஸ். அம்பலவாணபி
   – உதவி அரசாங்க அதிபர்
2. திரு. எஸ். ஐயாத்துரை –
   – கூட்டுறவு ஆணையாள
3. திரு. யோ. அருள்ராஜ் –
   – மாகாண ஆணையாள
4. திரு. கே. நடராசபிள்ளை
   – நிர்வாக அதிகாரி, பெரு
5. திரு. எஸ். இராசரத்தினம்
   – பதிவாளர்
6. திரு. எஸ். ஜெயரத்தினம்
   – உதவி அஞ்சல் அத்திய
7. திரு. கு. நவரத்தினசிங்க
   – மாகாண அஞ்சல் அத்
8. திரு. க. பொன்னுத்துரை
   – கணக்காளர்
9. திரு. கே. கலைச்செல்வ
   – கணக்காளர்
10. திரு. இ. சிவராசா – உ
    – உதவிச் சுங்க அத்திய
11. திரு. க. இராமலிங்கம் –
    – வருமானவரி அதிகாரி
12. திரு. க. சின்னத்துரை –
    – வருமானவரி அதிகா
13. திரு. க. நவரத்தினம் –
    – வருமானவரி அதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்து அவனியில் வாழ்வாங்கு வாழவைத்தவர் பலர். இவர்களில் ஆசிரியர்கள், எழுதுநர், மற்றும் பல்துறை ரை எடுப்பது சாத்தியமற்றது. இருந்தும் உதாரணத்துக்கு குறைந்த தொகையை உடைய உயர் பதவியில் ட்டியுள்ளேன். சிரேஷ்ட்ட வகுப்பு, க.பொ.த (உ.த) வகுப்பு ஆகியவற்றில் கற்றுச் சித்தியடைந்தவர்.

**பொது நிர்வாக அமைச்சு**

1. திரு. எஸ். அம்பலவாணபிள்ளை – வரணி
   – உதவி அரசாங்க அதிபர்
2. திரு. எஸ். ஐயாத்துரை – உசன்
   – கூட்டுறவு ஆணையாளர்
3. திரு. யோ. அருள்ராஜ் – உசன்
   – மாகாண ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம்
4. திரு. கே. நடராசபிள்ளை – வரணி
   – நிர்வாக அதிகாரி, பெருந்தெருக்கள் திணைக்களம்
5. திரு. எஸ். இராசரத்தினம் – செம்பியன்பற்று
   – பதிவாளர்
6. திரு. எஸ். ஜெயரத்தினம் – கிளாலி
   – உதவி அஞ்சல் அத்தியட்சகர்
7. திரு. கு. நவரத்தினசிங்கம் – உசன்
   – மாகாண அஞ்சல் அத்தியட்சகர்
8. திரு. க. பொன்னுத்துரை – உசன்
   – கணக்காளர்
9. திரு. கே. கலைச்செல்வன் – விடத்தற்களை
   – கணக்காளர்
10. திரு. இ. சிவராசா – உசன்
    – உதவிச் சுங்க அத்தியட்சகர்
11. திரு. க. இராமலிங்கம் – உசன்
    – வருமானவரி அதிகாரி
12. திரு. க. சின்னத்துரை – உசன்
    – வருமானவரி அதிகாரி
13. திரு. க. நவரத்தினம் – உசன்
    – வருமானவரி அதிகாரி

**வங்கிச் சேவை**

1. திரு. த. கோவிந்ததாஸ்
   – எழுதுமட்டுவாழ்
   – பிரதேச முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி
2. திரு. கே. பாலச்சந்திரன்
   – விடத்தற்பளை
   – முகாமையாளர், மக்கள் வங்கி

**நீதி அமைச்சு**

1. திரு. த. வேலாயுதம் – எழுதுமட்டுவாழ்
   – சட்டத்தரணி
2. செல்வி. தயா வெற்றிவேலு – உசன்
   – சட்டத்தரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கட்டிய பாடசாலைகள் விபரம்

### A நெடுந்தீவு

01. நெடுந்தீவு மேற்கு சுப்பிரமணியம் வித்தியாசாலை
02. நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாசாலை
03. நெடுந்தீவு சாரப்பிட்டி ஸ்கந்தா வித்தியாசாலை
04. அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலை
05. ஊரைதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம்
06. நெடுந்தீவு இராமநாதன் வித்தியாலயம்
07. நெடுந்தீவு வடமேற்கு மங்கயர்க்கரசி வித்தியாலயம்
08. நெடுந்தீவு வடமேற்கு மகேஸ்வரி வித்தியாலயம்
09. நெடுந்தீவு செல்லம்மா வித்தியாலயம்
10. நெடுந்தீவு புதுக்குடியிருப்பு பார்வதி வித்தியாலயம்

### B புங்குடுதீவு

01. புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாசாலை
02. புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாசாலை
03. புங்குடுதீவு சண்முகானந்தா வித்தியாசாலை
04. புங்குடுதீவு மடத்துவேலி கமலாம்பிகை வித்தியாசாலை
05. புங்குடுதீவு இராசஇராசேஸ்வரி வித்தியாசாலை
06. புங்குடுதீவு ஸ்ரீதுரைச்சாமி வித்தியாசாலை

### C வேலணை

01. வேலணை கிழக்கு சரஸ்வதி வித்தியாலயம்
02. சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை
03. நாரந்தனை வடக்கு கணேச வித்தியாலயம்
04. கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியாலயம்
05. வேலணை கிழக்கு சைவப் பிரகாச வித்தியாலயம்
06. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை
07. வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாலயம்
08. வேலணை வட.கிழக்கு ஐயனார் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D நயினாதீவு

01. நயினாதீவு வடக்கு நாகபூஷணி அம்மன் வித்தியாசாலை
02. நயினாதீவு தெற்கு கணேச வித்தியாசாலை

## E எழுவைதீவு

01. எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலை

## F காரைநகர்

01. காரைநகர் கிழக்கு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை
02. காரைநகர் மேற்கு மெய்கண்டான் வித்தியாசாலை
03. கரம்பன் கிழக்கு சிவகுருநாதர் வித்தியாசாலை
04. காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை
05. காரைநகர் தெற்கு விருப்பிட்டி கணேச வித்தியாசாலை
06. மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை

## G வலிகாமம் மேற்கு

01. சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்
02. பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்
03. வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர்
04. அராலி வடக்கு கணேச வித்தியாலயம்
05. அராலி வடக்கு இந்து ஆங்கில பாடசாலை
06. சங்கானை மேற்கு சிவப்பிரகாச வித்தியாசாலை
07. மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாசாலை
08. இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலை
09. பலாலி சித்திவிநாயகர் வித்தியாசாலை
10. ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை
11. சங்கானை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
12. தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை
13. வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. தையிட்டி தெற்கு சிவகுருநாத வித்தியாசாலை
15. சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை
16. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை
17. அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை
18. பண்டத்தரிப்பு இந்து ஆங்கில பாடசாலை
19. சங்கானை கிழக்கு துர்க்கை அம்மன் வித்தியாசாலை
20. சங்கானை மேற்கு சாந்தை அம்மன் வித்தியாசாலை
21. மாதகல் வடக்கு முருகமூர்த்தி வித்தியாசாலை

## H வலிகாமம் வடக்கு

01. மயிலிட்டி ஞானோதைய வித்தியாசாலை
02. ஏழாலை மத்தி இந்து தமிழ் கலவன் பாடசாலை
03. ஏழாலை வட்டு விக்கினேஸ்வரா பாடசாலை
04. கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாசாலை
05. வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை
06. பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாசாலை
07. ஊரெழு கணேச வித்தியாலயம்
08. சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
09. இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்
10. மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை
11. கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை
12. தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை
13. நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை
14. ஈவினை விநாயகர் வித்தியாசாலை

## I வலிகாமம் கிழக்கு

01. கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாசாலை
02. ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாசாலை
03. புத்தூர் புதுக்கலட்டி விஷ்ணு வித்தியாசாலை
04. கோப்பாய் தெற்கு இருபாலை கந்தவேள் வித்தியாசாலை
05. புன்னாலைக்கட்டுவன் இந்த தமிழ் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலை

## J யாழ்ப்பாணம்

01. சிவியார்தெரு ஆனந்த வித்தியாசாலை
02. சேணியதெரு சன்மார்க்க ஆங்கில வித்தியாசாலை
03. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை
04. கொக்குவில் மேற்கு ஞானபண்டிதர் வித்தியாசாலை
05. வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் வித்தியாசாலை
06. திருநெல்வேலி செங்குந்தா ஆங்கிலப் பாடசாலை
07. கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை
08. கோண்டாவில் அன்னங்கை பரஞ்சோதி வித்தியாசாலை
09. நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
10. ஆனைப்பந்தி குருநாதசாமி வித்தியாசாலை
11. கல்வியங்காடு சைவ வித்தியாசாலை
12. தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை

## K தென்மராட்சி

01. மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்
02. வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
03. மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலை
04. மட்டுவில் வடக்கு சந்திரமௌலீசர் வித்தியாசாலை
05. மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாசாலை
06. நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலை
07. கோயிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலை
08. மறுவன்புலவு சகலகலாவல்லி வித்தியாசாலை
09. மந்துவில் பாரதி வித்தியாசாலை
10. நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை
11. கொடிகாமம் திருநாவுக்கரவு வித்தியாசாலை
12. மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாசாலை
13. கைதடி நுணாவில் சைவப்பிரகாச வித்தியாசாலை
14. வரணி கரம்பைக்குறிச்சி மாணிக்க வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாசாலை
16. கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை
17. கச்சாய் நாகமுத்து வித்தியாசாலை
18. நாவற்காடு கணேச வித்தியாசாலை
19. சாவகச்சேரி சத்தியம்மன் வித்தியாசாலை
20. மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாசாலை
21. தனங்கிளப்பு சைவதமிழ்க் கலவன் பாடசாலை
22. கைதடி நாவற்குழி கணேச வித்தியாசாலை
23. கைதடி வடக்கு இந்து தமிழ் கலவன் வித்தியாலயம்
24. கெருடாவில் சைவ வித்தியாசாலை
25. கைதடி தெற்கு சைவ வித்தியாசாலை
26. விடத்தற்பளை கமலாசனி வித்தியாசாலை
27. எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாசாலை
28. கைதடி கிழக்கு கணேசவித்தியாசாலை
29. நாவற்குழி இந்து தமிழ் கலவன் பாடசாலை

L வடமராட்சி

01. உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை
02. இடைக்காடு புவனேஸ்வரி வித்தியாசாலை
03. தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை
04. அல்வாய் வடக்கு சுப்பிரமணிய வித்தியாசாலை
05. பொய்யிட்டி சரஸ்வதி வித்தியாசாலை
06. கட்டைவேலி ஞானாசாரிய ஆங்கில பாடசாலை
07. வதிரி தேவரயாளி இந்து ஆங்கில பாடசாலை
08. மருதங்கேணி சண்முக வித்தியாசாலை
09. யாக்கரை விநாயகர் வித்தியாசாலை
10. வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை
11. கட்டைவேலி இந்து கலவன் பாடசாலை
12. அல்வாய் ஊர் ஸ்ரீலங்கா வித்தியாலயம்
13. திக்கம் சித்திவிநாயகர் வித்தியாசாலை
14. நாகர் கோவில் நாகேஸ்வரி வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உடுப்பிட்டி வடக்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை
16. கப்புது கணேச வித்தியாலயம்
17. குடத்தனை சிவசிதம்பரம் வித்தியாசாலை

M பளை

01. சோறன்பற்றுக் கணேசவித்தியாசாலை
02. தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம்
03. வெத்திலைக்கேணி பரமேஸ்வரி வித்தியாசாலை

N பூநகரி

01. பூநகரி அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை
02. பூநகரி மட்டுவில் மகேஸ்வரி வித்தியாசாலை
03. வேரவில் சைவத்தமிழ் கலவன் வித்தியாசாலை
04. விநாசியோடை பூநகரியான் இந்து தமிழ் கலவன் பாடசாலை

O வவுனியா

01. வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை
02. ஒட்டிசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலை
03. வவுனியா பேயாடிகூழாங்குளம் ஸ்ரீமுருகன் வித்தியாலயம்
04. வவுனியா கோவிற்புதுக்குளம் ஸ்ரீகணேச வித்தியாலயம்
05. ஆசிகுளம் ஸ்ரீனிவாச வித்தியாசாலை

O முல்லைத்தீவு

01. முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலை
02. முள்ளியவளை இந்து தமிழ் கலவன் பாடசாலை
03. தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை
04. ஆயிலடி சைவதமிழ் கலவன் பாடசாலை
05. செம்மலை தமிழ் கலவன் பாடசாலை
06. புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை
07. பல்லவராயன்கட்டு இந்து தமிழ் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## P மன்னார்

01. திருக்கேதீஸ்வரம் சைவ வித்தியாசாலை

## Q பதுளை

01. பதுளை சரஸ்வதி வித்தியாசாலை

## R நாவலப்பிட்டி

01. நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலை
02. பருத்தியடைப்பு கதிரேசன் வித்தியாசாலை
03. நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி

## S கண்டி

01. கண்டி அம்பிட்டியா இந்த தமிழ் கலவன் பாடசாலை
02. குசலை இந்து தமிழ் கலவன் பாடசாலை

## T கிளிநொச்சி

01. முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலை
02. கரவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாசாலை
03. வட்டக்கச்சி ஐயனார் வித்தியாசாலை

## U புத்தளம்

01. முந்தல் சைவதமிழ் கலவன் பாடசாலை
02. சிலாவத்தை இந்து தமிழ் கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By : Aingkar Graphics - Navalyur TP : 0777570106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரின் அறிமுகம்

தென்மராட்சிப் பிரதேசத்தின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள "உசன்" என்னும் பழம்பெரும் கிராமம், தமிழர் தம் பாரம்பரிய கலாசார விழுமியங்களுக்கும், எமது மரபுவழிப் பண்பாட்டுக்கும், நிலைக்களனாக விளங்குவது கண்கூடு. மா, பலா, தெங்குச் சோலைகள் ஊருக்குள் பரவி இருக்க, நெல் வயல்களால் சூழப்பட்ட வளம் கொழிக்கும் பிரதேசம் இது. இங்கு வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெருமக்கள் பலர், தமிழ் அறிஞர்களாகவும், பண்டிதர்களாகவும், ஆசான்களாகவும் விளங்கி கல்விப் பணியுடன் சமூக நற்பணியும் ஆற்றி வந்துள்ளமையினால், உசன் கிராமத்து மக்கள் அறிவாற்றல் மிக்கதொரு பரம்பரையாக இனங்காணப்பட்டுள்ளனர். இக்கிராமத்து அயலில் உள்ள முகமாலையில் கல்விச் செல்வத்துடன் ஏனைய வளங்களும் நிறைவாகப் பெற்றிருந்த உயர் குடும்பமொன்றின் வாரிசாக திரு. க. பேரம்பலம் அவர்கள் தோன்றினார்.

தனது ஆரம்பக்கல்வியை எழுதுமட்டுவாழ் சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும், நிறைவு செய்த இவர், சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார். கல்விப் பணியே தன் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட இப்பெருமகனார் 12 வருட அரிய ஆசிரிய சேவையை நிறைவு செய்து, பின் அதிபராக வவுனியா மாவட்டத்திலும், யாழ் மாவட்டத்திலுள்ள வரணி, மட்டுவில், உசன், கொடிகாமம், கச்சாய் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளிலும், 22 வருட நயத்தகு அதிபர் சேவையையும் நிறைவு செய்தார். உசன், மட்டுவில் ஆகிய கொத்தணிப் பாடசாலைகளில் பிரதம அதிபராக இருந்து வியத்தகு சேவையாற்றினார். தனது பணியின் இறுதிக் காலத்தில் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 1994ம் ஆண்டு பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

தூய வெண்ணிற ஆடையும், தளர்வறியா சுறுசுறுப்பும், முகத்தில் நிலவிடும் புன்சிரிப்பும், கண்களில் அவதானமும், நடையில் நிதானமும், இவரை இனங்காட்டும் அடையாளங்கள். ஆழ்ந்த கல்விப் புலமையும், கல்வி நிறுவனக் கோவை பற்றிய பூரண அறிவும், எந்தச் சபையிலும் தனது கருத்தைத் தர்க்க ரீதியாக இனிமையாகவும், தெளிவாகவும், எடுத்தியம்பும் தன்நம்பிக்கையும் நிரம்ப பெற்றவர் இவர். பிரச்சினைகளைப் பதற்றமின்றி சுமூகமாகத் தீர்த்து வைப்பதில் இவருக்கு இணையே இல்லை என்பது மிகைப்படக் கூறுவதாகாது. யாழ் மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளர்கள் முதல் அனைவரும் இவரது கருத்துக்களுக்கு முன்னுரிமை அளித்து நட்புரிமையுடன் பழகி வந்தனர். இவர் அதிபராக பணியாற்றிய வேளை பாடசாலைகளைப் பேணிய சீர்மையும், கோவைகளைப் பேணிய நேர்த்தியும், மற்றையோருக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தன. தேவை ஏற்படுகின்ற போதெல்லாம், எவருக்கும் எந்த நேரத்திலும் கைகொடுத்து உதவிடும் பண்பு இவருக்குரிய தனிச்சிறப்பு.

திரு. க. பேரம்பலம் அவர்களின் பரந்துபட்ட நீண்டகால அனுபவம், முடங்கிப் போய்விடாமல், நூல் வடிவம் பெற்று மிளிர்வது நமது மக்களுக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகும். "வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு" என்னும் நூலின் மூலம் உசன் கிராமத்தின் பல்பரிமாண வளர்ச்சிப் படிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. 1926ம் ஆண்டிலிருந்து எட்டு தசாப்த கால வரலாறு நூலில் ஆதார பூர்வமாக நிலைநிறுத்தப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும். கல்விசார் செயற்பாடுகள், அறிவூட்டிய ஆசான்கள், கோயில்கள், கிராம அபிவிருத்தி நிலைகள், சமுதாய வளர்ச்சி பற்றிய செய்திகள், அருமையான மொழி நடையில் எழுதப்பட்டுள்ளன. தனது ஓய்வுக் காலத்தை இந்நூலினை எழுதி வெளியிட பயன்படுத்தியமை வரவேற்கத்தக்கதாகும்.

அமைதியான, நிறைவான குடும்ப வாழ்வு கிட்டியமை இவரது தவப்பேறாகும். ஆற்றலும், அறிவும், அழகும் மென்மையும் நிரம்பிய ஆசிரியையான திருமதி. தெய்வானைப்பிள்ளை அவர்கள் துணைவியாக அமைய, அருமை மகளும், மைந்தர் மூவருமாக அன்பான குடும்பம். உயர் கல்வி பெற்று, சீருடனும், சிறப்புடனும் திகழும் பண்பு நிறைந்த மக்களுடனும் அருமைப் பேரக் குழந்தைகளுடனும் நீண்ட ஆயுளுடன் இனிதே வாழ்ந்து, மேன்மேலும் நூல்களை ஆக்கி, தமிழ் அன்னையின் பாதக் கமலங்களில் அர்ப்பணித்திட உளமார வாழ்த்துவோம்.

**திருமதி. புஸ்பாதிலகவதி கணேசலிங்கம்,**
B. Sc., Dip in Edu., M. Ed.
**(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர். தென்மராட்சி)**

Unie Arts (Pvt) Ltd., Tel : +94 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org